# கல்வி — ஒரு சவால்

## - ஒரு கொள்கைத் தொலைநோக்கு

தமிழ் நாடு அரசு சார்பாகத்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
அச்சிட்டளிப்பது

அச்சிட்டோர் :
சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை-600 042.

# முன்னுரை

இந்த ஆவணம் இன்றையக் கல்வி முறையைச் சீர்தூக்கி, மாற்றியமைத்து வருங்காலச் சவால்களைச் சந்தித்துக் கல்வியின் திறனையும் தரத்தையும் உயர்த்தும் வழிமுறையைக் காணும் ஓர் இன்றியமையாக் கட்டத்தை எடுத்துரைக்கிறது.

இந்த அறிக்கையில் காணும் பகுப்பாய்வும் கூரிய நோக்கும் பல பொதுவான முடிவுகட்கு வழிவகுக்கின்றன. அவற்றுள் தலையாயது ஒன்று உண்டு. எந்த ஓர் அமைப்பாயினும், வாய்ப்புக்களும், கொள்கைக் கட்டமைப்புக்களும் எங்ஙனமிருப்பினும் கல்வியின் வெற்றி தோல்வி என்பது சமுதாயத்தின் கல்விப் பொறுப்பு எவ்வாறுள்ளது, கல்வி கற்பிப்பதில் பங்குபெறுவோருடைய நோக்கும் நாணயமும் எவ்வாறுள்ளனவென்பதைப் பொறுத்ததே. இவ்விரண்டு ஆக்கக் கூறுகளும் அமைந்துவிட்டால், குறிக்கோள்களை அடையத் துணிந்துள்ள மக்கள் சுற்றியுள்ள தடைகளைக் களைந்து குறிக்கோள்களை நிறைவேற்ற இயலும். தம்மையே ஓரளவு அர்ப்பணித்தல் என்ற உணர்வு இல்லையாயின், கொள்கைகளனைத்தும் - நல்லவையோ, தீயவையோ - பொருளற்ற சொற்களாகிவிடும்.

ஒரு கொள்கை அதனைச் செயல்முறைப்படுத்தும்போது தான் நிலையான உருவம் பெறுகிறது. நிகழ்ச்சித் திட்டங்கள் தீட்டுதல், வாய்ப்பு வளங்களைப் பங்கிட்டு வழங்குதல், கற்பித்தலை நேரடியாகச் செயற்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர், தமது பணிபற்றி அறியாமல் இருந்தாலோ அல்லது மிக அலட்சியமாகக் கருதினாலோ எந்தவிதப் பயனுடைய விளைவுகளும் நிகழாது.

புதியதோர் சகாப்தத்தின் நுழைவாயிலில், நாடுதன்னையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகளாவன: புதிய கல்விக்கொள்கை களின் இலக்குகள் என்ன? அவற்றை அடைய சமுதாயம் உரிய ஆதரவை நல்க ஆயத்தமாக உள்ளதா?

இந்த ஆவணம் கல்வி நிலையின் ஒரு மேல்நோக்கு; எதிர் கால இயக்கங்கட்கு ஒரு திசைகாட்டி. ஏனெனில், இது கல்வித் திட்ட அமைப்பாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அறிவு சார்ந்தோர், கல்வியில் நாட்டமுடைய குடிமக்கள் ஆகியோரின் கருத்துக்களின் அடிப்படையிலானது.

இங்கு, இன்றையக் கல்வி முறையிலுள்ள குறைபாடுகள் பற்றிக் கூறப்படுகிறது. இத்தகு பின்னணிதான் உண்மையான நடைமுறைக் கொள்கையை வகுக்க வழிவகுக்கும். இடர்ப்பாடு களும் குறைபாடுகளும் பற்றியறிந்தால் கல்விக் கொள்கைகளை யும் கல்விப் பணிகளையும் செவ்வனே கோடிட்டுக் காட்ட இயலும்.

கடந்த இருபதாண்டு காலமாக நம் வளர்ச்சியைக் கணித்த ஆய்வு நாம் விரும்பிய முன்னேற்றத்தை அடையவில்லை என்ப தைத் தெளிவுபடுத்துகின்றது. ஏனெனில் 1968ல் கொணர்ந்த கல்விக் கொள்கை எதிர்நோக்கிய மேலான விளைவுகட்கு நாட்டின் வளமும் சீரமைப்பிற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் ஈடாக அமையவில்லை.

கல்வியிற் புத்துணர்வு காண்பதை வாய்ப்புவளத்தின் குறைபாடுகளும் நிறுவன மாற்றங்களின் எதிர்ப்புகளும் தடைப் படுத்தாமல் இருந்திருந்தால் இன்றையக் கல்விக் காட்சி முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும். கல்வியாளர்களும், மேலாளர்க ளும், ஆசிரியர்களும் அதிக நம்பிக்கையோடும் ஈடுபாட்டுணர்வு டனும் செயலாற்ற ஊக்குவிக்கப்பட்டிருக்கலாம். புதிய கல்விக்

கொள்கையானது துணிவுகளையும் தேவைகளையும் அறுதியிட்டுக் காட்டி அமுல்படுத்தப்பட வேண்டும். தீராத தடங்கல்களும், கல்வி முறையின் மாறா விதிகளும் இடையே நின்று தடுத்துக் கடின உழைப்பையும் இலட்சியங்களையும் குறைத்து மதிப்பிட்டு விடாதவாறு புதிய கொள்கை பார்த்துக்கொள்ளும்.

நம் சூழ்நிலையில், கல்வியின் பங்கு ஒன்று உண்டு. அதுவே ஒரே நிலையில் இருக்கும் நம் சமுதாயத்தைத் துடிப்புடைய ஒன்றாக மாற்றவேண்டுவது. மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிகோலும் சமுதாயம் அமையவேண்டும். இந்தப் புரட்சிக்கு இன்றியமை யாத் தேவை அறிவு நாட்டம் என்பது. அந்நிலை வந்தால் எல்லா வயதினரும் எல்லாத் துறையினரும் தொடர்ந்து கற்ற வண்ணமிருப் பார்கள். அதற்குக் கல்விமுறை வழிவகுக்கும். திறந்த வெளிக் கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, பகுதிநேரப் படிப்பு எல்லாமே முறையான கல்விபோன்றே பயனுடையவைதான். உண்மையில் ஒன்று மற்றொன்றை வலியுறுத்துகிறது.

கல்வி என்பது குறிப்பாக வருங்காலத்திற்கு வழிவகுப்பதே. கல்வி முழுமைத்தன்மை வாய்ந்தது. ஆகவே கல்விக்கு ஒவ்வொரு வரும் தம்மால் இயன்றதைச் செய்யவேண்டியது கடமையும் பொறுப்பும் ஆகும். இருப்பத்தொன்றாம் நூற்றாண்டில் நுழை யும் புதிய வாரிசுகள் நிறைவுக்குறைவினை உணர்வார்களேயா னால், அக்குறைபாடுகட்கு நம்மையே காரணம் காட்டுவார்கள். ஒரு குறிப்பிட்ட மத்திய - மாநிலத் தொடர்பு காரணமாக ஏற் பட்டுவிட்ட குறைபாடுகள் என்பது போன்ற ஒவ்வாக் காரணங் களைக் கூறினால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கல்வி என்பது தேசியப் பொறுப்பு.

எந்த அளவுக்கு நாம் நாட்டின் மனித வளத்தினை வளர்க்க முற்றிலுமாக ஈடுபடுகிறோமோ அந்த அளவுக்குப் புதிய கல்விக் கொள்கை வெற்றியடையும்.

இந்த ஆவணம் புதிய கல்விக் கொள்கையின் இறுதிக் கூற்றன்று. புதிய கல்விக் கொள்கை உருவாக நாடுதழுவிய கருத்துப் பரிமாற்றம் தேவை. அதற்கு இந்த ஆவணம் அடிப்படையாக அமையவேண்டுமென்பதே நோக்கம்.

கே. சி. பந்த்,
மத்திய கல்வி அமைச்சர்
இந்திய அரசு

புதுடில்லி,
ஆகஸ்டு 19, 1985.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை iii

1. கல்வி, சமுதாயம் மற்றும் வளர்ச்சி 1

2. கல்வி வளர்ச்சி—ஒரு கண்ணோட்டம் 15

3. ஒரு பகுத்தறி மதிப்பீடு 36

4. கல்விப் புத்தறிவுக்கு ஓர் அணுகுமுறை 73

## அத்தியாயம்-1

# கல்வி, சமுதாயம் மற்றும் வளர்ச்சி

1.1 1968ம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கப் பெற்ற போது, அந்தக் கொள்கையானது ஒவ்வொரு ஐந்தாண்டும் மதிப்பீடு செய்யப்பட்டுத் தேவையான புதிய கொள்கைகளும் திட்டங்களும் தீட்டப் படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு ஐந் தாண்டுத் திட்டமும் தீட்டப்படுகையில், கல்விக் கொள்கைகளின் வெற்றி தோல்விகள் கணிக்கப்பட்டு அடுத்த ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. இந்த மதிப்பீடுகள் பயனளித்தபோதிலும், மதிப்பீடு மட்டும் செய்து ஒருசில மாற்றங்கள் கொணர்வது போதாதென இப்போது உண ரப்படுகிறது. நாடு 21ம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நிற்கிறது. இப்போது பிறப்போர் இந்நூற்றாண்டு மாறுகையில் துவக்கக் கல்வியெல் லாம் முடித்து ஓர் உலகில் காலெடுத்து வைப்பார்கள். அவ்வுலகம் மனித வரலாறு இதுகாறும் காணாத வாய்ப்புக்கள் பல நல்கும் உலக மாகும். யாருக்கு? எதிர்காலச் சவால்களையும், கடிதே நிகழும் மாற்றங் களையும் ஏற்கத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டோர்க்கு.

1.2 தொழில் நுட்பத் துறையில் தொடர்ந்து நிகழும் புரட்சிகளின் கட்டாய விளைவுகள் தவிர, இந்தியாவிற்கு உள்நாட்டிலேயே சவால்கள் —மறுக்கவொண்ணா அவசரச் சவால்கள் உள்ளன. இந்த உள்நாட்டு வெளிநாட்டுச் சவால்களை நேருக்கு நேர் வெற்றியுடன் சந்திக்க இயலுமா என்பதுதான் நாளையக் குடிமகனின் வாழ்க்கைத் தன்மையை நிர்ண யிக்கும். கல்வி இந்தச் சவால்களைச் சமாளிக்கும் திறமிகு கருவி. கல்வி தான் மக்கட்கு அறிவைப் புகட்டும்; ஒரு நோக்கோடு உழைக்கும் உணர் வையும் கொடுக்கும். ஆற்றல் வாய்ந்த, துடிப்புடைய, பிணைப்புடன் கூடிய ஒரு நாட்டை உருவாக்கத் தேவையான நம்பிக்கையையும் கல்வி தான் ஊட்டும். அத்தகு நாட்டில்தான் மக்கள் மேலும் ஆக்கபூர்வமான, பயனுடைய, பூரண வாழ்க்கை வாழத் தேவையான சாதனத்தைப் பெறு வார்கள்.

1.3 கல்விக்கெனக் குறிப்பிட்ட பணிகள் வரையறுக்கப்படுமுன், கல் வியின் இயல்பு என்ன, கல்வியின் தேவைகள் யாவை, கல்வியினுள்

அடங்கிய பல்வேறு பகுதிகள் தனிமனிதனையும் சமுதாயத்தை யும் வளர்க்க என்னென்ன பங்கேற்கவேண்டும் என்பன பற்றிக் கவன மாக ஆய்தல் அவசியம். அந்த மேல்நோக்கைத் தெளிவாக்கிவிட்டால், தக்க கல்விக்கொள்கைகளையும் மாறும் கல்வி சார்ந்த வினைமுறைத் திறன்களையும் வகுத்துப் பற்பல பணிகள் எம்முறைகளிற் செய்யலா மென்பதை முடிவு செய்வது எளிதாகும்.

1.4 மனித வரலாற்றில் கல்வி என்பது நில்லாது தொடர்வது. அதுவே மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை. மனப்பான் மைகள், நற்பண்புகள், அறிவுத்திறன், வேலைத்திறன் இவற்றை வளர்ப் பதன் மூலம் மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு தம்மையும் மாற்றிக் கொள்ளும் வலிமையை மக்களுக்குத் தருகிறது கல்வி. சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிகோலுகிறது. மனிதனின் திறன்களே உலகத்தின் நாடுகள் முன்னேறுவதில் இன்றியமையாப் பங்கு வகிப்பதை வரலாறு ஐயமின்றி நிலைநாட்டுகிறது. அத்தகு திறன் களை வளர்ப்பதே கல்வியின் முக்கியப் பணி.

**சமுதாய வளர்ச்சி**

1.5 சமுதாய வளர்ச்சி என்பது மனிதனின் நல்வாழ்வுக்கு உதவும் பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கும். அத்துடன் மனிதன் ஒரு சேர இசைந்து வாழும் நேர்மையான குடியரசுச் சமுதாயத்தைக் காணும் சமூக அரசியல் வளர்ச்சியையும் அத்துடன் அறிவு, பண்பாடு, கலை வளர்ச்சிகளையும் உட்படுத்தும்.

1.6 இருந்தபடியே இருக்கட்டும் என்பதைவிட மாற்றம் என்பதுதான் வாழ்க்கையின் வெற்றிக்குக் குழுக்குறியாகும். கல்வி என்பது முறையாக ஒரு மாற்றத்தை விளைவிக்கும் கருவி— அனைவரும் ஒப்புக்கொண்ட கருவி. கல்வி என்பது சிறப்பாகத் தனி நபர் வளர்ச்சிக் குத்தான். எனினும் இன்றையச் சமுதாயத் தேவைகள் அடிப்படை யான அணுகுமுறையை மாற்றுகின்றன. காரணம்? சமூகத்திற்காணும் முரண்பாடுகளையும் கொடுமைகளையும் குறைக்கவேண்டுமே! எந்தெந்த முறைகளில் கல்வி தனது பங்கினை ஆற்ற வேண்டுமென்பதற்கு விடை காண நம்மிடம் அனுபவம் எனும் செல்வம் குவிந்துள்ளது. இதில் கல்வி யின் இலக்கணமே மாறிவிட்டது. கல்வி என்பது குறிப்பிட்ட அமைப்பு முறைகளுக்குள்ளும் நிறுவனங்களுக்குள்ளும் இனியும் அடைபடாது.

அறிவுப் பெருக்கத்தின் இயக்கம் 'வாழ்நாள் முழுவதும் கற்றல்' என்ற கருத்தினைப் பரப்பித் தொடர்கல்வி நிறுவனங்களை உருவாக்கி விட்டுவிட்டது. கற்கும் முறையே மனிதனுக்கு மனிதன் மாறுபடுவது பற்றியெல்லாம் பற்பல உண்மைகள் தோன்றியுள்ளன. வழிவழியாக வரும் தனித் தனிப் பாடங்களின் பயிற்றுமுறைகளின் வரம்புகள் தகர்ந்து, ஒரு துறையுடன் மற்றொரு துறையை இணைத்துக் கற்கவும், ஆராயவும் துவங்கிவிட்ட நாட்கள் வந்துவிட்டன. கல்வித் தரத்தை உயர்த்துதற்கும், கல்வியின் எல்லைகளைப் பெருக்குதற்கும் புதிய தொழில்நுட்பங்கள் பரந்து விரியத் துவங்கிவிட்டன.

1.7 எந்த நாட்டிலும், சமுதாய வளர்ச்சியின் குறிக்கோள்கள் மக்களின் ஆவல்களைப் பிரதிபலிக்கும். இக் குறிக்கோள்கள் இந்திய அரசியலமைப்பிலேயே பின்னப்பட்டுள்ளன. 'நீதி, பொருளாதார சமூக அரசியல் சமத்துவமும் சமவாய்ப்பும்' நல்கும் சமுதாயத்தை அரசியல் அமைப்பு குறிப்படுகிறது. அரசும் குடிமக்களனைவரிடையே 'சகோதரத்துவத்தை' நிலைநாட்டவும், தனிமனிதனின் மதிப்பைக் காக்கவும், நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் போற்றவும் வேண்டுமெனக் குறிப்பிடுகிறது. மேலும் சமத்துவச் சமுதாயம், மதச்சார்பின்மை, குடியரசு இவற்றையும் காப்பது நாட்டின் பொறுப்பென அரசியல் அமைப்புக் கூறுகிறது.

1.8 நீண்டதோர் போராட்டத்திற்குப் பின்தான் சுதந்திரம் என்ற குறிக்கோளை இந்தியா எட்டியது. அந்நாட்களில் நம் சுதந்திர இயக்கத் தலைவர்களின் தொலை நோக்கு சுதந்திரத்திற்குப் பின் எத்தகைய சமூக, பொருளாதாரக் குறிக்கோள்களை நாம் எட்டவேண்டுமென, தெள்ளத் தெளிவுறச் செப்பியது. இந்த நோக்கு பிறரைச் சார்ந்து நில்லாத நாடொன்றை உருவாக்க விழைந்தது. இதனை, மனிதனது திறனையும், பொருள் வளத்தையும் உரிய அளவில் பயன்படுத்தி உருவாக்கவேண்டும். எல்லோருக்கும் சம உரிமையைத் தரும் சகிப்புத் தன்மையுடைய சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என எதிர்பார்த்தார்கள். இந்தியக் கொள்கை அமைப்பாளர்களின் நம்பிக்கை என்னவென்றால், பொருளாதார வலிமையும் திண்மையும் அரசியல் சுதந்திரத்தின் அளவையும் தன்மையையும் முடிவு செய்தாலும், பல கோடி மக்கட்கு சுதந்திரம் என்பது உற்பத்திப் பெருக்கமும் அதன் விளைவாகப் பொருட்களின் சமமான பங்கீடுமே யாகும். இது வேலை வாய்ப்புக்கள் விரிவடைவது, பரவுவது, பல்வகை

யாக அமைவது என்பன மூலம்தான் இயலும் என்பது இன்று உணரப்படு கிறது. மனிதனைப் பொறுத்தவரை குடியரசு வளர்ச்சி என்பது அனை வருக்கும் சாதி, மத, பால் வேறுபாடின்றி கிட்டும் சம வாய்ப்புக்கள்தான். இதன்படி, குறிப்பிட்ட கலையை அல்லது அறிவியலை, மனிதவியலைக் கற்க, மரபுகளையும் உயர்நோக்குகளையும் கற்க, மனிதனுக்கு வசதி தேவை. இந்திய அரசு தனி மனிதனிடம் அக்கறை காட்டுகிறது. ஏன்? அவன் வளர்ச்சிக்கு ஒரு கருவி என்பதால் மட்டுமல்ல, அவன் சிறப்பாக ஒரு முழுத்தன்மை பெற்றவன் என்பதால். இந்தியச் சூழலில் நாட்டு வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அப்பாற்பட்டது. நாட்டு வளர்ச்சி தன்னம்பிக்கை நிறைந்த தனிமனிதனின் வளர்ச்சியிலும் அக் கறை காட்டுகிறது. அந்தத் தனிமனிதன் குடியரசுப் பண்புகட்கும் பெரி தும் மதிப்பு வைப்பவன். அவன்தான், வேறுபட்ட பண்பாடுகளைக் கொண்ட, வெவ்வேறு மதங்களைச் சார்ந்த, வெவ்வேறு மொழிகள் பேசும் மக்களிடையே ஒன்றுபட்ட ஒரே நாட்டை உருவாக்குவதில் கவனம் வைப்பவன். சர்வதிகாரப் பாதையின்றி குடியரசு முறையில் வளர்ச்சி நாடும் சமுதாயத்தின் எல்லா தேசிய முயற்சிகட்கும் முக்கிய ஆதாரம் கல்வியே.

**கல்வியின் பங்கு**

1.9 பல்வகையான ஆனால் ஒன்றோடொன்று சார்ந்த குறிக்கோள் களை—அதாவது தனி மனிதனது பொருளாதார, சமூக, அரசியல் பண்பாட்டு வளர்ச்சிகளைச் சார்ந்த குறிக்கோள்களை—அடைய கல்வி தகுந்த வாய்ப்பினை நல்கவேண்டும். தனிமனிதனது வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் வெவ்வேறு நிலையிலிருக்கும் பலமொழி களைச் சார்ந்த, பல்வகை சமூகப் பண்பாட்டுப் பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்குத் தகுந்தவாறு ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும். அத்திட்டங்கள் வேற்றுமையுள் ஒற்றுமையை வலி மைப்படுத்தும் வகையில் பொதுவானதொரு கலைத்திட்ட மைய அம்சத் தைக் கொண்டிருத்தல் அவசியம். அதேநேரத்தில் நாட்டின் ஒரு பகுதி யிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்வதற்கு வசதியும் அமைந்திடுமாறு அத்திட்டங்கள் இருத்தல்வேண்டும்.

1.10 குடியரசு வழியில் நாடு முன்னேறுவதில் கல்விமுறை சீரிய பங்கை ஆற்றவேண்டும். அதற்காக மக்களனைவரும் கல்வியின் பயனை அடைய வேண்டும். அத்துடன் பால் வேறுபாடு காரணமாகவோ, சமூக

வேறுபாடுகள் காரணமாகவோ, கற்போரின் தரம் மாறுபடாதவாறும் கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும்.

1.11 கல்வி பரவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வில்லையானால், பொருளாதாரம் காரணமாக உள்ள இயலாமையாலும் வட்டார ஏற்றத் தாழ்வுகளாலும், சமூக அநீதிகளாலும் ஏற்பட்டுள்ள பிளவு பெரிதாகி சிதைந்து செல்லும் நெருக்கடி மேலோங்கிவிடும். சரியான கல்வி மூலம் பொருளாதார சமுதாய வளர்ச்சிக்கு வசதி செய்யலாம்; அதனை விரைவாக்கலாம். மனிதனின் திறன் வளர்ச்சி வாழையடி வாழை போல் பல்வகை வளங்களையும் பெருக்கும். ஆகவேதான் கல்வி என்பது, வளர்ச்சிக்கு முதலீடு என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. அதனால்தான், 1966ல் கல்விக் குழுவின் அறிக்கை (1964-66) அமைதியான. சமுதாய மாற்றத்திற்குக் கல்வியே சாதனம் என்று குறிப்பிட்டது.

1.12 துவக்கக் கல்வி என்பது கல்வித் திட்டத்தில் ஒரு முக்கிய கட்டம். முதல் எட்டாண்டு காலம் பரவியுள்ள இக்கட்டம்தான் மாணவர்களின் ஆளுமை, மனப்பான்மை, சமுதாயத்திடம் ஒரு நம்பிக்கை. பழக்க வழக்கங்கள், வேலைத்திறன் வளர்த்தல், கருத்து வெளியிடும் ஆற்றல் இவற்றிற்கு அடிக்கல் நாட்டுவது. படிக்கவும், எழுதவும், எண்ணவும் (கணிதத்தில்) தேவையான அடிப்படைத் திறன்களைக் கற்பது இப்பருவத்தில்தான். நற்பண்புகள் தானாகக் கற்கப்படுகின்றன. சுற்றுச் சூழல் பற்றிய நனவு நுண்மைபெறுகின்றது. இந்தப் பருவத்தில்தான் உடல் வளர்ச்சிக்குத் துணை புரியலாம். விளையாட்டுக்களின் மீதும், தீரச் செயல்கள்மீதும் ஆர்வத்தை ஊட்டலாம். உடல் திறனையும் வளர்க்கலாம். இந்தப் பருவத்தில் நல்லதோர் கல்வி பெற்றால், வாழ்க்கையில் முன் வைத்த காலைப் பின் வையாப் பழக்கம் ஏற்படுகிறது. இன்னல்களை வெல்லும் பயிற்சியையும் பெற்றுவிடுகிறான்.

1.13 துவக்கக் கல்வியில் முதலீடு செய்வது மிகச் சிறந்த பலனைத் தந்துள்ளது. அது மட்டுமல்ல, பின்னால் பொதுவாச மக்கள் நலனுக்கும் சிறந்த காரணமாக இருந்திருக்கிறது, என்பதைக் கல்விக் களத்தின் ஆராய்ச்சிகள் பல வெளிப்படுத்துகின்றன. அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது குடியரசின் கட்டமைப்பை வலுப்படுத்தும். ஆகவே ஒவ்வொரு தனி மனிதனும் தனது உள்ளார்ந்த திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்பு குடியரசு

மலர்ந்த நாளிலிருந்தே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இதுவே அரசியலமைப்பில் உள்ள மாநிலக் கொள்கையின் நெறிப்படுத்தும் கோட்பாடுகள் பிரிவுக் கூறு 45ல் கூறப்படுவதும் ஆகும். 1968ன் தேசியக் கல்விக்கொள்கை மசோதாவும் இதனையே திரும்பக் கூறுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான கல்வித் திட்டங்கள் மூலம் முதியோரது கலலாமையை அகற்றுவது என்பது கட்டாயமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கு முக்கியமான காரணம் இதுதான்: பொதுவாக நோக்கின், எழுத்தறிவு உடையவன் சுற்றுப்புறச் சூழலில் ஆர்வம் காட்டுகிறான். நடைமுறைச் செயல்களிலும் உற்பத்தியைப் பெருக்குகிறான். இதனால் தனது சொந்த வாழ்வையும் வளப்படுத்திக் கொள்கிறான். குடியரசு முறையைக் கடைப்பிடிக்கும் ஏறத்தாழ எல்லா நாடுகளும், கற்றவர் துணையோடும், தன்விருப்பார்ந்த முகமைகளைப் பயன்படுத்தியும் நிர்வாக அரசியல் சாதனங்களை முழுமையாக ஈடுபடுத்தியும் ஒரு மக்கள் இயக்கமாக எல்லோருக்கும் எழுத்தறிவைக் கொடுத்து வருகின்றன. மேனிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி அளிப்பது மூலமும் தனிப்பட்ட நிறுவனங்கள் மூலம் தொழிற் பயிற்சி நல்குவதன்மூலமும் மனித சக்தியைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதும் அவசியமாகிறது. அதிலும் குறிப்பாக, இருக்கும் தொழிற் கருவிகளைச் சீராக்கி வைப்பதற்கும், தொழில் உற்பத்திக்கும் தொழிற் பயிற்சி தேவை. பலவழிகளில், தொழிற் கல்விப் பிரிவு உற்பத்திச் செயல், வேலைவாய்ப்பு, கல்விமுறை இவற்றை இணைக்கிறது. தொழிற்கல்வி கற்பிக்கையில் பள்ளி முறை அருகாமையிலுள்ள சூழலுக்கும் பள்ளி அமைந்துள்ள இடத்தின் சமூகத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்படவேண்டும்.

1.14 உயர்கல்வி கற்றோரையும் கருத்துகளையும் தந்து வருங்காலத்தை உருவாக்கும்; எல்லாவகைக் கல்வியையும் நிலைநிறுத்தும். ஆகவே உயர்கல்விக்குத் தனிச் சிறப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் வாழ்க்கைத் தன்மையும் வளர்ச்சி வேகமும் அந்நாட்டின் கருத்து வளத்தையும் அந்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு பற்றிய பண்புகள் பரவியுள்ள அறிவையும், வாழ்க்கையின் சமுதாய ஆன்மீக மற்றும் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகோலும் நம்பிக்கை உணர்வையும் பொறுத்தே அமையும். உயர் கல்வியும், அதனால் வளர்க்கப்பட்ட அறிவுசால் மக்களும் பொதுவான சூழ்நிலையின் தன்மையை முடிவு செய்வதில் சிறப்பான பங்கு வகிக்கிறார்கள். தொழில் துறைக்கும், விவசாயத்திற்கும் நிர்வாகத்திற்கும் படைத்துறைகட்கும் தேவையான

எப்போதும் வளரும் பல்வகைப்பட்ட மனித சக்தியைத் தருவது உயர் கல்விதான். தற்சார்புடைய நம் நாட்டிற்கே உரிய பொருளாதாரக் கொள்கை நிலைநிறுத்தப்படவேண்டும். அதற்குத் தகுதியான மக்கள் தேவை. அவர்கள் தொலைநோக்கோடு திட்டமிட்டு ஆராய்ச்சியிலும் வளர்ச்சித் திட்டங்களிலும் ஈடுபடுவார்கள். அவர்களின் செயல்கள் இந்தியாவின் வளர்ச்சியைப் பிற உலக நாடுகளுக்கு ஒப்ப உயர்த்திக் காட்டும்.

1.15 நியாயம், சமத்துவம், பொருத்தம் இவை கல்வி வளர்ச்சித் திட்டங்களில் சிறப்பான அம்சங்களாகும். கல்விக் குழுவின் அறிக்கை (1964-66) இக்கருத்தினை வலியுறுத்துவதைக் கீழே காணலாம்.

''கல்வியின் அளவைக் கருத்திற்கொண்டு நோக்கின், ஒரு கல்வி அமைப்பு இந்தச் சமூக நீதிக்கு உதவவும் செய்யலாம்; ஊறும் விளைவிக்க லாம். கல்வி என்பது ஒரு சிறு குழு மற்றும் பெருங்குடி மக்களின் கையில் ஒரு கருவியாக இருந்து, தன்னிச்சையாக அவர்கள் நடந்து கொள்ளவும், அவர்கள் காட்டியதே பண்புகள் என்றவாறும் அமைந்து விட்டதற்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அதே நேரத்தில் சமுதாயப் பண்பாட்டுப் புரட்சி மூலம் எல்லோருக்கும் சமமான கல்வி வாய்ப்பு அளித்த நிகழ்ச்சிகளும் உண்டு. அங்கெல்லாம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தக்க உள்ளடங்கியிருந்த திறன்கள் வெளிக் கொணரப்பட்டன. இது கல்வியின் அளவு மட்டும் அல்லாது தன்மை பற்றி நோக்கினும் உண்மை என்பது புலப்படும். பல்கலைக்கழகக் கல்வி முறை மிகப்பெரிய அளவில் தகுதி நிறைந்த மனித சக்தியை உருவாக்கு கிறது. அந்த சக்தி உற்பத்தித் திறனையும், பொருளாதார வளர்ச்சியை யும் மேம்படுத்துகிறது. இன்னொரு கல்வி முறைப்படி, வேலை வாய்ப்பற்ற பொறுப்பற்ற பட்டதாரிகள் பெருமளவில் உருவாகிவிடுகிறார்கள். அவர் கள் சமுதாயத்தில் ஒரு நெருக்கடியை உண்டாக்கி, பொருளாதார வளர்ச் சிக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். சரியான கல்வி முறைதான் நாட்டின் வளர்ச்சிக்குத் துணை போகும். இந்த நிபந்தனைகள் நிறை வேறாவிடில், எதிர்பார்க்கும் விளைவிற்கு நேர்மாறானவைதான் நிகழும்''.

**கல்வி அமைவின் வரம்புகள்**

1.16 கல்வி பற்றிப் பொதுவாகவும், குறிப்பாக ஒவ்வொரு நிலையிலும் விவாதிக்கக் கல்வி அமைவின் வரம்புகளைக் கருத்தில் கொள்ளவேண்டு

வது அவசியம். இல்லையாயின் கல்வியின் முறையிலேயே தவிர்க்க முடியாத தவறுகள் உள்ளன எனக் கருதப்படக்கூடும். வெறுமையில் எந்த ஒரு கல்வித் திட்டமும் செயல்படுவதில்லை. எந்த முறையும் சுற்றுச் சூழலின் ஆளுகைக்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். கொள்கைகளை உருவாக்குவோரும், திட்டங்கள் தீட்டுவோரும், கல்வியை நிர்வகிப்போரும் மேற்கண்ட திசைகளில் செல்ல விரும்பாவிடில் கல்வி தனது உயர்ந்த நிலையில் இருக்காது. குடியாட்சித் தன்மையையும் இழந்துவிடும். திட்டமிடுவோர் கல்வி என்பது வருங்கால வளர்ச்சிக்கு ஒரு முக்கிய உள்ளீடு என்பதில் நம்பிக்கைக் கொள்ளாவிடில், மனிதனின் திறனோ, நிதி வளமோ கல்வியை ஆதரிக்க முன்வரமாட்டா.

*1.17* அந்த அளவிற்கு, எத்தன்மையான கல்வி, எவ்விடங்களில் கல்வி, எந்தக் காலக்கட்டத்திற்குள் கல்வி என்பனவற்றை திட்டமிடுவோர் தெளிவுபடுத்திவிட்டால் கல்வித் திட்டம் பொருளுடையதாகும். நமக்கு வாய்ப்பு வளங்களோ மிகவும் குறைவு. எனவே எவ்வாறு கல்வியில் நியாயமும் நேர்த்தியும் அமையும் என்பதனைத் தெளிவுப்படுத்தவேண்டும். இவ்வடிப்படைக் கோட்பாடுகளை முடிவு செய்வதில் மாற்று வழிகள் காண வேண்டுவதும் அவசியம். ஏனெனில் பொருளாதார வளத்தில் மட்டுமின்றி அரசியல் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளிலும் பல கட்டுப்பாடுகள் உள்ளன. கல்வி என்பது எதிர்காலத்தில் கவனம் செலுத்தும். ஆகவே அதன் அமைப்பும் முன்னோக்கியே செல்லவேண்டும். பரவலாக உள்ள கரடுமுரடான அரசியலிலிருந்து விவேகமாகக் காக்கப்பட வேண்டும். இதனைக் கல்வித் திட்ட அமைப்பாளர் மட்டும் நினைத்தால் முடியாது. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தலைவர்களும் சிந்தனையாளர்களும் ஒருமித்த நோக்குடனும் உறுதிடயுனும் கல்வியைக் காக்கவேண்டும்.

*1.18* தனிமனிதன் வளர்ச்சிக்கு என்ன கற்பிக்கவேண்டும், எப்படிக் கற்பிக்கவேண்டும் என்பதை வரிசைப்படுத்தி முடிவெடுக்க முடியுமென்றாலும் குறிப்பிட்ட தொழில்நுட்ப, பொருளாதார, சமுதாயக் குறிக்கோளைப் பொறுத்தவரையில் கல்வியானது நாடு வளர்ந்து செல்லும் பாதையைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

*1.19* எந்த ஒரு கொள்கை அமைப்புடனும் செலவினமும் சேர்கிறது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும். அனைவருக்கும் கல்வி என்பதிலோ அல்லது சீரிய கல்வி நிலையங்கள் அமைப்பதிலோ செலவினங்கள் மிக

அதிகமானால் 'மாற்றம் தேவையில்லை' என்ற நிலையைக் கடைப் பிடிக்கையில் அதைவிடப் பெருந்தொகை செலவாகும் என்பதனைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

1.20 சுதந்திரத்திற்குப் பின் இந்தியா பல்வகைக் கல்வி நிறுவனங் களின் எண்ணிக்கையிலாகட்டும், மாணவர்கள் சேர்க்கையிலாகட்டும், கல்வி திட்ட வளர்ச்சிகளிலும் பிரிவுகளிலுமாகட்டும் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆயினும் இன்று அனை வருக்கும் கல்வி, சமமான பங்கீடு, தரமான கல்வி என்பவற்றில் நாட்டின் ஆவல்களைப் பூர்த்தி செய்யவில்லை என்பது உண்மை.

1.21 நமது இந்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங் களும் பொறியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் மருத்து வர்களையும் மேலாண்மையாளர்களையும் ஏனைய உலகப் பல்கலைக்கழக மாணவர்கட்கு ஒப்பாக உருவாக்கியுள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை. ஆயினும், இந்த ஒரு சிறுபான்மையினரான, தரமான மாணவர்களைத் தவிர நம் உயர் கல்விக்கூடங்கள் பெருவாரியான புத்தகப்புழுக்களான பட்டதாரிகளை, தானாகக் கற்கும் தகுதியில்லா, கருத்துகளைச் சரிவர வெளியிட இயலா, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தான் ஆற்றவேண்டிய பொறுப்புக்களை உணராப் பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளன என்பது உண்மையே.

1.22 ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மருத்துவக் கல்லூரிகள் போன்ற சீரிய கல்வி நிறுவனங்களில் தாம் அதிகம் செலவு செய்யாது பயிற்சிபெற்று வரும் கூரிய மதி படைத்த நன் மாணாக்கர்களிடம் கூட சமுதாயத்திற்குத் தாம் கடப்பாடுடையவர் என்ற பொறுப்புணர்ச்சி இருப்பதாகத் தெரிய வில்லை. நல்ல பள்ளிகளில் இருந்து வருவோரும் அவ்வாறேயுள்ளனர். உண்மையில் இந்தப் பிரச்சினை நன்கு இயங்கும் பள்ளிகளில்தான் கடுமை யாக உள்ளது. சமுதாயத்திற்கு உரிய தன் கடமையுணர்வு என்னவென் பதை மாணவர்கட்குப் புகட்டுவதில்லை. இதன் விளைவு என்னவென் றால், சரியான பருவத்தில் நலிந்தோரிடமும் வறியோரிடமும் இரக்கம் காட்டவேண்டும் என்பதைக் கற்கும் வாய்ப்பை இழந்ததோடு மட்டு மல்லாமல் ஒருவகையான போலிப் பெருமிதத்தைப் பெற்றுத் தம்மைச் சுற்றுச் சூழலின் உண்மையிலிருந்து விலக்கிக் கொள்கிறார்கள்.

1.23 அடுத்து தேர்வுமுறை பற்றிச் கூறாவிட்டால், தற்காலக் கல்வி காட்சி வருணனை முழுமையாகாது. ஏனென்றால் மாணவர்களின் விதியை மட்டுமல்லாமல் பாடப் பொருளையும், போக்கையும் எல்லா நிலைகளிலும் கல்வியின் தன்மையையும் தேர்வுகள்தான் முடிவு செய்கின்றன. மாணவர்களை மதிப்பிடுவது அவர்தம் மனப்பாடம் செய்யும் திறமையைக் கொண்டுதான் என்பதோடு குறிப்பிட்ட ஆண்டிறுதியில் தேர்வு வருவதால் அவர்கள் காலம் அனைத்தையும் விரயமாக்கிவிட்டு ஆண்டிறுதியில் மூன்று நான்கு மாதங்களில் மட்டும் உழைக்கின்றனர். ஆகவே, தாங்கொணா நெருக்கடியில், இறுதியில் உழைக்கையில் பாடங்களின் தொடர்புகளை இழந்துவிட்டு தேர்வுகளைப் புறக்கணிப்பதிலும் வினாத் தாட்களை முன்னரே அறிவதிலும், மொத்தமாகப் பார்த்தெழுதுவதிலும், கண்காணிப்பாளருக்குக் கையூட்டுக் கொடுப்பதிலும் ஏனைய முறைகேடான வழிகளிலும் ஈடுபடுகின்றனர். அதன் விளைவாகப் பட்டங்களும், கல்வித் தகுதிகளும், பொது மக்களுக்கு நம்பிகையைத் தருவதில்லை. அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்பு நிறுவனத்தாருக்கும் நம்பிக்கை அளிப்பதில்லை. உயர்கல்வி முழுவதுமே சிதைந்து, பயனற்றதாகி திசைமாறி, வேலை செய்யத் தகுதியில்லாத இளம் ஆண்களையும் பெண்களையும் உருவாக்கியுள்ளது.

1.24 பொது வாழ்க்கையில் ஏற்படுகின்ற குறைபாடுகளினாலும், பண்பாட்டுக் குறைவினாலும், பல நிலைகளில் வாழும் சிந்தனையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். வாழ்க்கையின் பிற நிலைகளில் காணப்படும் இந்தப் பண்பாட்டுச் குறைவானது பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களிலும் குறிப்பாக ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலும் பரவி இருப்பது மிகவும் ஆபத்தான வளர்ச்சியாகும். இந்த நிலைமாற புதிய கல்வி முறையை வலியுறுத்தியாக வேண்டும். சுரண்டல், பாதுகாப்பின்மை, கொடூரத்தன்மை போன்ற செயல்கள் வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஒவ்வாதவை என்பதை இளைய சமுதாயத்தினர் உணரும்படிச் செய்யவேண்டும். அவர்கள் சமூக அரசியல் பொருளாதாரப் பண்பாடுகளை மேற்கொள்ளும்படி வலியுறுத்தப்பட வேண்டும். அத்துடன் அறிவு, அறிவியல், வாழ்க்கை நெறி முதலியவைகளை வளர்க்கும் அடிப்படைத் தன்மைகொண்ட கல்வி முறைகளின் வழியாக தகுதியான, நடைமுறைக்கேற்றவாறு மாற்றியமைக்கப்படவேண்டிய மதிப்பீட்டு முறை புகுத்தப்படவேண்டும் என்பது கடந்தகால அனுபவங்களின் படிப்பினையாகும்.

1.25 இந்தியத் துணைக் கண்டம் பல்வேறு வகையான கலாச்சாரங் களைப் பின்பற்றியபோதிலும், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக அதன் அரசியல் ஒற்றுமை வலிமையுடையதாய் இருந்தது. ஆனால்- இந்த தேசிய ஒருமைப்பாடு தற்போது சாதி, மத, வட்டார உணர்வு போன்ற சக்திகளினால் சீர்குலைந்து வருகிறது. எனவே சுதந்திரப் போராட்டம், தேசீய ஒற்றுமையின் மதிப்பு, சாதி, மத வேறுபாடுகளால் ஏற்படும் ஆபத்துக்கள், பல்வேறு சூழ்நிலைகளினால் அழிந்துவரும் இந்தியக் கலாச்சாரங்களை நெறிப்படுத்துதல் முதலியவைகளை வலி யுறுத்துகின்ற கல்வி முறையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் பரவியுள்ளது. தற்போதைய கல்விமுறை தோல்வியுற்றுவிட்டது என்ப தையே நாட்டின் இன்றைய நிலை தெளிவாக உணர்த்துகிறது. இனிவரும் புதிய தலைமுறையாவது இந்தச் சூழ்நிலைகளில் இருந்து மாறுபடுவதற் கேற்ற தடுப்புமுறை கையாளப்படவேண்டும்.

1.26 தன்னம்பிக்கை உணர்வின்றி எந்த ஒரு மனிதனும் அல்லது ஒரு நாடும் முன்னேறியதில்லை. முன்னேறிய நாடுகள் பலவற்றில் சிறந்து விளங்கிய பல மனிதர்களைப்போல் இந்தியர்களும் அவர்களுடைய செய லிலும், திறமையிலும் சிறந்து விளங்கினர்; விளங்கி வருகின்றனர் என்பதை வெகு சிலரே அறிந்திருக்கின்றனர். கையில் திருவோடு வைத்துக் கொண்டு பிறரை எதிர்பார்க்கும் நிலையில் இந்தியா இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டுக்குள் நுழையக்கூடாது. இதற்கு, இளைய சமுதாயத்தி னர் அவர்களுடைய உள்ளாற்றலை அறியும்படி செய்யும் கடமையை உணரும்படி உடனடியான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

1.27 நமது இந்திய நாட்டில் மிகக் கடுமையான எண்ணம் ஒன்று உருவாக்கப்படுகின்றது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிவருகின்ற இளைய சமுதாயத்தினர் ஒவ்வொருவரும், உடல் உழைப்பினை ஈடுபடுத்திச் செய்யப்படும் தொழிலினைத் தாழ்வா கவும், அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்கள் பணியை உயர்ந்ததாக வும் கருதுகின்றனர். நவீன தொழில்முறைகளை உருவாக்குவதில் உலகின் பிற நாடுகளுடன் போட்டி போட்டு முன்னேறிச் சென்று கொண் டிருக்கின்ற ஒரு சமுதாயத்தில், இத்தகைய பிரபுத்துவ நோக்கமானது அச்சமுதாய முன்னேற்றத்துக்குக் கடுமையான தடையை உண்டுபண் ணும். இதுபோன்ற தடைகளை முறியடித்து முன்னேறி வரும் பல நாடுகளைப்போல, இந்தியர்களும் தங்களுடைய திறமைகளை வெளிப்

படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். இது எப்படி சாத்தியமாகும்? ஒவ்வொருவரும் உழைப்பின் மதிப்பை உணர்ந்து, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும்போது தன்னுடைய கரங்களினால் பயனுள்ள உழைப்பை வெளிப்படுத்துகின்ற அளவில் தொழில் கல்வி பெற்றுவருவ தைப் பொறுத்தே சாத்தியமாகும்.

1.28 அனைத்து நாடுகளிடையேயும் இந்தியா தனது இன்றைய நிலையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமேயானால், மக்கட்தொகை வளர்ச்சியைக் குறைப்பதில் கடுமை காட்டுவதுடன் மட்டுமல்லாமல், வளர்ந்துவரும் இந்திய இளைய சமுதாயத்தின் பெரும் பகுதியினர் தங்க ளிடையே பல திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இது ஒவ்வொரு நாளும் உறுதிப்பட்டு வருகிறது. அந்தத் திறமைகள் உற் பத்தி, போக்குவரவு, தகவல் தொடர்பு, நிர்வாகம் போன்ற மாறிவரும் தொழில்நுட்பப் புரட்சியில் மட்டுமல்லாமல் நடைமுறை வழிகள், வழி யமைப்பு முறைகள், கலாச்சாரச் சூழ்நிலைகள் முதலியவைகளிலும் அமையவேண்டும். இதற்கு உயர் கல்வி முறையை உருவாக்கும் மையங் கள் நவீனப்படுத்தப்பட வேண்டும். மாற்றத்தை வலியுறுத்துகின்ற, தெளிவாக்குகின்ற, மனிதனுடைய சுய ஆற்றலை வெளிக் கொணர்கின்ற மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற கல்விமுறையை உருவாக் கும் புதிய மையங்கள் அமைக்கப்படவேண்டும். நவீன அறிவியல் விழிப் புணர்வுடன் முழுச் சூழ்நிலையையும் பரவலாக மாற்ற வேண்டிய எண் ணத்தையும் உறுதிப்படுத்தியாகவேண்டும் அப்படித் தகுதியான சூழ்நிலை மாற்றங்களை ஏற்படுத்தத் தவறினால், பழமைசார்ந்த மெது வாகச் செல்லும் மனம் படைத்த, எதையும் சகித்துக்கொள்கின்ற மக்கள் தொகையின் ஒரு பிரிவினரால் நவீனக் கல்வி மையங்கள் ஒதுக்கப் பட்டுவிடும்.

1.29 கல்வி முறை நெட்டுருவாகக் கற்றலையும் ஒரேவகைப் பயிற்சி களையும் வற்புறுத்தும் வகுப்பு வேலைகளையும் தேர்வுகளையும் சிறப் பான குணங்களாகக் கொண்டுள்ளதால் அதிகமான மாணவர்கள் தங்களி டையே மறைந்திருக்கும் உருவாக்கும் மற்றும் புதுமைத் திறன்களை வெளிக் கொணரும் சவால்களை ஏற்றிருக்கமாட்டார்கள். ஐயமற இது கற்பிக்கும் முறையிலும், பாடத் திட்டத்திலும், பாடப்புத்தகத்திலும் தேவையான சீர்திருத்தத்தைக் குறிக்கிறது. இது மட்டும் போதுமான தன்று. புதுப்பித்தலும், வேலைக் கேட்பாடுகளும் ஆசிரியர்களின் அறிவு

மற்றும் திறமைகளும் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்கள் கற்கும் சூழலில் இன்னும் அதிகமாக உருவாக்கும் நோக்கோடு பங்கேற்க வேண்டும். இதில் அவர்கள் புதிய கருத்துக்களுடனும் தொழில் நுட்பங் களுடனும் இடையறாது போராட வேண்டும்.

1.30 கல்விக்காகப் பணிக்கப்பட்டுள்ள பல்வேறு வேலைகளைக் கவனத் திற் கொண்டோமானால் குழந்தைகள் தங்கள் வயதுக்கேற்ற கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்றால் அன்றி நம்முடைய மனித சக்திக்கேற்ற நாட்டை உருவாக்கும் பணியானது சாத்தியமாகாது. எல்லாருக்குமான துவக்கக் கல்வியை அடைதல் என்பது இனியும் ஒரு தேர்ந்தெடுக்க வேண்டிய விஷயம் அல்ல. அனைவரும் தொடக்கக் கல்வியை அடை வது என்பது கல்வி கற்பிக்கும் முறை மற்றும் பாடப் பொருளின் பொருத்தம் மட்டுமல்லாமல் பெற்றோர், கல்வி மதிப்பைப் பற்றிக் கொண் டுள்ள கருத்தையும் பொறுத்து உள்ளது. எனவே முதியோரை ஈடு படுத்தும் செயல் முறைக்கேற்ற கல்வியை அளிக்க மாபெரும் செயல் முறைத் திட்டம் ஒன்று துவக்கப்பட வேண்டும்.

## புதிய கல்விக் கொள்கை

1.31 முன்னேற்றத்தில் மாநிலங்கள் முக்கிய பங்கேற்கும் ஓர் அரசிய லமைப்பின்படி கல்வியின் வெவ்வேறு நிலைகளிலும் மட்டத்திலும் மைய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்புகளை அறுதியிட்டுக் கூறுவது அவசி யம். கல்வி தற்போது பொதுப் பட்டியலில் வந்துள்ளதால் இதன் அவசி யம் அதிகம். இத்தறுவாயில் எல்லா வளங்களைப் பற்றியும் அவற்றை வெவ்வேறு நிர்வாக மட்டங்களில் ஒப்படைப்பைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

1.32 தற்போதைய அளவு மற்றும் தரம் பற்றிய மதிப்பீடானது கடந்த இருபதாண்டுகளாகக் கல்வியில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் சில முன்னேற்றத்திற்கும் சில தொய்வுக்குமாக காரணமாக உள்ளன என்று பரவலாக உள்ள உணர்ச்சியின் பிரதிபலிப்பேயாகும். கல்வியில் தேவை யான பல மாறுதல்கள் ஏற்கனவே முந்தைய குழுக்களால் முக்கியமாக 1964–66 கல்விக் குழுவால், எதிர்பார்க்கப்பட்டவைதான் என்பதை இவ் வறிக்கையின் பிற்பகுதியில் காணலாம். இன்றைய பிரச்சினைக்கு, திட்ட மிடப்படாத, தாமதித்த அமுல்படுத்தலும், பொருள் ஒதுக் கீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே காரணமாகும். ஆகையால் புதிய கல்விக்

கொள்கையானது கல்விக் கட்டளைகளை நோக்கம், கருத்து முன்னுரிமை இவற்றின் மூலமாக மட்டுமல்லாமல் கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ள நீண்டகால குறுகிய கால நோக்கங்களை அடையக்கூடிய செய்முறை சாத்தியக் கூறுகளைக் கூறவேண்டும். இச்சாத்தியக் கூறுகள் பணதளவாட நிர்வாக, மனிதத் தேவை இவற்றைச் சார்ந்து இருக்கவேண்டும். கல்விக் கொள்கையில் அடிப்படை மாற்றம் அமைக்கவேண்டுமென்றால் அதற்கு நடைமுறை உருவம் அமைக்க மாபெரும் நிர்வாக அமைப்புகளைத் திட்டமிடவேண்டும்.

*1.33* ஒரு தேசிய கல்வி கொள்கையானது அதனை அமுல்படுத்துவோர்களின் கருத்துக்கள், அறிவு, பங்கேற்பு இவற்றின் மூலம் உருவாக்கப்பட வேண்டும், மாறிய, சுயாட்சி நிறுவனங்கள் தானே முன் வரும் முகமைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், விஞ்ஞானிகள், நிர்வாகிகள், தொழில் முனைவர், தொழிலாளிகள், சட்டசபை அங்கத்தினர்கள் மேலும் பத்திரிகையாளர்கள் இவர்கள் அனைவரும் இக்கொள்கை உருவாகும்பொழுது தங்களுடைய கருத்துக்களை அளிக்க வேண்டும்.

*1.34* கல்வியின் வித்தியாசமான நடைமுறை மற்றும் கொள்கைப் பிரச்சினைகளை விரித்துரைக்கும் முயற்சியில் இந்த அறிக்கை, இன்றைய ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, தொழில், தொழில் நுட்ப அறிவியல் முதியோர் மற்றும் ஆசிரியக் கல்வியின் தரம் மற்றும் அளவு பற்றி ஒரு மேல் நோக்கையும் அத்துடன் மாறுபட்ட செயல் திறத்தையும், கொள்கைகளையும் கூறுகிறது.

## அத்தியாயம்-2

# கல்வி வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம்

2.1 முதல் அத்தியாயத்தில் கல்வி, சமுதாயம், வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பை எடுத்துக்காட்ட முயற்சிக்கப்பட்டது. இப்பகுதியில் பல்வேறு திட்ட காலங்களில் ஏற்பட்ட சாதனைகளை விவரிப்பது அவசியம் எனத் தோன்றுகிறது. கல்வியில் இதுவரை ஏற்பட்ட சாதனைகளையும் இனி சாதிக்க வேண்டியவைகளையும் இந்த அத்தியாயம் விளக்குகிறது. கல்விக்கூடங்களின் படிப்படியான வளர்ச்சி, கல்வித்துறையின் பல பிரிவுகளில் ஏற்பட்ட மாணவர் சேர்க்கை, மாணவர்களைப் பள்ளியில் தங்கவைத்தல் மற்றும் பள்ளிப் படிப்பை இடையே விட்டு நிற்போர் எண்ணிக்கை, முறைசாராக்கல்வி, எழுத்தறிவு வளர்ச்சி, ஆசிரியர் எண்ணிக்கை, கல்விக்காக செய்யப்படும் செலவு அல்லது ஒதுக்கீடு ஆகியவற்றைப் பற்றி இங்கு விரிவாக எடுத்து கூறப்பட்டுள்ளது.

### கல்விக்கூடங்களின் வளர்ச்சி

2.2 கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலத்தில் இந்தியாவில் கல்விக்கூடங்களின் எண்ணிக்கை 2.3 இலட்சத்திலிருந்து 6.9 இலட்சமாக (மூன்று மடங்காக) உயர்ந்துள்ளது. இவற்றில் பெரும்பாலானவை (73 சதவிகிதம்) துவக்கப்பள்ளிகளாகும். 1950 முதல் 1985 வரையான கால கட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 2.4 மடங்காக உயர்ந்தது. இதன்மூலம் மொத்த கல்வி நிலையங்களின் எண்ணிக்கையிலும் ஆண்டொன்றுக்கு 2.8 சதவீத உயர்வு ஏற்பட்டது. எனினும் கடந்த சில ஆண்டுகளில் ஆரம்பப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்த அளவே உயர்ந்துள்ளது. மேலும் ஆரம்பப்பள்ளிகளின் எண்ணிக்கை எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவில் உயரவில்லை. கல்வியில் முன்னேறிய சில மாநிலங்கள் தங்களது கல்வித் திட்டங்களை 1950–60, 1960–70 ஆகிய கால கட்டத்திலேயே துவங்கின. இந்த மாநிலங்களில் பெரும்பான்மையான குடியிருப்புகளில் ஏற்கெனவே துவக்கப்பள்ளிகள் அமைக்கப்பட்டுவிட்டன. எனவே மேலும் துவக்கப்பள்ளிகளில் எண்ணிக்கை உயர வாய்ப்பு குறைந்துவிட்டது. ஆனால் தாமதமாக முன்னேற்றப்

பாதையில் அடியெடுத்து வைத்த ஹிமாசல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மத்தியபிரதேசம் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் 1970–க்கு பிற்பட்ட 10 ஆண்டுகாலத்தில்தான் கல்விக்கூடங்களின் எண்ணிக்கை அதிகமாக உயர்ந்தது. துவக்கக்கல்வி அமைப்பை பொறுத்தவரை பெருவாரியான மாநிலங்களில் 5 ஆண்டு துவக்கக் கல்வியும், அதைத் தொடர்ந்து 3 ஆண்டு நடுநிலைக் கல்வியுமே பின்பற்றப்படுகிறது. சில மாநிலங்களில் இது 4 + 3 அல்லது 4 + 4 எனவும் உள்ளது.

2.3 1950–51ல் 13.4 ஆயிரமாக இருந்த நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1982–83ல் 123.3 ஆயிரங்களாக உயர்ந்தது. இந்த உயர்வு ஆண்டொன்றுக்கு 7.2 சதவீதமாகும். 1950–51ல் 15 துவக்கப் பள்ளிகளுக்கு 1 நடுநிலைப் பள்ளி (15:1) என்றிருந்த நிலை மாறி 1982–83ல் 4 துவக்கப்பள்ளிகளுக்கு 1 நடுநிலைப்பள்ளி (4:1) என்ற அளவிற்கு உயர்வு ஏற்பட்டது. ஆகவே 1950-லிருந்து 1983-க்குள்ளான காலகட்டத்தில் துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2.23 லட்சத்திலிருந்து 6.27 லட்சங்களாக உயர்ந்தது. இவ்வுயர்வு ஆண்டொன்றுக்கு 3.3 சதவீதமெனக்கணக்கிடப்பட்டுள்ளது.

2.4 1950-51ல் 7300 ஆக இருந்த உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 1982-83ல் 52,279 ஆக உயர்ந்தது. இவ்வுயர்வு ஆண்டொன்றுக்கு 6.3 சதவீதமாகும். நடுநிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை உயர்வை காட்டிலும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்வு குறைவே என்பதை எடுத்துக்காட்டுவது அவசியமாகும். 1950-51ல் நடுநிலைப்பள்ளிகளுக்கும், உயர்நிலைப்பள்ளிகளுக்குமிடையேயான விகிதம் 1.84:1 என்ற அளவில் இருந்தது. இது 1982-83ல் 2.5:1 என்று ஆகிவிட்டது. எனினும் எல்லா உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளும் ஒரே மாதிரியானவை அல்ல என்பதையும் கவனிக்கவேண்டும். இவற்றில் சில (6030) புதிய முறையான 10+2 திட்டத்தை ஏற்று கொண்டன. மற்றவை (3473) பழைய முறையை பின்பற்றும் பள்ளிகளாகும். இவற்றில் பெருவாரியானவை (42776) உயர்நிலைப்பள்ளிகளாகும். இவற்றில் ஏறத்தாழ 22 சதவீதம் பள்ளிகள் மத்தியப்பிரதேசத்திலும், ஆந்திரப் பிரதேசத்திலும் மட்டுமே உள்ளன.

2.5 10+2 கல்வித் திட்டத்தை ஏற்றுக் கொண்டதன் மூலமாக நாடு தழுவிய, ஒரே மாதிரியான திட்டத்தின் ஒரு பகுதியாக தொழிற்கல்வி

வளர்ச்சி ஏற்படத் துவங்கியது. 1976-77ல் மூன்று மாநிலங்கள் மட்டுமே இத்திட்டத்தை ஏற்றன. ஆனால் 1983-84ல் பதினொரு மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் இத்திட்டம் (10+2) பரவியது. 1983-84ல் நாட்டில் இருந்த 1600 தொழிற்கல்வி கூடங்களில், பாதிக்கு மேற்பட்டவை தொழிற்கல்வியில் ஒரு முன்மாதிரியாக விளங்கும் தமிழகத்தில் மட்டுமே இருந்தன. இந்தக் கணக்கெடுப்பில் 250 தொழிற்கல்வி கூடங்களுடன் மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்தில் இருககிறது.

2.6 பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை உயர்வு வீதம் ஆண்டொன்றுக்கு 6.8 சதவிகிதமே ஆகும். 1975-76இல் 325 ஆக இருந்தது 1982-83ல் 515 ஆக வளர்ந்தது. இவற்றில் மிகப்பெரும்பாலானவை தமிழ்நாட்டில் இருக்கின்றன. அடுத்தபடியாக கர்நாடகம், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரம் ஆகியவை இடம் பெறுகின்றன. பாலிடெக்னிக்குகளுடன் ஒப்பிடும்பொழுது நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை அதே கால கட்டத்தில் ஆண்டொன்றுக்கு 9.2 சதவீதம் என்ற அளவு உயர்ந்துள்ளது. 1975-76இல் 108 ஆக இருந்த பொறியியல் கல்லூரிகள் 1982-83இல் இருநூறாக உயர்ந்தது. இவற்றில் ஏறத்தாழ நான்கில் ஒரு மடங்கு (48) கர்நாடகத்தில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருபத்தாறு பொறியியல் கல்லூரிகளுடன் ஆந்திரம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

2.7 1950 முதல் 1983-க்கு உட்பட்ட காலத்தில் பொதுக்கல்வித் துறையில் பட்டமுற்படிப்பு கல்லூரிகளின் எண்ணிக்கையில் வேகமான வளர்ச்சி காணப்பட்டது. தற்போது நாட்டில் 5246 கல்லூரிகளும் 140 பல்கலைக் கழகங்களும் உள்ளன. கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் வளர்ச்சி ஆண்டொன்றுக்கு ஆறு சதவிகிதத்திற்கும் அதிகமாகும்.

### சேர்க்கை

2.8 கல்வியில் எல்லா நிலைகளிலும் ஆண் பெண் இருபாலாரின் பள்ளிச் சேர்க்கை உயர்ந்து வருவதைக்காண முடிகிறது. 1950-51இல் 2.8 கோடியாக இருந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை 1982-83இல் 11.4 கோடியாக உயர்ந்தது. இந்த வளர்ச்சியின் அளவு ஆண்டொன்றுக்கு 4.5 சதவீதமாகும். இந்தக் கால கட்டத்தில் மாணவியர் சேர்க்கை அளவு 5.5 சதவீத கூட்டு வளர்ச்சி விகிதத்தில் அதிகரித்தது.

ஆனால் இந்த விகிதம் மாணவர் சேர்க்கையைப் பொறுத்தமட்டில் ஆண்டொன்றுக்கு 3.9 சதவிகிதமாகவே இருந்தது. இருப்பினும் மாணவ மாணவியர் சேர்க்கை அளவில் துவக்கத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வின் காரணமாக இந்த மாணவியர் சேர்க்கை உயர்ந்தாலும் அது மாணவர் சேர்க்கையைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. பள்ளிச் சேர்க்கையில் கல்வியின் எல்லா நிலைகளிலும் எல்லா மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் செயல்பாடு ஒரே மாதிரியாக இல்லை. ஆகவே பள்ளிச் சேர்க்கையை பற்றி ஆய்வு செய்பவர் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு நிலைக்கும் சேர்க்கை அளவைப்பற்றி ஆய்வது அவசியமாகும்.

2.9 1951-க்கும் 1981-க்கும் இடைப்பட்ட முப்பது ஆண்டுகால பள்ளிச் சேர்க்கை விகிதங்களைப்பற்றி ஆய்வு செய்தால் பின்வரும் விவரங்கள் கிடைக்கின்றன. ஆரம்பக்கல்வி வளர்ச்சி 1950-1959, 1960-1969, 1970-1979 ஆகிய கால கட்டங்களில் முறையே 6.2, 5.0, 2.5 என்ற அளவில் இருந்தது. இந்த வளர்ச்சி விகிதங்களை ஆய்வு செய்கின்றபோது பல அம்சங்களை நினைவிற்கொள்ளவேண்டியது அவசியமாகும். முதலாவதாக ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் மாணவ மாணவியர் தொகை உயர்வதால் கூடுதல் சேர்க்கை எவ்வளவு இருப்பினும் சேர்க்கை விகிதம் குறைவாகவே உள்ளது. இரண்டாவதாக சுதந்திரம் கிடைத்தவுடன் கல்வி வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் குறிப்பிடத்தக்க அளவு மக்கள் பெருகிவரும் கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்தத் துவங்கினர். ஆயினும் காலப்போக்கில் நாடு முழுதும் பெருமளவில் துவக்கப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டதால் கல்வி வளைவிற்குள் வராமலிருந்தோர் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. உரிய வயதுக்கு மேற்பட்டோர் உரிய வயதுக்குக் கீழ்ப்பட்டோர் ஆகியவர்களின் ஆரம்பப் பள்ளிச் சேர்க்கை விகிதம் காலப்போக்கில் குறைந்து கொண்டே வந்தாலும், இன்னும் அது ஏறத்தாழ 25 சதவிகிதமாக இருக்கிறது. 1971-81க்கான மாணவர் சேர்க்கை வளர்ச்சி விகிதத்திலிருந்து உரிய வயதுக்கு தாழ்ந்த, உயர்ந்த வயதுடையோர் சேர்க்கை அளவை (2.5% ஆண்டொன்றுக்கு) நீக்கிவிட்டால் இவ் வளர்ச்சி குறிப்பிட்ட வயதுடையோர் தொகையைக்காட்டிலும் மிகவும் குறைந்து காணப்படும். ஆகவே எழுதப்படிக்கத்தெரியாத மக்கள் தொகையின் அளவு ஏறிக்கொண்டே வருவதை இதன் மூலம் உணர

முடிகிறது. இந்நிலை அனைவருக்கும் துவக்கக் கல்வி அளிக்கும் திட்டத்திற்கும் மிகவும் பாதகமான விளைவுகளைக் கொண்டதாகும்.

2.10 1960-61 ஆண்டில் மாணவர்களின் அதிகமான சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டிலும் குறைந்த சேர்க்கை விகிதங்கள் ஜம்மு காஷ்மீர, மத்திய பிரதேசம், பீஹார் போன்ற மாநிலங்களிலும் இருந்தன. 1982-83ல் இந்நிலையில் பெரியமாற்றம் ஏற்பட்டது. அஸ்ஸாம், கர்நாடகம், மத்திய பிரதேசம், ஒரிஸா ஆகிய மாநிலங்களைத் தவிர, அநேகமாக பிற மாநிலங்கள் அனைத்திலும் மாணவர்கள் சேர்க்கை 100 சதவிகிதத்திற்கும் அதிகமாக இருந்தது. ஆனால் இவை மொத்த சேர்க்கை விகிதங்களாகும். எனவே இந்த சேர்க்கை எண்ணிக்கையில் உரிய வயதை அடையாதவர்களும் உரிய வயதுக்கு மேற்பட்டவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2.11 மாணவியர் சேர்க்கை விகிதமும் ஏறத்தாழ மேலே குறிப்பிட்ட அளவிலே இருந்தது எனலாம். ஆனால் 1960-61ல் குறைந்த அளவு மாணவியர் சேர்க்கை விகிதம் (16) இராஜஸ்தான் மாநிலத்தில் காணப்பட்டது. குறைந்த அளவு மாணவியர் சேர்க்கையுடைய பிற மாநிலங்கள் ஜம்மு காஷ்மீர், பீஹார், மத்தியபிரதேசம் ஆகியவையாகும். ஆனால் 1982-83க்குள் அனைத்து மாநிலங்களிலும் மாணவியர் சேர்க்கை அளவில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதில் முன்மாதிரியாகத் திகழ்ந்த மாநிலங்களில் குறிப்பிடத்தக்கவை குஜராத், ஹிமாசல பிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம், பஞ்சாப், தமிழ்நாடு ஆகியவையாகும். 49 சதவீத மாணவியர் சேர்க்கை அளவை அடைந்த உத்திரபிரதேசம் ஆரம்பப் பள்ளிகளில் மாணவியர் சேர்க்கை அளவில் குறைந்த அடைவினைப் பெற்ற மாநிலமாக கருதப்பட்டது.

2.12 அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கும் திட்டம் எட்டாம் வகுப்பையும் உள்ளடக்கியிருப்பதால் எட்டாம் வகுப்புவரை கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பற்றி கணக்கிடுவது அவசியமாகும். முதலாவதாக 1950-51ல் 0.26 கோடியாக இருந்த நடுநிலைக்கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 1982-83ல் 1.47 கோடியாக வளர்ந்தது. இவ்வளர்ச்சி ஆண்டொன்றுக்கு 5.5 சதவிகிதமாகும். மாணவியர் சேர்க்கையின் வளர்ச்சி விகிதம் மிக வேகமாக (8.6%) இருந்த போதிலும், தகுந்த வயதுடைய மொத்த மாணவியரில் 30.6

சதவீதம் மட்டுமே நடுநிலைப்பள்ளிகளில் சேர்ந்தனர். இது மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரை 56.3 சதவிகிதமாக இருந்தது. துவக்கப் பள்ளியில் ஒரு மாணவர் சேர்க்கப்பட்டால் 0.63 மாணவியர் சேர்க்கப் பட்டனர். நடுநிலைப்பள்ளியைப் பொறுத்தவரை இந்த அளவு 0.5 என்ற நிலையில் இருந்தது.

2.13 1968ம் ஆண்டின் கல்விக் கொள்கையின் அடிப்படையில் உயர் நிலை மற்றும் மேல்நிலைக்கல்வி அமைப்பில் பல மாற்றங்கள் ஏற் பட்டதால் இந்நிலைகளில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் அல்லது வளர்ச்சியை விவரிப்பது மிகச் சிரமமாகும். எனினும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிக்கல்வி அளிக்கும் வகுப்புகளை (IX - X / XI) பொறுத்தவரை 1950-52ல் 12.2 லட்சங்களாக இருந்த பயில்வோர் எண்ணிக்கை 1980-81ல் 94.9 லட்சங்களாக உயர்ந்தது. இவ்வுயர்வு ஆண்டொன்றுக்கு 7.8 சதவிகிதம் ஆகும். இந்தக் காலகட்டத்தில் உயர் நிலை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர், மாணவியர்களுக் கிடையேயான விகிதமும் குறிப்பிடத்தகக மாறுதலுக்குட்பட்டது. 1950-81க்கு இடைப்பட்ட காலத்தில் மாணவியர் சேர்க்கை விகிதம் மிக வேகமாக (10.1 சதவிகிதம்) உயர்ந்தது. கல்வியில் இந்நிலையில் 1950-51ல் ஒரு மாணவருக்கு 0.16 மாணவியர் (1:0.16) என்றிருந்த நிலை மாறி 1980-81க்குள் ஒரு மாணவருக்கு 0.42 மாணவியர் என்ற நிலை (1:0.42) ஏற்பட்டது.

2.14 உயர்கல்வியில் சேர்க்கை வளர்ச்சி உற்சாகம் அளிப்பதாக இருக்கிறது. 1950-க்கும் 1982க்கும் இடைப்பட்ட காலத்தில் உயர் கல்வி பயில்வோர் சேர்க்கை (எண்ணிக்கை) ஆண்டொன்றுக்கு 9.7 சதவிகிதம் என்ற அளவில் உயர்ந்தது. ஆனால் இவ்வுயர்வு 1950லிருந்து 59 வரை ஆண்டுக்கு 12.4 சதவிகிதமாகவும், 1960லிருந்து 1969 வரை ஆண்டொன்றுக்கு 13.4 சதவிகிதமாகவும், 1970லிருந்து 79 வரை ஆண் டொன்றுக்கு 3.8 சதவிகிதமாகவும் இருந்தது. எனவே உயர்கல்வி நிலை யில் வளர்ச்சி அல்லது விரிவாக்கத்தில் அளவு சற்று மந்தம் அடையத் துவங்கியுள்ளது.

2.15 உயர்கல்வியின் எல்லாப் பாடப்பிரிவுகளிலும், சிறப்புப் பகுதி களிலும் சேர்க்கை அளவு உயர்ந்துள்ளது. சான்றாக கலைப்பாட வகுப்புகளில் சேர்க்கை அளவு குறைந்தபொழுது கடந்த பத்தாண்டு

களில் வணிகவியல் துறையில் சேர்க்கை அளவு உயர்ந்தது. பொதுக் கல்வியுடன் தொழிற்கல்வியை ஒப்பிட்டுப்பார்த்தால், பொதுக்கல்வி யில் சேர்க்கை (4.5) அளவைக்காட்டிலும், தொழிற்கல்வியில் சேர்க்கை அளவு ஆண்டொன்றுக்கு 2.5 சதவிகிதம் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. தொழிற்கல்வியைப் பொறுத்தவரை மருத்துவக்கல்வி 2.5 சதவிகிதம் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. தொழிற்கல்வியைப் பொறுத்தவரை மருத்துவக்கல்வி வகுப்புகள் (39.1 சதவிகிதம்) பொறி யியல், தொழில்நுணுக்கம், மற்றும் கட்டடக் கலை (36.6 சதவிகிதம்) ஆகியவையே வளர்ச்சியில் பெரும்பங்கு பெற்றுள்ளன. விவசாயம் மற்றும் காலநடைமருத்துவம் ஆகிய கல்வித்துறைகளில் சேர்க்கை வளர்ச்சி ஆண்டொன்றுக்கு முறையே 5.4 சதவிகிதமாகவும், 2.6 சதவிகிதமாகவும் இருக்கிறது. ஆசிரியர் பயிற்சிகளில் பயில்வோர் எண்ணிக்கை உயர்வு ஆண்டொன்றுக்கு 2.6 சதவிகிதமாக உள்ளது. ஆசிரியர் பயிற்சியில் பெண்களின் சேர்க்கை ஆண்டொன்றுக்கு 5.1 சதவிகிதம் என்ற அளவில மிகவேகமாக வளர்ந்துள்ளது.

2.16 1960-க்கும் 1983-க்கும் இடைப்பட்ட காலத்தில் பொறியியல் வகுப்புகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கை 43,000-லிருந்து 1,12,000 ஆக, சுமார் 2.6 மடங்கு உயர்ந்தது. பெண்களின் சேர்க்கை 17 மடங்கு உயர்ந்த போதிலும், முழு அளவில் பார்க்கும்பொழுது பயிலும் ஆண் களின் சேர்க்கையில் 5 சதவிகிதமாக பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து காணப்பட்டது. ஆந்திரம், அஸ்ஸாம், கர்நாடகம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பொறியியல் பயிலும் மாணவர்கள் சேர்க்கை பாராட்டத்தகுந்த அளவு அதிகரித்தது. இதிலும் கர்நாடகம் சிறப்பாக விளங்குகிறது. இங்கு 5000-க்கும் குறைவாக இருந்த பொறியியல் பயில்வோர் எண்ண்க்கை ஆண்டொன்றுக்கு 8 சதவிகித அளவு உயர்ந்து 20,000-க்கும் மேற்பட்டு காணப்படுகிறது.

2.17 மேலும் பல மாநிலங்கள் பால்டெக்னிக்குள், தொழில் நுட்பப் பள்ளிகள், கலை மற்றும் தொழிற்பள்ளிகள் போன்றவற்றில் குறிப் பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன. ஆந்திரம், கர்நாடகம் ராஜஸ்தான், உத்திரபிரதேசம் ஆகியவற்றில் பாலிடெக்னிக்குகளில் பயில்வோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தொழில் நுட்பப் பள்ளிகள், கலை மற்றும் கைத்தொழில் பள்ளிகளைப் பொறுத்தவரை இவற்றில் பயில்வோர் எண்ணிக்கை ஆந்திரம், குஜராத், ஜம்முகாஷ்மீர்,

மகாராஷ்டிரம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பெருமளவு அதிகரித்துள்ளது.

2.18 கல்வியில் எல்லா நிலைகளிலும் எல்லாப்பிரிவுகளிலும் பயில்வோர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், துவக்கக்கல்வியில் இனிமேல் ஏற்படக்கூடிய கூடுதல் சேர்க்கை பெருகி வருகின்ற கல்வி வாய்ப்புகளைப்பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலையில் இருக்கின்ற, சமுதாயத்தின் அடித்தட்டிலே உள்ள மக்களால் நிகழவேண்டியிருப்பதால், மாணவ மாணவியர் சேர்க்கை வளர்ச்சி குறைந்துள்ளதைக் காண்கிறோம். ஆகவே கூடுதல் சேர்க்கை குறைவதானது சுதந்திர இந்தியாவின் கல்விப்பெருக்கத்தின் முதல்நிலை முடிவுக்கு வந்துவிட்டது எனக்கொள்ளலாம். மேலும் கல்வி வளர்ச்சி அல்லது கல்விப்பெருக்கம் ஏற்பட வேண்டுமானால் கல்வித்திட்டங்கள் மற்றும் அவற்றின் மேலாண்மை ஆகியவற்றில் அடிப்படை மாறுதல்களில் பலவற்றைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மாணவியர் சேர்க்கை பொறுத்தவரை அவர்களுக்கு கல்வி வாய்ப்பில், குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் அந்த முன்னேற்றம் துவக்கத்தில் மாணவ, மாணவியருக்குகிடையே கல்வியின் மீதான ஈடுபாட்டில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வைச்சரிக்கட்டுவதற்கு போதுமானதாக இல்லை. நாம் எந்த அளவிற்கு மாணவர் சேர்க்கை, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கிடையில் காணப்படும் இடைவெளியைக் குறைக்கிறோமோ அந்த அளவிற்குத்தான் கல்வியில் மேலும் முன்னேற்றம் அல்லது வளர்ச்சி ஏற்படமுடியும்.

**பள்ளியில் தொடர்ந்து படிக்கவைத்தல்**

**பள்ளிக்கல்வியை இடையில் விட்டுச்செல்வோர்**

2.19 பெருகிவரும் கல்வி வசதிகளின் உண்மையான பயன்கள் மாணவ, மாணவியர் எந்த அளவிற்குப் பள்ளிகளில் தொடர்ந்து கற்கின்றனர் என்பதைப்பொறுத்தே அமையும். ஆதலால் பயில்வோர் பள்ளிகளில் தொடர்ந்து கற்றல் எந்த அளவிற்கு நிகழ்கிறது என்பதை ஆய்வு செய்தல் அவசியமாகிறது. அதுபற்றிய விவரங்கள் போதுமான அளவில் நம்மிடம் இல்லை. இருந்தபோதிலும் கிடைத்திருக்கிற குறைந்த அளவு ஆதாரங்களை வைத்து சில குறிப்புகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. துவக்க நிலையில் மாணவர்களைப்

பள்ளிகளில் தொடர்ந்து படிக்க வைப்பதில் முன்னேற்றம் குறைந்த அளவிலாவது தொடர்ந்து காணப்படுகிறது. 1 முதல் 5 வகுப்புகளில் மாணவர்கள் தொடர்ந்து படிக்கும் விகிதம் 1968 ஆண்டில் சேர்ந்த மாணவ மாணவியரிடையே 33.5 சதவிகிதமாக இருந்த நிலை மாறி 1974 ஆம் ஆண்டில் சேர்ந்த மாணவ, மாணவியரிடையே 38.6 சதவிகிதமாக உயர்ந்தது. துவக்கக்கல்வியில் பயின்று முடித்த குழுக்கள் பற்றிய புள்ளி விவரங்களும் மேலே எடுத்துக்காட்டப்பட்ட போக்கை உறுதி செய்கின்றன. எனினும் பயில்வோரை தொடர்ந்து பள்ளிகளில் பயிலவைத்ததில் பெரும்பயன் 1970-க்கு பின்னரே பெறப்பட்டது.

2.20 பள்ளிப்படிப்பை இடையில் விட்டுவிடுகின்ற மாணவ, மாணவியர் விகிதத்தை ஆய்வதன் மூலமாக மாணவர் சேர்க்கையின் முக்கியத்துவத்தை அல்லது விளைவை மதிப்பிடலாம். 1964-65 முதல் 1979-80 வரைப்பட்ட காலத்தில் பள்ளிப்படிப்பை இடையில் விட்டவர்களைப் பற்றிய மாநிலவாரியான விவரங்களைப்பகுத்தாய்ந்துபார்த்தால் ஆண்டு வாரியாக சொற்ப அளவிலேயே (-7 விழுக்காட்டுப்புள்ளிகள்) பள்ளிப் படிப்பை, இடையில் விட்டுச்செல்வோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பதைக் காணலாம். அஸ்ஸாம், பீஹார், கர்நாடகம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்வோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இந்த எண்ணிக்கை கேரள மாநிலத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரே மாதிரியான மாநிலங்களான ஜம்முகாஷ்மீர், ஹிமாசல பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் தற்போது பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச்செல்வோர் எண்ணிக்கை அளவு மிகவும் குறைந்துள்ளது. ஆனால் இவற்றில் பல மாநிலங்களில் 1970-க்குப் பின்னரே பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்வோர் எண்ணிக்கை குறைவதில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஆயினும் இதற்கு விதிவிலக்காக உத்திரப்பிரதேசம் காணப்படுகிறது. அம்மாநிலத்தில் பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்வோர் விகிதம் உயர்வாக இருப்பது மட்டுமின்றி, கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்திருப்பதாகவும் தெரிகிறது.

2.21 குறைந்த அளவு மாணவ, மாணவியரே தொடர்ந்து கற்று முடித்தலினாலும் அதிக அளவு மாணவ, மாணவியர் பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்வதாலும் கல்விப் பெருக்கத்தின் பயன்கள்

தொடர்ந்து வீணாகின்றன. பெருமளவில் நிகழும் கல்விப்பாழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கின்றது.

### முறைசாராக்கல்வியும்—எழுத்தறிவும்

2.22 கல்வி என்னும் கட்டிடத்தின் அடித்தலமாக முறை சார்ந்த கல்வி முறை திகழ்வதற்குக் காரணங்கள் உள்ளன என்றாலும் கல்வியை மக்களிடையே பெருக்குவதற்குரிய முயற்சிகள் அதோடு முடிந்துவிடுவதில்லை. இம்முயற்சிகளில் முறைசாராக் கல்வியும் முக்கிய பங்கு ஆற்ற முடியும் எனக் கருதப்படுகிறது. முறைசாராக் கல்விமுறை 9 முதல் 14 வயதுடைய, முறையான பள்ளியிற் சேர இயலாதோர் அல்லது பள்ளிப்படிப்பை முடிக்காமலே இடையில் விட்டுச்சென்றோர் ஆகியவர்மீது அதிக கவனம் செலுத்துகிறது.

2.23 ஆறாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில்தான் துவக்கக்கல்வி பெறத்தக்க வயதுடையோருக்கு முறைசாராக் கல்வியின் அதி முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. கிடைத்துள்ள 1982-83ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரங்கள் முறைசாராக்கல்வி மையங்கள் துவக்கப்படுதல் மற்றும் மாணவ, மாணவியர் அம்மையங்களில் சேர்க்கப்படுதல், ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைத் தெரிவிக்கின்றன. முறை சாராக்கல்வி முறையின் ஈடுபாட்டினை அதிகமாகப்பெற்றுள்ள கல்வியில் பின்தங்கிய மாநிலங்களில் மட்டுமே 68,000 முறைசாராக்கல்வி மையங்கள் இக் குறிக்கோளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்டவை துவக்கக்கல்வி மையங்களாகும். மீதமுள்ளவை நடுநிலைக் கல்வி அளிப்பவை. நடுநிலைக்கல்வி அளிக்கும் முறைசாராக்கல்வி மையங்களில் பெரும்பாலானவை மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளன. மற்ற மாநிலங்களில் பெரும்பாலும் துவக்கக் கல்விதரும் முறைசாரா மையங்களே உள்ளன. முறைசாராக்கல்வி மையங்கள் உத்திரபிரதேசம் (16.6 ஆயிரம்) மேற்கு வங்கம் (15 ஆயிரம்) ஆகிய மாநிலங்களில்தான் செறிந்துள்ளன. இவ்விருமாநிலங்களில் மட்டுமே நாட்டில் உள்ள துவக்கக்கல்வி அளிக்கும் முறை சாராக்கல்வி மையங்களில் பாதிக்கும் மேற்பட்டவை உள்ளன.

2.24 கல்வியில் பின்தங்கிய 9 மாநிலங்களில் உள்ள முறைசாராக் கல்வி மையங்களில் 14.7 இலட்ச மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்கள்

92 விழுக்காடு துவக்கக்கல்வி நிலையிலும், ஏனையோர் நடுநிலைக்கல்வி நிலையிலும் உள்ளனர். சராசரியாக ஒவ்வொரு முறைசாராக் கல்வி மையத்திலும் துவக்க நிலைக்கல்விக்கு 20 மாணவர்களும் நடுநிலைக் கல்விக்கு 15 மாணவர்களும் உள்ளனர். உத்திரப்பிரதேசத்தில்தான் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் (4.35 இலட்சம்).

2.25 நாடு சுதந்திரம் பெற்றபின் நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்த வர்களின் எண்ணிக்கை 1951-ல் 16.67-ம், 1981-ல் 36.23 மாக உயர்ந்துள்ளது. எனவே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 1951-ல் 6 கோடியும், 1981-ல் 24.8 கோடியுமாக, அதாவது 4 மடங்கு உயர்ந்துள்ளது. எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்கள் பெண்கள் இவர் களின் எண்ணிக்கையில் வெளிப்படையாக வித்தியாசம் தெரிகிறது. அதாவது ஆண்களில் 46.9 விழுக்காடும், பெண்களில் 24.8 விழுக்காடும் உள்ளனர். இவ்வேறுபாடு நகரத்தைவிட (65.9, 47.8 முறையே) கிராமப்புறங்களில் (40.8, 18 முறையே) அதிகமாகத் தெரிகிறது. கல்வி யறிவு விழுக்காடு கேரளத்தில் உயர்ந்தும் (70.4) இராஜஸ்தானில் குறைந்தும் (24.38) காணப்படுகிறது. இராஜஸ்தானில் 5.46 விழுக் காடு பெண்கள்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

2.26 சிறப்பாக, உற்பத்தி வயது குழு (15-35) அடங்கிய முதியோர் கல்வி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் குறைந்த தேவைகள் திட்டத்தின் ஒரு அம்சமாக சேர்க்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் ஏறக்குறைய 2 இலட்ச மையங்கள் 1985-ம் ஆண்டில் மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டன. இம்மையங்கள் 58 இலட்ச மக்கள் தொகையை உள்ளடக்கும். மாநில வாரியாக ஒப்பிடும்போது மஹாராஷ்டிரம், தமிழ்நாடு, கர்நாடகம், போன்ற மாநிலங்களில் சேர்க்கைப் பதிவு உயர்ந்துள்ளது. ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், ஹிமாச்சல் பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் முறைசாராக் கல்வித் திட்டத் தில் சேர்க்கைப் பதிவு குறைவாகக் காணப்படுகிறது. இவை அனைத் தையும் கடந்து, 6—வது திட்ட முடிவில் முறைசாராக் கல்வித் திட்டத் தில் மொத்த சேர்க்கை ஏறக்குறைய 2.3 கோடியாகும். மீதமுள்ள 8.7 கோடி, எழுதப்படிக்கத் தெரியாதவர்களில் 15—35 வயதுடையவர் களை செயல்முறைக் கல்வியறிவுத்திட்டங்களில் சேர்த்து, 1990-க்குள் படிப்பறிவின்மையைப் போக்கும் நோக்கங்களை அடைய வேண்டும்.

2.27 உலக வங்கிக் கணக்குப்படி, கி.பி. 2000-ல் உலக நாடுகளை ஒப்பிடும்போது எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை இந்தியாவில்தான் அதிகமாக இருக்கும் எனத் தெரிகிறது. உலக முழுவதிலும் உள்ள எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் மொத்தத் தொகையில் (15 முதல் 19 வயதினர்) 54.8 விழுக்காடு நம்நாட்டில் இருப்பார்கள். இது நம் நாட்டின் கல்வி அறிவு இன்மையின் பரிமாணத்தை ஓரளவு காட்டுகிறது. எனவே படிப்பின்மையைப் போக்க துரிதமாக ஊக்கத்துடன் செயல்பட்டு, 21-ம் நூற்றாண்டில் நாம் அடியெடுத்து வைக்க வேண்டும். எனவே இச்சந்தர்ப்பத்தில் முறைசாராக் கல்விக்கும், முதியோர் கல்விக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**ஆசிரியர்கள்**

2.28 1950—83 ஆண்டுகளில் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 7.5 இலட்சத்திலிருந்து 32 இலட்சமாக உயர்ந்து, ஆண்டுக்கு 4.6 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தைக் காட்டியது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 3 விழுக்காடு உயர்ந்தது. நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களின் வளர்ச்சி வீதம் (7.5 விழுக்காடு) அதிகமாகியது. கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கையைவிட வேகமாக உயர்ந்தது. 1949-50-ல் 56.1 விழுக்காடாக இருந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982-83-ல் 88.4 விழுக்காடாக அதிகரித்தது. இந்தப் புள்ளி விவரங்கள்படி 1971-72-லிருந்து 1982-83 வரை தொடக்கப் பள்ளி நிலையில் ஆசிரியர் மாணவர்கள் விகிதத்தில் மாற்றம் அதிகமில்லை எனத் தெரிகிறது. நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மாணாக்கர் விகிதம் ஓரளவு வீழ்ச்சி அடைந்தது.

2.29 ஆசிரியர்களின் கல்வித் தகுதி உயர்ந்தது. இக்கல்வித் தகுதிதான் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தும் ஆதாரமாகும். 1951 முதல் 1978 வரை தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் முதல் பட்டப் படிப்புத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் விகிதம் ஒரு விழுக்காடு முதல் 17.2 விழுக்காடு வரை உயர்ந்தது. இதற்கு எதிர் மாறாக, மெட்ரிகுலேஷன் படிப்பைவிடக் குறைவாகப் படித்தவர்களின் விகிதம் 1951-ல் 34.4 விழுக்காடும், 1978-ல் 22.7 விழுக்காடுமாகக் குறைந்தது.

**செலவு**

2.30 கல்விமுறை விரிவடைவது போலவே கல்வியின் எல்லா நிலைகளிலும் கல்வியின் அனைத்துச் செலவினங்களும் உயர்ந்துகொண்டே போகின்றன. 1950-51-ல் கல்விக்குச் செலவான தொகை, ரூ. 114.3 கோடிகள். 1976-77-ல் அத்தொகை ரூ. 2304.16 கோடியாக உயர்ந்தது. 1982-83-ல் செலவு செய்ய வகை செய்யப்பட்ட தொகை ரூ. 5185.9 கோடி. மாநிலங்களில் மொத்தச் செலவு திட்டத்தொகையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டத் தொகையானது சிக்கிமில் குறைந்த அளவு 12.7 விழுக்காடும், கேரளத்தில் 36.1 விழுக்காடுமாக இருந்தது. உத்திரப்பிரதேசத்தில்தான் கல்விக்காக மிகக் குறைந்த அளவு தலைவீத நிதி ஒதுக்கீட்டுச் செலவு இருந்தது.

2.31 இராணுவத்தை அடுத்து, செலவு செய்ய வகை செய்யப்பட்ட தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டது கல்விக்குத்தான். மொத்த தேசிய உற்பத்தியில் 3 விழுக்காட்டிற்கு மேல் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. கல்விக்காக ஒதுக்கப்ட ட்ட தொகை முழுவதும் கல்வியின் திட்டமிட்ட, திட்டமிடாத இனங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. விரிவாகச் சொல்லப்போனால், முன்னேற்றத்திற்கான செலவுகள் செய்யப்படும் புதிய திட்டங்கள் (செயல் முறைத்திட்டங்கள்) போன்றவை திட்டமிட்ட வகைலயச் சாரும். நடைமுறையியில் இருக்கும் திட்டங்கள் இரண்டாம் வகையைச் சாரும். 1982-83-ஆம் ஆண்டிற்கான மொத்த வரவு செலவு திட்டத்தில் ரூ. 5185.9 கோடியில், 15.7 விழுக்காடு திட்டமிட்ட செலவுகளுக்காகவும், மீதி திட்டமிடாத செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இருந்தபோதிலும் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிட்ட, திட்டமிடாத செலவினங்களின் விகிதம் முதல் ஆண்டிலிருந்து 5-ஆம் ஆண்டுக்கு வரவர உயர்ந்துகொண்டே போகிறது.

2.32 மற்ற நாடுகளை ஒப்பிடும்போது மொத்த தேசிய உற்பத்தித் தொகையில் கல்விக்காக இந்தியா செலவழிக்கும் தொகை மிகக் குறைவு. மற்ற நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தித் தொகையில் கல்விக்காக செலவழிக்கப்படும் தொகை 6 முதல் 8 விழுக்காடு என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. முன்பு கூறியதுபோல இந்தியா 3 விழுக்காட்டிற்குச் சிறிது அதிகமாகக் கல்விக்குச் செலவிடுகிறது. வடக்கு ஆசியாவில், பர்மா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம் போன்ற ஒருசில நாடுகள்தான் நாட்டின் மொத்த உற்பத்தித் தொகையில் இந்தியாவைவிட குறைந்த விகிதத்

தில் கல்விக்காகச் செலவழிக்கின்றன. 1964-66-ல் செயல்பட்ட கல்வி ஆணையம் இத்தொகையானது 6 விழுக்காடு ஆக இருக்க வேண்டும் எனக் கூறியது.

2.33 கல்விக்காக ஒதுக்கப்பட்ட முதலீடும், செலவும் அடுத்தடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டங்களில் அதிகமாகிக்கொண்டே போகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 169 கோடியும், 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 2524 கோடியாகவும் அதிகரித்தது. துவக்க நிலைக் கல்விக்கான பங்கு முதல் திட்டத்தில் 55 விழுக்காடாகவும், 6-வது திட்டத்தில் 36 விழுக்காடாகவும் இருந்தது.

2.34 1950-51-ல் துவக்க நிலைக் கல்வியின் செலவு விகிதம் அதிகமாக, (அதாவது 43 விழுக்காடு) இருந்தது. இதேபோலத்தான் உயர்/மேல்நிலைக் கல்விப் பிரிவுகளுக்கும் 29.7 விழுக்காடாக அமைந்தது. இவ்விதமாக அந்நேரத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட செலவில் நான்கில் மூன்று பங்கினை இந்த இரு கல்விப் பிரிவுகளும் செலவழித்தன. 1976-77-ல் துவக்கக் கல்வியின் பங்கு 43 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக வீழ்ந்தது. ஆனால் உயர்நிலை, மேல்நிலைக் கல்வியின் பங்கு 29.7 விழுக்காட்டிலிருந்து 31.7 விழுக்காடாக சொற்ப அளவே உயர்ந்தது. இரு பிரிவினரின் கூட்டுப்பங்கு 60 விழுக்காடாகியது. நடுநிலைப் பள்ளிகளுக்குத்தான் அதிகமான அளவுத் தொகை செலவிடப்பட்டது. இவற்றின் பங்கு 9.9 விழுக்காட்டிலிருந்து 20.7 விழுக்காடாக இரட்டித்தது. மற்ற நிலைகளில் சொற்ப அளவிலேயே உயர்ந்தது.

2.35 கல்வியின் தொடர் செலவில் 75 விழுக்காடு சம்பளத்திற்காகவும் 10 விழுக்காடு சம்பள நிர்வாகத்திற்காகவும் செலவிடப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், பீகார், ஹிமாச்சல் பிரதேசம், கேரளா போன்ற சில மாநிலங்களில் சம்பளப் பகுதியானது கல்விச் செலவினத்தில் 80 விழுக்காட்டு அளவுக்கு உயர்ந்திருந்தது. எனவே எல்லா மாநிலங்களிலும் மொத்த வரவு செலவுத் தொகையில் இதர எல்லாச் செலவு இனங்களும் குறைக்கப்பட்டன.

2.36 பாதுகாப்புத்துறைக்கு அடுத்தப்படியாக கல்விக்கான செலவு இருப்பதால், கல்வித் தேவைக்களுக்கான பொருள் வள இடைவெளிதான் முக்கியப் பிரச்சினை ஆகும், சம்பளம் அளிப்பதுதான் முக்கிய

மான நடப்புச்செலவு ஆகும். கூடுதல் முதலீட்டுச் செலவினம் ஆசிரியர் உற்பத்தித் திறனை அதிகமாக்கும். ஏனெனில் மற்ற தலைப்புகளில் செலவினம் இல்லாதிருந்தாலோ, ஆசிரியர்களின் பயன்படுதன்மையும் குறைந்து விடும்.

2.37 கிராமப்புறக் கல்விச் செலவு முன்னைய நிலையைவிடப் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1950-51ல் மொத்தக் கல்விச் செலவில் முப்பத்தைந்து சதவீதமாக இருந்த நிலை, இப்பொழுது நாற்பத்து நான்கு சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. கிராமப்புறக் கல்விக்கான ஒதுக்கீடு இன்னும் அதிகரிக்க வேண்டியதன் அவசியம் தெளிவாகத் தெரிகிறது.

2.38 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை விகிதம் ஒவ்வொரு மாநிலத்திலும் அதிகரித்துள்ளது. 1977-83 ஆண்டுகளில் கிடைத்த புள்ளிவிபரம் அவர்களுடைய சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. மாணவிகளைக் காட்டிலும் மாணவர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். 1977-83 ஆண்டுகளில் மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் 98லிருந்து 115க்கு உயர்ந்துள்ளது. ஆனால் மாணவிகளின் சேர்க்கை விகிதம் 51லிருந்து 66க்குத்தான் உயர்ந்துள்ளது. இந்த இடைவெளி, நடுத்தர நிலையில் இன்னும் அதிகமாக உள்ளது. பழங்குடி மாணவர்கள் நிலையில் சேர்க்கை விகிதம் மேற்சொன்ன வகையில்தான் இருக்கிறது. சேர்க்கை விகிதம் குறைவு. மாணவ, மாணவிகள் சேர்க்கை விகிதங்களில் அதிக இடைவெளி உள்ளது.

2.39 தாழ்த்தப்பட்ட மக்களில் அதிக பட்ச கல்வியறிவு பெற்றோர் விகிதம் நகர்ப்புறத்தில் 47.5. விழுக்காடு ஆகும். மிகக் குறைவாக கல்வியறிவு பெற்றோர் விகிதம் கிராமப்புற பெண்களுடையதாகும். இவ்வாறே பழங்குடி மக்களின் கல்வியறிவு பெற்றோர் விகிதமும் உள்ளது. கிராமப்புற பெண்களில் கல்வியறிவு பெற்றோர் விகிதம் 6.8 விழுக்காடுதான்.

2.40 பள்ளிகளில் நிலைத்திருப்போர் விகித இடைவெளி தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகளுக்கும், ஏனையோருக்கும் இடையே முன்னேற்றம் அடைந்துள்ளது. இவ்விகிதம் 1968-ல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 27.8 ஆகவும் ஏனையோருக்கு 35.3 ஆகவும் இருந்தது. எனினும் பழங்குடி மக்கள், ஏனைய சமுதாய மக்களுக்கிடையே உள்ள நிலைத்திருப்பவர் விகிதம் மாறாமல் இருக்கிறது. மேற்குறிப்பிட்ட நிலைத்திருப்பவர் விகிதம் மாநில அளவில் நோக்கும்போது ஆரம்பப்பள்ளி நிலை

யில், நிலைத்திருப்பவர் விகிதம் குறைவாகவும், நடுநிலைப் பள்ளி நிலையில் சற்று அதிகமாகவும் இருப்பது தெரிய வருகிறது. ஆந்திரம், பீகார், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் ஆரம்பப் பள்ளி நிலையில் குறைவாக நிலைத்திருப்பவர் விகிதம் இருக்கும்போது, கேரளம், ஹிமாசலப் பிரதேசம், ஹரியானா போன்ற மாநிலங்களில் அது மிக அதிகமாகவே இருக்கிறது. நடுநிலைப் பள்ளி நிலையிலும் இதே போக்கு கர்நாடகம் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் காணப்படுகிறது. கர்நாடகத்தில் மட்டும் இந்நிலையில் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது.

2.41 ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் பலவற்றில் அடிப்படை வசதிகள் கூடக் கிடையாது. எடுத்துக்காட்டாக நான்காவது அனைத்திந்திய கல்விக் கணக்கெடுப்பின் மூலம் 9 சதவீத ஆரம்பப் பள்ளிகளில் ஒரு கட்டடம் கூட இல்லாதது தெரிய வந்துள்ளது. பஞ்சாப் (20.8), பீகார், (18.5), உத்தரப்பிரதேசம் (16.5), ஒரிஸா (12.6) போன்ற மாநிலங்களில் இவ்வகைப் பள்ளிகள் பெருமளவில் உள்ளன. கட்டடமே இல்லாத பள்ளிகளில், மற்ற வசதிகள் அறவே இருக்காது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எடுத்துக் காட்டாக அனைத்திந்திய அளவில் 58.5 சதவிகித ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமே கரும்பலகைகள் உள்ளன. 28 சதவிகிதப் பள்ளிகள் மட்டுமே ஏதேனும் ஒரு நூலக வசதியைப் பெற்றுள்ளன. விளையாட்டுத்திடல் உள்ள பள்ளிகள் சுமார் 46.6 சதவிகிதமேயாகும். மேலும் மாநிலத்துக்கு மாநிலம் இந்த விகிதம் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, அஸ்ஸாமில் 19.9 சதவிகித ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமே கரும்பலகைகள் உள்ளன. மேற்கு வங்கத்தில் 4 சதவிகித ஆரம்பப் பள்ளிகள்தான் நூலக வசதியைப் பெற்றுள்ளன. பீகாரில் 15சதவிகித ஆரம்பப் பள்ளிகளில் விளையாட்டுத்திடல் உள்ளது. சில மாநிலங்களில் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள்கூட அளிக்கப்படவில்லை. எடுத்துக் காட்டாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள கிராமப் பள்ளிகளில் 21 சதவிகித ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமே குடிநீர் வசதி உள்ளது. இந்தக் குறைபாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் காணப்படுகின்றது. மேற்கு வங்கத்தில் 76 சதவிகித மேநிலைப் பள்ளிகளில் தான் குடிநீர் வசதி உள்ளது. பொதுவாக இவ்வகைக் குறைபாடுகள் கிராமப்புறப் பள்ளிகளில்தான் மலிந்து காணப்படுகின்றன. அதாவது கிராமப்புறங்களில் 89 சதவிகித ஆரம்பப் பள்ளிகளிலும், 70 சதவிகித

நடுநிலைப்பள்ளிகளிலும், 27 சதவிகித உயர்நிலைப் பள்ளிகளிலும், 10 சதவிகித மேநிலைப் பள்ளிகளிலும் கழிவறை வசதிகள்கூடக் கிடையாது.

### வேலை வாய்ப்புகள்

2.42 கல்வி, வேலை வாய்ப்பு இவ்விரண்டிற்குமுள்ள தொடர்பானது, வளர்ச்சியடைந்து வரும் மற்ற எல்லா தொடர்புகளையும் விட மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வியின் வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த ஒன்றாகும். இந்தியாவின் பெரும் பகுதித் தொழிலாளர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவோ அல்லது குறைவான கல்வி அறிவு பெற்றவர்களாகவோ இருக்கின்றார்கள். எனவே பெரும் பகுதித் தொழிலாளர்கள் தெரிந்தெடுத்த ஒருசில வாழ்க்கைத் தொழில் குழுக்களில் மட்டுமே அதிமகாக இருக்கின்றனர். 1961-82க்கு இடைப்பட்ட காலத்தில் ஒழுங்கமைந்த தொழிலாளர் பிரிவினரிடையே வேலைவாய்ப்பு வளர்ச்சி அடைந்தது. அவ்வளர்ச்சியின் தொடர் ஆண்டு வளர்ச்சி விகிதம் 3.2 சதவிகிதமாக இருந்தது. ஒழுங்கமைந்த தொழிலாளர் பிரிவினரிடையே உள்ள வேலைவாய்ப்பு வசதியை தொழில் பிரிவுகளின் நிலையில் பார்க்கும்போது, இப்பிரிவினரின் பணி 1961-ல் 33.1 சதவிகிதமே இருந்தது. இது 1982ல் 41.8 சதவிகிதமாக வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது ஆண்டுக்கு 4.4 சதவிகிதம் வளர்ச்சி காணப்படுகிறது. இது 1961-82 காலத்தின் சராசரி வளர்ச்சியான 3.2 சதவிகிதத்தை ஒப்பிடும்போது அதிகமாக இருப்பது தெரிகிறது.

2.43 இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பொதுத்துறை மிக முக்கியமான பங்காற்றியுள்ளது. இப்பணியில் பொதுத்துறை மற்றெல்லாத் துறைகளையும்விட கல்வியறிவு பெற்றுள்ளவர்களின் மனித சக்தியை மிகப் பெருமளவில் பயன்படுத்தியுள்ளது. நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அரசு உதவி செய்வதால், கல்வி-வேலை வாய்ப்புத் தொடர்பானது ஒன்றுக்கொன்று பொருந்தக் கூடியதாக உள்ளது. தற்போது கிடைத்த தகவலின்படி, 1978ல் 1.5 கோடி தொழிலாளர்கள், பொதுத்துறையில் பணியாற்றுவதாகத் தெரிகிறது. இவர்களின் தொகை ஒழுங்கமைந்த தொழிற் பிரிவினரிடையே சுமார் 60 சதவிகிதமாகவும் நாட்டின் மொத்த தொழிலாளர்களிடையே 5.7 சதவிகிதமாகவும் உள்ளது.

2.44 பொதுத்துறையில் வேலைவாய்ப்பின் வளர்ச்சி, எல்லாத் தொழில்களிலும், எல்லாக் காலங்களிலும் ஒரே சீராக இருந்ததில்லை. எனவே வாழ்க்கைத் தொழில் அமைப்பும் அது எவ்வாறு ஆண்டுக்காண்டு மாறி வந்தது என்பதும், கல்வித் திட்டமிடுநர்களால் ஆராயப்பட வேண்டிய அளவிற்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும் பல்வேறு வாழ்க்கைத் தொழில்களில் கல்வி பரவும் விதமும் அதன் பல்வேறு பயன்படும் முறைகளும் தெளிவாக ஆராயப்படவேண்டும். பரந்த நோக்கோடு பார்க்கும்போது பொதுத்துறை தொழிலாளர்களில் பொதுக்கல்வித் தகுதி தேவைப்படுகிறவர்கள் 2/3 பங்காகவும் சிறப்புக் கல்வித் தகுதி தேவைப்படுகிறவர்கள் 1/3 பங்காகவும் இருப்பதாகக் கூறலாம். இதனால் பொதுத்துறையிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் தேவையான கல்வித் தகுதி பெற்று விட்டார்கள் என்பதாகப் பொருள் கொள்ள முடியாது. தொழில் நுட்ப அறிவும் திறனும் தேவைப்படும் தொழில்களில் 58 சதவிகிதத் தொழிலாளர்கள் முறையான கல்வி மற்றும் பயிற்சி பெறாதவர்களாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறேதான் உடல் நலம் சம்பந்தமான தொழில்களில் 24 சதவிகிதத்தினர் முறையான கல்வி மற்றும் பயிற்சி பெறாமல் உள்ளனர்.

2.45 வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ள தொழில் பிரிவுகள்தான் கல்வி வளர்ச்சியில் அதிகக்கவனம் செலுத்த வேண்டியவை ஆகும். தொழில்நுட்பம் மற்றும் செய்தொழில் பிரிவுகள் (தொழில் குறியீடு 0, 1) மிகுந்த வளர்ச்சியைக் காட்டியுள்ளன. வேலை வாய்ப்பின் மொத்த வளர்ச்சியில், இத்தொழில் பிரிவுகள், 45 சதவிகித வளர்ச்சியைக் காட்டியுள்ளன. ஆசிரியர்கள் இந்த வகையில் அதிகமானவர்களாவர். ஆனால் பொதுத்துறையில் பயிற்சித் திறன் வேண்டாத வேலைவாய்ப்புகள் குறைந்தே காணப்படுகின்றன. மற்றும் எழுத்தர் பிரிவுகளிலும், உற்பத்திச் செயல் பிரிவுகளிலும் வேலை வாய்ப்புகள் சிறிதளவே காணப்படுகின்றன. உற்பத்திச் செயல்களில் ஈடுபட்டுள்ள தொழுற்பிரிவினர் பெரும்பாலோர் தொழில் பயிற்சி நிலையம், தொழில்நுட்பப் பள்ளிகள் இவற்றில் பட்டயமும் சான்றிதழும் பெற்றவர்களாக இருக்கின்றனர். வேறுவகையில் கூறினால், பொதுத் துறையில் கல்வி அறிவின் தேவை செய்தொழ்ல் பிரிவு மற்றும், தொழில் நுட்பப் பிரிவு ஆகியவற்றில்தான் அதிகம் எனலாம்.

2.46 தனியார்துறைத் தொழிலாளர்களில் பொதுத்திறன் இருப்பவர்களின் தேவை 1/5 பங்கும் சிறப்புத்திறன் இருப்பவர்களின் தேவை

4/5 பங்கும் இருப்பதாகக் கொள்ளலாம. இது 1960-1970க்கு இடைப் பட்ட காலத்தில் வளர்ந்து 1980-1990க்கு இடைப்பட்ட காலத்தில் முறையே 1/4 பங்கும், 3/4 பங்காகவும் இருக்கும். தனியார் துறைத் தொழிலாளர்களின் கல்வித் தகுதிகளைப் பார்க்கும்போது ஒரு தனிப்பட்ட நிலையைக் காணலாம். அதாவது தொழில் நுட்ப அறிவும் திறனும் தேவைப்படும் தொழில்களில் சுமார் 58 சத விகிதத்தில் முறையான கல்வியும் பயிற்சியும் அற்றவர்களாவர். இதற்கு மாறாக, பொது அறிவும் பொதுத் திறனும் தேவைப்படும் தொழில் களில் 94 சதவிகிதத்தினர் முறையான கல்வியும் பயிற்சியும் பெற்றவர் களாக உள்ளனர்.

2.47 பொதுத்துறை, தனியார் துறை இவ்விரண்டிலும் முறையான கல்வியும் பயிற்சியும் பெற்றவர்கள், வாழ்க்கைத் தொழில் பிரிவினரிடை யேயும், தொழில் நுட்பப் பிரிவினரிடையேயும் ஒரே சதவிகிதத்தினராக இருக்கிற வரையில் கல்வித் தகுதி பெற்றவர்களைப் பயன்படுத்துவது பொதுத்துறை, தனியார் துறை என்பதால் அல்ல, தொழில் அமைப்பு முறையைப் பொறுத்துத்தான் அவர்களைப் பயன்படுத்துவது அமையும் என்று தெரிகிறது. பொதுத் துறை, தனியார் துறை இவற்றி லுள்ள இரு தொழில் அமைப்புகளில் மிகுந்த வேறுபாடு இருந்தாலும், ஒரே அமைப்புக்குள் வேறுபாடுகள் குறைவேயாகும்.

2.48 வேலைவாய்ப்பு, அலுவலகங்களின் மூலமும், 'தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு' மூலமும் படித்த வேலையில்லாதவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. இத்தகவல்களின் மூலம் பொதுக்கல்வி, தொழில் நுட் பக் கல்வி இவற்றில் பட்டம் பெற்றுள்ள ஆண்களில் 4 சதவிகிதமும், பெண்களில் 6 சதவிகிதமும்தான் வேலையின்றி இருப்பதாகத் தெரிகி றது. ஆனால் மெட்ரிகுலேஷன் அல்லது இடைநிலைப் பள்ளிக் கல்வி பெற்றுள்ள ஆண்களிலும் பெண்களிலும் வேலையற்றோர் அதிகமாகவே இருக்கின்றனர். தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு மூலம் எடுத்த 27வது சுற்றுப்படி ஆண்களிலும் பெண்களிலும் வேலையற்ற பட்டதாரிகள் 1956-57-ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1972-73-ல் அதிகரித்துள்ளனர். ஆண்களில் 7 சதவிகிதமும் பெண்களில் 10 சதவிகிதமும் வேலையின்றி இருக்கின்றனர். இதற்கு மாறாக மெட்ரிகுலேஷன், மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்துள்ள வேலையற்றோரின் சதவிகிதம் 1956-57ஐ விட 1972-73ல் குறைந்திருக்கிறது. மற்றும் 1977-78ல் எடுத்த 32வது சுற்றுப்படி இவ்விகிதம் மேலும் குறைந்துள்ளது. பொது

வாக ஆண்களாயினும், பெண்களாயினும் வேலையற்றோரின் சத விகிதம் படித்தவர்களிடையே அதிகரித்துள்ளது. நகர்ப்புறங்களில் உயர்நிலைக் கல்வித் தகுதி பெற்ற வேலையற்ற ஆண்களில் 27வது சுற்றின்படி 6 சதவிகிதமும், 32வது சுற்றுப்படி 7 சதவிகிதமாகவும், பெண்களில் 6 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகவும் அதிகரித்துள்ளது. இது போன்றே வேலையற்ற பட்டதாரி ஆண்கள் 27வது சுற்றின்படி 7 சதவிகிதமும், 32வது சுற்றின்படி 8 சதவிகிதமும் உள்ளனர். பெண்களில் முறையே 9 சதவிகிதமும் 16 சதவிகிதமுமாக இருக்கின்றனர். பட்டதாரிகளில் பொதுக் கல்வித் தகுதி பெற்றவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்களில் வேலையற்றோர் 27-வது சுற்றின்படி 7 சதவிகிதத்திலிருந்து 32வது சுற்றில் 9 சதவிகிதத்தினராக உயர்ந்துள்ளனர். இதற்குமாறாக, செய்தொழில் பட்டம் பெற்றவர்கள், தொழில்நுட்பக் கல்வித் தகுதி பெற்றவர்களில் வேலையற்றோர் 27வது சுற்றின்படி 5 சதவிகிதமாக உள்ளனர். இவ்விகிதம் 32வது சுற்றின்படி சற்று அதிகரித்து 6 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

2.49 தேசிய மாதிரி கணக்கெடுப்பின் 32வது சுற்றின்படி கிராமப்புற பட்டதாரிகளிடையே வேலையின்மை அதிகரித்துள்ளது தெரிய வருகிறது. 1972-73ல் பொதுக் கல்வித் தகுதி பெற்ற பட்டதாரி ஆண்களில் 18 சதவிகிதத்தினர் வேலையின்றியிருந்தபோது 1977-78ல் இது 19 சதவிகிதமாக உயர்ந்தது. இது போன்றே பெண்களில் முறையே 16 சதவிகிதமும் 24 சதவிகிதமும் இருந்தன.

2.50 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் கிடைத்த விவரப்படி மேற்கண்டவாறேதான் வேலையற்றோரின் எண்ணிக்கை உள்ளது. 1961-81க்கு இடைப்பட்ட காலத்தில் வேலை தேடிப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளது. இது ஆண்டொன்றுக்கு 12 சதவிகிதம் உயர்ந்ததைக் காட்டுகிறது. இவர்களில் படித்த வேலையற்றோர் எண்ணிக்கை பெரிதும் உயர்ந்துள்ளது. 1961ல் இவர்கள் 1/3 பங்காவும், 1981-ல் 1/2 பங்காகவும் இருந்தனர். அதாவது வேலையின்மை என்பது படித்தவர்களிடையே மிகவும் அதிகரித்துள்ளது.

2.51 வெவ்வேறு கல்வித் தகுதி பெற்றவர்களிடையே உள்ள வேலையின்மை ஒரே சீராக இருந்ததில்லை. காலக்கட்டத்தில் இது மாறிக்கொண்டே வந்துள்ளது. எடுத்துக்காட்டாக 1961-ல் படித்த வேலை

யற்றவர்களில் உயர்நிலைக் கல்வி பெற்றவர்கள் 3/4 பங்கினராக இருந்தனர். 1981ல் இவர்கள் 55 சதவிகிதமாகக் குறைந்தனர். மாறாக பட்டம் பெற்றவர்களில் பங்கு இரு மடங்காயிற்று. அதாவது 1961-81-ல் 9.5 லிருந்து 18.7 சதவிகிதமாக உயர்ந்தது.

2.52 இந்த அத்தியாயத்தில் கல்வி வளர்ச்சியின் நிலை சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கிறது. எனினும் கல்விச்சாதனைகள் நம்நாட்டின் எதிர்கால நோக்கங்களின் அடிப்படையில்தான் மதிப்பிடப்படவேண்டும். எனவே இந்த நிலையில் சுதந்திரத்திற்குப் பின்னர் முதலீடு செய்யப்பட்ட வாய்ப்புவளங்கள் மற்றும் மனிதசக்தி ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வாறு கல்விச் சாதனைகள் இருந்தன என்பது விளக்கப்பட்டது. எதிர்காலத்தை மலரச் செய்யும் தவிர்க்க இயலாத கட்டாயங்களின் அடிப்படையில், இத்தகைய மதிப்பீடுகள் தேவைப்படுகின்றன. இது பற்றிய சில பிரச்சினைகளை விரிவாக ஆராயும் கணிப்பு மூன்றாம் அத்தியாயத்தில் முயற்சிக்கப் பெறுகின்றது.

அத்தியாயம்-3

# ஒரு பகுத்தறி மதிப்பீடு

3.1 கல்வியை மக்களின் வாழ்க்கையோடு நெருக்கமாகத் தொடர்பு படுத்தவும், விரிவான கல்வி வாய்ப்புகளை அளிக்கவும், எல்லா நிலைகளிலும் கல்வித் தரத்தை உயர்த்த தொடர்ந்த, ஆழ்ந்த முயற்சியை மேற்கொள்ளவும், அறிவியல் நுட்பஇயல் முன்னேற்றத்தை வலியுறுத்தவும், சமூக, அறப் பண்புகளை வளர்க்கவும், ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கும் கல்விமுறையை 1968-ஆம் ஆண்டு கல்விக் கொள்கை எதிர் நோக்கியது. நாட்டின் தொண்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிக்கும் நடத்தையையும் திறமையையும் கொண்ட இளம் ஆடவரையும், பெண்டிரையும் உருவாக்குவதே கல்விக் கொள்கையின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கங்களை நாம் நிறைவேற்றவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதற்கிடையில், அறிவியலிலும், நுட்பஇயலிலும், ஏற்பட்ட தளராத வளர்ச்சி முன்னேற்றத்தினால் புதிய கற்றல் தேவைகள் தோன்றியுள்ளன.

3.2 செய்தி நிறைந்த, நுட்பஇயல் ஆழ்ந்த சமுதாயத்தை உருவாக்க இருக்கும் நாளைய உலகத்திற்குப் புதிய கற்றல் அணுகுமுறைகள் தேவைப் படும். என்ன கற்றுக் கொள்ளப்பட்டது என்பதைவிட, கற்கும் திறனை வளர்ப்பதே மிக முக்கியமாக இருக்கும். மீண்டும் மீண்டும் தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் கற்பதே அன்றைய நிலையாக இருக்கும் மனிதனின் ஒவ்வொரு செயலிலும், செய்தி நுட்பஇயல் ஊடுருவி நிற்கின்றது; பெருமளவில் கல்விக்குறிக்கோள்களை உயர்த்தவும், கற்றல் முறைகளை மாற்றியமைக்கவும், சூழ்நிலை உருவாகியுள்ளது. செயலாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமத்துவத்தையும், வாய்ப்புக்களையும் அளிக்கக் கூடிய நோக்கம் கொண்ட நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உள்ள விதிகளுக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட மாபெரும் ஆயிரம் மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சமுதாயத்தை நாம் இந்தியாவில் எதிர்நோக்கியுள்ளோம். தொலைவையும், நாட்டு எல்லைகளையும் களைந்த செய்திப்போக்குவரவு முறைகளைக் கொண்ட உலகில் நாம் வாழ்ந்து வருகின்றோம். மற்றும் இது சூழ்நிலை மற்றும் அணுவியல் பேராபத்துக்கள்

அச்சுறுத்திக் கொண்டிருக்கும் உலகமும் ஆகும். இந்நிலையில் அறப் பண்புகளுக்கான கல்வி, ஒரு புதிய பரிமாணத்தையும், அவசரத் தையும் பெறுகின்றது. எனவே, இரண்டு கடினமான செயல்களை ஒரே நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு சவாலை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருவருடைய முழுத் திறமையையும் வளர்க் கக்கூடிய தரமான கல்வியை அளிப்பது ஒன்று; அதே நேரத்தில் வளர்ந்து வரும் நாளையத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பாடப் பொருள் களையும் கல்வி முறைகளையும் மாற்றியமைப்பது மற்றொன்று.

3.3 சவால்களைச் சந்திக்கவும், தடைகளைத் தகர்த்தெறியவும், ஒரு புதிய நம்பிக்கையும், ஒரு புதிய உற்சாகமும் நாட்டில் உள்ளது. எனவே நாம் எதை அடையவேண்டுமென்று முயன்றோமோ, அதை எந்த அளவுக்கு அடைந்துள்ளோம் என்று வெளிப்படையான பகுத்தறி மதிப் பீட்டைச் செய்வதற்கு இதுவே தக்க தருணமாகும். நாம் நம்முடைய வெற்றிகளையும் தோல்விகளையும் கண்டறிய வேண்டும். கடந்த காலத் தில் நாம் எங்கே, எப்படித் தோற்றோம் அல்லது வெற்றி பெற்றோம் என்று புரிந்து கொண்டால்தான், ஒரு நல்ல எதிர்காலத்தை நம்மால் உரு வாக்க முடியும். நோக்கங்களோடு இயைந்த நியாயம், தரம், எண் அளவு களில் எப்படிச் செயல்களை நிறைவேற்றியுள்ளோம் என்பதையும், புதிய தளராத எதிர்காலக் கட்டாயத் தேவைகளையும் கருத்தில் கொண்டு நாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகளையும், திட்டங்களையும், முறையாகவும் பகுத்தறிந்தும் சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

3.4 நம்முடைய சாதனைகள் எண் அளவில் அதிகமெனினும், இவை அனைவருக்கும் வாய்ப்பளிக்கக் போதுமானதாக இல்லை. விளைவுகளை அனைவருக்கும் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்ற உறுதியோடு மிகவும் உற்பத்தித் திறன் கொண்ட, புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டு மென்ற பெருவிருப்பம் கொண்டுள்ள இந்தியா போன்ற நாட்டிற்கு இதுவே கடினமான தற்சோதனைக்கு ஏற்ற சமயமாகும். இப்படிச் செய்கையில், நாட்டின் விரும்பத் தக்க சமூகப் பொருளாதார முன்னேற் றப் பாதையில், கல்வியை அமைத்துச் செல்ல வேண்டியனவற்றை இயைபுப் படுத்த வேண்டியது அவசியமாகும்.

3.5 தப்பிநிலைப்பதற்காகச் சமூக அரசியல் அமைப்பில் மாற்றம், தேவைப்பட்டாலொழிய, பலகூறுகளைக் கொண்ட கல்வியில், பொருளார்ந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. கொள்கைகளை

உருவாக்குவதற்கும், செயல்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும், பொருள் வளத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், துறைகளுக்குள் இணைப் பினை ஏற்படுத்துவதற்கும், தரத்தை வற்புறுத்துவதற்கும், கட்டுப் படுத்தி மதிப்பீடு செய்வதற்கும், திறன்வாய்ந்த வழிமுறைகளை உருவாக்குதலையும், திட்டங்களை நிறைவேற்றும் வழி முறைகளையும், நுணுகி ஆராய்வதற்கான நேரமிது. நிறைவேற்று வதற்கான செயல்முறைகளை வாக்குறுதிகளைத் தொடர்ந்து மேற் கொண்டால் ஒழிய, கொள்கைத் தீர்மானங்களும், திட்டங்களும் பொதுப் பிரகடனங்களும் வெற்று வாக்குறுதிகளாகவே அமையும். கல்வியின் பல பகுதிகளில் செயல் நிறைவேற்றத்தைப் பகுத்தாய்ந்து மதிப் பீடு செய்யப் பின்வரும் பத்திகளில் முயல்வோம்.

**தொடக்கக்கல்வி**

*3.6* 1960-ஆம் ஆண்டிற்குள் இலவசக் கட்டாயக் கல்வியை 14 வயதுவரை அளிக்க வேண்டுமெனத் திட்டவட்டமாக அரசியல் நிர்ணயச் சட்டத்தில் வழி வகுத்திருந்தாலும், அனைவருக்கும் தொடக்கக் கல் வியை அளிப்பதற்குப் பல பொறுப்புகளை மேற்கொண்ட போதிலும், இதுசார்ந்த கல்வி முன்னேற்றம் இலக்கிற்கு வெகு தொலை விலேயே உள்ளது. உண்மையில், பொருள் வளம் போதாமையால் ஏற் படும் தோல்விகளைச் சரி செய்யவும், அல்லது நடைமுறைப்படுத்தக் கூடிய யுக்திகள் இல்லாமையாலும், இந்த இலக்கே மேலும் மேலும் தள்ளப்பட்டு வருகின்றது. தொடக்கநிலைப் பள்ளி வயதினரில் 76 சத வீதம் உள்ள 11 கோடி குழந்தைகள் தொடக்க நிலைப் பள்ளிகளில் உள்ளனர் என்பது உண்மைதான். ஆரம்பப் பள்ளி நிலையில், 93.4 சதவீத மொத்தச் சேர்க்கை நிலையை நாடு அடைந்துள்ளது. இத் தேசிய மொத்தப் புள்ளிவிவரங்கள் கவர்ச்சியாக உள்ளன. ஆனால் இவை மாநிலங்கள், பிரிவுகள், பால் ஆகியவற்றிற்கிடையே உள்ள அதிகமான வேற்றுமைகளை மறைத்துக் கொண்டுள்ளன. இவை மாணவர்களின் மொத்தச் சேர்க்கை விகிதங்களாகும்; அதிக-குறைந்த வயதுடைய குழந்தைகளுக்காக சரிசெய்யப்பட்டால் மேலும் குறையும். அசாமில் சேர்க்கை 62.9 சதவீதத்திற்குக் குறைந் துள்ளது. அனைத்திந்திய அளவில் கிறுமிகளின் சேர்க்கை 75.5 சதவீதம் என்றாலும், 17 சதவீதமே உள்ள மாவட்டங்களும் இருக்கின்றன (இராஜஸ்தானில் உள்ள ஜேலோர்). தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி

யினரின் சேர்க்கை விகிதங்கள் முறையே 93.4 சதவீதமும், 81.9 சதவீதமும் ஆகும். குறிப்பாக சிறுமியரின் சேர்க்கை, கிராமப் பகுதிகளிலும், தாழ்த்தப்பட்டவர்களிடமும், பழங்குடியினரிடமும் திருப்திகரமாக இல்லை. மொத்தச் சேர்க்கை விகிதத்தின் சாதனைகளினால் மட்டும், பொதுவாக சேர்க்கை நிலை திருப்திகரமாக உள்ளது என்று சொல்ல முடியாது.

3.7 பெரும்பான்மையான குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே பள்ளிகள் இருப்பது சரி என்றாலும், தகவல்களைப் பிரித்து ஆயும் போது முன்னூறுக்குமேல் மக்கள் தொகையுள்ள மொத்த 9.53 இலட்சக் குடியிருப்புகளில் ஐந்தில் ஒரு பகுதியாகிய 1.91 இலட்சம் குடியிருப்புகளில் அவர்களுக்கென்று பள்ளிகள் இல்லை. பள்ளிகள் உள்ளன, ஆனால் 40 சதவீதத்தில் பக்காக் கட்டடங்கள் இல்லை; 39.72 சதவீதத்தில் கரும்பலகைகள் இல்லை; 59.20 சதவீதத்தில் குடிநீர் வசதி இல்லை; 3 அல்லது 4 வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியர் மட்டும் உள்ள பள்ளிகள் 35 சதவீதம் உள்ளன. குழந்தைகளின் பல்வேறுபட்ட ஆர்வங்களையும், மாறுபட்ட கல்வித் தேவைகளையும், இவ்வாசிரியர்கள் கவனிக்க இயலாது என்பது தெளிவு. உண்மையில், பல்வேறு சமயங்களில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கும் பள்ளிகள் இருப்பதையும், பயிற்சியோ, அனுபவமோ இல்லாதவர்களைத் தங்களுக்குப் பதில் விட்டுச் செல்லும் ஆசிரியர்சள் உள்ள பள்ளிகள் இருப்பதையும் காட்டும் கணக்கெடுப்புகள் உள்ளன. கல்வித் திட்டத்தின் முன்னுரிமைகளில் ஒன்று இந்த அவலநிலையை மாற்றியமைப்பது ஆகும். கட்டடம், தளவாடங்கள், விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையங்கள், போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியவற்றில் நகர்ப்புறப் பள்ளிகளுக்கு இணையாக கிரமாப் பள்ளிகள் அதிகமாவதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

3.8 தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், மற்றும் யுனிசெப் உதவியுடன் பல மாநிலங்களில் புதிய பொருத்தமான பாடப் பொருள்களை உருவாக்கி இருந்தாலும், அரசு அல்லது தனியார் பள்ளிகளில் கற்பிக்கும் பாடங்கள் குழந்தைகளின் சூழ்நிலையோடு எப்போதும் தொடர்பு கொண்டவைகளாக இல்லை. ஆரம்பக் கலைத் திட்டத்திற்கு மிக அத்திவசியமானது என்று பரிந்துரைக்கப்படும் அறிவியல் கணிதப் புதுமுறைகள், பல மாநிலங்களில் புறக்கணிக்கப்படுகின்றன. தேசியக்

கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் உருவாக்கிய விலை அதிகமில்லாத கற்பிக்கும் கருவிப் பெட்டகம்கூட பல பள்ளிகளில் இல்லை. அனேகமாக, கற்பிக்கும் முறைகளும் காலங்கடந்தவை. புத்தகப் பகுதிகளை நெட்டுருச் செய்வதையும் எதிர்பார்க்கும் பதில்களைத் திரும்பச் சொல்வதையும் இவை ஊக்குவிக்கின்றன. காந்திஜியின் ஆதாரக் கல்வித் திட்டம் வலியுறுத்திய, வேலை அனுபவம் அல்லது சமூகப் பயன்படு ஆக்கச் செயல்கள் பல பள்ளிகளில் அளிப்பதில்லை. இதன் அடிப்படைக் கருத்து சமூகப் பொருத்தத்திற்கும், வேலை அறப்பண்பிற்கும், அறிவை நிலையுறுத்துவதற்கும் பொருத்தமானது.

3.9 இத்தகைய பள்ளிகளிலும், இத்தகைய கற்பித்தல் நிலையிலும், மக்கள் தொகையில் 40 சதவீதம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நிலையிலும், தொடக்கக் கல்வியின் சேர்க்கை குறைந்துகொண்டே செல்லும் போக்கில் இருப்பதில் வியப்பொன்றுமில்லை. இதில் மேலும் வருந்தத்தக்கது என்னவென்றால், பள்ளியில் சேர்ந்தோரில் அதிக அளவில் விரைவில் பள்ளியை விட்டுப்போவதுதான். ஒன்றாம் வகுப்பில் சேர்ந்த 100 மாணக்கரில் 23 பேர் மட்டுமே எட்டாம் வகுப்பை அடைகின்றனர். மற்றவர்கள் எழுதப் படிக்கும் சொற்ப அறிவுடன் இருக்கிறார்கள் அல்லது நாட்டில் உள்ள எழுதப் படிக்கத் தெரியாதோர் கூட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றனர். கிராமங்களிலோ, நகரங்களிலோ, குழந்தைகள் படிக்கும் பள்ளிகள் வசதிகளிலும், தரத்திலும், கல்விப் பொருத்தத்திலும் மிகவும் தாழ்ந்துள்ளது என வலியுறுத்தவேண்டியுள்ளது. அதனால் தான் பெருங்குடிமக்களுக்கான பள்ளிகளைவிட இந்தப் பள்ளிகளில் விட்டுப்போவோர் வீதம் மிகவும் அதிகமாக உள்ளது. தொடக்க நிலைக் கல்வியில் நம் நிலை, மற்ற முன்னேறும் நாடுகளுடன் ஒப்பிட்டாலும்கூட, மிகவும் திருப்திகரமாக இல்லை. இப்பொழுதுகூட, பள்ளி வசதிகளுக்காகவும், தேவையான எண்ணிக்கை ஆசிரியர்களுக்காகவும், கலைத் திட்டம், கற்பிக்கும் முறைகளை மாற்றியமைப்பதற்கும், போதுமான நிதி வழங்கவில்லை எனில், 21-ஆம் நூற்றாண்டில் தேவையற்ற மிகப்பெரிய அளவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இருப்பார்கள். ஏழைகள் இரட்டிப்பு இழப்பை ஏற்க நேரிடும். முதியோர், வாழும் நிலையில் அடி மட்டத்தில் இருப்பார்கள்; அவர்களுடைய குழந்தைகள் அழுக்கிலும், அறியாமையிலும் உழலுவார்கள். நல்ல மகிழ்ச்சியான நிலையில் உள்ளவர்களுக்கும், ஏழைகளும், அறியாமையில் உள்ளவர்களும், சூழ்ந்த நிலையே இருக்கும். மேலும் இத்தகைய

இரட்டிப்பு இழப்பு நிலையை நாடு இன்னும் பொறுத்துக்கொண்டு போகும் என்று சொல்ல முடியாது. சும்மா இருப்பது என்பது சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்கு மீறிய பதட்டத்தை வரவேற்பதாகும். இந்தியா ஒரு குடியரசு என்ற நிலையில், அமைதியாகவும் ஒழுங்காகவும் சமூக அரசியல் உருவாக்கத்தில் ஆர்வங்கொண்டிருப்பதால் தவறிழைக்கும் நிலையைத் தவிர்க்கவேண்டும்.

3.10 கல்வியில் இப்பொழுதுள்ள நிலைக்கான காரணங்கள் வெளிப்படையாகத் தெரிந்ததே. இவற்றில் மிகவும் முக்கியமானது பொருள் வளங்களின் போதாமையே. கடந்த ஆண்டுகளில், வரவுசெலவு திட்டத்தில் திட்டச் செலவின் கீழ் வரும் ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவு பெருகி இருந்தாலும் சேர்க்கை வளர்ச்சிக்கும், விலைவாசி உயர்வுக்கும் ஈடு செய்யும் வகையில் இல்லை. எனவே, உண்மையில் பார்க்கும் போது மத்திய மாநில அரசுகள் ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டுக்குச் செலவிடும் தொகை குறைந்துள்ளது. மொத்தச் செலவில் 90 சதவீதத்திற்கு மேல் (சில மாநிலங்களில் 98 சதவீதத்திற்கு மேல்) ஆசிரியர்களின் சம்பளம், நிர்வாகம் ஆகியவற்றிற்கே செலவிடப்படுகின்றது. நடைமுறையில், விளக்கப்படங்கள், மலிவான கற்பிக்கும் துணைக் கருவிகள் அல்லது குடிநீர்ப்பாத்திரங்கள் இல்லாவிட்டாலும், கரும்பலகையும், சுதைத்துண்டும் வாங்குவதற்குக்கூட ஒன்றும் கிடைப்பதில்லை. இந்த நிலையிலிருந்து, பணமல்லாத பிற உள்ளீடுகளைக் கொண்டு விடுவித்துக் கொள்ளலாம் என்ற நிரூபிக்க முடியாத விவாதத்தினைத் தொடர்வதில் பொருளில்லை. அத்தகைய வேறு அணுகுமுறைகளைக் கூறுபவர்கள், அவற்றை நடைமுறைப்படுத்த இயலுமாவென்பதை நாட்டிற்கும் கல்வியாளர்களுக்கும் எடுத்து விளக்கவேண்டும். அரசியல் சட்டத்தில் தொடக்கக் கல்விக்காக உள்ள குறிக்கோளை அடைவதற்குத் தேவையான குறைந்த அளவு நிதி ஒதுக்கம் நாட்டின் பொறுப்பெனக் கொள்ளவேண்டும். இந்தப்பிரச்சினை மாநில மத்திய அரசுகளுக்கிடைய நிதி ஒதுக்கத்தை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதில் மறைந்து விடக்கூடாது.

3.11 மீண்டும் மீண்டும் கல்வி இலக்கியங்களில் விவாதிக்கப்படுகின்ற கல்வித் தேவையை உருவாக்குவது என்பதுதான் மிகமிக முக்கியமானது. ஏழை மக்கள் கல்வி பற்றி என்ன கருதுகின்றார்கள் என்பது எப்படியிருப்பினும் ஒரு குறிப்பிட்ட குறைந்த நிலைவரையில் கல்வி பரவ வேண்டும்

என்பது நாட்டு நலத்திற்கு அவசியம் என்பது தான் இந்தக் கருத்துக்கு அடிப்படை. இக்கருத்தை ஏற்றுக் கொண்டால், குழந்தைகளின் தொடக்கக் கல்வியைக் கவனிக்காவிட்டால், அவர்களின் எதிர்காலம் இருண்டதாக இருக்கும் என்ற கருத்தைச் சமுதாயத்தில் உருவாக்க வேண்டியதற்கான செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இன்றுள்ள மெத்தனத்தால் முழுவதும் அரசையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இதனால், கிராம அளவிலோ, சமுதாயத் தலைவர்கள் அளவிலோ, வட்டாரம் அல்லது மாவட்ட அளவிலோ, பள்ளியை அமைக்கவோ, அவற்றைப் பராமரிக்கவோ, எத்தகைய முயற்சியும் இல்லை. உள்ளூர் நிலையில் பங்கேற்பதற்கு இடமில்லாத வகையிலும், ஊக்கமுடைய ஆசிரியர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுத்தும் வகையிலும் உள்ள மாபெரும் நிர்வாக அமைப்பின் ஓர் அங்கமாகப் பள்ளி அமைப்பு இருப்பது பெருமளவில் காரணமாகும் என்பதை மறுக்க முடியாது. சமுதாயத்தைப் பங்கேற்க வைக்கவேண்டும் என்றால், பயனுள்ளதாக ஆக்கவேண்டும் என்றால், அதன் பங்கேற்பு, பல பரிமாணங்களில் இருக்கும். சமுதாயத்தில் பொருள் வளத்தோடும், அறிவு திறன்களும் உடையவர்கள் பள்ளிகளை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் உதவ வேண்டும் தகுதியான வயதுடைய பள்ளிக் குழந்தைகள், சமுதாயப் பணிகளில் ஈடுபடவேண்டும். திறன் வளர்ச்சியோடு கூடிய கற்றல் அனுபவத்தை, பள்ளிகளில் போதிய வசதியில்லாதபோது, பிற அமைப்புகளில் ஏற்படுத்தித் தரவேண்டும். சமுதாயமும் பள்ளிக் கட்டடங்களைப் பராமரிப்பது, மதிய உணவு அளிப்பது, சீருடை (குறிப்பாகப் பெண்களுக்கு) புத்தகங்கள் வழங்குவது போன்ற பொறுப்புக்களை ஏற்க வேண்டும். ஏன் எனில், இது பள்ளிகளில் குழந்தைகள் தொடர்ந்து படிப்பதற்கு உதவும். பள்ளிகளின் செயல்முறைகளையும், குறிப்பாக ஆசிரியர்கள் செயற்பாடு பற்றியும் கவனிக்க சமுதாயம் அனுமதிக்கப்படுமானால், இது சாத்தியமாகும். மேலும் கலைத் திட்டம் பற்றிய அதன் கருத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும். குறைந்த அளவு கல்வித் தரத்திற்காகவும் நாட்டு ஒற்றுமைக்காகவும், வட்டாரங்களிடையே பெயர்ச்சிக்காகவும், நன்கு தயாரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களுடன் கொண்ட ஒரு பொதுவான மையக் கலைத் திட்டம் இன்றியமையாத தேவையாகும். ஆனால் இம்மையக் கலைத் திட்டம் மொத்தக் கலைத் திட்டம் ஆகாது. கலைத் திட்டத்தின் ஒரு பெரும்பகுதி உள்ளூர் சூழ்நிலை மற்றும்

பண்பாட்டைச் சுற்றி அமைக்கப்படவேண்டும்; அவற்றுடன் தொடர்புப் படுத்தப்படவேண்டும்.

3.12 இப்பொழுதுள்ள ஒரே அமைப்புக் கல்வி முறையின் அளவு தலைமையாசிரியர்களுக்கும், பள்ளிகளுக்கும் தனிச்சிறப்பு அளிக்க இயலாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றது என்பதை, தொடக்கக் கல்வியை ஒரு பகுத்தறி மதிப்பீடு செய்வதன் மூலம் நிச்சயமாக அறிய முடிகிறது. இதில் குறையோ, ஆக்கச்செயலோ யார் கவனத்துக்கும் வராமல் போய்விடுகின்றது. வெறும் பள்ளி வருகையையும், நினைவாற்றலையும் வலியுறுத்தும் இப்போதையக் கல்வி முறையால், மாணவர்களை நிலைக்கச் செய்யவோ, அவர்கள் அறிவை வளப்படுத்தவோ இயலாது. முற்றிலும் திருப்தியற்ற பள்ளிச் சூழ்நிலையில் கற்பித்தல் கற்றல் முறைகளில் முன்னேற்றத்தைக் காணமுடியாது. சேர்ந்த மாணாக்கரை நிலை நிறுத்துவதன் அடிப்படையில் பள்ளிகளில் செயல்முறையை அளவிட வேண்டியது மிக அவசர அவசியமாகிறது. சிறுமிகளுக்கும் ஏழை, படிப்பறிவில்லாத குடும்பங்களின் குழந்தைகளுக்கும், சிறப்பான குறை நீக்கும் திட்டங்கள் தேவை. ஆசிரியர்களின் வருவாய், வீட்டுத் தேவைகள் மற்றும் வேண்டியவற்றையும் எவ்வளவு சரியாக நிர்ணயிக்க முடியுமோ அப்படிச் செய்தால் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களை ஊக்குவிக்க முடியும். இவ்வாறே தவறு செய்கின்ற ஆசிரியர்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் வழி முறைகளை வகுக்க வேண்டும். அடிமட்டத்திலுள்ள எல்லா அபிவிருத்தி அமைப்புகளும் தொடக்கக் கல்விக்கு ஆதரவு தர வேண்டுமென்று கட்டாயமாக்க வேண்டும். ஏனென்றால் அப்போது தான் புதுக் கருத்துகளும், நடத்தைக் கோலங்களும், அறப்பண்புகளும் நன்கு ஏற்கப்பட்டு, வருங்கால சந்ததியினரின் ஆளுமையில் ஆழப்பதியவும் முடியும். கடைசியாக, பெரும்பாலான மாணவர்களுக்கு தொடக்க நிலைக்குப் பிறகு கல்வி நின்றுவிடும் என்பதைக் கருத்தில் கொண்டு தொடக்கக் கல்வியின் அடைவு நிலைகளையும், நோக்கங்களையும், மீண்டும் தெளிவாக வரையறுக்கவேண்டும்.

3.13 தொடக்கக் கல்வி என்னும்போது, முறைசாராக் கல்வித் திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முயற்சி பற்றியும் சொல்ல வேண்டியுள்ளது. இது ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு, 9 பிற்பட்ட மாநிலங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர் மாணவர் வீதம் ஆசிரியர்களின் தகுதி, வகுப்புகளின் நேரம், கற்கும் வேகம் முதலியவற்றில் அதிக நெகிழ்ச்சியை இம்முறை கொண்டுள்ளது. இது முதலில்,

பள்ளியைவிட்டுப் போவோருக்காக உருவாக்கப்பட்டது. குறிப்பாக பெண்கள், அவர்களுடைய வாழ்க்கையில் உள்ள பல குடும்பப் பிரச்சி னைகளாலும், செயல்களாலும் முறையான பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாத நிலையில் அவர்களுக்காக இது உருவாக்கப்பட்டது. இப்பொழுது, பல இடையூறுகளுக்கிடையில், முறைசாராக் கல்விக்கு, 1990க்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை வழங்குவதில் மிகப் பெரும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது. தொடக்கக் கல்விநிலைக்கு வரும் 64 மில்லியன் கூடுதல் குழந்தைகளில் கிட்டத்தட்ட 39 மில்லியன் குழந் தைகள் இம்முறையின் மூலம் கற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.14 இன்று வரை, முறைசாராக்கல்வியின் நல்விளைவு பற்றிய முறையான ஆராய்ச்சி எதுவும் இல்லை. முறைசாராக்கல்வி ஒரு நடை முறைக்குகந்த மாற்றுக் கல்வி முறையன்று என்று சில கல்வி திட்டமிடு நர் கருதுகின்றனர். இதன் செயல்முறையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தி மதிப்பீடு செய்வதில் சிக்கல்கள் உள்ளன. முறையான பள்ளிகளுக்குப் புறத்தே ஒரு கல்வி அமைப்பு தேவைப்படுவதின் அடிப்படையில் இக் கருத்துக்களைக் கவனிக்க வேண்டும்.

3.15 நாட்டின் பெருமையையும் ஒருமைப்பாட்டையும், வளர்ப்பதி லும், பண்பாட்டு ஒற்றுமையைக் காப்பதிலும், குடியரசுக் கொள்கைகளை நிலை நிறுத்துவதிலும் தொடக்கக் கல்வியின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதில் உள்ள பங்கு, ஒரு பொதுவான மையக் கலைத்திட் டத்தை மட்டும் சார்ந்தில்லாமல், அதை அமுல் படுத்துவதில தேசிய மட்டத்தில் ஒரு கருத்து ஒற்றுமையை உண்டாக்குவதையும் சார்ந்திருக் கின்றது. இதுவரை, கல்வியை ஒரு மாநில மைய ஆட்சிக்குட்பட்ட ஒன்றாக இருப்பதைத் தவிர, ஒரு நிறுவனமோ, மாநில அமைப்போ தேசிய குறிக்கோள்களுக்குத் தேவையான அல்லது ஆளுமை வளர்ச்சிக் குத் தேவையான ஒரு கல்வித் திட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்று சொல்வதற்கு வழி இல்லை. அல்லது ஒரு குழந்தையின் மனதை குறுகிய வட்டார, சமூக, கோட்பாடுகளுக்குள் சுற்றிவரும் கருத்துக்களைப் பரப்பு வதைத் தடுக்கவோ வழி இல்லை. சட்டமன்றங்களின் மூலமோ, வேறு வகையிலோ இச்சிக்கல்களுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது மிக அவசரமான எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டிய ஒன்று.

**முதியோர் கல்வியும், செயல்முறைக் கல்வியும்**

3.16 அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பதன் தோல்வியினால் ஏற்படும் ஒரு நேர்விளைவு நாட்டில் அதிக எண்ணிக்கையில் எழுதப்

படிக்கத்தெரியாதவர் இருப்பதாகும். இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தி படிப்பறிவின்மையை நாட்டின் பாவமாகவும் அவமதிப்பாகவும் கருதினார். சுதந்திரக் காலத்தில் இருந்ததைவிட (கிட்டத்தட்ட 300 மில்லியன்) இப்போது படிப்பறிவற்றவரின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது (1981இல் 437 மில்லியன்). ஆனால் மக்கள் தொகையில் படித்தவர்களின் சதவீதம் தொடர்ந்து முன்னேறிவருகின்றது. 1951இல் 16.67 சதவீதமாக இருந்த படிப்பறிவு, 1981-இல் 30.23 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. படிப்பறிவு பற்றிய தேசியப் புள்ளி விவரங்கள், வட்டாரங்களுக்குக்கிடையேயும், ஆண், பெண்களுக்கிடையேயும் உள்ள பல வேறுபாடுகளை மறைத்துள்ளன. பெண்களின் படிப்பறிவு கேரளாவில் 64.7 சதவிதத்திலிருந்து இராஜஸ்தானில் 5.4 சதவீதம் வரை மாறுபடுகின்றது. நாட்டின் கிராமக் குடும்பங்களில் 38 சதவீதத்தைக் கொண்டுள்ள பீகார், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் மாநிலங்களின் பெண்களில் படிப்பறிவு சதவீதம் 8.99-க்கும் 10.17-க்கும் இடையே மாறுபடுகின்றது.

3.17 ஆரம்பக் கல்வி மற்றும், முதியோர் கல்வித் திட்டங்களில் நமது பெருமுயற்சியை பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கம் ஒன்றுமில்லாது செய்து விடுகிறது. இந்தக் கருத்தானது, முனைப்பானதொரு செயல்பாட்டுக்கான அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஏனென்றால் மக்கள் கல்வியறிவு பெறுதல் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை ஏற்று நடப்பதற்கு வழிவகை செய்கிறது. அதோடுகூட ''மாறாத நிலை'' என்ற எண்ணத்திற்கு ஏராளமான ஒத்துக் கொள்ள முடியாத காரணங்கள் உண்டு. மக்கள் தொகைப் பெருக்கவீதத்திலும், கல்வியறிவு வீதத்தில் மாறுதல் ஏற்படவில்லையென்றால் 2000-வது ஆண்டில் நமது நாட்டில் 500 மில்லியன் கல்வியறிவு பெறாதவர்கள் இருப்பார்கள். உலகவங்கியின் அறிக்கைப்படி 15-19 வயது வரம்பில் உள்ள மக்கள் தொகையில் 54 விழுக்காடு கல்வியறிவில்லாதவர்கள் இந்தியாவில் இருப்பார்கள். கடந்த 30 ஆண்டுகால முதியோர் கல்வித் திட்ட அனுபவங்களும், அவற்றைத் தனியார் நிறுவனங்கள் மதிப்பீடு, செய்தவைகளும் மக்களிடையே போதிய ஊக்கம் இல்லாதிருத்தல் அவர்களைத் தொடர்ந்து முதியோர் கல்வித் திட்டங்களில் பங்கேற்காது தடை செய்கிறது என்பதை எடுத்துக் கூறுகிறது. வளர்ச்சிக்கான நிறுவனங்களின் திட்டங்களுக்கு தேவையான உதவி கிடைக்கவில்லை. அடித்தளத்தில் தொண்டு நிறுவனங்களின் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஈடுபாடு

மிகைக் குறைவாக இருக்கிறது. கல்வியறிவானது வளர்ச்சிக்கான ஒரு கருவியாக பயன்படுத்தப்படவுமில்லை; பரப்பப்படவுமில்லை. ஏனென்றால் கல்வியறிவின்மைக்கும், ஏழ்மைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு உணர்ந்து கொள்ளப்படவேயில்லை. சரியாக திட்டமிடப்பட்ட முதியோர் கல்வி திட்டமானது வளர்ச்சியை மெதுவாக ஊர்ந்துசெல்லவைக்கும் நாட்டின் மக்கள் தொகையை வளர்ச்சிக்கு வழிகோலும் இயந்திரமாக மாற்றியமைத்திடும் என்ற கருத்தினை திட்டமிடுவோர் அறிந்திருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. அல்லது முதியோர் கல்வித் திட்டங்கள் உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு சிறப்பாகவும், முக்கியமாகவும் பங்காற்றிட முடியும் என்பதையும் அறியவில்லை. இந்த சூழ்நிலைகளில் இந்தத் திட்டங்களுக்கு குறைந்த அளவிலான ஆள் மற்றும் பொருளதவியே கிடைக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. 244 மில்லியன் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் 60 விழுக்காடு கல்வியறிவில்லாதவர்களாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. இருப்பினும் நடைமுறைக் கல்வியைக் கல்வியறிவில்லாதவர்களுக்கு அளித்து அவர்களை உற்பத்தி பெருக்கும் பயனுள்ள முகவர்களாக உயர்த்திடும் பொறுப்பினை முறையாக அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நிர்வாகிகள் எடுக்கவேயில்லை. இந்தச் சூழ்நிலையில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் அடங்கிய கல்வியறிவு பெற்ற மக்களின் முழு ஆற்றலும் கல்வியறிவின்மையை முடிவுக்குக் கொண்டுவர பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. நாட்டு நலப்பணித்திட்டம் சிறப்பு முக்கியத்துவம் அளிப்பதாகப் பேசுவது, மற்றும் முதல் பட்டம் வாங்குவதற்குக் கல்வியறிவின்மையை மாற்ற ஒருகுறைந்த அளவு பணி போன்றவைகளெல்லாம் முறைப்படி முக்கியத்துவம் பெறவேயில்லை. கல்வியறிவுக்கும் சமூக, பொருளாதார, அறிவியல் முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தக் கருத்தின் நேர்மறையான உண்மையின் பலத்தில் அடிப்படையில்தான் முதியோர் கல்வி ஏற்றுக் கொள்ளப்பட முடியும்.

3.18 அரசியல் தீர்ப்பளிப்பதிலும், நாட்டு ஆக்கப்பணிகளிலும் பொருளுள்ள வகையில் பங்கேற்க சில நாடுகளில் கல்வியறிவு கட்டாயமான தேவையென்றிருக்கிறது. அங்கெல்லாம் கல்வியறிவின்மையை நீக்கமுடியும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய நோக்கு இந்தியாவுக்கு தேவைதானா என்பது ஒரு வழியாகத் தீர்மானிக்கப்பட

வேண்டும். ஏனென்றால் முதியோர் கல்வித் திட்டங்களைச் சுற்றி யுள்ள ஒரு தெளிவற்றநிலை முடிவுக்கு வரும். இந்த வகையில் நடவடிக்கை எடுககப்படும.

3.19 முதியோர் கல்வித்திட்டம் தொடர வேண்டுமானால், பாடப் பொருள், தரம், கற்பித்தல் முறைகள், பாடப் புத்தகங்களின் பொருத்தம், பிற்கல்வியறிவுத் திட்டங்களின் பயன்பாடுகள்—இவைகளை நோக்கி திட்டத்தை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். முதியோர் கல்விக்கு முன் னுரிமை தர எண்ணும்போது முதியோர் கல்வித்திட்டத்தினால் அனை வருக்குமான தொடக்கக்கல்வியில் ஏற்பட்ட விளைவுகளை நாம் கவனத் தில் கொள்ள வேண்டும். இவை இரண்டுக்கும் இடையே திட்டவட்ட மான ஒரு இணைப்பு உள்ளது. அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கு வழிகோல முதியோர் படிப்பறிவுநிலை 70 சதவீதத்தில் இருக்கவேண்டு மென யுனெஸ்கோ ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. படிப்பறிவற்ற பெற் றோர்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதைத் தவிர்ப்பார்கள். மேலும் அவர்களுக்கு ஏதாவது நலக்குறைவுகள் ஏற்பட்டால் பள்ளியை விட்டு நிறுத்திவிடுவார்கள்.

## இடைநிலைக் கல்வி

3.20 1947இல் பள்ளிகள் எண்ணிக்கை 4000-லிருந்து 1982-83இல் 52,279 ஆக உயர்ந்திருப்பது இடைநிலைக் கல்வியில் ஓர் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். இந்த எண்ணிக்கையோடு இண்டர்மீடியட் மற்றும் இளநிலைக் கல்லூரிகளையும் சேர்த்தால், மொத்த கல்வி நிறுவனங் களின் எண்ணிக்கை 56,000க்கும் மேற்பட்டதாக இருக்கும். பள்ளிகளின் எண்ணிக்கை பதினான்கு மடங்காக உயர்ந்துள்ளது. ஆனால் மாணவர் களின் சேர்க்கை 1947இல் 7 இலட்சமாக இருந்தது, 1982-83இல் 140 இலட்சமாக உயர்ந்திருப்பது இருபது மடங்கு உயர்வைக் காட்டு கிறது. ஆசிரியர்களின் எண்ணிக்கையோ பத்துமடங்கு உயர்விலேயே உள்ளது. அதாவது 93,000 ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982-83இல் 9,93,000ஆக உயர்ந்துள்ளது. இவ்வுயர்வுகளிலிருந்து, பள்ளிகள் அதிக அளவில் உயர்ந்ததற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை உயரவில்லை என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மை. 'அனைவருக்கும் அடிப் படைக்கல்வி' என்ற இலக்கை நோக்கித் திட்டமிடும்போது பள்ளிகளின் எண்ணிக்கை மேலும் தொடர்ந்து வளர்ச்சியடையும். தற்போது ஒன்பது பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, மொத்த

மாணவர்களின் எண்ணிக்கையில் 22 விழுக்காடுதான் உள்ளது. இது, வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையில்லாமலிருக்கிறது. இந்தியாவில் ஒவ்வொருவரும் இடைநிலைக் கல்வி பெற விருப்பப்பட்டாலும், தொடக்கக் கல்வியில் தேர்ச்சியடையும் மாணவர்களில் பாதிக்கும் குறைவாகவே இடைநிலைக் கல்வியில் சேருகின்றனர். நம்நாடு 10+2+3 என்ற புதிய கல்வி அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இப்புதிய அமைப்பானது, பத்தாம் வகுப்பு வரையில் அறிவியல் மற்றும் கணிதம் உள்ளிட்ட அடிப்படை அறிவைப் பெறுவதற்கு அதிக அளவு மாணவர்கள் இடைநிலைக் கல்வியில் சேர ஊக்கம் அளிக்கிறது என்பது திண்ணம். எதிர்காலக் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்குத் தேவையான ஆற்றலைப் பெருக்கவும் இப்புதிய அமைப்பு இன்றியமையாததாக உள்ளது. 11 மற்றும் 12 வகுப்புகளில் உள்ள தொழிற் கல்வியில் பெருமளவில் மாணவர்கள் சேரலாம்; ஏனெனில் அவர்கள் எதிர்காலத்தில் ஒரு தொழிலை மேற்கொள்வதற்கு வசதிகள் அளிக்கப் பட்டுள்ளன.

3.21 வளர்ந்து வரும் இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியின் தேவைகளை நிறைவேற்றத் தக்கவகையிலும் அதே நேரத்தில் மாற்றம் ஏற்படும்போது தரம் குறையக் கூடாது என்ற நோக்கத்தை அடையும் வகையிலும் அமையக் கூடிய ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்குவது கல்வித் திட்டமிடுவோர்க்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. கல்வி நிறுவனங்களை அமைக்கத் தேர்ந்தெடுக்கப்படும் இடம் இக்கருத்திற்கு ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. நிதி வசதி போதிய அளவு இல்லாமலிருப்பதால், பயனளிக்காத பள்ளிகளை ஏற்படுத்துதலைத் தவிர்க்க வேண்டும். இடைநிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள், நூல் நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் போன்றவற்றை அமைப்பதில் அடிப்படைத் தேவைகள் வரையறுக்கப்படவேண்டும்.

3.22 சமத்துவநிலை எய்திட பத்தாம் வகுப்புவரை உள்ள இடைநிலைப் பள்ளிகளில் பயிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும், அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களைப் பயில வாய்ப்பளிக்கப்படவேண்டும். இவ்வாய்ப்பானது, கிராமப்பகுதி அல்லது நகரப்பகுதி மாணவர்கள் தங்கள் எதிர்காலத் தொழிலைத் தேர்ந்தெடுக்க சம வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். துரதிர்ஷ்டவசமாக நாட்டின் பல பாகங்களில் சமவாய்ப்பு எண்ணம் இன்றும் முழுமையாக உணரப் படவில்லை. சமூகத்தில்

மேல்நிலையில் உள்ள பிரிவினருக்கே அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி கிடைக்கும் வகையில் பாகுபாடு உள்ள சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

3.23 பலதரப்பள்ளிகளில் உள்ள வேறுபட்ட கல்வித்தரமும் சிந்திக்க வேண்டியதொன்றாக இருக்கிறது. கலைத்திட்டங்களும் பெரிதும் வேறுபாடாக அமைந்துள்ளன. 1968இல் 10+2+3 என்ற அமைப்பு கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும், பல மாநிலங்கள் இவ்வமைபபினை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. இன்றைய நிலையிலும் இராஜஸ்தான், பஞ்சாப், இமாசலப்பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள், கொள்கை அளவில் ஒப்புக் கொண்டாலும் அதனைத் தங்கள் மாநிலங்களில் அமுல்படுத்த வில்லை. மேலும், அமைப்பு மாற்றம் ஒரு கணிதப் பயிற்சி போன்றதல்ல. அது கற்பித்தல் முறைகளை புகுத்தலும், மதிப்பீடு செய்தல், தற்காலத்திற் கேற்ற பாடத்திட்டத்தை அமைத்தல், கல்வித்தரத்தை உயர்த்துதல் போன்றவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். இப் புதிய திட்டம், பழைய திட்டத்தைவிட அதிகச் செலவுள்ளது. தற்போதைய தேர்ச்சியில் 30 முதல் 40 விழுக்காடு வியர்த்தமாவது அதிகம் என்பதால் அது தவிர்க்கப்பட வேண்டும்.

3.24 இன்றைய மேனிலைப் பள்ளிகள், திருப்தி அளிக்காத தொடக்கக் கல்வித் திட்டத்திலிருந்து வரும் மாணவர்களை அடுத்த நிலைக்குத் தயார்படுத்தும் ஒரு சங்கடமான பணியை மேற்கொண்டுள்ளன. இப் பணியைச் சீரற்ற ஆசிரியர்-மாணவ வீதாச்சாரம், பயனற்ற பயிற்று முறைகள், குறைந்த ஆய்வுக்கூட வசதிகள் ஊக்கமளிக்கா பாடத் திட்டங்கள், புதுமைகளை ஏற்படுத்த வாய்ப்பளிக்காத நிர்வாக முறை, ஆகியவைகளைக் கொண்டு சிறப்பாகச் செய்ய இயலாது. எதிர்காலத்தில் அறிவியலிலும் கணிதத்திலும் ஏற்படும் திறமை ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் என்பதால், இத்திறமையை அடைய பின்பற்றப்படும் கற்பித்தல்—கற்றல் முறை, ஒழுக்க நெறியைத் தீவிரமாக்குதல், அரசியல் மைப்பு பகுதி IVA-இல் குறிப்பிடப்பட்ட கடமைகளை ஏற்றல், புதுமைகளைப் படைக்கத் தேவையான குறைந்த அளவு திறமை, உற்பத்தியில் தெளிந்த அறிவு மற்றும் பங்கேற்றல் ஆகியவற்றைப்போல மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சில பள்ளிகளைத் தவிர, ஏனைய பள்ளிகளில் இக்கருத்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே, சிறந்த

கற்பித்தல் எது என்பதையும், ஆண், பெண் இருபாலாரும் எதிர்காலத்தில் தொழிலை மேற்கொள்ளுதலிலோ அல்லது உயர் கல்வி பெறுவதிலோ திறமை அடைய உதவும் சிறந்த பாடத்திட்டம் எது என்பதையும் தீர்மானிக்க சோதனை நடத்திடும் பள்ளிகள் நிறுவுதல் அவசியமாகிறது.

*3.25* பல்வேறு இடைநிலைக் கல்விக் குழுக்கள் நடத்திடும் தேர்வு முறைகளைச் சீராக்குவதும் இடைநிலைக் கல்வியின் மற்றொரு பகுதியாகும். இக்குழுக்கள் தேர்வுக்கு முன்பே வினாத்தாள் வெளியாவது, தேர்வில் அதிக அளவு பார்த்தெழுதுதல், தேர்வு முடிவுகளைத் தவறான முறையில் மாற்றுதல் ஆகிய சீர்கேடுகள் நடைபெறுவது பற்றிய சர்ச்சைகளுக்குத் தொடர்ந்து உள்ளாகின்றன.

*3.26* பொதுக்கல்வியின் தரமும் கற்பித்தல் ஆற்றலும் சிறந்த பள்ளிகள் எனக்கருதப்படும் பள்ளிகளில் கூட திருப்திகரமாக இல்லை. இதனால் மருத்துவம் அல்லது பொறியியல் படிப்பிற்குச் செல்லும் மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் தேர்வுக்குத் தயார்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதன் விளைவாக பெருமான்மையான ஆசிரியர்கள பள்ளி நேரத்தில் கற்பித்தலைச் சிறப்பாகச் செய்யாமல், தனி வகுப்புகள் நடத்தி பணம் பெறுகின்றனர். இச்சீர்கேடுகளைக் களைய நடவடிக்கை எடுப்பதில் அரசியலின் காரணமாக சிரமம் உள்ளது.

## தொழில் முறைப்படுத்துதல்

*3.27* *1968*இல் வகுக்கப்பட்ட கல்விக் கொள்கை நோக்கங்களில் ஒன்று மேனிலைக்கல்வியில் தொழில் முறைப்படுத்துதல் ஆகும். எனினும், சடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் நல்ல பலனை அளிக்கவில்லை. +2 நிலையில் பயிலும் மாணவர்களில் பாதியாவது இத்தொழிற்கல்வி முறையில் சேருவார்கள் என எதிர்பார்த்தது முழுமை பெறவில்லை. இத்தொழிற்கல்வி சில மாநிலங்களில் மட்டும் உள்ளன. சரிவரத் திட்டமிடப்படாமையாலும், சாதனங்கள் நிதி வசதியின்மையாலும் இத்தொழிற்கல்விப் படிப்பு பொது மக்களிடையே ஆர்வமில்லாமல் தன் சிறப்பை இழந்து விட்டது. தேவையான நிதி வசதியுடன் சிறப்பான முறையில் திட்டமிட்டு புரட்சிகரமான செயல்படுத்தினாலொழிய இதனைத் தொடர்ந்து நடத்துவதில் அர்த்தமில்லை.

*3.28* ‘வேலை வாயிலாகக் கல்வி’ என்ற இடைநிலைக்கல்வியின் ஒரு அம்சம் வலுவற்றிருக்கிறது. மேனிலைக் கல்வி தொழில் படிப்பு

வலுவாக இருக்க வேண்டுமாயின் IX மற்றும் X வகுப்புகளில் முன் தொழில் கல்வியும் வேலைவாயிலாகக் கல்வியும் சீராக்கப்பட வேண்டும். தொழில் கல்விக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிவகைகள் காணவேண்டியது அவசியமாகிறது. தற்போது நிலவிடும் தொழிற்கல்வி மேல் ஏற்பட்டுள்ள வெறுப்பு, இப்படிப்பிற்கு குறைந்த அறிவாற்றலும் படிப்பில் சாதாரணமாகவும் இருப்பவர்களைச் சேர்க்கும் வரையில் நீங்காது. இத்தொழிற்கல்வி படிப்பானது சிறந்த வேலையையோ அல்லது மேற்கொண்டு பொதுக்கல்வியையோ அல்லது மேலும் வளம் பெற உதவும் தொழிற்கல்வியையோ அளிக்காது. தொழிற்கல்வி சிறப்படையாததற்குக் காரணம் தொழிற்சாலைக்கும் படிப்பிற்கும் தொடர்பின்மையும் தானே சுயமாக வேலை பார்ப்பதற்கு வாய்ப்பளிக்காததுமாகும். தொழிற்கல்வியில் செய்முறைப் பயிற்சியும் அறிமுறைப் பயிற்சியும், உண்மையாக நடைபெறும் வேலைச் சூழ்நிலையில் கற்பிக்கப்படுவது சிறந்தது.

3.29 கல்வித் திட்டமிடுவோர்க்கு வேலைவாய்ப்புப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை எனவும் தொழிற்கல்விக்குத் தேவையான நிபுணர்களைப் பற்றிய அறிவு இல்லை எனவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதனால் இடைநிலைக் கல்வித்திட்டத்தின் தொழிற்கல்வி செம்மையாகச் செயல்படுவதில்லை எனவும் கூறுகின்றனர். இதன் விளைவாக, ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டமிடுதல், கலைத்திட்டம் அமைத்தல், பயிற்சி வகைகளைத் தேர்ந்தெடுத்தல் போன்றவற்றில், தொழிலறிவு இல்லாமை சிறப்பாகத் தென்படுகிறது. அதனால் தேவையான நிதி வசதி கேட்பதற்கோ அல்லது அளிப்பதற்கோ இயலாமல் போய்விடுகிறது. உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கு நடுநிலையில் உள்ள கைவினைத் திறமைசாலிகள் இல்லாதது ஒரு தடையாக இருக்கும்போது, தொழிற்கல்வி துவக்கத்திலிருந்தே வளர்ச்சி குன்றியுள்ளது.

**உயர் கல்வி**

3.30 கல்வியாளர்களிடையே பள்ளிப் படிப்பு உயர் படிப்பு இவைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. எனினும் ஒரு நாட்டின் எதிர்காலத்தை காட்டும் ஒரே அளவீடு அதன் உயர்படிப்பின் நிலையாகும் என்ற கருத்து பரவலாக நம்பப்படுகிறது. பல்கலைக் கழகங்கள் உயரின் நாடும் உயரும் என

இந்தியாவின் நவீனமயத்திற்கு அடிகோலிய நமது முதல் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர் கூறினார். உயர்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்த பொழுதிலும் இத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் சீரற்றதாக உள்ளது. சில கல்லூரிகளும், பல்கலைத் கழகங்களில் சில துறைகளும் தமது ஆராய்ச்சிகளினால் நாட்டின் முன்னேற்றம், நவீனமயமாதல் தலையாய இளைஞர்களை உருவாக்குதல், இவற்றில் முக்கிய பங்கு ஏற்ற போதிலும் எல்லாப் பல்கலைக் கழகங்கள் கல்லூரிகள் இவற்றின் பொது நிலையே நாட்டின் முக்கிய பொறுப்பாகும்.

3.31 எண்ணிக்கையளவில் நம் நாட்டில் மேற்படிப்பு முறையானது பெரிய அளவில் உள்ளது. இது நம்முடைய பெரும் மக்கள் தொகையினால் ஆகும். மேற்படிப்பு படிக்கும் வயதைச் சார்ந்தவர்களில் 4.8 விழுக்காடே மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர். இந்த விகிதம் சில பிரதேசங்களில் குறிப்பாக பெண்கள், பழங்குடி மக்கள் அவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் குறைவு. மிகக் குறைந்த அளவிலேயே தரமுள்ள உயர்படிப்பு என்பது கிராமப்புறத்தை அடைந்துள்ளது. மேலும், சேர்க்கை முறையானது பொதுக் கல்விக்கு ஆதரவு அளிக்கும் வண்ணம் உள்ளது. எல்லா மட்டத்திலும், அறிவியல், தொழில் நுட்பவியல் மேலும் தொழிற் படிப்பு இவற்றை ஊக்குவித்த முயற்சி அதிக வெற்றியை அளிக்கவில்லை.

3.32 வசதிகள் பொறுத்தவரை இந்த 5000-க்கு மேற்பட்ட கல்லூரிகள் பெருத்த அளவில் வேறுபடுகின்றன. பெரும்பாலும் தரத்தில் தாழ்ந்து காணப்படுகின்றன. கல்வித் தேவையை போதிய அளவு கருதாமல் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. நீண்ட வருடங்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள மிகக்குறைந்த தரத்தையும் அடையாமல் பற்றாக்குறையான வாய்ப்பு வளங்களைப் பெற்றிருக்கின்றன. கொள்கையளவில் ப.மா.கு. இந்நிறுவனங்களுக்குக் கொடுக்கும் மானியத்தை மறுக்கலாம். ஆனால், நடைமுறையில் இந்த நிலை மாநில அரசின் ஆதரவுக்கும் மத்திய அரசின் பண உதவிக்கும் இடையே முரண்பாட்டை உண்டாக் கிறது. சில அடையாளச் சலுகைகளை ஆதரவாளரிடமிருந்து பெற்று ஓரளவு சமன்செய்து இந்த இக்கட்டான நிலைக்கு விடை காணப்படுகிறது. எப்படியாகிலும் கல்வியின் தரத்தை உயர்த்தும் பங்கு பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு ஒப்படைககப்பட்டுள்ளது.

இவர்களுடைய முயற்சிக்குப் புறம்பாக விளைவு திருப்திகரமாக இல்லை என்பது இந்திய சூழ்நிலைக்குப் பரிச்சயமுள்ள எவராலும் மறுக்கப்படமாட்டாது. இது துரதிர்ஷ்டமானது. இறுதியில் மாணவர் கள் தரம் குறைந்த கல்வி பெற்று அவதிப்படுகின்றனர். ப.மா.கு. தனது சட்டமுறை வேலைகளை விருப்பு வெறுப்பின்றி நிறைவேற்ற முழு ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் கட்டுபடுத்த முடியாத இனவெறி, பிரதேசவெறி, தம்மவரையே வளர்த்தல் போன்றவற்றால் சீரிழந்து வருகின்றன. சில பெருமைக்குரியனவற்றைத் தவிர இந்த நிறுவனங்கள் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களால் ஆதரிக்கப்பெற்ற அரசியல் மற்றும் ஏனைய பிரிவினங்களின் உண்மையான போர்க்களமாகி வருகின்றன. இவற்றில் அடிக்கடி பலத்திற்கும் மேற்பதவிக்குமாக திட்டமிடப்பட்ட சண்டைகள் நிகழ்கின்றன. சில துணை வேந்தர்கள் தங்கள் பணிக் காலம் முழுவதும் அலுவலக நான்கு சுவர்கட்கு உள்ளிருந்து கொண் டும் தமது வீடுகளிலிருந்து கொண்டும் தம்மால் முடிந்தவற்றைச் செய்கின்றனர். ஒரு பல்கலைக்கழகத்தின் சாதனை அதனுடைய ஆராய்ச்சியின் தரத்தையோ அதன் மாணவர்கள் திறமையையோ கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை; அதன் தேர்வுகள் நிரல்படி நடைபெறுகின்றனவா, தவிர்க்கப்படுகின்றனவா என்பனவற்றால் நிர்ண யிக்கப்படுகிறது.

*3.33* அட்டவணைப்படி ஒரு வருடத்தில் பயனுள்ள வேலை நாட்கள் விரும்பும் மட்டத்திற்குக் குறைவாக உள்ளன. உயர்கல்வி முறையின், உட்திறமையானது மிகவும் குறைந்துள்ளது. இது கல்வியின் தரக் குறைவில் மட்டுமல்லாமல் அதிக அளவு தேக்கத்திலும் வியர்த்தத்திலும் காணப்படுகின்றன. இத்தேக்கமும் வியர்த்தமும் சேர்க்கப்பட்ட மாண வர்களில் 59 விழுக்காடாகும். இது நாட்டின் வளத்திற்குப் பெரும் வியர்த்தமாகும்.

*3.34* தேர்வு பெற்றவர்களில் அதிகம் பேர் மூன்றாம் வகுப்பில் தேர்வு பெறுகின்றனர். இது தாழ்ந்த தரத்திற்கு மற்றொரு எடுத்துக்காட் டாகும். இந்த வகையைச் சார்ந்த பட்டதாரிகள்தான் வேலையில்லா தவர் எண்ணிக்கையை பெருக்குகின்றனர். இடைநிலைக் கல்வியில் தற்போதைய தேர்வு முறையானது நம்பிக்கையை இழந்துவிட்டதால் இடைநிலைக் கல்விக்குத் தேர்வு சீர்திருத்தம் தேவைப்படுவதுபோல் உயர்

கல்விக்கும் தேவைப்படுகிறது. ஒரு பல்கலைக் கழகம் நிர்ணயிக்கும் தரத்தை மற்றொரு பல்கலைக் கழகம் உடனடியாக நம்பாத நிலை வந்துவிட்டது. தனியார் மற்றும் பொதுத் துறையில் உள்ள அதிகாரிகள் தம்மிடம் பணிக்கு விண்ணப்பிப்பவர் தரத்தை நிர்ணயிக்க தமது சொந்தத் தேர்வு வைக்கின்றனர். கடந்த காலத்தில் தேர்வுச் சீர்திருத்தத்தில் செய்த முயற்சிகள், அகமதிப்பீட்டுத் திட்டம் ஆசிரியர்களாலும் மாணவர் களாலும் எதிர்க்கப்பட்டதால் முக்கியமாக பெருத்த அளவில் முன்னேற வில்லை. காலமுறை மதிப்பீட்டில் ஆசிரியர்கள் அதிக வேலைசெய்ய வேண்டியிருந்ததால் அவர்கள் அதனை எதிர்த்த மாணவர்கள் ஆசிரியர் களின் புறவயத்தை நம்பாததோடு ஒரு நல்ல தரமான அடைவைப் பேண ஆண்டு முழுவதும் அவர்கள் உழைக்க வேண்டியிருந்ததால் எதிர்த்தனர்.

3.35 பல்கலைக் கழக முறையில் ஆராய்ச்சியானது பரவலாக உள் ளது. இதற்குப் பணச் செலவும் அதிகம். ஆனால், பெரும்பாலான தேசிய முதலீடுகள் பல்கலைக் கழகத்திற்கு வெளியேயுள்ள சோதனைச் சாலைகளுக்குச் சென்றுவிட்டன. அதனால் முன் களவேலை வசதிகள் தவிர்க்கப்படுகின்றன. இந்நிலைமை சீர்திருத்தப்படவேண்டும். ஏனெனில் தரமான ஆராய்ச்சியில்லையென்றால் பட்ட மேற்படிப்பு கல்வியின் தேர்ச்சியும் தரமும் முன்னேறாது. கல்வி மற்றும் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, அறிவின் பரந்த நிலையை ஒட்டி பாடத் திட்டங்கள் மாற, திட்டமிடப்பட்ட செயல்கள் தேவை. பல்லாண்டுகளுக்கு முன் தயாரித்த பாடக் குறிப்புகளை எவ்வித மாற்றமு மின்றி மாணவர்களை எழுதிக் கொள்ளச் செய்வததுதான் முக்கியம் எனக் கற்பிக்கும் முறை சீர் கெட்டு விட்டதால், உண்மையிலேயே கல் லூரிகளும், பல்கலைக் கழகங்களும் கண்டனத்துக்குள்ளாகின்றன.

3.36 பள்ளிகளுக்கு தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் மதிப்பீடு செய்து, புதுப்பித்து, முன்தேர்வு செய்து பள்ளிக் கலைத்திட்டத்தை மேம்படுத்துவது போல் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரிகளில் கலைத்திட்டத்தை இன் றைய நிலைக்குப் புதுப்பிக்க எந்த வகையான நிறுவன அமைப்புகளும் இல்லை. எனவே, கலைகள் மற்றும் இலக்கியங்கள், வாழ்க்கைக்கும் ஆளுமையின் பன்முக வளர்ச்சிக்கும் மாணவர்களின் கற்றல் திறனுக்கும் விவேகத்திற்கும், பொருத்தமான படிப்பு நெறிகளை அளிக்காமல் ஒரே வகையான படிப்புத் திட்டங்களையே கொடுக்கின்றன. அறிவியல்

மற்றும் தொழில் நுட்பக் கல்வியிலும் கல்விமுறை, மனத்தால் மட்டுமே அணுகக்கூடிய அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளன. சோதனைச் சாலைகளில் நடைமுறை நடப்புகளுடன், கல்வியைப் பிணைக்கும ஆதரவு தரக்கூடிய கற்றல்பெட்டகம், உபகரணங்கள், கருவிகள் முதலியவை எப்பொழுதும் போதிய அளவு கிடைப்பதில்லை.

3.37 ஒருங்கிணைந்த வாழ்வுக்கும் பண்பாட்டு செயல்களுக்கும், போட்டி விளையாட்டுக்களுக்குமான வசதிகள், மாணவ ஆசிரியர்களிடையே நல்ல தொடர்பு இல்லாமையால் ஒன்றுமில்லாமலோ அல்லது சரிவரப் பயன்படுத்தப்படாமலோ இருக்கின்றன. முன்புகூறிய நிலையில் நாட்டின் பிரச்சினைசளையோ மதிப்புகளையோ விவாதிக்க இடமே இல்லை. இவற்றின் காரணமாக கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்றலும் கற்பித்தலும் பொதுவாச நற்சாட்சியமும் மதிப்பும் இழந்த பட்டத்தை அடைய நினைக்கும் பகுதி நேரத் தொழிலாகிவிட்டது.

3.38 உயர் கல்வியின் இன்றைய நிலை வெளி முகவைகளின் வெளித் தெரிந்த உள்ளுறைந்த தலையீட்டின் விளைவாகும் என்று பரவலாக நம்பப்படுகிறது. பல்கலைக் கழகங்கள் உண்மையாக தன்னாட்சி பெற்றவையாகவும் உத்தரவாதமுள்ளனவையாகவும் இருக்க வேண்டும் என வாதிக்கப்படுகிறது. இன்றையச் சூழ்நிலையில மாநிலத்தால் ஆதரிக்கப்பட்ட நிறுவனம் மாற்ற முடியாத முறையாக உள்ளதால் உத்தரவாதத்தை வற்புறுத்த முடியாது என்பதும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. எந்த ஒரு நிறுவனமும் படிப்புப் பிரிவும் துவக்கப்பட்டுவிட்டால் அடைக்கப்பட முடியாது. உத்தரவாதத்தைக் கருத்தளவில் மட்டுமே கொள்ளலாம் என்பதற்கு மற்றுமொரு காரணம் உண்டு. முறையாகக் கூறப்போனால் பல்கலைக் கழகங்கள் துணைவேந்தரின் அலுவலகத்தைச் சுற்றி நிர்வகிக்கப்படுகின்றன. எல்லா அவைகளுக்கும் குழுக்களுக்கும் அவரே தலைவராவார். மேலும் அவருக்கு அவசரகால அதிகாரங்கள் அளவற்று உள்ளன. உண்மையில் துணைவேந்தர் விரைவாகக் குறைந்துவரும் தன்மானத்துடன் பணி செய்யவேண்டியிருக்கிறது. அவர் பல்கலைக் கழகங்கள் நடைபெறத் தேவையான பணத்தைப் பெற அரசாங்க அலுவலர்களின் வாயிற்படியில் இடையறாது இருக்க வேண்டியிருக்கின்றது. அதே சமயம், தம்முடைய ஆலோசனைகளால் பல்கலைக்

கழக நடப்புகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு எந்தவகையிலும் உத்திரவாதமேற்காத அங்கத்தினர் அடங்கிய குழுவிற்கு ஒவ்வொரு படியிலும் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியும் தனது தன்னாட்சியை மிகவும் ஆர்வத்துடனும் சக்தியுடனும் பாதுகாப்பதால் துணை வேந்தர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஒரு கல்லூரியைக்கூட முறைப்படுத்த முடியாது.

3.39 மற்றத் துறைகளைப் போலவே உயர் படிப்புக்கும் மிகவும் பற்றாத வளங்களே உள்ளன. தர உயர்வுக்கும், விரிவுக்கும் தேவைகளோ மிக அதிகம். இந்நிலையில் பல்கலைக் கழக மானியக் குழு மத்திய மாநில அரசு இவற்றின் பொறுப்புக்கள் ஐயத்திற்கிடமின்றி வரையறுக்கப்படவேண்டும். அப்போதுதான் நிதி ஒதுக்கீடு சரிவர அமைந்து, தளவாடங்கள் கொடுப்பதும், கட்டுப்பாட்டைக் காப்பதும் கல்வியின் தரத்தையும் கற்பிக்கப்படுவதையும் நன்கு கவனிப்பதும் இயலும்.

3.40 பண உதவி செய்யும் முறைகளை நிலைப்படுத்துவது தேவை என்பதை மறுக்க இயலாதபோதிலும், உயர் கல்விக்கு இப்போதுள்ள அளவிற்கு நிதி ஒதுக்கிட எவ்வித நியாயமும் கிடையாது. கல்லூரிக் கட்டணத்தை ஏற்று வசூல் மூலமும், சமுதாய மற்றும் வளரும் துறைகளின் நன்கொடைகள் மூலமும், உயர் கல்வி உருவாக்கிய மனித சக்தியின் பயன்கள் மூலமும், வளங்களைப் பெருக்குவது கவனிக்கப்பட வேண்டியது ஆகும். உதாரணமாக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கினால், எந்த ஒரு வளர்ச்சித் துறையும், கைத்திறனுடைய தொழிலாளர் முதல் பொறியாளர், வரைஞர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரையும் அவர்தம் சக்தியையும் பெரும் அளவில் ஈடுபடுத்தும் என்பதை உணரலாம். இந்த மனித சக்தியை குறைந்த வரவு செலவுத் திட்டங்களுடைய தொழில் நுட்ப நிறுவனங்களாலோ, பல்கலைக் கழகங்களாலோ உற்பத்தி செய்ய முடியாது. இந்த ஒதுக்கீட்டில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு மனித சக்தி முன்னேற்றத்திற்குச் செலவிடப்படவேண்டும். இது திட்ட ஆவணங்களில் குறிக்கப்பெற்று தகுந்த இடங்களுக்கு அனுப்பப்பெறுவதற்காகக் கல்வித் துறைக்குக் கொடுக்கப் பெறவேண்டும்.

## தொழில் நுட்பக் கல்வி

3.41 இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் தொழில் நுட்பக் கல்வி பெரும் பங்கேற்றிருக்கிறது. இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தால்

உருவாக்கப்பட்ட மனித சக்தியால்தான் சுதந்திரம் பெற்றதிலிருந்து நம் நாட்டில் மாறுதல்களும் பல்வேறு துறைகளின் உற்பத்தி அதிகரிப்பும் சாத்தியமாயின. இந்த நிறுவனங்களின் பட்டதாரிகளில் சிலர் கடல்கடந்து உலகின் பலபாகங்களில் தொழில் நுட்பங்களில் முன்னேறாத பகுதிகளில் பணியாற்றுகின்றனர். இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட உறுதியான அடைவுகளைப் பெற்ற பொழுதும் இந்தமுறை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பல பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. பழமையான இயந்திரம் மற்றும் தளவாட பிரச்சினைகளும், புதிய தொழில் நுட்பங்களுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான சாதனங்களின்மையும் முதன்மையான பிரச்சினைகளாகும். இந்நிலையில் தொழில் துறை அகில உலகப் போட்டியால் பெருகிவரும் அழுத்தத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. அழியாமல் தப்புவதற்கு அது வேகமாக மாற வேண்டியிருக்கிறது. இந்த மாற்றத்தை வேகப்படுத்த முடியும்; ஆதரிக்க முடியும். ஆனால் அதற்குத்தகுந்த தளவாடங்கள் தேவைப்பட்டபொழுது கொடுப்பதுடன் கலைத் திட்டத்தைப் புதுப்பிக்கவும் அதிகப்படுத்தவும் புதிய தேர்ச்சிகளின் மூலம் மனித சக்தியை விரிவுப்படுத்தவும், தகுந்த கற்பிக்கும் பொருட்களையும் பாடப் புத்தகங்களையும் கல்வி நுட்பங்களையும் தயார்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற தொழிற் வல்லுநர்களுடன் தொழில் நுட்பக் கலைஞர்களும் முக்கியமானவர்கள். ஏனெனில், அவர்கள் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் கருவிகளாவார்கள். ஆசிரியத் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டும், பல குழுக்கள் பரிந்துரைத்த பொழுதும், தொழில் நுட்பக் கல்வியின் தரமும் புத்தறிவூட்டலும் இன்றும் பெரிய சிக்கலாக உள்ளன.

3.42 தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தினரால் நல்ல ஆசிரியர்களைக் கவர முடியாதது பல வருடங்களாகத் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாகும். கொடுக்கப்பட்டுள்ள அங்கத்தினர்களது எண்ணிக்கையில் எப்பொழுதும் சராசரியாக 20 முதல் 30 விழுக்காடு காலியிடங்கள் பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு நிறுவனங்களில் காணப்படுகின்றன. தொழிற்சாலையில் கொடுக்கப்படும் வருமானம் கவர்ச்சியாக உள்ளதால சிறந்த மாணவர்கள் தொழில் நுட்ப நிறுவனங்களில் கற்பிக்க வருவதில்லை. இந்நிறுவன தொழில் கோட்பாடுகள் விரும்பத்தக்கனவாயும் இல்லை. தொழிற்சாலைக்கும், தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும்

க—8

இடையே உள்ள ஒத்துழைப்பு தரநிர்ணயத்திற்கும் செலவுப் பயனுடைமைக்கும் முக்கியமானதாகும். இவ்விரண்டின் நெருங்கிய உறவுக்காக எவ்வளவு முயன்றும் அது வலிவற்றதாக உள்ளது. நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளில் தொழில்துறைகளின் முதலீடு என்பது ஏறக்குறைய இல்லையென்பது தொடர்கிறது. பொதுத் திட்டங்களில் பங்கேற்போ, பணியாளர் பரிமாற்றமோ இல்லை.

3.43 இந்தியாவைப் பொறுத்த மட்டில் கிராமப்புற வளர்ச்சிக்கும் தொழில் நுட்பம் அதிக நன்மை அளிக்க வேண்டியதுள்ளது. இவ்வகையில் உன்னதமான பணிக்கு எடுத்துக்காட்டுகள் சில உண்டென்றாலும், சுருங்கக்கூறின், தொழில் நுட்ப நிறுவனங்கள் எவ்வளவு வேகத்தோடு கிராமப்புற மக்களுக்கு நவீன நுட்பத்தால் பயன் அளிக்க வேண்டுமோ, அவ்வளவு பயன் அளிக்கவில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கைக்கும் இந்த நிறுவனங்களுக்கும் அதிக அளவு தொடர்பு ஏற்படுத்த வேண்டும்.

3.44 பல்வேறுபட்ட தொழில் நுட்பவியல் நிறுவனங்களுக்கிடையே கல்வித் தரம் மிக அதிகமாக வேறுபட்டு உள்ளது. ஐ.ஐ.டி. மண்டல பொறியியல் கல்லூரிகள், மாநில பொறியியல் கல்லூரிகள் போன்றவை வேறுபட்ட பிரிவைச் சேர்ந்தவை. பல மாநிலங்களில் பொறியியல் கல்லூரிகள் பாலிடெக்னிக்குகள் போன்றவை அடங்கி உள்ள தொழில் நுட்பவியல் துறைக் கல்விக்கு செலவு செய்யப்படும், பட்ஜெட் தொகை, ஒட்டு மொத்தமாக ஒரு ஐ.ஐ.டி.க்கு செலவு செய்யப்படும் பட்ஜெட் தொகையைவிடக் குறைவு. ஐ.ஐ.டி. யிலிருந்து உருவாகுபவர்கள், இந்தியச் சூழ்நிலை வளர்ச்சிக்கு ஏற்ப அமைகிறார்கள் என்பதைவிட, அனைத்துலக தொழிற்துறைக்கு ஏற்ப அமைகிறார்கள், என்பதே பொதுவான கணிப்பு. இதன் விளைவாக பெருமை மிக்க இந்த நிறுவனங்களில் இருந்து உருவாகுபவர்கள், வேலை வாய்ப்புக்காக வளர்ச்சி அடைந்த நாடுகளில் முயன்று கொண்டிருக்கின்றனர். எனவே, ஐ.ஐ.டி.யின் பண்பாடும், பெருமையும் அறிஞர்கள் வெளிநாட்டுக்குச் செல்ல வழிவகுக்கும் காரணிகள் ஆகும்.

3.45 தொழில் நுட்பவியல் சார்பு கல்விக்கும் மனித சக்தியால் திட்டமிடுதலுக்கும் உள்ள இணைப்பு மிகவும் பலவீனமாக உள்ளது. உண்மையில், கல்வித் துறையின் இந்த நிலையில் தான் இணைப்பு உறுதியாக இருக்க வேண்டும். இந்தியத் தொழில்கள், நவீன மயமாக்கப்படுதல், பற்றி தொழில் துறைக்கொள்கை விளக்குகிறது. தொழில்கள் நவீன

மயமாக்கப்படுதல் பற்றி, தொழில் துறைக்கொள்கை விளக்குகிறது. தொழில்கள் நவீன மயமாக்கப்படுதல் மனித சக்தி குறைவு புலப்படும் பகுதி போன்றவற்றிற்கு ஏற்ப, மனித சக்தி தேவைகள் புரிந்து கொள்ளப் படவேண்டும். பொது அல்லது தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்ட கல்விப் பயிற்சி வசதிகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண் டும். தர வளர்ச்சி, துறை வளர்ச்சி நிகழ்ச்சிகள், பயன் சார்பு ஆராய்ச்சி போன்றவை மேலும் ஊக்கப்படுத்தப்படவேண்டும். பழமை யானதைத் தடுப்பதற்கும், நிறுவனங்கள் பணியைச் செம்மைப்படுத்து வதற்கும் பணம் தேவை. தொழில் துறை மனித சக்தியைப் பயன் படுத்துபவர்கள், தங்கள் லாபத்தில் ஒரு பகுதியை வரியாகக் கட்டும் நிலைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். இதன் மூலம் தொழிற் கல்வியை வளர்க்கலாம். ஐ. ஐ. டி.யின் பெரும்பான்மையான மனித சக்தி தனியார் துறைக்குச் செல்லுகிறது. வரி கட்டுவோர் இதற்கு உதவி நிதி அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டுக்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவாகும்போது ஒரு மாணவனிடம் மிகக் குறைந்த அளவே பணம் வசூலிக்கப்படுகிறது என்ற இந்தத் தாக்குத லைச் சந்திப்பது அவசியம்.

**மேலாண்மைக் கல்வி**

3.46 ஆக்க வளத்தை மேம்படுத்துவதில் மேலாண்மைக் கல்வி முக்கிய பங்கை வகிக்கின்றது. நான்கு இந்திய மேலாண்மை நிறுவனங்கள் நீங்க லாக வாணிப நிர்வாக முதுகலைப் பயிற்சி 49 பல்கலைக் கழகங்களில் அளிக்கப்படுகிறது. சில தனியார் நிறுவனங்களும் மேலாண்மைப் பயிற்சிகளைக் கொடுக்கின்றன. இவையளிக்கும் பயிற்சிகளின் தரமும் தன்மையும் பெரிதும் மாறுபடுகின்றன. மிகப்பெருந்தேவை என்ற நெருக்கடி காரணமாகப் பண வளமும், மனித சக்தியும் இல்லாமல் பல நிறுவனங்கள் தோன்றின. தொழில் நுட்பக் கல்விக்குக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று ஏற்கனவே பார்த்தோம். இதே நிலை மேலாண்மைக் கல்விக்கும் பொருந்தும்.

3.47 வேளாண்மை, கிராமப்புற வளர்ச்சி, கல்வி, சமூக மேம்பாடு போன்ற துறைகளுக்கு மேலாண்மைக் கல்வியின் பொருத்தத்தை அங்கீ கரிப்பது தேவையாகிவிட்டது. இத்துறைகளின் தேவைகளுக்குக்கேற்ப மேலாண்மையில் மாற்றங்கள் அல்லது மாதிரிகள் வளர, ஈடுபாடு என்ற நல்ல தன்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மேலாண்மை

நிறுவனங்கள், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல், செய்தி திரட்டுதல், செயல் ஆராய்ச்சி போன்ற பொறுப்பான செயல்களை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளாவிட்டால், இந்த அங்கீகாரம் பயனற்றுப் போய்விடும்.

3.48 மேலாண்மை நிறுவனங்கள், பல்கலைக் கழக வாணிபவியல் நிர்வாகத் துறைகள், பொதுத் துறை, தனியார் துறை போன்றவற்றிற்கு இடையே ஒரு வலைப்பின்னல் அமைப்பு நடைமுறை இல்லை. இந்த இணைப்புக்கள் வலிமைப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மேலாண்மைக் கல்வி நாடு முழுவதும் சிறப்பு அடையும். மேலாண்மைக் கல்வியில் ஒரு அளவிறந்த அக்கறையை ஏற்படுத்தினாலொழிய வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத உற்பத்தியில் தொடர்ந்து முன்னேற்றம் என்பதை எட்டிப் பிடிக்க முடியாது.

## ஆசிரியர்களும், ஆசிரியர் கல்வியும்

3.49 ஆசிரியர் செயலாக்கம், கல்வித் துறையின் மிகச் சிறந்த முதலீடு ஆகும். எந்தக் கொள்கைகள் வகுத்தாலும், இறுதியில் அக்கொள்கைகள் ஆசிரியர்களால் தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தன் சொந்த வாழ்க்கையின் மாதிரியாலும், கற்பித்தல், கற்றல் முறையாலும் செயல்படுத்தப்பட வேண்டும். பல புதிய தொழில் நுட்பவியல் வளர்ச்சியின் நுழைவாயிலில் நாம் நிற்கிறோம். வகுப்பறைகளில் பெரும் புரட்சியையே இது செய்யும், ஆனால், ஆசிரியக் கல்வியின் பாடத்திட்டத்தை உயர்த்துவது மிகவும் மெதுவாக நடைபெறுகின்றது. பல ஆசிரியக் கல்வி முறைகள் தற்காலத்துக்கே பொருத்தம் அற்றவை. எதிர் காலத்திற்கு எப்படிப் பொருந்தும்? ஆசிரியர்களைத் தேர்ந்து எடுக்கும் முறைகளும் நியமிக்கும் முறைகளும் தரத்திற்குத் தகுந்தாற் போல் இல்லை. வேலைச் சந்தையில் ஆசிரியத் தொழில்தான் கடைசியானது. ஆசிரியர்களிடமிருந்து நாம் சிலவற்றை எதிர்பார்க்கிறோம். நம்மிடம் தலை சிறந்த புத்தகங்களும், ஆராய்ச்சிகளும் உள்ளன. ஆனால் பணியில் அக்கறையற்ற ஆசிரியர்கள் பெருகுவதையும் காண்கிறோம். இது ஒரு முரண்பாடாக தோன்றினாலும் உண்மை.

3.50 மேற்கூறிய கூற்று ஆசிரியர்களை ஒரேயடியாகத் தாக்குவதாகக் கருதப்பட்டுவிடும். ஆகவே ஒரு கணிசமான ஆசிரியர்களின் உயர்வு பற்றியும் கூறியாக வேண்டும். மாணவர்களது நன்மைக்காகத் தம்மை

முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டு, நெஞ்சு வலிகளைத் தாங்கிக் கொண்டு, கிடைக்கும் சிறுசிறு பயன்களோடு ஒப்பிய பொறுப்புடனும், கடின உழைப்பிடனும் ஆக்க சக்தியோடும் தன் செய்தொழிற் பொறுப்பு களைத் தம்மால் இயன்ற அளவு நிறைவேற்றி வரும் இந்த ஆசிரியர்கள் தான், இன்றைய முறையின் சிறப்பு.

3.51 இந்திய அரசு நியமித்த இரண்டு ஆசிரியர் ஆணையங்களும் ஆசிரியர்கள் தேர்வுமுறை, பங்கு, நிலை, தன்மை, பயிற்சி பற்றி ஆழமாக ஆய்ந்து விட்டன. ஆகவே, கல்வி முறையை நேரடியாகப் பாதிக்கும் ஆசிரியர்களின் செயலாக்கம்பற்றி மட்டுமே இங்கு விவாதிக்கப்பட்டது.

3.52 ஆசிரியர்கள் தகுதியடிட்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை யென்று, பொதுவாக எல்லோராலும், குறிப்பாக ஆசிரியர்களாலும் நம்பப்படுகிறது. இதன் விளைவாகத் தம்மகத்தே திறமை இல்லாத வரும் நாட்டமில்லாதவரும் இந்தத் துறைக்கு வருகின்றனர். ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, கல்லூரிகளில், மாணவர்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்ப்பதில்லை. தன்முயற்சி, ஆராய்வூக்கம், அறிவியல் ஆர்வம், கைத் தொழில் திறமை, எண்ணத் தெளிவு, பேச்சாற்றலுக்கான மொழியியல் திறமை, எழுத்தாற்றல் போன்றவைகளை மாணவர்களிடையே ஆசிரி யர்கள் வளர்க்க வேண்டும். இதற்குத்தக்கவாறு ஆசிரியப் பயிற்சி திட்டமிடப்படுவதில்லை. கருத்து வெளியிடும் திறமை ஆசிரியர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இத்திறமையை வளர்ப்பதில் போதிய, கவனம் செலுத்துவதில்லை. நவீன கல்வி சாதனங்களைப் பற்றி அறிந்து அதைப்பற்றி கிரகித்துக் கொள்ளும் ஆற்றலையும் வளர்ப்பதில்லை. ஒலி ஒளி சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றலையும் வளர்ப்பதில்லை. தேசிய ஒருமைப்பாடு, கலாச்சார சம்பந்தம், மனித குல நேயம் போன்ற வற்றை வளர்க்கும் கருவியாகக் கல்வி இருக்க வேண்டும் என்று வலியுறுத் தப்படுகிறது. ஆசிரியப் பயிற்சி காலத்தில் இதைப் பற்றி வலியுறுத்துவது இல்லை. பயிற்சி முடிந்த பின்னர் ஆசிரியர்களாகப் பொறுப்பு ஏற்போர் இந்த உணர்வுகளை வளர்க்கத் தவறி விடுகின்றனர்.

3.53 அறிவு, தொழில் நுட்பவியல், மேலாண்மை போன்றவற்றில் விரைந்த மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் உலகம் இது. இதில், சுருங்கக் கூறின், ஆசிரியர்கள் சமுதாயத்தை உருவாக்கும் அறிவு ஆற்ற லோடும், பிற சக்திகளோடும் தொடர்பு இல்லாமல் இருக்கின்றனர். திறம்படக் கற்பிக்க புதிய தொழில்நுட்பவியல் துணைக் கருவிகள் பற்றி

அண்மைக்கால முன்னேற்றம் வரை தெரிந்து வைத்துக்கொள்வதில்லை. தொலைதூரப் பள்ளியில் அல்லது கல்லூரியில் பணியாற்ற நேர்ந்துவிட்டாலோ, தன் சக ஆசிரிய நண்பர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பையும் இழக்கின்றனர். ஒரு கோடைகாலப் பயிற்சிக்கோ புத்துணர்ச்சி ஊட்டும் பயிற்சிக்கோ செல்லும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அப்படியே ஒரு வாய்ப்பு கிடைத்து, அத்தகையப் பயிற்சிகளுக்குச் சென்றாலும், தாம் எவ்வாறு மாணவர்கட்கு கற்பிக்கிறோமோ, அதேபோன்று கற்பனை வளமில்லாத வழக்கமான ஒருவழிப் பாதையில் தாமும் கற்பிக்கப்படுவதைத்தான் காண்கின்றார்கள்.

3.54 கடந்த இருபது முப்பது ஆண்டுகளாக கட்சி அரசியலில் ஆசிரியர்கள் பலர் ஈடுபட்டு எந்த அளவுக்கு ஆசிரியர் அமைப்புகளையே அரசியல் மயமாக்கி வருகின்றனர் எனும் அனுபவத்தை நாம் ஒதுக்கிவிட முடியாது. பல்லாண்டுகளாகப் போற்றி வரும் ஆசிரியர் தம் பணியில் கவனச் சிதைவு, ஒழுக்கம், இவை எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிட வேண்டும். பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர்கட்குத் தகுதி அடிப்படையில் பணி உயர்வு என்பது பணிமூப்பு அடிப்படையில் தானாக வேலை உயர்வு என்பதை அனுமதிக்காது. இந்த திட்டங்களை எல்லாம் செயற்படுத்துவதைப் பார்க்கையில், பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வருவதாகக் கருதுகின்றனர். இதன் விளைவுகளின் விவரமறிந்த பலரும் பெருங்கவனம் செலுத்துகின்றனர். பார்க்கும் பணியில் உயர்வுக்கு ஆழ்ந்த கல்வி, திறமை இவற்றைவிட வயதுதான் அடிப்படை என்றாகிவிட்டால், தானே கற்றல், சோதனைகள் செய்தல், ஆராய்ச்சி, உன்னதநிலை எய்தும் முயற்சி இவற்றிலெல்லாம் ஆர்வம் அழிந்துவிடும். கொள்கையளவில் பல்கலைக் கழகங்கள் நாடுவது இவைதானே.

**பொதுவான சில வழக்கெழு வினாக்கள்**

3.55 இந்த நுணுக்கமான ஆய்வுக் கருத்துக்களை முடிக்கும் முன்பாக இம்முறை, முழுமையாகச் செய்யப்படுவதில் உண்டாகும் சில கல்வி சம்பந்தமான பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது, அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் நாட்டில் உள்ள பல்வேறு சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உள்ளவர்களுக்கும் தரமான மற்றும் முழுமையான கல்வி கிடைப்பதில் உள்ள சமவாய்ப்பற்ற தன்மையை நோக்க வேண்டியது அவசியமாகும். இக்கல்வியின் சம வாய்ப்பற்ற தன்மை,

கல்வியின் முக்கிய விளைவுகளைகிய மக்களின் சுய முன்னேற்றம் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதிக்கிறது.

3.56 மக்களில் பெரும் பகுதியினர் அதாவது 75% கிராமப் புறங்களில் வசித்தாலும், நகரத்தில் வசிப்போர்களுக்குக் கிடைப்பதைக்காட்டிலும் மிகக் குறைந்த அளவே இவர்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. எனினும் கிராமப் பகுதிகட்கு உரிய பங்கு ஓரளவு பெருகி வருவது தென்படுகிறது. 1950-51இல் உள்ள கிராமம் மற்றும் நகர்ப்புற விகித மாகிய 0.53ஐக் கருத்தில் கொண்டு பார்ப்போமானால் கல்விக்காக கிரமப்புற மக்களுக்குச் செலவிட்ட தொகை ரூ. 38.3 கோடியாகவும், நகரத்தில் உள்ள மக்களுக்குச் செலவிட்ட தொகை ரூ. 71.6 கோடியாக வும் உள்ளதைக் காணலாம். 1970-71இல் கிராமம் மற்றும் நகர்ப்புற விகிதம் 0.79 ஆக இருந்தும் கிராமப் புறங்களில் ரூ. 494.6 கோடியும், நகர்ப்புறத்தில் ரூ. 623.7 கோடியும் கல்விக்காகச் செலவிடப்பட்டுள்ள தைக் காணலாம். கிராமப்புற மக்கள் தொகை அதிகமாக இருந்தும், கல்விக்காகச் செலவிடப்படும் தொகையில் உள்ள வேறுபாடு நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதுகுறித்து மேலும் ஆய்வுகள் தேவை யில்லை. நகர்ப்புறத்திலுள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கட்டடங்களின் உறுதியும், நிர்வாகமும் கிராமப்புறத்தில் உள்ள வைகளைக் காட்டிலும் சிறப்பாகவே உள்ளன. கூரையே இல்லாத ஓராசிரி யர் பள்ளிகளும்-பள்ளிகளில் கரும்பலகைகள், குடிதண்ணீர் வசதி, போதிய சிறுநீர்க் கழிப்பிடங்கள் போன்றவை இல்லாததன்மை நகர்ப் புறத்தைக் காட்டிலும் கிராமப்புறங்களிலேயே அதிகம் காணப்படுகின் றன. பொதுவாக பள்ளிகளில், நல்ல நூல்நிலையம், ஆய்வுக் கூடவசதி, ஆசிரியர் அதிகம் விடுப்பில் செல்லாத நிலை ஆகியவை நகர்புறப் பள்ளி களில்தான் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் காரணமாகவும், கிராம, நகர்ப்புற மக்களின் வாழ்க்கை நிலை, தொழில் ஆகியவற்றின் வேறுபாடுகள் காரணத்தாலும், பள்ளியை இடையில் விடுபவர்களின் எண்ணிக்கை நகர்புறத்தைக் காட்டிலும் கிராமப் புறத்தில் அதிகம். கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் தூரம் கூட, நகர்ப்புற மக்களுக்குச் சாதகமாக உள்ளது.

3.57 இந்த கிராமப்புற—நகர்ப்புற வேறுபாடுகளை மேலும் வலுப்படுத் துவது நகரத்தில் அதிகம் இடம்பெற்றுள்ள தரமுள்ள தனியார் துறைப்

பள்ளிகளாகும். ஏனெனில் அவை பயிற்று மொழி காரணமாக, பல்வேறு துறைகளில் சிறந்த வாய்ப்புகளையும், போட்டிச் சூழ்நிலையையும் உருவாக்கித் தருகின்றன. இவை பெருமதிப்பு வாய்ந்த படிப்புகளாகிய பொறியியல் கல்வி மருத்துவக் கல்வி மற்றும் மேலாண்மை கல்விகளில் ஒதுக்கப்படாதோர் இடத்தில் பெருமளவை இவ்வகைக் கல்வி நிறுவனங்களிலிருந்து வருவோர் தட்டிச் சென்றுவிடுகின்றனர். என்னதான் பெரு முயற்சி எடுத்துக் கொண்டாலும் நகர்ப்புறப் பொதுக் கல்விநிறுவனங்களிலும் குறிப்பாக மையப்பள்ளிகளிலிருந்து வருவோர் மேற்படிப்பு மற்றும் வேலைகளுக்குத் தேர்வு நடத்தப்படும் முறையில் சாதகமடைவதை மாற்றித் தடுக்க முடியவில்லை. நியாயத்தில் அக்கறை காட்டி இவ்வேறுபாட்டைத் தோற்றுவித்து நிலைப்படுத்தும் துறை பற்றியும், இதைப் போக்குவதற்கான நிலை குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

3.58 பெண் கல்வியைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு சமீப ஆண்டுகளில் எவ்வளவோ சலுகைகளும், மற்றும் பல வாய்ப்புகளும் கொடுத்து ஊக்கப்படுத்தியும் கூட அவர்கள் முன்னேற்றத்தில் சிறுவர்களுக்கு அடுத்துதான் இருக்கிறார்கள். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் கல்வி வாய்ப்பின்மை அன்று. அவர்களுடைய சமூகப் பண்பாடுகளும், பழக்க வழக்கங்களும், தொழில் மற்றும் பொருளாதாரமுமே ஆகும். இன்னமும் சில பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை ஆண், பெண், இருவரும் சேர்ந்து படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு குறிப்பாகப் பெண் ஆசிரியையே இல்லாத பள்ளிகளுக்கு அனுப்ப விரும்பவில்லை. ஆண்களைக் காட்டிலும், பெண்களின் தரம் சிறப்பாக இருந்தபோதிலும், மருத்துவம், ஆசிரியர் பயிற்சி, செவிலித்தாய் படிப்பைத் தவிர வேறு தொழிற் பயிற்சிகளில் மிகச் சிலரே சேர முயல்கிறார்கள்.

3.59 தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகள் மற்றும் பழங்குடியினரின் குழந்தைகள் கல்வியில் பங்கேற்பதைப் பொறுத்தவரையில், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடியினரைத் தவிர மற்ற மாநிலங்களில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை மிக உயர்ந்ததாக இல்லை. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் (1977-83) இப்பிற்பட்ட இரு சமூகத்தினரின் வளர்ச்சி மிகவும் சிறந்துள்ளது. இதுமட்டுமன்றி, இவ்வினத்தவர் பெண்கள் கல்வி நிலையில் அவர்கள் இன ஆண்களைவிடக் குறைந்த நிலையில் உள்ளனர். மேலும், இவ்வினத்தவர்களின் ஆண், பெண்

குழந்தைகளில் பள்ளிச் சேர்க்கையில் உள்ள இவ்வேறுபாடு நகர்ப்புறத்தை விட கிராமப் புறத்தில் அதிகம் உள்ளது.

3.60 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான குறைபாடு களை இட ஒதுக்கீட்டினால் மட்டும் நீக்கமுடியாது. சில பிற்போக்கான நிலையை நீக்கும் முகத்தான் கடைப்பிடிக்கவேண்டிய புதிய வழிமுறையை விவாதிப்பதுதான் இங்கு ஒரு சிறப்பான அம்சமாகும். தொழில் கல்லூரிகளிலும், வேலை வாய்ப்புகளிலும் ஏற்படுத்தியுள்ள இவ்விட ஒதுக்கீடு, எதிர்பார்த்த விளைவைத் தரவில்லை. காரணம் போதிய வழிமுறையைக் கடைப்பிடிக்காமைதான். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடி மக்களின் பெரும்பான்மையான பள்ளி செல்லும் வயதினர்தான் அவர்கள் இனத்திலேயே கல்விகற்கும் முதல் பரம்பரையினராவர். இவர்களும், கல்வி கற்காத மற்றவர்களும், குழந்தைப் பருவத்தில் போதிய சத்துணவு இன்மை, சமுதாயத்தில் போதிய அந்தஸ்து இல்லாமை, பொருத்தமில்லாத வேலை, அவர்கள் கற்கும் தகுதியை அவர்கள் உணராமையால் ஏற்படும் தன்னம்பிக்கையின்மை போன்றவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாவர். இவை அனைத்தும் அவர்களைத் தொழில் கல்விகளிலும், போட்டித் தேர்வுகளில் மற்றவர்களுடன் போட்டியிடல் போன்ற காரியங்களிலும் ஒத்துப்போக முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. மேலும் இவை அவர்களுடைய நண்பர் களிடையே ஒருவித மனக்கவலையைத் தருகிறது. இதற்கிடையில் இத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்காக அவர் களுடைய திறமைகளைப் பெருக்குவதற்காக சில திட்டங்கள் தொடங்கப் பட்டன. இதற்கான மேலும் சில வழிமுறைகளைக் கண்டு, மற்ற மாண வர்களுக்கு இணையாக இச்சமூக மாணவர்களும் எல்லாவிதத் திறமை களையும் பெற முயற்சிக்க வேண்டும்.

3.61 சமூக மற்றும் பால் அடிப்படையில் கல்வியில் சமவாய்ப்பின் மையைக் கூர்ந்து நோக்குவதுடன், கல்வியில் நடைமுறைப்படுத்துதலில் ஏற்படும் கால வேறுபாட்டினையும் கவனிக்க வேண்டியது அவசிய மாகும். ஒருசில குறிக்கோள்களின் அடிப்படையில் ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், ஜம்மு காஷ்மீர், மத்திய பிரதேசம், ஒரிசா, இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை கல்வியில் பின் தங்கிய மாநிலங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. 1981-82இல் ஜம்மு காஷ்மீர் நீங்கலாக மற்றைய மாநிலங்கள் அனைத்தும், தேசியமட்டத்தில்

ஒரு மனிதனுக்காகச் செலவிடப்பட.வேண்டிய தொகைக்குக் குறைவாகவே கல்விக்காகச் செலவிட்டுள்ளது. இதன் விளைவாக, தொடக்கக் கல்வியில் சேர்க்கையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இது கல்வியின் பின்தங்கிய நிலை, கல்விக்காகச் செலவிடப்படும் தொகையைப் பொறுத்தது என்பதைக் காட்டுகிறது. இதன்மூலம் நாம் மேலும் ஒவ்வொரு மாநிலத்தின் பொருளாதாரத் தன்மையினையும், சிறப்பாக தனிநபர் வருமானத்தையும் அறியமுடிகிறது.

3.62 கல்வியின் அடிப்படைக் கொள்கை மனித இனத்தின் உள்ளாற்றலின் வளர்ச்சியானாலும் இவ்வளர்ச்சி வேலை மற்றும் வேலை வாய்ப்புடன் கொண்டுள்ள தொடர்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. துரதிர்ஷ்டவசமாக, பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த மனப்பான்மை திறன்களிலிருந்து அறிவுநிலைக் கல்வியைப் பிரித்து, இதன் அடிப்படையிலேயே சமூகத்தையும் பிரித்தது. இது மேலும் காலனி ஆட்சி முறையில் வற்புறுத்தப்பட்டது. முடிவில், இம்முறையினால் உயர் மட்டக் குடியினருக்கு அறிவுநிலைக் கல்வியும், உழைக்கும் பொதுமக்கட்கு திறனடிப்படைக் கல்வி எனவும் ஆகியது. காலத்திற்கு ஒவ்வாத இம்முறைகளை நீக்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றி பெற்றன. இருப்பினும், அறிவுநிலைக் கல்வி பட்டதாரிகளே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர் என்பது உண்மையாகும். கல்வி நிறுவனங்களுக்கும், வேலைவாய்ப்புச் சந்தைக்கும் ஒருவித இணைப்பு இல்லாமைக்கு ஒரு காரணம், முறைப்படுத்திய வேலை வாய்ப்புச் சந்தையில் மொத்தக் கூலி வேலை புரிவோரில், ஏறக்குறைய 10 சதவீதத்தினரே இடம் பெற்றுள்ளனர் என்பதாகும். மீதமுள்ளவர்களுக்கு அவர்கள் பங்கிற்கும், பொறுப்பிற்கும் ஏற்றபடி கல்வி முறை தயாரிக்கப்படவில்லை.

3.63 தற்போதுள்ள காட்சி கீழ்க்கண்டவாறு விளக்கப்படலாம்.

(அ) பொது நிறுவனங்களில் தொழில் நுட்ப அறிவும்-திறனும் எத்தொழிலுக்குத் தேவைப்படுகிறதோ அத்தொழிலில் பணிபுரியும் 50%க்கும் மேற்பட்ட தொழில் புரிவோருக்கு, போதுமான கல்வியும் அல்லது பயிற்சியும் இல்லை.

(ஆ) எத்தொழிலுக்கு பொதுக் கல்வி தேவைப்படுகிறதோ அத்தொழில் பணிபுரிவோருக்கும் போதுமான கல்வி இல்லை.

(இ) தொழில் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் வேலைவாய்ப்பு வெகு விரைவாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. இவை சிறப்பாக பழுது பார்க்கும் துறைகளில் அதிகம்.

(ஈ) உயர்நிலைப் பள்ளி நிலை, மேல்நிலைப் பள்ளி நிலை மற்றும் தொழில் நுட்பப் பட்டதாரிகளிடையே உள்ள வேலை வாய்ப்பின்மையைவிட பொதுவான பாடங்களில் பட்டங்கள் பெற்றுள்ள பட்டதாரிகளிடையே வேலை வாய்ப்பின்மை அதிகமாக உள்ளது.

(உ) எல்லோரும் நினைப்பதுபோன்று, உயர் பட்டப் படிப்பு நல்ல வேலை வாய்ப்புக்கு உதவும் என்பது நிச்சயமில்லை.

(ஊ) பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் படிப்புக்கேற்ற வேலை தொடர்பான ஒரு பெரிய பிரச்சினை எழுந்தது. காரணம், பல் வேறு மாநிலங்களிலிருந்தும், பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் தேசிய மற்றும் வட்டார வேலை வாய்ப்பு இடங்களில் போட்டியிடுகின்றனர். பட்டப் படிப்பில் இல்லாவிட்டாலும், பல்கலைக் கழகத்தில் முறையான மதிப்பீடு முறை இல்லாமை வேறு ஒரு காரணம்.

(எ) நன்கு நிர்வகிக்கப்படாத வேளாண்மை அல்லது வேறு தொடர்பான கிராமப்புறத் தொழில்களுக்கான வேலை வாய்ப்புகளுக்கேற்ற திறமைகளை வளர்க்க ஒன்று முதல் 12 வரையிலான கல்வி முறையில் எதுவுமில்லை.

3.64 தேசிய மட்டத்தில் உள்ள தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், கல்வித்திட்டம், மற்றும் நிர்வாகத்திற்கான தேசிய நிறுவனம் மற்றும் பல்கலைக் கழக மான்யக்குழு ஆகிய மூன்று சிறப்பான நிறுவனங்களும் இணைந்து செயல்பட்டு கல்வித்திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். முந்தையப் பத்திகளில் கூறப்பட்டக் கருத்துக்களில் ஏதேனும் மதிப்பிருக்குமாயின் இத்தகைய நாடு தழுவிய நிறுவனங்கள் எதிர்பார்த்த பலன்களை மக்கட்கு அளிக்கவில்லை என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க இயலாது. இந்நிறுவனங்களில் கடும் முயற்சிகள் கல்வியின் தரத்தையும் பாடத்திட்டத்தின் அமைப்பையும் மேலும் வலுப்பெறச் செய்வதிலும் கல்வியின் நோக்கங்கள் முன்னுரிமைகள் ஆகியவற்றை மாற்றி அமைக்க முயல்வதும் ஆகிய செயல்கள் போதுமான அளவிற்கு வெற்றி பெற வில்லை. இந்நிறுவனங்கள் தரமான மற்றும் எண்ணிக்கையில் தேவை

யான தேசிய உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சி நிலைகளை மேலும் வலுவடையச் செய்யும் மனித சக்திகளை உருவாக்க முயன்று அதிலும் முழு வெற்றியை அடையவில்லை. இம்முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போவதற்கான காரணம் என்னவெனில் கல்வித்திட்டங்களை உருவாக்கு வது முற்றிலும் அந்தந்த மாநில அரசுகளே. இம்மாநில அரசுகளுக்கும் இந்நிறுவனங்களுக்கும் உள்ள இடைவெளி குறையின் முயற்சிகள் அனைத் தும் பலன் அளிக்கும் என்பது திண்ணம்.

3.65 இப்பகுதியின் பிந்திய பகுதிகளில் கல்விக்குத் தேவையான பணத் தைப் பற்றி (அ) மான்யத்தைப் பற்றிய மேலெழுந்தவாரியான வழி முறைகளைக் காணும் சமயத்தில் கல்வியில் எந்த ஒரு புதிய முறையினை யும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முற்படும் பொழுது அதற்கு வேண்டிய அதிக மான்யத்தைக் கணக்கிடுகையில் ஒரு பெரிய குழப்பம் எழுவதைக் காணலாம்.

3.66 கல்வியில் திட்டமிடல் என்பது, நடைமுறையில் உள்ள செயல் களையும் அடைய வேண்டிய இலக்குகளையும் விளக்குவதுதான். நிர்வாகப் பொறுப்பு ஒரே இடத்தில் இருத்தல், அதிகாரமயமாக்கல் ஒழுக்கம், தரம், நடைமுறைப் படுத்தல் ஆகியவற்றை ஒழுங்காக நிறை வேற்றாமல் இருத்தல் போன்ற காரணங்களால் எல்லாம் தவறாகப் போய்விட்டன.

3.67 மின்வளம், வேளாண்மை, நீர்ப்பாசனம், தொழில் துறை, தொடர்புத்துறை மற்றும் போக்குவரத்துத்துறை ஆகிய துறைச் செலவினங்களுக்குப் போக மீதி வருவதற்கு மேலும் கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கீடு இருத்தல் வேண்டும். விரைந்து பெருகும் மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த நம் நாட்டின் உற்பத்தி வளத்தைப் பெருக்கும் புதிய வழிமுறைகள் வகுக்கத்தக்க அளவில் கல்வித் திட்டங் களின் அணுகுமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். இத்திட்டங்களின் நோக்கம் புதிய முயற்சிகள் சிறிய அளவில் எடுக்கவும், பொருளாதா ரப் பலன்கள் அனைவருக்கும் சம அளவில் கிடைக்கத் தக்க அளவில் உருவாக்கக் கூடிய ஒரு மையத்தை உண்டாக்குவதிலும் பெருங்கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய முழுமை பெற்ற மையங்களின் தோற் றம் வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமையப் பெற வேண்டும். அது மட்டுமன்றி இம்மையங்கள் பல்வேறு வேலை வாய்ப்புகளை உண்டாக் கும் கல்வித் திட்டங்களோடு தோளோடு தோள் நின்று பணியாற்று

வதன் மூலம் சமுதாயத்தின் முதுகெலும்பான பொருளாதார வளர்ச்சிப் பணி சீராக இயங்கப் பேருதவி புரிதல் வேண்டும்.

3.68 வேலை செய்பவர்களின் திறமையைப் பெருக்குதல் மூலமும் பொருள் சார்ந்த சிறப்பான பணியினால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமும், வேலை செய்பவர்களிடையே ஒருவித மாற்றத்தைக் கல்வியினால் ஏற்படுத்த முடியும். இவ்வித மாற்றம் கடந்த 10 ஆண்டுகளாக ஏற்பட்டு வருகிறது. நிதித் தட்டுப்பாட்டின் காரணமாக, குறுகிய காலத் திட்டங்கள் மட்டிலும் நிறைவேற்றப்படுகின்றன. வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் ஏற்பட்டுள்ள சவால்களின் காரணமாகவும் பெருவாரியான இயற்கைச் சூழல் காரணமாகவும் நாடு இப்பொழுது கல்வித்திட்டத்தில் புதிய முறையை நடைமுறைப்படுத்த உள்ளது.

3.69 தற்போதுள்ள இக்கட்டான நிலையிலிருந்து விலகிச் செல்ல, இம்மாறுபட்ட சூழ்நிலையில் கல்விக்கான அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். எந்த மாநிலங்கள் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளதோ அங்கெல்லாம் கல்வித்திட்டமிடும் குழுவைச் செம்மையாக இயங்க வைக்கலாம். மேலும் மத்திய அரசும் அம்மாநிலங்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அவற்றின் கல்வித்திட்டத்தின் வெளி அமைப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் இம்மாநிலங்களின் கல்வித் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயல்படுத்தும் முறைகள் ஒரேமாதிரியாக உள்ளனவா என்டதை மட்டிலும் பார்க்காமல், எவ்வாறு கல்வித்திட்டங்களை முடிவெடுத்து செயல்படுத்துகின்றன என்பதையும் ஆராயவேண்டும். புதிதாக ஒரு ட. ஜன் கல்லூரிகளைக் திறப்பதைக் காட்டிலும், புதிதாகச் சில பல்கலைக் கழகங்களைத் திறப்பதைக் காட்டிலும், தேர்வுகளை உரிய காலத்தில் நடத்தத் திணறுவதைக் காட்டிலும் கல்வி சரிவர இருக்க வேண்டியுள்ளது என்பதை உணர்ந்தவுடன் கல்வித்திட்டத்தைச் சரியான முறையில் செய்ய வேண்டியுள்ளது என்பதை உணர்ந்தவுடன் கல்வித்திட்டத்தைச் சரியான முறையில் திட்டமிடும் உரிமையை தேசியமற்றும் மாநிலக் கல்வி நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டும்.

3.70 கல்வித்துறை நிதி பற்றி இந்த அத்தியாயத்தில் அநேக தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் சரியான நிதி வசதி இல்லாமல் தரத்தையோ அல்லது அளவையோ கல்வியில் நாம் எதிர்பார்க்க

முடியாது. உண்மையாகவே அளவினை அதிகரிப்பதைவிட தர முன்னேற்றத்திற்கு பங்கு மிகவும் அவசியமானது. ஒவ்வொரு நிலையிலும் தரம் உயர கட்டாயமாக தற்போது இருக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் புதியனவற்றிக்கும் நிதி தேவைப்படும்.

3.71 தொடக்கக் கல்வியை எடுத்துக்காட்டாகக் கொள்வோமானால் இங்கு கல்விக்காகச் செலவிடப்படும் தொகை, அதாவது சமூகத்திற்குப் பயன்படும் வேலை, சுற்றுலா, விளையாட்டு, பொழுதுபோக்குக் கலை, அறிவியல் கருவிகள், மற்றும் எளிய சுவரொட்டிகள் ஆகியன வாங்குவதற்கு மிகச் சொற்பமான அளவே செலவிடப்படுகிறது. இதில் பெரும்பாலான நிதி அதாவது 95% ஆசிரியர்களின் ஊதியத்திற்கே செலவிடப்படுகின்ற இந்நிலையில் தற்போதுள்ள பள்ளிகளில் பணிபுரியும், நல்ல பயிற்சி பெற்ற சிறந்த ஆசிரியர் உட்பட அனைவரும் மனப்பாடமாகக் கறகும் முறையினையே பின்பற்றுகிறார்கள்.

3.72 கல்விக்காகச் செலவிடப்படும் நிதி அதிகரித்துள்ளது என்பதில் சிறிது உண்மையே உள்ளது. 1950-51ல் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 114 கோடிதான். ஆனால் 1976-77இல் இந்நிதி ரூ. 2304.16 கோடி. இந்தத் தொகையின் மதிப்பு தரமுன்னேற்றத்தை நோக்கும்போது மிகவும் குறைவே. தனிமாணவன் செலவைக் காணும் போது, மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், பண்டங்களின் விலை உயர்வும் அதிகச் செலவையும் மீறின. 1970-71ல் தொடக்கப் பள்ளிகளின் செலவு ஒரே நிலையாக இருந்ததின் காரணமாக 1950-51 மற்றும் 1975-76இல் ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டுக்கு ரூ. 41.9 லிருந்து ரூ. 55.2க்கு அதிகரித்தது. இது ஆண்டு வளர்ச்சியில் 1.1 சதவீதமாகும். இதே நேரத்தில் கல்லூரிக் கல்விக்கு ஒரு மாணவனுக்கான ஆண்டுச் செலவு ரு. 468.9 லிருந்து ரூ. 330.9க்குக் குறைந்தது. தொழில் கல்விக்கு ரூ. 1640.4 லிருந்து ரூ. 890.1 ஆகக் குறைந்தது.

3.73 திட்டமிடாத செலவுத் தொகை கல்வி நிர்வாகச் செலவிற்கான தாகையால் இதனைக் கல்வியின் வளர்ச்சிக்கான அல்லது விரிவாக்கத்திற்கானசெலவுடன் ஒப்பிடமுடியாது. மத்திய மற்றும் மாநிலங்களின் திட்டமிட்ட செலவினஙகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தவிர மற்றவைகளில் இறங்குமுகமாகவே காணப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத்

திட்டத்தில் கல்விக்கான பங்கு 7.2 சதவீதமாக இருந்தது. 6வது ஐந்தாண்டுத்திட்டத்தில் 2.6 சதவீதமாகக் குறைந்தது.

3.74 அரசியல் சட்ட த்தில் கூறப்பட்டுள்ள 'எல்லோருக்கும் கல்வி' என்ற கோட்பாட்டைக் கருத்திற் கொண்டு இந்தப் பிற்போக்கான நிலையிலிருந்து இதனைப் பாதுகாக்க வேண்டும். உண்மையில் இது கல்வியின் பிற்போக்கான நிலையையே காட்டுகிறது. கல்விக்கான பங்கு முதல் 5 ஆண்டுத் திட்டத்தில் 50%லிருந்து 35% ஆக 2வது 5 ஆண்டுத்திட்ட த்தில் குறைந்தது. இது 3 வது 5 ஆண்டுத் திட்ட த்தில் 34% ஆக மாறி பின் 4வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 30% ஆகக் குறைந்து போய்விட்டது. 5வது 5 ஆண்டுத் திட்டத்திலிருந்துதான் சிறிது முற்போக்கான நிலை காணப்பட்டது. 32% ஆக 5வது 5 ஆண்டுத் திட்ட த்திலிருந்து 36% ஆக 6 வது 5 ஆண்டுத் திட்டத்தில் உயர்ந்தது. எனினும் முதலாம் 5 ஆண்டுத் திட்டத்தைக் காட்டிலும் இது 20% குறைவுதான். இதற்கு மாறாக முதல் 5 ஆண்டுத் திட்ட த்திலிருந்து 6வது 5 ஆண்டுத் திட்டக் காலத்தில் பல் கலைக் கழகக்கல்விக்கான செலவு 9% லிருந்து 16%க்கு உயர்ந்துள்ளது.

3.75 இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்விக்கான மொத்தச் செலவில் பொது நன்கொடை, மற்றும் அறக்கட்டளை வருமானங்கள் ஏறக்குறைய 25% இருந்தது. இது 1950-51இல் 11.6% ஆகக் குறைந்தது. 1980-81இல் மேலும் 3% ஆகக் குறைந்துவிட்டது. கல்வியின் வளர்ச்சிக்குத் தனியார் வருமானத்தைப் பெருக்க முயல்வதற்கு முன்னால் இதுபோன்ற வீழ்ச்சிக்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்து இந்தப் பிற்போக்கான நிலையை மாற்ற முற்போக்கான நிலைக்குக் கொண்டு வர முடியுமா என்பதையும் ஆராய வேண்டும்.

3.76 கல்வி தற்போதுவரை மாநிலங்களின் பொறுப்பாகவே இருந்து வருகிறது. திட்டச் செலவில் 70% கல்விக்காகவே செலவிடுகின்றனர். இது எதைக் காட்டுகிறது என்றால் நாட்டின் ஒட்டு மொத்தத் தேவையை அன்றி ஒவ்வொரு மாநிலத்தின் நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்தே உள்ளது என்பதைக் காட்டுகிறது. இதன் விளைவாக பீகார், உத்திரபிரதேசம், ஒரிசா, மத்தியப்பிரதேசம் அஸ்ஸாம், இராஜஸ்தானில் உள்ள மாணவர்கள் பஞ்சாப், கேரளா, தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள மாணவர்களைக் காட்டிலும் குறைந்த அளவே பயின்றுள்ளவர்களாவார்கள். இதை இந்த மாநிலங்களின் கல்விக்கான நிதி

ஒதுக்கீட்டிலிருந்து மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். 1963-83 இல் ஒரு மாணவனுக்கான கல்விக்கான நிதி ஒதுக்கீடு உத்தரபிரதேசத்தில் ரூ. 40.5, மத்திய பிரதேசத்தில் ரூ. 49.4, பீகாரில் ரூ. 51.2. இதே காலத்தில் இத்தொகை கேராளாவில் ரூ. 119.5. பஞ்சாபில் ரூ. 100. அப்பொழுது இந்தியாவின் சராசரி நிதி ஒதுக்கீடு ரூ. 68.2.

3.77 நாட்டின் நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும், கல்விக்கு எந்த அளவு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, எவ்வாறு கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்யலாம் என்பதையும் உணர்ந்து பல்வேறு மாநிலங்களின் தேவைகளையும் உணர்ந்து எந்தெந்த கல்வித் திட்டங்களுக்கு முன்னுரிமை தரவேண்டு மென்பதையும் உணர்ந்த மத்திய அரசு பொறுப்பேற்றுச் செயல்பட முன்வரவேண்டும். இருக்கும் நிதிநிலைக்கேற்றப்படி கல்வித்தரம் கற்போரின் அளவு, கல்விக்குறிக்கோள்கள் ஆகியவற்றை நிர்ணயம் செய்ய வேண்டும். இல்லையெனல் இதன் விளைவுகள் விபரீதமாக அமைந்துவிடும்.

அத்தியாயம்-4

# கல்விப் புத்தறிவுக்கு ஓர் அணுகுமுறை

*4.1* முன் அத்தியாயங்களில் புதிய கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டிய கட்டாயத்தேவை ஓரளவுக்கு விவாதிக்கப்பட்டது. உள்வெளி ஆக்கக்கூறுகளின் காரணமாக, காலத்தால் தேய்ந்த கருத்துக்களும் அமைப்புகளும் புதிய முயற்சிகளாலும் பயிலகங்களாலும் மாற்றப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்நிலை சமுதாயத்துக்கு வலிமை, உட்பிணைப்பு, இயக்கம் ஆகியவற்றை அளிப்பதோடு உலகை ஆட்கொண்டுள்ள தொழில் நுட்பப் புரட்சியில் பங்கேற்கும் வண்ணம் மனித ஆற்றலை ஆயத்தம் செய்கிறது. மேலும் இவ்வாறான ஆயத்தத்திற்கு உற்பத்தி, தகவல்தொடர்பு மற்றும் ஒழுங்கமைவு ஆகியவற்றில் புதிய முறைகளைத் தேவையாக்குகிறது.

*4.2* பல்வேறு துறைகளும் பல்பெருக்கமானமுகமைகளும் பல்வகை நிறுவன ஏற்பாடுகளில் பங்கேற்கும் மிகமிகச் சிக்கலான வடிவமைப்புடையது கல்வி அமைப்பு. எதிர்காலத் தேவைக்கேற்ப கல்வி இயங்குமுறை உருவாக்கப்படுகிறது. இப்பொழுது எடுக்கும் முடிவுகள் எப்படி எதிர்காலத்தை உருவாக்குமோ அதுபோல 1968இல் இயற்றிய கல்விக் கொள்கை ஒரு முழுத்தலைமுறையை உருவாக்கியுள்ளது. ஆகவே கல்விக்கொள்கை உருவாக, செய்முறையில் நோக்கங்கள், கருவிகள் மற்றும் நடைமுறைப்படுத்தும் செய்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் கல்வியோடு தொடர்புடையவர், கல்வியில் ஆர்வமுள்ளோர் ஈடுபடுதல் அவசியம். கல்விமுறை அமைவை மாற்றியமைக்குமாறு, திறந்த மனப்பான்மையோடு பல்வகை நோக்குகளையும், பிரச்சினைகளையும், விவாதித்து தேசிய அளவில் ஒரு கருத்து ஒற்றுமையைச் சிறப்பாக உருவாக்கலாம். கல்விக் கொள்கைகள் சமுதாயத்தில் நீண்ட நாள் விளைவுகளை ஏற்படுத்துமாதலால், புதுக்கருத்துக்களும், துணிவார்ந்த முயற்சிகளும் கருத்துத்தெளிவு கொண்டதாகவும், உள்முரணற்றதாகவும், செலவு—பயனுடைமை, மீண்டும் செய்தன்மை, நடைமுறைப் படுத்தும் தன்மை உடையதாகவும் அமைதல் வேண்டும்.

4.3 புதிய கல்விக்கொள்கையை உருவாக்குதல் போன்ற தலையாய முயற்சியில் எந்த ஒரு தனி அமைப்போ அல்லது குழுவோ எல்லாச் சிக்கல் களையும் காண்பதோ அல்லது அவற்றிற்குத் தீர்வுகளைக் காண்பதோ இயலாது. இவ்வாய்வுரையில் அளிக்கப்பட்டுள்ள கருத்துக்களும், முடிவுகளும் தேசிய விவாதத்திற்கு அடிப்படையாகத் தரப்படுகின்றன. மேலும் விவாதத்தில் கலந்து கொள்வோரால் நல்கப்படும் பல புது முடிவுகளும் கருத்துக்களும் இன்று கல்வித்துறையில் நடைமுறையிலுள்ள குறைகளை வெளிப்படுத்தும்.

4.4 கொள்கை உருவாக்கச் செயல் கல்விக் குறிக்கோள்களை வகுப்ப துடன் தொடங்க வேண்டும். அவ்வாறு செய்தபின் நிகழ்கால நிலைக் குச் செலுத்தும் பழைய அனுபவங்களைத் திறனாய்ந்து மதிப்பிடவேண் டும். நடைமுறைக்கேற்ற முடிவுகளை உருவாக்குவதில் சூழ்நிலை நிர்ணயிக்கும், உதவுகின்ற மற்றும் கட்டுப்படுத்தும் காரணிகளையும் மதிப்பிட வேண்டும்.

4.5 முன் அத்தியாயங்களில், இக்காலக் கல்வி நிலையின் அளவு, தன்மை ஆகியவற்றின் முன்னேற்றமும் நேர்மையும் பற்றி விளக்குவதற்கு முயலப்பட்டுள்ளது. இப்பொழுது, கல்வியின் குறிக்கோள்களும், இக் குறிக்கோள்களை அடைவதற்குரிய வாய்ப்புகள் மற்றும் இடையூறு களைப் பற்றியும் குறிப்பிடலாம்.

## கல்வித் திட்டத்திற்குக் குறிக்கோள் புத்துணர்வு

4.6 அரசியலமைப்புச் சட்டமும், காலங்காலமாகச் சிந்தனையாளர் களும், திட்ட மிடுவோரும் கொள்கை உருவாக்குவோரும், கல்வியிய லாரும் சுட்டிக்காட்டும் அடிப்படை வழக்கெழு வினா ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று அணுகுமுறைகளால் தீர்க்கப்படவேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், கல்விக் குறிக்கோள் தொகுப்புரை யாகத் தெளிவாக்கி வலியுறுத்துவதும் அதுவேயாகும்.

4.7 முதன்மையாக, மொத்த நிலையில் கல்வி அமைவின் பங்கை விளக்குவது இன்றியமையாதது. ஏனெனில் கல்வி தனக்கேயுரிய நிறு வனப் பண்புடையது. இது அதன் தலையாய செயற்பாடாகிய மாணவர்களுக்குக் கல்வியைப் பரப்புதலையும் கடந்தது. மனித மூளை யால் அடைவதற்குரிய அனைத்துத் துறைப் புத்தறிவினையும் கல்வித்

திட்டம் உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதனுடன் கல்வியானது குறிக்கோள்கள், முறைகள், வழிகாட்டுதல்களை உருவாக்கி, அறிவைப் பயன்படுத்தி சமுதாயம் நன்மையடையச் செய்தல் வேண்டும். முன்னேற்றத்திற்குரிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அறிவு, திறன்களையும் வழங்கத் தக்கதாயிருக்க வேண்டுமென எதிர் பார்க்கப் படுகிறது. மாணவர்களைச் சமூகச் சூழல், பௌதீகச்சூழல் ஆகியவற்றின் தொலைநோக்கைப் புரிந்து கொள்ளும் திறனுடையவர்களாக வளர்க்க வேண்டும். ஆகவே ஆராய்ச்சியும் வளர்ச்சியும், விரிவாக்கமும், கல்வியியல் செயல்முறையின் இன்றியமையாத பகுதிகளாகுமென ஏற்கப் பட்டுள்ளது.

4.8 இரண்டாவதாக, குடிமகனின் சமூகப்பொருளாதார நலம், திறமை, ஆக்கத்திறன் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டாக வேண்டும். அதில் கீழ்க்கண்டவை அடங்கும்.

1. உடல், அறிவு மற்றும் மனப்பாங்கு சார்ந்த ஆளுமை வளர்ச்சி.

2. அறிவியல், மக்களாட்சி தத்துவம், ஒழுக்கம் மற்றும் அற நெறிக் கருத்துக்களை மனதில் பதிய வைத்தல்.

3. புதியவைகளைப் படைக்கும் மற்றும் புதிய தெரிந்திராத சூழ்நிலையைச் சந்திக்கும் தன்னம்பிக்கையை வளர்த்தல்.

4. உலகம், சமூகம், தொழில் நுட்பம், பொருளாதாரம் பண்பாடு— இவைகளது தற்போதைய சூழ்நிலை பற்றித் தெரிந்து கொள்ள உதவுதல்.

5. உழைப்பின் மதிப்பு, உழைப்பே உயர்வுதரும் போன்ற நல்ல எண்ணங்களை வளர்த்தல்.

6. மதச்சார்பின்மை மற்றும் சமூக நீதித் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டிருத்தல்.

7. நாட்டின் ஒருமைப்பாடு கௌரவம் மற்றும் வளர்ச்சி இவைகளை மேலோங்கச் செய்யத் தங்களை அர்ப்பணம் செய்தல்.

8. சர்வதேச மனப்பாங்கினை வளர்த்தல்,

**4.9** மேலே குறிப்பிட்ட ஒரு குடிகமனின் சுயவளர்ச்சிக்கு உதவுவதோடு கூட கல்வியானது பல்வேறு பாடங்களில் அதிகமான கருத்துக்கள் மற்றும் உண்மைகளைப் பற்றிய அறிவினைப்புகட்டும் பொறுப்பை ஏற்கவேண்டியிருக்கிறது. அடுத்து மொழிகள் மற்றும் கருத்துப் பரிமாற்றத் திறன்களையும் வளர்க்க வேண்டியிருக்கிறது. மற்றும் நமது கல்வியானது உபயோகமுள்ள பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் நாட்டத்தை உண்டாக்க வேண்டும்.

**4.10** அதோடு பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது கல்வியானது ஒரு குறிப்பிட்ட திசை நோக்கிச் செல்லும் வளர்ச்சிக்கு வித்திடக்கூடிய வேலை வாய்ப்பினைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் மாணவர்களிடத்தில் உருவாக்கிட வேண்டும்.

**4.11** தனி மனிதனை சமூகத்தோடு ஒன்றுபடுத்தி வாழச்செய்யும் மிகமுக்கிய பணியைக் கல்வியானது ஆற்றிட வேண்டும். நல வாழ்வுக்கான நல்ல பழக்கங்களை மனத்தில் பதிய வைத்தல், சிந்தனையாற்றலைப் பயன்படுத்துதல், காலத்தை நன்கு திட்டமிட்டு பணியாற்றுதல், மற்றும் உடல், மனம், உணர்வு, ஆற்றலைப் போற்றிப் பாதுகாத்தல் என்பனவும் இதில் அடங்கும்.

**4.12** இத்துணைக் கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, சமமான வாய்ப்புகளை மற்றும் மக்களுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகள் களைவதற்குமான மிகப் பயனுள்ள வழியாக கல்வி விளங்குகிறது. ஒரு மக்களாட்சி சமூகத்தில் கல்வியானது குடிமக்களது அடிப்படை உரிமையாகக் கருதப்படுகிறது. ஆக இறுதியாக, ஆய்ந்து கூறுமிடத்து ஒரு மனிதன், அவன் எந்த ஒரு மாநிலம், ஜாதி, நிறம், பால், அல்லது பொருளாதார நிலையிலிருந்தாலும், அவன் அல்லது அவளது முழுத் திறமைகளுக்கும் வளர்ச்சிக்கும் வழிகோலும் வகையில் நமது பள்ளியில் கல்வியை விரிவாக்கவும், தரத்தை உயர்த்தவும் வேண்டும்.

**4.13** இதுவரை கல்வியின் குறிக்கோள்கள் வரிசைப்படுத்தப்பட்டன. இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதுவரை குறிப்பிடப்பட்ட கல்வியின் குறிக்கோள்கள் கல்வியில் எல்லா நிலைகளுக்கும் அப்படியே பொருந்தும் என்பது பொருளல்ல.

முதியோர் கல்வியானது பள்ளி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியினின்றுமாறுபட்ட குறிக்கோள்களைக் கொண்டிருக்கும். நல்லறிவு, மற்றும் திறன்களைப் பெறுவதற்கான தேவையும், அளவும் பல்வேறு வயது மாறுபாட்டைச் சேர்ந்த ஆரம்ப, இடைநிலை, தொழில் மற்றும் உயர் கல்வித் திட்டங்களில் வெகுவாக மாறுபடுகிறது. மேலும், கற்றல் என்ற செயல் படிப்படியாக ஒன்றின் மேல் மற்றொன்று என்ற அடிப்படையில்தான் அமைந்தது. ஆகவே கற்றலில் வேறுபட்ட நிலையில் அமைந்த உள்ளீடுகளையும், வெளியீடுகளையும் எதிர்நோக்க வேண்டியதிருக்கிறது. இந்த இடத்தில் இன்னொரு கருத்து நமது கவனத்தை ஈர்க்கிறது. அதாவது, அநேக மாணவர்கள் ஒரு குறிப்பிட்டநிலைக்குப் பிறகு தங்களது முறையான கல்வியைத் தொடருவது கிடையாது. இதன் காரணத்தால், துல்லியமான குறிச்கோள்களும், திறன்களும் கல்வியின் ஒவ்வொரு நிலைக்கும நிர்ணயிக்கப்பட வேண்டும். இவைகளைச் செய்து முடிக்க ஒருங்கிணைந்த, ஒரு நோக்குடைய முறைசார்ந்த மற்றும் முறைசாராக் கல்வி கற்றல்கட்டுகளை உருவாக்கவேண்டும்.

**கல்விக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு**

4.14 கல்வியின் நோக்கங்களை நிறைவேற்ற, மற்ற துறைகளின் துணை தேவை என்று அறியலாம். அதுபோல் ஏனையத் துறைகளின் வளர்ச்சிக்கும் கல்வியின் துணை தேவை. ஆகவே, கல்வித் திட்டங்களையும், கொள்கைகளையும் இறுதியாக உருவாக்குவதில், அத்திட்டத்தினால் பயனடைந்த மக்களை வேலையில் அமர்த்துபவர்களையும் மற்றும் கல்வியினால் வடிவு தரப்பட்டு, ஆற்றல், மனப்பான்மை, நடத்தைக் கோலத்தால் வெற்றியை நிர்ணயிக்கும் திட்டங்களைத் தொடங்கியவர்களையும் கலந்தாலோசிக்க வேண்டும்.

4.15 கற்றவர்கள் கூட, வாழ்வில் நேர்மைக்கும் நீதிக்கும் மதிப்புக் கொடுத்து நடக்காவிட்டால், நாட்டில் சட்டதிட்டங்கள் நிலைத்து நிற்க முடியாது. விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும், மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களை மதிக்கும் தன்மையும், அவர்கள் கோணத்தில் பார்க்கும் பக்குவமும் பெறாவிட்டால், நம் சுதந்திர நல் வாழ்வின் தரம் மிகவும் குறைந்துவிடும். புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடவும், தன்னம்பிக்கையும் எதையும் ஏற்றுக்கொள்ளும் துணிச்சலும், நம் இளைஞர்களிடம் வளர்க்காவிட்டால் நாடு மட்டும் எவ்வாறு வளரும்?

சூழல் பாதுகாப்பு, சக்தி சேமிப்பு, மக்கள் தொகைக் கட்டுப்பாடு போன்ற மாபெரும் திட்டங்களை, மக்கள் ஏற்றுக்கொண்டு முழுமூச்சுடன் பங்கு கொண்டால் ஒழிய, இதுபோன்று முக்கிய திட்டங்களை எவ்வாறு வழி நடத்த முடியும்? சிறு பிராயத்திலேயே பிள்ளைகளுக்கு இதுபோன்ற திட்டங்களுக்கும் தங்கள் நல்வாழ்விற்கும் உள்ள தொடர்பினை உணர்த்தினால்தான் இம்மாபெரும் திட்டங்களில் வெற்றி காணலாம்.

**கல்வித் திட்டங்களை மாற்றி அமைப்பதில் சில வழிகள்**

4.16 புதிய கொள்கை மூலமாக கல்வித் திட்டங்களை மாற்றி அமைக்க சில முக்கிய வழிமுறைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது ஊக்கு விக்கும் வழிகள். கடந்த சில ஆண்டுகளில் ஏற்கனவே, நமது கல்வித் திட்டத்தில் சில முக்கிய மாறுதல்களை ஏற்படுத்தியும்கூட, நம்மில் பெரும்பான்மையோர் இப்பொழுது உள்ள கல்வித் திட்டத்தில், இன்றும் பெரிய மாற்றங்கள் செய்யவேண்டும் என்ற நோக்குடையவராக இருக் கிறார்கள். கல்வியின் தரக்குறைவு பற்றியும், தேவையற்ற பொருத்த மற்ற சில அம்சங்களைப் பற்றியும் அங்கலாய்ப்பவர்கள் பலர் உள்ளனர். தற்பொழுது உள்ள முறையைச் சிறிய மாறுதல்கள் கொண்டு சரி செய்யவும் இயலாது. கல்வியின் பாடப் பொருள்களிலும், அவற்றைப் போதிக்கும் முறைகளிலும், கற்கும் முறைகளிலும், மதிப்பீடு முறைகளி லும், மேலாண்மை முறைகளிலும் சில அடிப்படை மாறுதல்களும் முன்னுரிமைகளும் தேவை.

4.17 சுதந்திரம் அடைந்த பிறகு, நம் வருவாயில், பெருந்தொகை கல்விக்காகச் செலவிட்டுள்ளோம். ஆகவே, கல்விக் கூடங்கள் திறம்படப் பணிபுரிய வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் தவறில்லை. ஆசிரியர் களுக்கு சமூகத்தில் ஒரு பெரும் பொறுப்பு உண்டு. அவர்கள் காட்டும் பாதையில் மாணவர்கள் வழி நடப்பார்கள். பிஞ்சு உள்ளங்களை உரு வாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ப தற்கு மறுப்பு ஏதும் இருக்க முடியாது. ஆசிரியர்கள் இந்தப் பொறுப்பை உணர்ந்தால்தான், அவர்கள் ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்து நல்ல நெறிகளை மாணவர்களிடையே வளர்த்து சிறந்த குடிமக்களை உருவாக் கலாம்.

4.18 சமூக, கலாச்சார, பொருளாதார மாற்றத்திற்கிணங்க கல்வித் திட்டத்தை உருவாக்குதல் முக்கியமானது. ஒற்றுமை, விட்டுக்

கொடுக்கும் மனப்பாங்கு, ஏழைகளுக்கு உதவுவது, நலிந்தோருக்கு நல் வாழ்வு தருவது போன்ற குணங்களை வளர்க்க வேண்டும். இதுபோன்ற நன்னெறிகளுக்கு அக்கறையே இல்லாமல் போகும் ஒரு தன்மையை எல்லோரும் உணர்வார்கள். இந்நன்னெறிகளை வளர்க்க கல்வியறிவு தான் சிறந்தது என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆகவே, கல்வியறிவை வளர்க்க, நாடு, தன் வருவாயில் பெரும்பங்கு ஒதுக்கீடு செய்யும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

4.19 கடந்த சில ஆண்டுகளின் சாதனைகளின் அடிப்படையில் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்படுகிறது. இந்தியாவில் எண்ணற்ற பள்ளிகள் உள்ளன. தோராயமாக 95% மக்கள் தொகைக்கு, ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு ஆரம்பப் பள்ளியும், சுமார் 80% மக்களுக்கு மூன்று கிலோ மீட்டர் தொலைவில் ஒரு நடுநிலைப் பள்ளியும் உள்ளது. புதிய கல்விக் கொள்கையை பின்பற்றத் தேவையான ஆசிரியர்களும் மற்றவர்களும் நம்மிடையே உள்ளனர். நம் கல்வியாளர்கள், பலர் உதவியுடன் சில புதிய வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். இம் முறைகளை ஆராய்ந்து, அவற்றுள் எவற்றைப்பயன்படுத்தினால் வெற்றி கிடைக்கும் என்று முடிவு செய்யலாம்.

4.20 விண்வெளியில் செயற்கைக்கோளைக் கொண்டிருக்கும் உலகி லுள்ள ஒரு சில நாடுகளில், இந்தியாவும் ஒன்று. ஆகவே புதிய கல்வித் திட்டங்களைத் தொலைக்காட்சி மூலமாகவும், வானொலி மூலமாகவும் பரப்புவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் நம்மிடம் ஏராளமாக உள் ளன. புதிய கல்வித் தொலைக்காட்சி மையங்களை ஏற்படுத்தியுள் ளோம். அவற்றுள் சில செயல்படவும் ஆரம்பித்து விட்டன. பெரும் பான்மையான மக்களுக்கு புதிய கல்வித் திட்டங்களைப் பற்றிய அறிவு ஏற்படுத்த, செயற்கைக்கோள் தொலைக்காட்சியை நாம் பெற்றிருப்பது, ஒரு அரிய வாய்ப்பாகும். இந்தத் தொலைக்காட்சி சாதனை, பள்ளிக் கல்விக்கும், பள்ளி சாரா கல்விக்கும் தொலை தூரக் கல்விக்கும் உறு துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

4.21 புதிய தொழில்நுட்பங்களின் அடிப்படையில் திருமதி இந்திரா காந்தியின் பெயரால், ஒரு தேசிய பல்கலைக்கழகம் ஏற்படுத்த, சில நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தப் பல்கலைக் கழகம், கல்வியின் தரத்தை உயர்த்துவதுடன், புதிய கல்வி நுட்பங்களு

டன் கூடிய, தகுந்த உபயோகமுள்ள கல்வியைக் கொடுக்கும். பொருளா தாரப் பற்றாக்குறையினாலோ, வேறு காரணங்களினாலோ, உயர் கல்வி தொடர்ந்து பெற முடியாதவர்களுக்கு இந்தப் பயனுள்ள கல்வி ஒரு வரப்பிரசாதமாகும். கம்ப்யூட்டர் மூலம் கல்வி புகட்டும் திட்டம் (CLASS) மற்றுமொரு புதிய ஏற்பாடு. இத்திடடத்தின்படி, 1984-86ஆம் ஆண்டிற்குள், 2000 கம்ப்யூட்டர்களைக் குறிப்பிட்ட சில பள்ளிகளுக்கு வினியோகித்து, அவற்றின்மூலம் இப்பள்ளிகளில் படிக்கும் சிறுவர்களுக்கு சில திறன்களை வளர்க்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் கிடைக்கும் ஆர்வத்தின் அடிப்படையில், அடுத்த சில ஆண்டுகளில் இது விரிவாக்கப்படும்.

4.22 கடந்த சில ஆண்டுகளின் அனுபவம், புதியக் கல்வி கொள்கைக்கு உறுதுணையாக அமையலாம். கல்வித் திட்டத்தைச் சீர்படுத்துவது என் றால் முற்றிலும் மாறுபட்ட புதிய ஒரு அமைப்பு என்று பொருள் ஆகாது. ஏற்கனவே உள்ள, ஆசிரியர்களுக்கான இரண்டு தேசிய கல்வி ஆணையங்க ளின் பரிந்துரைகளையும், மையப் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளைப் பரிசீலிக்கும் குழுவின் அறிவுரைகளையும். மனத்திற் கொண்டு செயல் படலாம். தொழில் கல்வி, தொழிலையும் பட்டக்கல்வியையும் வேறு படுத்தல், கல்விக்கும் மனித ஆற்றலுக்கும் உள்ள தொடர்பு ஆகிய பிரச்சினைகளை ஆராய்வதற்கும் குழுக்கள் இயங்கிவருகின்றன.

4.23 ஒவ்வொரு மாநிலத்திலும், சில மாதிரிப் பள்ளிகளை அமைக்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த முடிவு, மத்திய அரசுக்கு, கல்வி யின் பால் உள்ள ஈடுபாட்டையும் எல்லோரும் சமமாக கல்வி பெற வேண்டும் என்ற நோக்கையும் விளக்குகிறது. இந்தப் பள்ளிகளின் மூலம், கிராமத்திலுள்ள சில ஏழை ஆனால் அறிவுகூர்ந்த பிள்ளைகளுக்கு நல்ல தரமுள்ள கல்வி பெற வாய்ப்பு கிட்டும். கேந்திர வித்தியாலய சங்கதத் தின் கீழ் நடந்துவரும் ஒரு பிரம்மாண்டமான பள்ளிகளின் தொகுதியின் வெற்றியிலிருந்து இத்திட்டம் ஓரளவுக்கு வலிமை பெற்றிருக்கிறது.

**கொள்கை அமைப்பதில் இடையூறுகள்**

4.24 எந்த ஒரு கொள்கையைச் செயல்படுத்தும் பொழுதும், புதிய கொள்கைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அதனைச் செயல்படுத்தும் முறைக்கு கொடுக்கப்படுவதில்லை என்று ஒரு குறை பொதுவாக உள்ளது. இவ்விதமாகக் குறை கூறுவது ஆதாரமற்றது. ஒரு புதிய கொள்கை தோல்வி

அடைந்தது என்றால், அத்தோல்விக்குக் காரணம், அதனைச் செயல்படுத்தும் முறைகளில் உள்ள சிக்கல்களை முன்கூட்டியே அனுமானிக்காமல் இருப்பதே ஆகும். மேலும், புதிய கொள்கையை ஏற்படுத்தத் தேவையான சாத்தியக் கூறுகள் ஒவ்வொன்றையும், ஒவ்வொரு அம்சமாக, ஆலோசித்து, அதற்குத் தகுந்தாற்போல் செயல்படவேண்டும். எனவே, புதிய கல்விக் கொள்கை, வெறும் எழுத்தளவில் இல்லாமல், நடைமுறையில் இருக்க வேண்டுமென்பதால், கீழ்க்கண்ட சில இடையூறுகளை ஆராய்வோம்.

**உள்ளடங்கிய இடையூறுகள்**

4.25 தற்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றியமைத்தால் இதன் மூலம் சிறப்பான, நியாயமற்ற சில சலுகைகளை அனுபவித்து வரும் ஒரு சிலர் பாதிக்கப்படுவார்கள். ஆனால் இதன்மூலம் அதிகத் திறன் வளர்ப்பும், எல்லோருக்கும் சமமான கல்வியும் போதிக்கலாம். தற்சமயம் உள்ள தேர்வு முறைகளை மாற்றியமைத்தால், ஒரு சிலர் குறை கூறுவார்கள். தனியாகக் கல்வி புகட்டுவதும், பொருளீட்டுவதற்கே பயிற்றுவிப்பதும் தேவையற்றதாகலாம். மேலும் கேள்வித்தாள் இரகசியம் வெளியாவதால், வினாத்தாள்களும் அதற்குரிய, விடைத்தாள்களும் தயாரித்துப் பயனடைபவர்களும், ஒட்டுமொத்தமாகத் தேர்வில் பார்த்து எழுதித் தேர்வு பெறுகிறவர்களும் இன்னும் இதுபோன்று சில குறுக்கு வழிகளை பின்பற்றுவோரும் வெறுப்பார்கள். மாறாக இம்முறையில் அதிகமாக விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும்; மாணவர்களுக்கு வகுப்பறை வேலைகளும் அதிகம் இருக்கும்; ஆசிரியரும், அதிகமாகத் தயாரித்து புதியன புனைந்து கற்பிக்க வேண்டியிருக்கும்.

4.26 பாடப்புத்தகத்திலுள்ள பொருளை, வரிவிடாது படித்து ஒப்பிக்கும் பழக்கம் மாறி, புதியன புனைந்து சூழ்நிலைக்கு ஏற்ற கல்வியை போதிக்க தற்பொழுதுள்ள ஆசிரியர்களைத் தயார் படுத்த வேண்டும். அவர்கள் ஆசிரியர் பயிற்சி மூலமாகவோ, அல்லது அவர்களது அனுபவமூலமாகவோ, இந்தப் புதிய கலைத்திட்டத்திற்கேற்பத் தங்களைச் சரிசெய்து கொள்ள அவர்கள் ஆயத்தப்படுத்தப்படவில்லை. ஆகவே அவர்களை, இதற்குத் தகுந்தாற்போல் மாற்றுவது கடினமானது. கல்வியின் பயனையோ, அல்லது உயர்வையோ அறியமுடியாத படிப்பறிவற்ற இந்திய சமுதாயத்தில், ஆசிரியரின் தரம் உயருவதற்கு சமூகத்தேவையெழ

வில்லை. மேலும், ஆசிரியர்களின் மேற்பார்வை, மேலாண்மை மற்றும் மதிப்பீடு மிகவும் விரிந்து பரந்து இருப்பதால், ஆசிரியர்கள் தங்கள் பணிக்குச் செய்ய வேண்டிய பொறுப்பை உணராதவர்களாக உள்ளனர். மாறாக, ஆசிரியர்கள் வேலைகளை மேற்பார்வை செய்யவும், மதிப்பீடு செய்யவும், அவாகள் வேலை செய்யும் சமூகத்திற்கு வாய்ப்பு இருந்தால், அவர்கள் நிச்சயமாகத் திறம்பட வேலை செய்வார்கள். இதன்மூலம், அவர்களைப் பள்ளிகுகு ஒழுங்காக வரவழைக்கவும், கடமையாற்றவும் செய் யலாம். தற்பொழுது, ஆசிரியர்கள் நகரத்திலிருந்து கிராமத்திற்குத் தினமும் விரும்பும்போது வந்து போய்க் கொண்டிருக்கும் நிலைக்குப் பதிலாக பள்ளிக்குப் பக்கத்திலேயே வசிக்கும்படி செய்யலாம்.

4.27 கல்வியை, அரசியலிலிருந்து பிரித்து செயல்படுத்துவது என்பது ஒரு பொதுவான கருத்து. இது நடைமுறைக்கு வந்தால், பெரும்பான்மையான கட்சிகள், தங்களுடைய ஊர்வலங்களுக்கோ போராட்டங்களுக்கோ யாருடைய துணையை நாடுவது என்று தெரியாமல் தத்தளிப்பார்கள். அரசியலின் அடிப்படையில் இதுகாறும் பதவி உயர்வு பெற்றுவந்த ஆசிரியர்களும் மற்றப் பணியாளர்களும், தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை செய்யத் தெரியாமல் தவிப்பார்கள். தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுத்தாலும், ஆராய்ச்சியாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் ஐயப்படத்தக்க சான்றுகளை உடையவர்களின் தொழிலைக் கட்டாயம் பாதிக்கும்.

4.28 வேலைகளுக்குப் பட்டப்படிப்பு தேவையில்லை என்று முடிவு செய்தால் பட்டப்படிப்பு பயிற்றுவிக்கும் நிறுவனங்களிட.மிருந்து பலத்த எதிர்ப்பு தோன்றலாம். ஏனென்றால் அங்குவரும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும். தேசீய அளவில் வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெற, அதற்காக ஏற்படும் பயிற்சி நிறுவனங்களுக்கு அந்த மாணவர்கள் சென்று விடுவார்கள்.

4.29 பள்ளி நிர்வாகம் பரவலாக்கப்பட்டால், கல்வித்துறை நிர்வாகிகள், இன்று அனுபவித்து வரும் பெருமையையும் சலுகைகளையும் இழக்க நேரிடும். ஏனெனில் அந்தச் சலுகையும் பெயரும் அவர்கள் காட்டும் வழிவகைகளினாலும் அவர்களது உதவியின் தரத்தினாலும் பெறப்பட்டவை அல்ல. ஆனால் நியமனம் செய்தல், பதவி உயர்வு அளித்தல். இடமாற்றம் செய்தல், பொருட்கள், உபகரணங்கள் வாங்குதல், ஆகிய

வற்றில் அவர்களுக்கு இருக்கும் அதிகாரத்தின் காரணமாகத்தான் அவர்களுக்குப் பெயரும் புகழும் இருக்கிறது.

4.30 தொழில் கல்வி எதிர்பார்த்த அளவு பிரபலமடையவில்லை என்றால், அதற்கு நம்மிடையே திறன் அடிப்படைக் கல்வியின் மீதுள்ள வெறுப்பே ஓரளவிற்குக் காரணம். குழந்தைகளுக்கு ஒரு தொழிலில் என்னதான் நாட்டம் இருந்தாலும், அவர்களைத் தொழில் கல்வியின் சேரும்படி கட்டாயப்படுத்தும்போது, குறிப்பாக, அவர்களது பெற்றோர் அதை எதிர்க்கத்தான் செய்கிறார்கள். மேலும், வேலைத் தேவைகளைச் சரிவர திட்டமிடாத காரணத்தால் வேலை வாய்ப்புகளையும், தொழ்ல் கல்வியையும் இணைத்து செயல்பட முடியவில்லை. இத்துடன் தொழில்துறைப் பள்ளிகளைச் சரிவர இயக்கவும் அதற்கான ஆசிரியர்களை உருவாக்கவும், அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், மத்திய, மாநில அரசுகள் தவறியதும், இந்தக் குறைபாடுகளை மேலும் அதிகமாக்கிக் காட்டுகிறது. இறுதியாக, தொழில் துறையில் மேலும், மேலும், படித்து முன்னேறுவதற்கான வாய்ப்புகள் இல்லாததும், இந்த முறைக் கல்வியை செயல்படுத்துவதில் முட்டுக் கட்டையாக உள்ளது.

4.31 பாடத்திட்டம், போதனை ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்யும் நிறுவனங்கள் கூட கல்விக் கொள்கையில் பெரிய மாறுதல்களை எதிர்க்கக்கூடும். ஏனென்றால் அவர்களுடைய, வழிமுறைகள் செயல்படும் திட்டங்கள், அவர்களது அமைப்பு, அவர்கள் வகுத்துள்ள முன்னுரிமைகள் ஆகியவற்றை அவர்கள் மாற்ற நேரிடும்.

4.32 கல்விச் செயல் முறைகளுக்கு, மிகவும் சிறந்த பல்வகைப்பட்ட உள்ளீடு மற்றும் குறிப்பிடத்தகுந்த வித்தியாசமான ஆசிரியர் பயிற்சிக்கான உள்ளிடு பொருள்கள் தேவைப்படுகின்றன என்ற முடிவுக்கு இழுத்து வரநேர்ந்தால், மாநில மற்றும் மத்திய அரசுகளின் நிர்வாக அமைவு இப்புதிய கல்விக் கொள்கையின் கருத்தினை ஏற்றுக்கொள்வதை மிகவும் கடினமாகக் கருதும். தவிர்க்க முடியாத வகையில், இது செலவினத்தை மேலும் கூட்டும். ஏனெனில் சிறந்த மனித சக்தியின் தரம் மேலும் செலவு ஏற்படுத்துவதோடு, புதிய பாடத்திட்டம், புதிய கல்வித் தொழில் நுணுக்கத் திறமை, அடுத்தடுத்த கோடைக் கால மறுபயிற்சிகள் மற்றும் குறுகிய காலப் பணிமனை மற்றும் கருத்தரங்குகள், ஆகியவை அடங்கிய தீவிர ஆசிரியர் மறுபயிற்சித் திட்டங்களையும் அவசியமாக்கும்,

## தொழில் நுணுக்கக் கட்டுப்பாடுகள்

4.33 கல்வி சம்பந்தப்பட்ட வரையில், புதிய தகவல் தொடர்பு நுணுக்கங்களின் கிடைக்கும் தன்மை, புதிய தன்முயற்சியை எள் தாக்கும் ஒரு காரணி என முன்னதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நுணுக்கங்களைச் செயல்படுத்துவது, பாடத்திட்டம் மற்றும் போதனா முறைகளுக்கான விரிவான கருத்துகளுடன் கல்வி நிறுவனங்களை ''போதிக்கும்'' நிலையங்களிலிருந்து ''கற்றுக்கொள்ளும்'' நிலையங்களாக மாற்றி விடக் கூடும். இதன் பயனாக ஏற்படக்கூடிய ஒரு மகிழ்ச்சியான எதிர் விளைவு பற்றி எச்சரிக்கை செய்வது அவசியமாகிறது. இத்தகைய நுணுக்கங்களின் செயலாற்றும் திறனை அறிந்து கொள்வதில் இணைந்துள்ள 'தயார்ப் படுத்தும் வேலை'யின் உண்மையான மதிப்பீடு குறுகிய காலத்தில், இவற்றின் பயன்கள் மிகவும் குறைவாகவே இருக்கும் என்ற முடிவிற்கே இட்டுச் செல்லும். தேவையான கருவிகளைப் பெறுவது மிகவும் சுலபமாக இருக்கும். ஆனால் தகுந்த அறிவை அளிக்கவல்ல சரியான எண்ணங்களை உண்டாக்கக்கூடிய கல்வி முறையின் மேம்பாடு, பலவகைப்பட்ட தகவல் தொடர்புச் சாதனங்களின் பலம் மற்றும் பலவீனம் பற்றிய பூரண அறிவையும், மேலும் தகவல்தொடர்பு செய்முறை பற்றிய உள்நோக்கும், அதன் உற்பத்தி பற்றிய போதுமான அனுபவமும், பள்ளிகளுக்குள்ளும் வெளியேயும் உள்ளோரின் குணநலன்களையும், மொழி வல்லமையையும் கவனிக்கவும், குறிப்பெடுத்து வைக்கவும் விரிவான களச் சோதனைகளையும் அவசியமாக்குகிறது. பல்வேறு தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலமாக அளிக்கப்படும் தொலை தூரக்கல்வியின் செய்முறை ஒரு தனிப்பட்ட கல்வி முறையாகத் தொடர்ந்து வருகிறது. இந்தக் கல்விச் செய்முறை குறிப்பிடத் தக்க பலன்களை அளிக்குமுன், பல்வேறு காலவரம்புள்ள பல்வகைப்பட்ட பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப் பட வேண்டும்.

4.34 கல்வி நுணுக்கங்களின் சிறப்பையும், குறைபாடுகளையும் ஆராயும் போது, தொலைக் காட்சியின் பங்கும் குறிப்பிடத் தகுதியுள்ளதாகும். இந்தச் சாதனம் முறை சார்ந்த கல்வியின் மேம்பாட்டிற்கு மட்டுமல்லாது முறைசாராக் கல்வி அளிப்பதற்கும், பல வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும், குறுகிய காலக்கெடுவில், புதிய தகவல் தொடர்பு விதிகளை இயக்குவதற்குத் தேவையான ஒளிபரப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய கணிசமான முதலீட்டைப் பெருத்த அளவில்

செய்யாமல், இதனைச் செயல்படுத்தலாம் என எண்ணுவது தவறாகும். தற்போதுள்ள, தகவல் தொடர்பு வழிகளைப் பொறுத்தமட்டில் தற் போதுள்ள கொள்கைகளை மாற்றி அமைக்காவிடில், காலப்போக்கில் கல்விப் பணியில் இதன் டரந்த உபயோகம் விடுபட்டுப் போகும்.

4.35 மற்றொரு கோணத்திலிருந்து பார்த்தால், தொலைக்காட்சி மற்றும் திரைப் படங்களின் பங்கும் பலனும் நமது நுண்ணிய கவனத்தை ஈர்க்கின்றன. இந்தச் சாதனங்களின் மூலமாக பரப்பப்படும் பல கருத்துக் கள் கலவி போதனைகளுக்கு எதிராக உள்ளன. பலாத்காரம், மிருகத் தன்மை, குற்றங்களை வீரத்திரச் செயல்களாகக் காட்டுதல், பணத்திற்கு பூரண முதலிடம் அளித்தல் ஆகியவை திரைப்படங்களிலும், தொலைக் காட்சியிலும் காட்டப்பட்டு வருகின்ற முறை இளம் பிள்ளைகளின் மன தில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துகின்றது என மிகப் பெரும்பாலான பெற்றோரும் ஆசிரியர்களும் புகார் செய்துள்ளனர். திரைப் படங்களை விளம்பரப் படுத்தும் பெரும் பெரும் விளம்பரங்களும் கூட மக்களுடைய மனநிலையை நிரந்தரமாகப் பாதிக்கக் காரணமாக உள்ளன. காரணத்தோடு கூடிய காரியம் இல்லாத வரையில் இந்த சக்தி மிக்க சாதனத்தின் செயல்பாடு கல்வியினால் உண்டாகக்கூடிய தன்முயற்சிக்கும் சகிப்புத் தன்மையும். நாகரிகமுமிக்க சமூகத்திற்குப் பொருத்தமான நெறிமுறைகளை மனதில் பதியச் செய்யும் எந்த முயற்சிக்கும் ஒரு தடை யாக இருக்கும்.

4.36 இறுதியாக, பொருள், தரம் மற்றும் கருத்துப் பரவலுக்கான ஏற் பாடுகள் பற்றிக் கவலைப் படாமல், முக்கியமாக வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள், நாடா பதிவுக் கருவிகள், தொலைக் காட்சியில் படம் காட்டும் வீடியோ கெசட்டுகள் முதலியவற்றின் கிடைக்கும் தன்மையினைப் பொருத்தே கல்வித் திட்டங்களின் பயன் உள்ளது. இவை எல்லாம் மிகவும் விலையுயர்ந்தவை. சொல்லப்போனால், நிர்வகிக் கவும், பழுது பார்க்கவும் நம்பகமான நிர்வாகம் தேவைப்படுகிறது. இவற்றின் வினியோகம் மற்றும், உபயோகம், பாதுகாப்பு இவற்றுக்கான போதுமான நிதிவசதி செய்யப்படாவிட்டால், இத்தகைய புதிய துணுக் கங்களின் முழு உள் திறனையும் அடைவது என்பது இயலாத காரிய மாகும்,

### பொருளாதாரத் தடைகள்

4.37 கல்வியிலுள்ள பொருளாதார நிதிக் கட்டுப்பாடுகள் பற்றிச் சிந்திக்க வேண்டுவது மிகவும் அவசியம். பொருளாதாரத் தடைகள் தோன்றக் காரணமென்ன? உற்பத்தியில் வேறுபாடுகள், கிராம-நகர்ப்புற வேறுபாடுகள், வருமானத்தில் நீண்ட இடைவெளி இவைகளே காரணம். துவக்கக் கல்வியில் சேர்க்கையும் தொடர்ந்து கற்றலும் ஏழ்மையினால் பெரிதும் பாதிக்கப்படுவதைக் காண்கின்றோம். தத்தம் குடும்பத்திற்கு ஏதோ வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதற்காக இளைஞர்கள் வேறு செயல்களிலும் ஈடுபடும் இன்றியமையாமை ஏற்படுகிறது. ஏழ்மை காரணமாக, கல்வியின் சீரிய தன்மை, நியாயம் இவற்றைப் பொருத்த வரை இப்பொருளாதார நிர்பந்தம் அதினினும் மேலான பங்கினை வகிக்கிறது. தம் குடும்பத்தைச் சார்ந்த பிறரையும் கவனித்துக்கொள்ள வேண்டுமென்ற குழந்தைகள், குடும்பத்தின் உள்ளேயும் வெளியேயும், பொருளாதாரம் காரணமாக பற்பல செயல்களில் ஈடுபட வேண்டிய நிலையிலுள்ள குழந்தைகள் அவர்களை விட வசதிகள் நிறைந்த குழந்தைகட்குச் சமமாகக் கல்விக்கு நேரம் ஒதுக்க முடியுமா? வசதிபடைத்தோர் தம் குழந்தைகளை வசதிகள் நிறைந்த பள்ளிகட்கு அனுப்பி அக்குழந்தைகளது உடல் நலத்தையும், அறிவையும், சமூகப் பண்பாட்டு நோக்கையும் வளர்க்க இயலும். ஆனால் ஏனையோர்க்கு வேறுகதி கிடையாது. உடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் ஐந்து வகுப்புகட்கு ஓராசிரியராக இருப்பாரே அந்தப் பள்ளிகளே கதி. வருமானத்தில் ஏற்றத்தாழ்வால், அநேக மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே உள்ளனர். இந்நிலையில் பள்ளிகளின் தரத்தினை உயர்த்துவதில் சமுதாயத்தின் பங்கு பற்றி எதிர்பார்ப்பதே மெய்யற்றதாகும். பள்ளிச் சேர்க்கையையும் வியர்த்தமின்மையையும் பற்றிய ஆய்வு வெளியிடுவது என்னவென்றால் கல்வி கூடங்களுக்குச் செல்லாதிருப்பதும், எழுத்தறிவின்மை, ஏழ்மை இவற்றோடு பெரிதும் தொடர்பு கொண்டது. வளர்ச்சியைக் காட்டும வரைப்படத்தில் வளைவு கோடு கிடையாக இருந்து உண்மையைக் காட்டுகிறது. பங்கு பெறும் மாணவர்களின் ஏழ்மை காரணமாக அவர்களால் பணமும் பொருட்களும் தர இயலாது என்பதையும் நாம் அறிய வேண்டும்.

4.38 ஏழ்மையை நீக்க வேண்டுமாயின் கிராமப் புறங்களிலும் ஒழுங்கமைவில்லாத தொழில் பிரிவிலும் தொழில் நுட்பம் வளர்ந்து உற்பத்தி முறைகள் மாறவேண்டும். ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பயிற்சி திறு

வனங்கள் இதற்கான அறிவை வளர்த்து முன்னேற்றத்திற்குரிய முறைகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் இன்று கூட்டமைப்புத் தொழில் துறைகளோடு தொடர்பு கொண்டமையாயினும் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஒன்றும் நிகழ்ந்துவிடவில்லை. நம் ஆராய்ச்சிகள் உற்பத்திப் பெருக்கிலும் தரம் உயர்வதிலும் விவசாயம் போன்ற கிராம வளர்ச்சித் துறைகளில் செயல்முறைகளில் திறமை வளர்வதிலும் உதவும். இவ்வகையில் ஆராய்ச்சிகளை மாற்றியமைப்பதில் உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளுகின்ற அடிப்படையில் அதிகப் பயன்களைத் தரக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கும் விருப்பமும், பொருளாதாரக் கட்டமைப்பின் இயக்கங்களும் மிகத் தீவிரமான கட்டுப்பாடாகும்.

4.39 வாழ்க்கை நவீனமடைய வேண்டுமாயின் அதற்குப் பற்பல தேவைகள் உண்டு. அவற்றுள் ஒன்றுதான் பள்ளிக் கல்விக்கும் கல்லூரிக் கல்விக்கும் சிறப்புமிகு நிறுவனங்கள் துவக்கப்பட வேண்டும் என்பது. ஆற்றல் மிகு இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு இந்த நிறுவனங்களில் திறந்த பயிற்சி தந்து உடனடியாகத் தேவைப்படும் துறைகள் பற்றிய அறிவை வளர்த்து அவர்களைத் தக்கதோர் பணியில் ஈடுபடுத்தினால் புதுப்புதுக் கருத்துக்கள் உதயமாகும். இந்தியா பிற நாடுகட்கு ஈடாகத் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

4.40 தொழில் நுட்ப முன்னேற்றங்களும் உலகப் பொருளாதார அமைப்புகளும் நமது அமைப்புக்களையும் பள்ளிகளின் வசதிகளையும் மாற்றுகின்றன. நகர்ப்புற வளர்ச்சியின் வேகம் பள்ளிகளின் மாற்றங்களை வெகுவாகப் பாதிக்கிறது.

4.41 வருங்கால வளர்ச்சி முறை பற்றிய விவரமான காட்சி இனிமேல் தான் வரையப்பட வேண்டுமாதலால், கல்வித் திட்டத்தில் நிகழும் விளைவுகள் என்னவாகும் என்பதை இப்போதே வரையறுப்பது மிகவும் கடினம். ஆகவே வருங்காலக் கல்வித் திட்டத்திற்குத் தெளிவாக முடிவு செய்ய இயலாத விளைவுகள் தற்போது ஓர் தடையாக உள்ளன. ஆகவே புதிய கொள்கை எதிர்பாராச் சவால்களைச் சமாளிக்கும் அளவுக்கு மாற்றத் தக்க வகையில் அமைக்கப்பட வேண்டியது அவசியம். வளர்ச்சியின் தேவைகளுக்கு ஒப்ப அந்தந்த நேரத்தில் கல்வியை மாற்றும் வகையில் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**சட்டம்சார் தடைகள்**

4.42 இப்பொழுது கல்வி மத்திய அரசு - மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாக இருந்தாலும், இந்த அமைப்பின் தன்மை ஆராயப்பட்டு கல்வி அமைப்பில் சட்ட பூர்வமாக இணைக்க வேண்டியுள்ளது. இந்தக் கூட்டு அமைப்பு, கல்வியின் திட்டங்களில் மற்றும் செயல்பாடுகளில் கருத்து வேறுபாடுகளை நீக்கவும், நாட்டில் ஒருமித்த கல்வி தரத்தை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களை ஒரு சீரான வழியில் வளர்க்கவும் உதவும் வகையிலும் மத்திய அரசின் பொறுப்புகளை அதிகமாக்கியுள்ளது என்பதை மறுக்க இயலாது.

4.43 கல்வியானது மத்திய - மாநில கூட்டுப் பொறுப்பில் உள்ள தென்றாலும் தேசிய அளவில் கல்வித் திட்டத்தை மைய அரசு சரிவர கண்காணிக்கவில்லை என்ற எண்ணம் நாட்டு மக்களிடையே வளர்ந்து வருகிறது. இப்பொழுது மைய அரசும், மாநில அரசும் கீழ்க்காணும் செயல்பாடுகளுக்கு எந்தெந்த வகையில் இணைந்து செயல்படலாம் என்பதை ஆராய வேண்டியுள்ளது.

1. கல்வி திட்டங்களில் வளர்ச்சியின் தரத்தை மேன்மேலும் உயர்த்த, 2. போதனை மற்றும் தேர்வின் தரங்களை உண்மையான வழி களில் நெறிப்படுத்த, 3. பள்ளிகளில் போதனைக்காகவும் மற்றும் கருவிகளுக்காகவும் குறைந்த பட்சத் தேவைகளை கொடுக்க 4. ஆராய்ச் சிகளின் வழியில் ஆசிரியர்களுக்குப் போதனா முறைகளில் மறுபயிற்சி களைத்தர, 5. நாட்டின் ஒருமைப் பாடுகளையும், சமுதாய சீர்குலைவுகளை உண்டாக்கக்கூடிய பாடப்புத்தகங்களை எழுதாம மலிருக்க மற்றும் அவைகளை உபயோகப்படுத்தாமலிருக்க, 6. ஒரு சீரான ஒப்புமையுள்ள நிலைகளை கல்வி நிலையங்களுக்கு வழங்க மற்றும் 7. கல்வித் திட்டங்களில் அரசியல் ஈடுபாடுகளை தவிர்க்க.

4.44 மொழிப் போதனைகளில் கூட மைய அரசு மும்மொழி திட்டத் தினை உண்மையாக அமுல்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மொழி யின் மூலம் எதிர்கால இந்தியாவில் இடம் பெயர்ந்து வாழும் தன்மைக்கு இடையூறு உண்டாவதைத் தவிர்க்க வேண்டும்.

4.45 கல்வி நிலையங்கள் மாநில அரசிடமிருந்தோ அல்லது மைய அரசிடமிருந்தோ அவைகளை நடத்த அனுமதியோ அல்லது ஒரு பதிவோ

பெறவேண்டுமென்பதில் இன்னும் ஐயப்பாடு இருந்து வருகிறது. தனியார் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அவைகளின் நிதி, நிர்வாகம், கல்வித்தரம் அல்லது கல்வி வழிப்படுத்தும் நிலைகளைக் கவனிக்க ஏற்பாடுகள் இல்லை. குழந்தைகளின் பாதுகாப்பு பற்றிய கட்டுப்பாடுகளைக் கூடக் கொணர முடியவில்லை. பெரும்பான்மையான பிள்ளைகள் அரசு உதவி பெறும் அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயில்கிறார்கள். நகராட்சி மற்றும் அரசுப் பள்ளிகளில் மாணவர்களைக் கவரக் கூடிய நிலையில் இல்லாத காரணத்தால் பெரும்பான்மையான பெற்றோர்கள் ஆங்கிலப் பயிற்றுமொழி பள்ளிகளை நாடிச் செல்கின்றனா. இந்நிலை இப்படியே நீடிக்க வேண்டுமா அல்லது மாற்றப்படவேண்டுமா என்று தீவிர சிந்தனைகள் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும். புதியன புனைவதை வரவேற்கவும் தரமான தனியார் நிறுவனங்களை ஏற்படுத்தவும் காரணம் இருக்கிறது.

4.46 கல்வியின் இலட்சியங்களை நிர்ணயிப்பது தற்போதுள்ள மைய மாநில சட்ட இடையூறுகளுடன் ஒருங்கிணைந்து தொடர்பு கொண்டுள்ளது என்பது தெரிகிறது. இந்நிலையில் இப்பிரச்சினையை திறந்த மனப்பான்மையுடன் உற்று நோக்குதல் அவசியம். ஒரே சீரான தேசிய மையக் கலைத்திட்டத்தை நாடுமுழுவதும் சட்ட பூர்வ நிலையில் உருவாக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். பல்வேறு மாநில மைய அரசின் கல்வி விற்பன்னர்களுக்கிடையே அண்மையில் நிகழ்ந்த தீவிரக் கலந்துரையாடல், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் தேவையைக் களையலாம்.

4.47 பல்கலைக் கழகங்களின் அமைப்பு முறைகளைப்பற்றி அவைகள் மைய அல்லது மாநில அரசின் சட்டங்களின் மூலம் நிர்மானிக்கப்பட்டிருந்தாலும், பல்கலைக் கழகங்களின் தன்மைகள், அவைகள் வளர்ச்சியின் தரங்களுக்காகப் பல முனைகளிலிருந்து கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இப்பல்கலைக் கழகங்களின் அமைப்பின் அளவு இவற்றின் அதிகாரிகளுக்கிடையே உள்ள தொடர்புகளுக்கு ஏற்றவாறு மேலாண்மை அமைவு இல்லை.

4.48 சான்றுகளை வழங்குவதில் உள்ள குழப்ப நிலையினை முன்பே குறிப்பிட்டிருந்தோம். மருத்துவம், சட்டம் மற்றும் கட்டடக்கலை போன்ற துறைகளில் பயின்றோர் தாங்கள் தொழில் நடத்துவதற்காகப்

பதிவு செய்ய விதிகளில் இடமுள்ளது. இதே நிலை பொறியியல்துறை, நிர்வாகம் அல்லது கல்வித்துறைகளில் பயின்றோர் பதிவு செய்யவேண்டும் என்பதற்குச் சட்டமில்லை.

**நிதி சம்பந்தமான தடைகள்**

4.49 கல்வித் திட்டங்களில் நிதி சம்பந்தமான தடைப்பாடுகள் இல்லாமல் இருக்க முடியாது. ஒருவர் இப்பிரச்சினையை சமநிலையிலோ அல்லது விரிவாக்கிலோ அல்லது தரத்திலோ அல்லது பல்முனை நோக்கிலோ கல்வியைப் பார்க்கும் போது, கணிசமான நிதி வளம் அளிப்பது தவிர்க்க முடியாதது. பல துறைகளிலும் ஒரு நபர் செலவு என்னும் புறவயமான ஓர் அளவின் அடிப்படையில் நிதி ஒதுக்கம் செய்யும் ஓர் அமைவினை உருவாக்கினாலொழிய, அனைவருககும் தொடக்கக் கல்வி வழங்க வேண்டும், கல்வியைத் தொழில் மயமாக்க வேண்டும், கல்லாமை ஒழிக்கப்படல் வேண்டும், பள்ளி, உயர் அல்லது தொழில் நுட்பக் கல்வியின் தர முன்னேற்றம் வேண்டும, மிகச் சிறந்த மாதிரி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் விவாதிப்பதில் பொருளில்லை.

4.50 இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதுடன் செஸ் வரிகள், இறக்குமதிச் சாமான்களின் மீது வரி, மனித சக்தியை வளர்க்கும் பெரிய திட்டங்களின மூலதனங்கள் ஏற்படுத்துதல், தனியார் துறை நிறுவனங்களின் மூலம் நிதி ஏற்படுத்துதல் போன்றவைகள் மூலம் கல்விக்காக மூலதனங்களை ஏற்படுத்த நாம் ஆராயவேண்டும். மைய-மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடுகள் எந்த விகித முறையில் இருக்க வேண்டும் என்றும், கல்வித் திட்டங்களை அமுல் படுத்துவதில் இவனும் எந்தெந்த வகைகளில் செயல்படுத்த முடியும் என்றும் ஆராய வேண்டும். பெரும்பான்மையானவர்கள் வறுமையின் காரணமாகப் பள்ளிப் படிப்பை விட்டுவிடுவதால் அவர்களைக் கல்வியின் முதலீட்டுக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது உண்மையில் நடக்கக்கூடியது அன்று. இரண்டாவதாக, தற்போது கல்வி கூட்டுப் பொறுப்பாக உள்ளதால், மைய அரசின் நிதி ஒதுக்கீடு அதிகரிக்க வேண்டியது. அப்படியில்லையெனில் பொறுப்பும் செயலாற்றலும் தொடர்பு கொண்டியங்க முடியாது. மூன்றாவதாக, பள்ளிகள் மற்றும் தொழில் நிலைகள் தவிர்த்து மற்ற நிலைகளில் கல்விக்கான செலவினங்களை மறு பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அளவு மற்றும் மானிய உதவிகளைத் தகுதி அடிப்

படையிலோ அல்லது சமுதாய நீதி முறைகளுக்கு ஏற்றவாறோ ஒழுங்கு படுத்த வேண்டும்.

## முழு அமைவின் தடைகள்

**4.51** கல்வியை ஒரு துணை அமைவாகக் கொண்ட முழுசமுதாய அமைவை ஆற்றுப்படுத்துவதில்தான் முக்கியத்தடை ஏற்படுகின்றது. மொத்தச் சூழ்நிலையின் பண்பாட்டால் நிர்ணயிக்கப்படும் கல்வி தனக்கென ஒரு தனிச் சிறப்பையும் பெற்றிருக்கிறது. இந்திய நிலையில், முடிவுகளை எடுத்தல், நிர்வாகம் நடைமுறைப்படுத்தல், மாற்றத்திற்குரிய வகையில் மேலாண்மை செய்தல் ஆகியவை தொழில் முனைப்பின்றி, அதிகாரவர்க்க முறைக்கு அதிக அழுத்தம் தரப்பட்டுள்ளது. திட்டங்களைச் செயல் படுத்துவதில் மாற்றமில்லாதன்மை, துறைகளின் கட்டமைப்புக்கோப்பு, விரிவாகத் திட்டமிடுவதில் உள்ள குறைபாடுகள், அறிவியல் கருத்துக்கள் மற்றும் புதுமையான கருத்துக்களில் ஐயம், சடங்குபோன்று விதிமுறை களைக் கடைப்பிடித்தல் ஆகியவைகளால் இக்குறைகள் மேலும் வளர் கின்றன. பல நூற்றாண்டு காலமாக தத்துவ ரீதியாக உருவாக்கப் பட்ட அறிவுப் புதுமைகள், அதிகார அமைப்பு முறையும், மாற்றம் விரும்பும் முடிவுகளை மறுக்கும் அறிவு நிலையும் தவறாகப் பயன் படுத்தப் படுகின்றன. புதுமையான கருத்துக்களின் வேகம் பல முன் நிபந்தனை களால் அல்லது விதிமுறைகளால் தடைப்படுத்தப்பட்டு அழிகின்றன.

4.52 அனேகமாக, மேற்கூறிய தீவிரமானதாகத் தோன்றும் கூற்றுக்கள் திட்டவட்டமான எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்பட வேண்டும்.

4.53 தொலைக் காட்சியில் கல்வி நிகழ்ச்சிகளை வழங்குவது விரைந்து விரிவாக்குவது சார்பாக ஒரு முடிவு எடுக்கப்பட்டது. எல்லோரும் இதை ஆதரிக்கார்கள். நம் நாட்டில் இப்படிப்பட்ட கல்விச் சாதனங்களை பராமரிப்போர் மிகவும் குறைவு என்பது தெரிந்த ஒன்றாகும். இன்றைய நிலையில் நம் நாட்டில் அதிக அளவில் உள்ள இயந்திரப் பொறியாளர் அல்லது கட்டிடப் பொறியாளர் தேர்ந்தெடுக்கப்படும் வழி முறைகளுக் கொப்ப தொலைக்காட்சி அமைப்பாளர்களை அவர்கள் தகுதி மற்றும் தேவை, சம்பள நிர்ணயம், கல்வித்தகுதிகள், ஆகியவைகளின் அடிப்ப டையில் செய்ய வேண்டியுள்ளது.

4.54 கம்ப்யூட்டர்களின் பழமையாகிவிடும் விகிதம் அதிகமாக இருந்தாலும், கம்ப்யூட்டர்களின் உபயோகத்தை விரிவுப்படுத்தல் வேண்டும் என்ற கொள்கையை அன்றாட நடைமுறைகள் தடுத்து நிறுத்துகின்றன. ஏனெனில் ஒரு கம்ப்யூட்டரை நாம் வெளிநாட்டிலிருந்து பெற பல ஆண்டுகள் ஆகின்றன.

4.55 ஒவ்வொருவரும் நவீன சாதனங்களைப் பயன்படுத்தி தொழிற்துறைகளில் முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதே நேரத்தில் பெரிய தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் எம்.பி.ஏ.க்கள் பெரும் ஊதியங்கக்கேற்ற வகையில் பல பதவிகளை உண்டாக்க இயலாது என்பதை நாம் அறிய வேண்டும். ஒரு சிறந்த நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் தன் நிர்வாகத்தில் நிதிக்கசிவை எப்படி நீக்குவது என்று வரையறுப்பார். ஆனால் தாமதத்தினால் ஏற்படக்கூடிய செலவினை பெரும் திட்டங்களில்கூட பார்ப்பதில்லை.

4.56 பழமை எண்ணங்களில் இரு கருத்துக்கள் குறிப்பிடத் தக்கவை. முதலில் உள்ளது அரசின் ஈடுபாடு இமை, நிலையங்கள், நபர்கள் தங்கள் அதிகாரங்களையும், செயல்களையும் மற்றவருக்கு ஒப்புவிக்க மறுப்பதாகும். துவக்கப் பள்ளிகளோ அல்லது இடைநிலைப் பள்ளிகளோ மாவட்ட அளவில் திட்டங்களை வகுத்துச் செயல்படுவது, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, மேற்கண்காணித்தல் மற்றும் வாய்ப்புவள மையங்கள் உருவாக்கல் போன்றவைகளாலும், சமுதாயத்தை ஈடுபடச் செய்வதாலும் தான் நல்லமுறையில் இயங்க முடியும் என்று அறியப்பட்டுள்ளது. ஒரு வேளை மாவட்ட அளவில் இவைகளைக் கவனிப்பது என்பது புது அலுவலகங்களையும், புது அலுவல் முறைகளை உண்டாக்கல் போன்றவைகள் கடினமாக இல்லை என்றாலும் பெரிய அலுவலர்களை விடுத்து மாவட்ட அளவில் அவர்களே முடிவெடுக்கும் அதிகாரமளிப்பது மிகக் கடுமையானதக இருக்கும்.

4.57 இரண்டாவதாக, பிரிவுத்தன்மை படைத்த அமைவு பெரிய பிரச்சினையை உருவாக்குகின்றது. பல கல்வி வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு திட்டங்களுடன் சேர்ந்து செயல் பட வேண்டி உள்ளதால் கல்வி தனது திட்ட அமைப்பு, நிதி நிர்வாகம், அமைப்பு முறைகள் ஆகியவைகளை இணைந்த முறையில் தயாரிக்க வேண்டும் என்று ஒப்புக்

கொள்ளப்பட்டிருக்கின்றது என்றாலும், எதிர்பார்த்த அளவிற்கு இம்முறையிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

4.58 கல்விப் பிரிவுகளிலும், துறைகளின் காழ்ப்புணர்ச்சியினால் பிரச்சனைகள் அதிகமாகின்றது. இடைநிலைகளில் மாணவர்களுக்குத் தரப்படும் கல்வி, கலை மற்றும் அறிவியல் துறைகள் பிற்கால வேலை வாய்ப்பு அமைப்புகளுக்கு ஏற்றதாக இல்லை என்று அறியப்பட்டுள்ளது என்றாலும் பல்வேறு துறைகளில் உள்ள பிணக்குகளின் காரணமாக ஒருங்கிணைந்த கல்விப் பாடத்திட்டத்தைச் செயற்படுத்த முடியவில்லை.

4.59 புதிய திருப்பத்திற்கான தன்முயற்சி, கல்வித் திட்டமிடுநர் மற்றும் நிர்வாகத்தினரிடம் மட்டுமே இருந்து, முழு அமைவு மாறாமலோ கலவைப்படாமலோ இருந்தால், புதிய கொள்கை முயற்சிகளின் வெற்றி பெறும் வாய்ப்பு இரண்டுங் கெட்டானாகிவிடும் என்பதை உணர்த்தவே கல்வித்திட்டமிடலிலுள்ள தடைகள்பற்றி விரிவாகப் பகுத்தாயப்பட்டன.

**கொள்கை உருவாக்கத்தின் தொலைநோக்கு**

4.60 இதுகாறும் கல்வியின் இலட்சியங்களும், கல்வியை முழுமையாக மாற்றியமைப்பதிலுள்ள பிரச்சனைகளையும், நாம் ஆராய்ந்தோம். இப்பொழுது புதுக் கொள்கையினை நாம் எப்படிச் செயலில் உருவாக்குவது என்பதை ஆராய வேண்டும். எதிர்கால இந்தியக் காட்சியை உருவாக்கிப் பார்ப்பதில் கல்வி பற்றிய தகவல்களின் பற்றாக்குறை மட்டுமல்லாது, சுகாதாரம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு வளர்ச்சித் திட்டங்கள், நாட்டு புதுக்கொள்கை மூலம் தொழில் துறைகளில் நவீனக் கருவிகளை ஏற்படுத்துவதனால் வேலை வாய்ப்பு பற்றிய பிரச்சனைகள், நகரங்களை மேன்மேலும் நவீனப்படுத்துவதின் மூலம் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் பெண்கள் தங்கள் பங்கைச் சமுதாய வழிமுறைகளில் பெறுதல் போன்றவைகளால் தேசிய மொத்த உற்பத்தியில் மாற்றம் பற்றிய நிலைகளில் தெளிவில்லாமலும் சிக்கலாகவும் உள்ளது. புதுக்கொள்கை திட்டமிடலுக்கு உள்ளுணர்வை அளிக்கவும் அதே நேரத்தில் பல்வேறு விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் இதன் தொடர்பான எண்ணங்களைத் தெளிவுபடுத்தவும் இங்கு ஒரு பரந்த விவரம் அளிப்பது போதுமானது.

4.61 6 முதல் 14 வயதுத்தொகுதியில் வயது வரம்புக்குட்பட்ட மக்கள் தொகை 1981ம் ஆண்டில் ஏறக்குறைய 15 கோடி எனக் கணக்கிடப்

பட்டுள்ளது. 1981ம் ஆண்டில் தொடக்கக் கல்வியில் 9.3 கோடி மாணவர்களும் இடைநிலைக் கல்வியில் 0.95 கோடி மாணவர்களும், உயர் கல்வியில் 0.31 கோடி மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். 1980ம் ஆண்டிற்குப் பின் 6-14 வயதுத் தொகுதியில் வயது வரம்புக்குட்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் வருடத்திற்கு சுமாராக 1.5 சதவீதமாகக் கட்டுப்படுத்தக்கூடும் என வைத்துக்கொண்டு பார்த்தால் 1980-91ம் ஆண்டு வாக்கில் இந்த வயதுத்தொகுதியில், மக்கள் தொகை 17.4 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்தகாலக் கல்வி மேம்பாட்டு அமைப்பு, குறிப்பாக சேர்க்கை வளர்ச்சி மற்றும் தக்க வைத்துக்கொள்ளும் விகிதம் ஆகியவை தொடர்ந்தால், முறையான தொடக்கக் கல்வித்திட்டத்தில் 11.2 கோடி மாணவர்கள் மேலும் இடைநிலைக் கல்வியில் 1.15 கோடி மாணவர்களும், உயர்கல்வியில் 0.38 கோடி மாணவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

4.62 ஆயினும் 1990-99 ஆண்டுகளில் 6-14 வயதுத் தொகுதியில் வயது வரம்புக்குட்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி மேலும் வேகம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டுக்கு 1 சதவீத வளர்ச்சி என்ற நோக்கில் பார்த்தால், வயது வரம்புக்குட்பட்ட மக்கள் தொகை கி.பி. 2000 மாவது ஆண்டில் 19.25 கோடியாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1990ம் ஆண்டுவாக்கில் எல்லோருக்கும் தொடக்கக் கல்வி என்ற கொள்கையில் வெற்றி பெறுவதாக வைத்துக்கொண்டு பார்த்தால் மொத்தம் 17.4 கோடி வயது வரம்புக்குட்பட்ட மக்கள் தொகையில், துவக்க நிலையில் 11 கோடி மாணவர்களும் நடுநிலையில் மீதமுள்ள 6.4 கோடி மாணவர்களும் இருக்க வேண்டும். இச்சாதனை தற்போதைய நிலையில் தொடக்கக் கல்வி 1.5 மடங்கும், நடுநிலைக்கல்வி 3.2 மடங்கும் இருக்கும் என உணர்த்துவது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட ஒரு விரிவு கல்விச் செலவினத்தின் மீதும் ஒரு குறிப்பிடத்தக்க செயல்விளைவினை ஏற்படுத்தும். 1980-81ம் ஆண்டு விலைவாசியின் படியும் 1977-78ம் ஆண்டு தலைவீதச் செலவை அப்படியே கொண்டு பார்த்தாலும் 1990-91 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தேவைகள் 3200 கோடி ரூபாய் என இருமடங்காக்கப்படும். 1980-81ம் ஆண்டுச் செலவினம் 1537 கோடி ரூபாய் என மதிப்பிடப் பட்டுள்ளது. ஆண்டுக்குப் பணவீக்கவிகிதம் 8 சதவீதம் என்ற அடிப்படையில், நடப்பு விலைவாசியில் வரவு செலவுத் திட்டமானது 1980-81ம்

ஆண்டு ஒதுக்கீட்டைவிட நான்கு மடங்கு அதிகமாக இருக்கும். 1981ம் ஆண்டில், தொடக்க கல்வியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 21.7 இலட்சங்கள் நடைமுறையிலுள்ள கல்வி வளர்ச்சி அமைப்பில் அவர்களுடைய எண்ணிக்கை 1990ம் ஆண்டுவாக்கில் 29 இலட்சமாக இருக்கும். ஆயினும் 1990ம் ஆண்டுவாக்கில் எல்லோருக்கும் தொடக் கக்கல்வியளித்தல் என்பதை சாதித்தாலும், தொடக்கக் கல்விக்குத் தேவை யான மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமாராக 44 இலட்சத்திற்கு அதிகரிக்கும்.

4.63 மேலும் 1990ம் ஆண்டுவாக்கில் எல்லோருக்கும் தொடக்கக் கல்வியளித்தல் என்பது, நடைமுறையிலுள்ள இடை மாறுபாட்டுக்கால விகிதத்திலும் கூட, இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியின் நிலையில் சேர்க்கை 1980-81ம் ஆண்டைப்போல சுமாராக இருமடங்கு அதிகரிக்கும் என்பதையும் உணர்த்துகிறது. ஆயினும், இடைநிலை மற்றும் உயர் கல்வியின் தலை வீதச்செலவு தொடக்கக் கல்வயின் தலைவீதச் செலவைவிட பலமடங்கு அதிகமாக இருக்கும் என்ற உண்மையை கருத்திற்கொண்டு நோக்கினால் கல்வி வரவு செலவுத் திட்டத்தின் மீதான ஒட்டுமொத்தமான செயல்விளைவு மிகப்பெரு மளவில் இருக்கும். இந்த ஊகங்கள் கல்வியின் தரத்தை உயர்த்து வதற்காகத் தவிர்க்க முடியாமல் மேற்கொள்ளவேண்டிய செலவினத் தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமலேயே ஆராயப்பட்டன என்பதை நினைவுபடுத்த வேண்டும்.

4.64 கல்வியைப் பரப்புவதிலும் தக்கவைத்துக்கொள்வதிலும் ஒரு கணிசமான முன்னேற்றம்தான் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற முயற்சியின் மையக்கருத்தாகும். இந்த முன்னேற்றம் தொடக் கக்கல்வி செலவினத்தில் கணிசமான உயர்வைக் கோருவதோடு மட்டு மல்லாமல், இடைநிலை மற்றும் உயர்கல்வியில் அதிகச் சேர்க்கையின், காரணமாக மொத்த கல்வி வரவு செலவுத்திட்டத்தின் மீது ''பெருக்கும் விளைவையும்'' உண்டாக்கும். இதுவே முன்னால் விவரிக்கப்பட்டவற்றின் விளைவாகும். எனவே கல்விக்கொள்கை ஆலோசனைகளும் அனை வருக்கும் தொடக்கக்கல்வியும் தீவிரமான நிதி முடிவுகளுக்கு ஏற்ப இருப்பது அவசியமாகிறது.

4.65 மாற்று ஏற்பாடாக, முறைசாராக்கல்வி, தொலைக்கல்வி, மற்றும் தொழிற்கல்வி போன்ற பிற கல்வி அணுகுமுறைகள், பெரும் அளவில்

செயல்முறைப்படுத்தப்படவும் பன்மடங்காக்கவும் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

4.66 மேலே குறிப்பிட்டுள்ளவைகள், மாறுதல் விரும்பாத பழமையான கருத்துக்களின் அடிப்படையின்மீது கல்வியின் பல்வேறு பணிகளின் பரிமாணத்தைக் கோடிட்டுகாட்டுகின்றன. இது முதியோர் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியின் மூலமாக மிகப் பெருத்த அளவில் மக்கள் தொகைக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளுவதின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகிறது. இதன் விளைவாக சிறு குடும்பம் என்ற சொள்கை சமூகத்தின் உள்மனதில் ஆழப்பதிந்துவிடுகிறது. இல்லையெனில் எண்ணிக்கைப் பெருக்கத்தின் காரணமாக இப்போதுள்ள பங்குபெறுதல், சாதித்தல் ஆகிய நிலைகளிலும் நிதி செயத்தக்கமை எல்லையைக் கடக்கக்கூடும் என்ற ஒரு நிலைமை எழக்கூடும்.

4.67 பகுதி 3ல் உள்ள ஆய்வு தகுதியாக உள்ள அளவிற்கு இந்த முறையில் தரமான மாற்றங்களைக் கொண்டுவராவிட்டால், கல்வியின் குறிக்கோள்களை அடையமுடியாது என்பது தெள்ளத்தெளிவு. இவை, மிகப்பெரிய அளவிற்கு நடத்தை, கருத்து, பயிற்றுவிக்கும் முறை மற்றும் அமைப்பு ஆகியவற்றில் திருத்தி அமைக்கும் முறையில் இருக்கும். ஆயினும், கலாச்சார செயல் திட்டங்கள், விளையாட்டு, விளையாட்டுப் போட்டிகள், இயற்கைக்கல்வி, சமூகத்திற்கு பயன்படும் உற்பத்தி வேலை ஆகியவற்றை அமைப்பதற்கான குறைந்த பட்சத்தேவைகளையும், நூல் நிலையங்கள், அறிவியல் பெட்டகங்கள், ஆய்வுக்கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும், விளக்க அட்டைகள், கரும்பலகைகள், கட்டடங்கள் போன்ற குறைந்தபட்ச அத்தியாவசியத்தேவைகளைப் பெற்றாலொழிய மேலே சொல்லப்பட்டவற்றில் எந்தப் பயனும் ஏற்படாது என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

### கல்விக்கான வளர்ப்பு வளத்தினைச் சேகரிக்கும் அணுகுமுறைகள்

4.68 இத்தகைய வசதிகளை அளிப்பது என்பது கூடுதல் செலவினத்தை உண்டாக்கும். குறைந்தபட்சம் பள்ளிகளுக்கும், நேர்த்தியான நிறுவனங்களுக்கும், இந்தச் செலவினத்தை மாநில மத்திய அரசுகள் ஏற்க வேண்டும். பிற கல்வி மையங்கள் மற்றவர்களோடு இணையாக மேம்படுத்தப்பட வேண்டிய வாய்ப்பிழந்த மாணவர்கள் நீங்கலாக பிற

மாணவர்கள் பயிலும் பள்ளிகள் ஆகியவற்றையும் பொறுத்தமட்டில், கட்டண அமைப்பை ஒழுங்குப்படுத்தும் சாத்தியக்கூறுகளைக் கண்டறிய வேண்டும். இது உள்வாய்ப்பு வளத்தினை கூட்டுவதோடு மட்டுமல்லாமல் கல்வியின் மதிப்பு பற்றிய உணர்வையும் மாற்றும்.

4.69 இது சம்பந்தமாக பெறப்பட்டுள்ள பிற கருத்துக்கள் வருமாறு: மேம்பாட்டுத்துறைகளை பொதுத்துறைத் திட்டங்கள் செலவு அமைப்பில் ஒரு பகுதியாக மனிதசக்தி மேம்பாட்டையும் உள்ளடக்கிய கல்விக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்; தொழிற்கல்வி நிலையங்களுக்கான உண்மையாக ஆகும் செலவில் குறைந்தபட்சம் ஒரு பங்கையாவது மேற்படி தொழிற் கல்வி நிலையங்களிலிருந்து படித்து வெளியேறிய மாணவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் நிறுவனங்களிடமிருந்து வசூலித்தல்; இறக்குமதிப் பொருள்களின் மீது வரிவிதித்தல்; தனியார் நிறுவனங்களை கல்வி மேம்பாட்டிற்கான குறிப்பாக தொழிற்கல்வி மேம்பாட்டிற்காக பணஉதவி அளிக்குமாறு உற்சாகப்படுத்துதல்; தகுதியான வரிவிலக்கு அளித்தல்; அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்துதல்; நிலத்தீர்வை மற்றும் நகராட்சி வீட்டு வரியின்மீது உபரிவரி வசூலித்தல் முதலியன.

4.70 கல்விக்கான வாய்ப்புவளப் பிரச்சினையானது மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு ஒரு பெரும் சோதனையாக அமைந்துவிட்டது. கடந்த காலத்தில், மனிதவள மேம்பாட்டில் கல்வியின் முக்கியப்பங்கினை அங்கீகரித்துள்ள போதிலும் கல்வி ஒரு அக்கறைகாட்டப்படாத துறையாகவே வந்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட ''காட்கில்'' குறிப்பின்படி திட்ட செலவினத்திற்கு அளிக்கப்படும் மத்திய உதவி மூலமாகவும், பொருளாதார ஆணையம் வழங்கும் உதவித்தொகை மூலமாகவும் பெறப்படும் நிதியிலிருந்து பெரும்பாலும் மாநிலங்களாலேயே கல்வி பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆயினும், தற்போது மேம்பாட்டு முறையில் கல்விக்கென ஒதுக்கப்பட்டப் பணியினை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றது. எனவே வாய்ப்பு வளங்களை உருவாக்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஒரு புதிய வினைமுறைத்திறனை உருவாக்க வேண்டும். கல்வியில் முதலீடு செய்வது என்பது ஒரு செலவினமாகக் கருதுவோமேயானால், அவ்வாறு செய்யாமலிருப்பது அதைவிட அதிகமான செலவினமாகும். இதற்கு ஏற்புடைய ஒரு வழிமுறை, கல்விக்கான வாய்ப்பு

வளங்கள் பிரச்சினை குறித்தும், நீண்டகால அடிப்படையில் இத்தகைய வாய்ப்பு வளங்களை ஒன்றுதிரட்ட ஒரு வினைமுறைத்திறனைக் குறித்தும் ஆராய மத்திய மாநில அரசுகளின் மேல் மட்ட இணை ஆணையம் ஒன்றை அமைப்பதுமேயாகும்.

### கல்வித் திட்டமிடுதலின் வினைமுறைத்திறன் பிரிவுகள்

4.71 கல்வித்திட்டமிடுதலில் எந்த ஒரு வினைமுறைத்திறனும் (அ) வாய்ப்பு, (ஆ) குறைந்தபட்ச நீதிக்கான வழிமுறை, (இ) சமுதாயப் பொருத்தம் பலமுனைகளில் திருப்புகை மற்றும் தரம் (ஈ) பயிற்சி முறை மற்றும் மேலாண்மை ஆகிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

### அனைவருக்கும் தொடக்கக் கல்வி

4.72 வாய்ப்பு, குறைந்தபட்ச நீதிக்கான வழிமுறை இவற்றைப் பொருத்தமட்டில் தரமிக்க தொடக்கக் கல்வியினை சாதி, பால் இன மத, பொருளாதார வேறுபாடின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்தல் என்பது அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு வாக்குறுதியாகும். ஏற்கனவே விரிவாக விவாதித்துள்ளபடி ,இந்த வாக்குறுதி, 1960 லேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்னமும் அந்தக் குறிக்கோள் அடையப்படவில்லை. ஆனால் பள்ளிச்சேர்க்கை ஒரு குறிப்பிட்ட பங்குபெறும் விகிதாசாரத்தை எப்பொழுது அடைகிறதோ அப்பொழுதே இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிடும் எனக் கல்வித் திட்டமிடுவோரில் ஒரு பகுதியினர் வாதம் செய்கின்றனர். இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ள கடினமாக உள்ளது. கல்வி என்பது ஒரு சடங்கு அல்ல. 14 வயதான ஒரு ஆண் அல்லது பெண் பெறவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட தரத்தினை அவர்கள் பெறுகின்ற நிலையை அடையும் வரை, கல்வி அளிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படிப்பைப் பாதியில் நிறுத்துவோர் விகிதம் ஏறக்குறைய 77 விழுக்காடாக இருக்கும் போது பள்ளிச்சேர்க்கை என்பது ஒப்பிட்டுப்பார்க்க உதவுகிறது என்பதைத்தவிர மற்றபடி தானாகவே பொருளிழந்து விடுகிறது.

4.73 இப்படிப்பட்ட நிலைக்கு கல்வியின்பால் உள்ள பொதுவான அலட்சியப்போக்கு, வறுமை, கல்விப்பொருளின் பொருத்தமின்மை, போதுமான பெண் ஆசிரியைகள் இல்லாமை மற்றும் பற்றாக்குறையான

நிதிவசதியளித்தல் ஆகியவையே பெரும்பாலும் காரணமாகும். மாநிலங்களுக்கிடையே மட்டுமல்லாமல் நகர்ப்புற நாட்டுப்புற மாணவர்களிடையேயும், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர், பெண்கள் ஆகியோரிடையேயும் ஒழுங்கற்ற கல்வி முன்னேற்றம் காணப்படுகிறது. இலவச பகலுணவு, இலவச பள்ளிப்புத்தகங்கள் மற்றும் சீருடை மற்றும் கல்வி ரீதியில் பின்தங்கிய மாநிலங்களில், ஓராசிரியர் பள்ளிகளில் பெண் ஆசிரியைகள் நியமிக்கவென்று அளிக்கப்பட்ட மத்திய அரசின் உதவியும்கூட குறிப்பிடத்தக்க பலன்கள் எதையும் அளிக்கவில்லை. அதன் விளைவாக வருமானத்தைப் பெருக்கும் செயல்திட்டங்களில் அல்லது பரம்பரை தொழிலில் ஈடுபட்டுள்ள பிள்ளைகள், வீட்டுவேலைகளில் ஈடுபட்டுள்ள பெண்கள் குறிப்பாக வயதான பெற்றோர்களை, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் ஆண்கள் அல்லது பெண்கள், ஆகுயோருக்கும் இடமளிக்கும் வகையில் பள்ளியின் அன்றாட நடைமுறையில் நெகிழ்தன்மை இருக்குமாறு செய்ய வேண்டுமென, சில முறைசாராக்கல்வி மையங்கள், பகுதிநேரப்பள்ளிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் போன்ற சில வழிமுறைகள் எடுத்துச்சொல்லப்பட்டன. தங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றுவிடும் நேரத்தில் அவர்களால் கிடைக்கும் வருமானத்தை இழந்துவிடும் பெற்றோருக்கு பொருளாதார நஷ்டஈடு வழங்குதல், ஆசிரியர்களின் தரத்தைச் சீர்தூக்கிப் பார்த்தல், பள்ளிகளைச் செம்மையாக நிர்வகித்தல், கட்டட மற்றும் பிற வசதிகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்காகச் சமுதாயத்தின் பெரும் பங்கேற்பு ஆகிய மேலும் சில கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. முறைசார்ந்த மற்றும் முறைசாராப் பிரிவுகளில் அதே கிராமத்தைச் சேர்ந்த பெண்களைத் தகுதி, வயது வரம்பு, பயிற்சி ஆகியவற்றைக் கருத்தில்கொள்ளாமல் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்திக்கொள்ளுவதன் மூலம் மாதர் சங்கத்தினைக் குழந்தைகள் கல்வியின்பால் ஊக்குவிப்பதையும் பள்ளியை மக்கள் பங்குபெறும் ஒரு சமுதாயக்கூடமாக உயர்த்துவதையும் மற்றுமொரு கருத்து ஆதரிக்கிறது. நாட்டுப்புறத்திலுள்ள வேலையிலிருக்கும் படித்தவர்களுக்குப் பயிற்சியளித்து, மாணவர்களுக்கு உதவிசெய்யும் வகையில் கல்வி அளிப்போராக வர உதவியளிக்க வேண்டும். இதற்குப் பதிலாக தீவிரப் பயிற்சி மூலமாக 5ம் வகுப்பு அல்லது 8ம் வகுப்புக்கு இணையான வெளித் தொடர்பான தேர்வுகளினால் சான்றளிக்கப்பட்ட கல்வி நிலைகளைப் பெறுவதற்கு அலகு அடிப்படையில் ஊதியம் வழங்கலாம் என்பதும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

## தொடக்கக்கல்விக்கான ஒரு மாற்று 'மாதிரி'

4.74 ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ''அங்கன்வாடி'' மூலமாக முன்தொடக்கக்கல்வியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைகள் பிந்திய நிலைகளில் மிகப்பெரிய அளவில் கல்வியில் பங்கு பெறுவதில் ஆர்வம் காட்டுவதாகச் சில ஆய்வுகள் காட்டுகின்றன. இந்த அனுபவத்தின் அடிப்படையிலும், பெண்கள் தங்கள் வீட்டு வேலை களைக் கவனிக்க வேண்டிய கட்டாயத்தைக் கருத்தில் கொண்டும், தொடக்கக்கல்விக்கு ஒரு முழுதும் மாறுபட்ட அணுகுமுறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

4.75 இந்திய நிலைமைகளில் புறநகர்ப்பகுதிகளில் 11 வயதிற்கு மேல் குறிப்பாக பொருளாதாரத்தின் பின் தங்கியவர்களிடையே கல்வி அளிப்பதில் எந்த ஒரு அணுகுமுறையும் சமீபத்திய எதிர்காலத்தில் போதிய முன்னேற்றம் காணும் சாத்தியக்கூறு இல்லையென வாதம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஒரு ஆக்கபூர்வமான முழுமையாகக்கற் பிக்கும் மாதிரி உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ''அங்கன்-வாடி'' உதவியுடன் முன்தொடக்கக் கல்வி மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்படும். அதன்பிறகு தொடர்ச்சியாகவும், கூட்டாகவும், அதே இடத்தில் தொடக்கக் கல்வி அளிக்கப்படும். இது ஒரு பொதுத்தேர்வின் மூலமாக மதிப்பீடு செய்யப் படும். இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் 6 முதல் 10 வகுப்புக்களுக் கான கல்வியை மேலும் தொடர நுழைவு அனுமதி அளிக்கப்படும். இந்த மாதிரியில், பெண்கள் தாங்கள் கவனித்துக்கொள்ளும் குழந்தை களுடன் பள்ளிக்கு வர ஏதுவாகும். மேற்படி குழந்தைகளின் பொறுப்பை ''அங்கன்-வாடி'' மேற்கொள்ளும்போது, பெண்கள் உயர்வகுப்புகளில் பயிலுவார்கள். மற்றும் 6 முதல் 10 வகுப்புகள் வரை தேவைக்கு ஏற்ப, திறந்தவெளி பள்ளித்திட்ட விரிவின் மூலமாக முறைசாராக்கல்வி பயிற்றுவிக்கப்படும். இந்த ''மாதிரி'' குழந்தைகள் தொழிற்கல்விப் பிரிவில் 10+ நிலைக்கு முன்னதாகவே செல்ல வேண்டும். இல்லையெனில் அவர்கள் உண்மையான ஆர்வத்துடன் தொழிற்கல்வி முறையை மேற் கொள்வது என்பது சாத்தியமல்ல என்றும் எதிர்நோக்குகிறது.

4.76 இடைநிலைக் கல்வியில் அணுகும் வாய்ப்பு நியாயம் இவற்றைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும்

பெண்கள் மிகப் பெரிய சவாலை அளிக்கின்றனர். எல்லாச் சமூகத்தினரிடையேயும் பெண்கள் தொலைதூரத்திலுள்ள பள்ளிகளுக்கு, குறிப்பாக இப்பள்ளிகளில் ஆண், பெண் இணைந்து படிக்கும் முறை இருக்குமேயானால், அனுப்புவதற்குப் பொதுவாக விருப்பமின்மை காணப்படுகிறது. ஆனாலும் வாய்ப்புவளக் கட்டுப்பாடுகள், ஆண்களுக்கும் பெண்களுககும் தனித்தனிப்பள்ளிகள் திறப்பதையோ அல்லது மேலும் அதிக எண்ணிக்கையில் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கோ, அப்பள்ளிகளை கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு அருகாமையில் கொண்டு வரவோ அனுமதிப்பதில்லை. புறநகர்ப்பகுதி சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, வேலை வாய்ப்புகளுக்கேற்ற திறமைகளைக் கற்றுக்கொடுப்பதற்கு வசதியாக, 10+2 மாதிரியின்கீழ் முறைசார்ந்த கல்விக்குப் பதிலாகத் தொழிற்கல்விப் பயிற்சி என்ற வகையில் என்ன மாற்று ஏற்பாடுகள் திட்டமிடலாம் என்பது கவனமாக ஆராயப்படவேண்டும். ஆனால் இதுவரை இந்த வகையில் நிறைய கருத்துக்கள் ஏதும் உதிக்கவில்லை. இதுவரை பெறப்பட்டுள்ள கருத்துக்கள், பின் தொடக்கக்கல்விப் பயிற்சியை ''ட்ரைசெம்'' மற்றும் சமூகத் தொழில் நுணுக்கப்பள்ளிகலோடு இணைத்தல், தொலை தூரக் கல்வி மற்றும் தொடர் கல்விக்கான பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட புத்தகங்களை வெளியிடுதல், இலவசமாக பகிர்ந்தளித்தல் முதலியவற்றின் துணையோடு ஒரு நடமாடும் கல்வி முறையை ஏற்படுத்துதல் ஆகியவற்றைச் சார்ந்தவையாகும்.

## முதியோர் கல்வி

4.77 கல்வி முறையின் அமைப்பையும் சமூகத்தின் உள்ளார்ந்த செயல் திறனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமெனத் தோன்றுகிறது. இச் சமூகத்தில் 64 சதவீதம் பேர் கல்வியறிவில்லாதவர். மாணவ, மாணவியரில் பெரும் பகுதியினர் தமது பரம்பரையிலேயே முதல் முறையாகக் கல்வி கற்போராவர். மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் கல்வியறிவுடையோராக உள்ள நாடுகளில் கல்வி நிறுவனங்களின் செயல்முறைகளில் மக்கள் பயனுள்ள வகையில் நீதி வழங்கும் அமைப்புகளாகச் செயல்படுகின்றன. ஆனால் இந்தியாவில், மக்களின் கல்வி நிலையில் காணப்படும் வேறுபாடும், கல்வி நிலையங்களின் அன்றாடச் செயலாக்கத்தை நிர்வகிப்போரிடையே காணப்படும் வேறுபாடும் குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே கல்விமுறையின் ஒழுங்கான செயலாக்கத்திற்குக் கல்வி பரப்புதலில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். கல்வி

யறிவின்மையை முற்றிலும் நீக்கியும், உலகளாவிய கல்விச்சுழலை உருவாக்கும் பணிசெய்யாமல் நம்நாடு இருபத்தோராம் நூற்றாண்டுக்குத்தக முன்னேற முடியாது என்பதுண்மை.

4.78 தீரதிர்ஷ்டவசமாக முதியோர் கல்வித் திட்டங்களின் விளைவுகள் இதுவரையிலும் மனநிறைவு தருவதாக இல்லை. இதற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம். மொத்தத்தில் எழுத்தறிவு என்னும் ஒரேயொரு நோக்கத்தின் மீதே கவனம் செலுத்தப்பட்டது. கல்வியறிவில்லா மக்களுக்கு அவர்களுடைய பொருளாதாரச் செயல்பாடுகளையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தத் தேவையான அறிவை அளிக்கும் எண்ணத்திற்கு மிகக் குறைந்த ஆதரவே அளிக்கப்பட்டது. மேலும், சமூக, பொருளாதார அல்லது அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதில் மக்களின் பங்கு இல்லாமல் முதியோர் கல்வியை வலுவுடன் தொடரமுடியாது. வளர்ச்சிக்கும் உயிர்வாழ்தலுக்கும் முதியோர் கல்வி ஓர் அடிப்படைத் தேவையாகும். அனைவரும் அறிந்த இந்த அவசியத்திலிருந்துதான் முதியோர் கல்வியின் அடிப்படைத்தத்துவமும் வல்வும் பிறக்கிறது. எனவே, முதியோர் கல்வி மூலமாக எவ்வாறு தேசியக் குறிக்கோள்களை விரைவில் அடையலாம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டியது அவசியமெனப் படுகிறது.

4.79 வறுமையை ஒழிக்கவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவுமான கிராமப்புறத் திட்டங்கள் ஆக்கமளிக்கப்பட்டு வருவதைப் பல வளர்ச்சித் திட்ட ஆய்வாளர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர். வளர்ச்சிக்கான முயற்சிகளில் வெற்றிக்குத் தேவையான செயலார்வம், நடத்தையில் மாறுதல்கள், மற்றும் தகுந்தவற்றைத் தெளிந்து செயலாற்றுதல் பற்றிய தொடர்புடைய செய்தி ஆகியவற்றை விரிந்த அளவில் பெறுதல் இக்கிராமப்புற முன்னேற்றத்திட்டங்களுக்கு அவசியமாகும். பள்ளிக்குச் சென்றிராத பெருந்திரளான மக்களுக்குக் குடும்ப நலத்திட்டம், சுகாதாரம், நோய் தடுப்பு மற்றும் குழந்தைகள் நலம் பற்றி அறிவு புகட்ட முதியோர் கல்வித் திட்டம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; பயன்படுத்தப்பட முடியும் என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன. இதற்கு மாறாக கல்வியறிவின்மைக்கும் அதிக அளவுக் குழந்தைச் சாவிற்கும் உள்ள தொடர்பும் மக்கள் தொகை வளர்ச்சியின் உயர் விகிதம், சத்துணவுக் குறைவு, ஏழ்மை இவற்றிக்கிடையே உள்ள தொடர்புகளும்கூட நிலைநாட்டப்பட்டுள்ளன, மக்களாட்சிக்

கொள்கையின் அடிப்படையான அரசியல் பங்கேற்பு என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், முதியோர் கல்வி ஒரு முக்கிய பங்காற்றியுள்ளது விளங்கும்.

4.80 முதியோர் கல்வியில் முக்கிய மாற்றங்களை ஊக்குவிப்பது யார் என்பதுதான் உண்மையான பிரச்சினையாகும். வளர்ச்சித்துறைகளைச் சார்ந்த அதிகார வர்க்கம் கூட இந்த வகையில் ஒரு திட்டவட்டமான பங்கினைப் பெற்றுள்ளதுபோல தோன்றுகிறது. ஆனால் முதியோர் கல்விக்குத் தேவையான செயலாக்கத்திறன் அவர்களால் மட்டும்தான் நிலை நிறுத்த முடியும் என்பது கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தாமே முன்வந்து தொண்டாற்றும் நிறுவனங்கள் இந்த இயக்கத்தில் ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது போல் தோன்றுகிறது. ஆனால் இந்தப் பங்கினை எவ்வாறு செய்து முடிப்பது என்பதுதான் இன்னும் ஒரு விவாதத்திற்குரிய வினாவாக உள்ளது. இதேபோன்று தங்களுடைய தொழிலாளர்களிடையே கல்வியையும் எழுத்தறிவையும் வளர்க்க முதலாளிகள், குறிப்பாக முறைப்படுத்தப்பட்ட பிரிவின் முதலாளிகளுக்கு எத்தகைய பொறுப்பை ஒப்படைப்பது என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் இத்தகு துவக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ அங்கெல்லாம் தொழில் உறவு முன்னேறிய துடன் உற்பத்தித் திறனும் மேலும் அதிகரிக்கப்பட்டது என்பதற்கு மிகப் பெருமளவில் ஆதாரம் உள்ளது. ஒரு பக்கம் கல்வியறிவில்லாத மக்களுக்கும் மறுபக்கம் பங்கு பெறும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சென்றடையும் பயன்கள் கூட மதிப்பீடு செய்யப்பட வேண்டும். கல்வி நிறுவனங்களைச் சமூகத்துடன் இணைப்பதற்கு இத்திட்டத்தில் மக்களைப் பங்கு பெற வைப்பதைத் தவிர வேறு வழி ஏதும்இல்லை என்பது தானே தெளிவாகிறது.

### சேவை நிறுவனங்கள்

4.81 நம் நாட்டின் நவீன கல்வியின் வரலாறு பல பொதுநலத்தொண்டு அமைப்புகளும் சேவை நிறுவனங்களும் செய்துள்ள சேவைகளாலேயே நிறைந்துள்ளது. பல ஞானிகளும், பெரும் அரசியல் மற்றும் மதத் தலைவர்களும், பல கல்வி நிறுவனங்களை நிறுவியும், நாட்டு மக்கள் கல்வியறிவு பெறுதல், சமூக மறுமலர்ச்சி பண்பாட்டின் மேன்மை ஆகிய பொறுப்புக்களை இளம் உள்ளங்கள் ஏற்கப் பயிற்சி அளித்ததின் மூலமும்

தாங்கள் எதிர்நோக்கியவண்ணம் நாட்டின் எதிர்காலத்தை மாற்றியமைத்னர். சேவை நிறுவனங்களின் வாயிலாக ஆணும் பெண்ணு மாக அதிக மாணவர்கள் தொடர்ந்து சேவை புரிந்துவந்தபோதிலும், அவர்களுடைய ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க பெருத்த வாய்ப்பு உள்ளது. எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் இளம் வயதினருக்கும் முதியோர்க்கும் முறைசார்ந்த மற்றும் முறைசாராக் கல்வி அளிக்கும் பொறுப்பைத் தகுந்த சேவை நிறுவனங்களிடம் ஒப்படைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அவர்கள் புதிய மாற்றங்களைக் கொணர்வதற்குச் சில முன்னோடியான திட்டங்களை அமைத்திருக்கிறார்களா எனப்பார்க்க வேண்டும்.

4.82 சமீபகாலத்தில் சில மாநில அரசுகள் சேவை நிறுவனங்களின் மேம்பாட்டைக் குறித்து சில ஐயப்பாடுகளை வெளியிட்டுள்ளன. சேவை நிறுவனங்களும் தங்களிடம் அரசு நடந்து கொள்ளும் முறைபற்றிக் குறை கூறுகின்றன. கல்வியில் குறிக்கோள்களை மேலும் சிறப்பாக எய்துவதற்கு எல்லாத் தனி மனிதரும் சேவை நிறுவனங்களும் ஈடுபடும் வகையில் திருப்திகரமான ஒரு ஏற்பாட்டை உருவாக்குவது சாத்தியமாக வேண்டும்.

**உயர்கல்விக்கு வாய்ப்பு**

4.83 உயர்கல்வியைப் பொறுத்தஅளவில் குறிப்பாக பட்டப்படிப்புக்கு முன்நிலைக்கு வாய்ப்பு அளித்தல் என்பதோ, நியாயம் என்பதோ பிரச்சினை அல்ல. ஆனால் எண்ணற்ற வேலை செய்யத் தகுதியற்றோரை உருவாக்குவதன் மூலம் நாட்டின் மிகக்குறைந்த அரிதாக உள்ள வாய்ப்பு வளங்களை வீணாக்காமல் தடுப்பதே ஆகும். பாடங்களின் பல்வேறு பிரிவுகள் கொண்ட கல்விமுறையை ஏற்படுத்தியதன் நோக்கமே தனிப்பட்ட முறையில் முன்னேற்றம், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் பல்வேறு பணிவகைகள் ஆகியவற்றிற்கு உரிய அளவில் கல்வி அமைய வேண்டும் என்பதே. இவைகளைக்குறித்து தனியே விவாதிக்கப்படும். உண்மையிலேயே கல்வியில் அக்கறையும், விருப்பமும் கொண்டவர் மட்டுமே உயர்கல்வி பெறச்செய்வதற்கு பயனுள்ள வழிகள் மேற்கொள்ள வேண்டும். பல்லாண்டுகளாகவே கல்வியில் ஈடுபாட்டினை அறியும் பல்வேறு சோதனைகள் அநேக நாடுகளில் வழக்கில் உள்ளன. நம்முடைய நாட்டிலும் அத்தகைய சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

4.84 பட்டங்களுக்கும் வேலை வாய்ப்புகட்கும் உள்ள தொடர்பைத் துண்டித்துவிட்டால், வேலை வாய்ப்புக்கள் கொடுப்போரோடு நெருக்க மாக இணைந்து பின்னால் வேலை வாய்ப்புக்கட்குத் தகுந்த நிச்சயத் தோடுகூடிய உறுதியளிக்கும் பயிற்சிகள் பலவற்றைப் பெருமளவில் அளித் தால் பட்டப்படிப்புக்காகச் சேருவோர் எண்ணிக்கையில் உள்ள நெருக்கடி குறையும். எங்ஙனமாயினும் தொலைக்கல்வி முறைகள் தோன்றிவிட் டதால் கற்க வேண்டுமென்ற ஆர்வமுடையோர் அவர்கள் வேலையில் அமர்ந்த பின்னரும்கூட மென்மேலும் ஆழ்ந்த அகன்ற கல்வித் தகுதி களைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்புகளுண்டு.

4.85 தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு இட ஒதுக்கீடு மூலம் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனினும் இது போதாது. உண்மையில் ஒரு கல்வி நிறுவனத்தில் நுழை வோர் மற்றவர்களைப்போல அதே வேகத்தில் கல்வியைத் தொடர முடியவேண்டும். அப்போதுதான் கல்விக்கு வாய்ப்பு என்பது பொரு ளுடையதாகும். இல்லையேல் விரும்பத்தகாத நெருக்கடிகளும் உள வளர்ச்சித் தடைகளும் உருவாகி இவர்கள் கல்வியெனும் பொது நீரோட் டத்தில் சேர இயலாது தடுக்கப்படுகிறார்கள். இந்நிலையைத் தவிர்க்க பட்டப்படிப்பின் முதல்வகுப்பில் சேர்வதற்கு முன்னும் பின்னும் இத்தகு மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

4.86 முறைசார்ந்த கல்வி முறையில் முதுகலைப் பட்டப்படிப்பு நிலை யில், கல்விக் கூடங்களில் நன்றாக கற்றதற்கான வரலாறுடைய நன் மாணாக்கர்களையே ஊக்குவிக்க வேண்டுமென்பது அவசியமாகும். இத் தேவை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும். சிறப்பாகத் தயாரித்த தேர்வுகள் மூலம் இந்தக் கல்விநிலையிலும்கூட சேர்க்கைகளை ஒழுங்குப் படுத்த இயலும். இவையோ அல்லது இவ்வாறான வேறு நுழைவிற்கு முந்திய தேர்வுகளோ நிர்ணயிக்கப் பெறாவிடில் முதுகலைப் பட்டப்படிப் பில் வேறு போக்கிடம் இல்லாதவரும் காலத்தைக் கடந்த ஒரு வழி காண் போரும்தான் சேர்ந்து விடுவார்கள்.

## வடகிழக்கு மலைப்பல்கலைக் கழகத்தில் புதிய சாதனை முயற்சிகள்

4.87 வடகிழக்கு மலைப் பல்கலைக் கழகத்தில் துவங்கப்பட்டு வளர்ச்சிப் பெற்றுள்ள அமைப்பு மற்றும் செயல்முறைகள் ஈண்டு விளக்கத்தக்கது.

இப்பல்கலைக்கழகத்தில் 12+ கல்வி முறையை முடித்த மாணவர்கள் பட்டப்படிப்புப் புகுமுக வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இம்மாணவர்கட்கு ஒருங்கிணைந்த 2 ஆண்டுகாலப் படிப்பு அளிக்கப் படுகிறது. இவ்விரண்டாண்டுகள் முடித்தவுடன் 45 விழுக்காடு மதிப்பெண் குறையாமல் பெற்றிருக்கும் ஏதேனும் ஒரு பாடத்தில் மேலும் ஓராண்டு காலம் சிறப்புக் கல்வியைப் பெறுவதன் மூலம் ஹான்ர்ஸ் பட்டம்பெற இயலும். இத்திட்டத்தில் தேர்வு பெற முடியாத மாணவர்கட்கு ஏதேனும் ஒரு பாடத்தில் தங்கள் திறமையை அதிகப்படுத்திக்கொள்ள இரண்டு வாய்ப்புக்கள் உள்ளன. இத்திட்டமானது பல நன்மைகளைக் கொண் டுள்ளது. முதலாவதாக 14+ நிலைக்கு வரும்போது ஒரு மாணவன் மிகுந்த முதிர்ச்சியும், தனது பலத்தையும் பலவீனத்தையும் பற்றிய மிகுந்த தெளிவும் பெறுகின்றான். இந்த நிலையில் சிறப்புக் கல்விக் கான பாடத்தை அவன் தேர்ந்தெடுக்க இத்திட்டம் அனுமதிக்கிறது. இரண்டாவதாக, பட்டமேற்படிப்பு மாணவர்கள் பொதுவாக சிறிதும் கவனம் செலுத்தாத துணைப்பாடங்களை ஒதுக்குதல் என்ற நிலை ஏற்படாமலிருக்க இத்திட்டம் உறுதியளிக்கிறது. மூன்றாவதாக குறைந்த கல்வித் திறன் உள்ள மாணவர்களை விலக்கிவிடும் நிலையை யும் உறுதிப்படுத்துகிறது. நான்காவதாக, பல்கலைக் கழகத்தோடு இணைப்பதிவு பெற்றுள்ள பல்வேறு கல்லூரிகளின் செயற்பாடு எல்லோ ருடைய கூரிய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. இதனால் கல்லூர் நிர்வாகிகளிடையேயும் ஆசிரியர்களிடையேயும் தரமேம்பாட்டிற்கு மிகுந்த செயலார்வத்தையும் அளிக்கிறது.

4.88 தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு கவனமாக அறிமுகப்படுத்தப்படவேண்டிய தனி வாய்ப்புகள் அளிக் கப்படவேண்டிய இருவேறு பிரிவுகள் தொழில் நுணுக்கக்கல்வியும் மேலாண்மை கல்வியுமாகும்.

தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மைக் கல்வி முறையைப் பொறுத்தமட்டில் சாதாரணப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கட் கும் வாய்ப்பளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி முறை யான கல்விக் கூடங்களிலன்றி, வேறு வகையான தொழிற்கூடங்களிலும் நிறுவனங்களிலும் தரத்தில் குறைந்த தொழில் அனுபவம் பெற்றவர் களுக்கும் இக்கல்வி முறையில் தொடர்ந்து பயில வாய்ப்பளிக்க வசதி செய்யப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணாக்கர்

களைப் பொறுத்தமட்டில், உட்படுத்தலுக்கு முந்திய பிந்திய பயிற்சிகள் மட்டுமே போதுமானவையன்று. இம்மாணவர்களின் பிரச்சினைகளே தனியானவை. இப்பிரச்சினைகள் பிற காரணங்களைவிட அவர்களது குழந்தைப் பருவச் சூழல், சமூகத் தடைகள் மற்றும் குறைபாடுகள் தன்னம்பிக்கையற்ற தாழ்வு மனப்பாங்கு கொண்ட தன்மை போன்ற வேறு பல காரணங்களில்தான் ஆழவேரூன்றியுள்ளன. இத்தகைய குறைபாடுகளும் இயலாமைகளும் இம்மாணவர் 6+ அல்லது 8+ வகுப்பு நிலைக்கு வரும்போது சிறப்புக் கவனம் செலுத்தப்படவேண்டும். இவ்விரு நிலைகளில் அத்தகைய மாணவர்களில் சிறந்த புத்திக் கூர்மை யுள்ள மாணவர்களை பொறுக்கியெடுத்து அவர்களிடையே இளமை முதல் வளர்ந்துள்ள உள்ளார்ந்த பிரச்சினைகளையும், பிற தடைகளையும் நீக்கு வதற்கு அவர்களுக்குக் கவனமாகப் பயிற்சி அளித்தல் மிகவும் அவசிய மாகும்.

### நன்கொடை வசூலிக்கும் கல்லூரிகளின் திடீர்த் தோற்றம்

4.89 மற்றொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, பல மாநிலங் களில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் அனைவருக்கும் சமநீதி என்ற தத்துவத்தின்மீது நமது கவனத்தைச் சுண்டி ஈர்த்துள்ளன. கணிசமான நன்கொடையின் அடிப்படையில் இடம் ஒதுக்கும் தொழில் நுணுக்கக் கல்லூரிகள் ஏராளமாகத் தோன்றியுள்ளன. அவை மாண வர்களின் கல்வித் தரத்தைப் பார்ப்பதில்லை. அவர்களின் பாதுகாவல ரின் செல்வச் செழிப்பையே நோக்குகின்றன. எனவே இப்படிப்பட்ட செயல்முறைகளைத் தடை செய்யவேண்டும் என்ற வலுவான ஒரு கருத்தும் உள்ளது. மாறாக, இப்படிப்பட்ட கல்லூர்களின் நிர்வாகிகள் வேறுவிதமாக விவாதிக்கின்றனர். வசதி படைத்தோரைக் கல்விக்காகும் மொத்தச் செலவினையும் ஏற்கச் செய்வதன் மூலம், தொழில் நுணுக்கக் கல்வியின் அடிப்படையை விரிவுபடுத்த வேண்டும் என்ற சமூகக் குறிக் கோளை அடைய இக்கல்லூர்கள் உழைக்கின்றன என்பது அவர்களது வாதம். மற்றொரு பிரிவினர் வேறுவிதமாக சிபாரிசு செய்கின்றனர். அதாவது, இத்தகைய கல்லூரிகள் 25 முதல் 50 சதவீத இடங்களை நன்கொடை வசூல்க்காமல் திறமை அடிப்படையில் அனுமதி வழங்க அரசாங்கத்திடம் ஒப்படைப்பார்களேயானால் இத்தகைய கல்வி மையங் களையும் தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்பதே அந்த சிபாரிசு ஆகும்.

**ஆசிரியர் பயிற்சி**

4.90 ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்த மட்டில் தோன்றும் பிரச்சினை சம வாய்ப்பு, நியாயம் ஆகியவற்றை மட்டும் பொறுத்ததன்று. மற்றொரு முக்கிய காரணம் இத்தகைய பயிற்சியாளர்களின் தாழ்ந்த தரமேயாகும். சமுதாய வளர்ச்சியில் கல்வியின் முக்கியத்துவம், இத்தகைய கல்வித் துறையில் ஆசிரியர்கட்கு அளிக்கபபடும் தனிச்சிறப்பு வாய்ந்த பொறுப்பு ஆகியவற்றைக கருத்தில் கொண்டு, பயிற்சி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும் பயிற்சி ஆசிரிய நிறுவனங்கள் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கையில், அம்மாணவர்களுக்கு ஆசிரியத் தொழிலில் உண்மையான விருப்பம் மற்றும் ஆர்வம் உள்ளனவா என்பதைத் தேர்வுகள் மூலம் சோதித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் அறிவியல் மாணவர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும், உழைப்பின் உயர்வை உணரும் தன்மை கொண்ட மாணவர்களுக்கும் மற்றும் பல்துறைகளில் சிறந்த அறிவினையும் திறனையும் கொண்ட மாணவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அத்தகைய மாணவர்களையே ஆசிரியப் பயிற்சிப் பள்ளி மாணவர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4.91 பொதுவாகவே வேலைக்கு வருமுன அளிக்கப்படும் ஆசிரியப்பயிற்சி, அமைப்பு முறையிலும், அளித்தல் முறையிலும் பெருத்த மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. இத்தகைய, எண்ணம் பணிபுரியும் ஆசிரியர்கட்கு அளிக்கப்படும் பணியிடைப் பயிற்சி மற்றும் பணியிலிருந்து கொண்டே ஆசிரியர்கள் பெறும் தொடர் கல்வி ஆகியவற்றிற்கும் பொருந்தும். இன்றைய ஆசிரியர்கள் பல்வேறு சவால்களைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இந்த சவால்கள் அல்லது பிரச்சனைகள் பல்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கின்றன. விரிவடைந்து செல்லும் பல்வேறு துறையறிவு, மற்றும் கற்கும் மாணவர்களின் மனசாட்சியைப் பாழ்படுத்தும் தீய சக்திகள் இவற்றில் ஒரு சில பெற்றோரின் மனப்பாங்கும் பண்பும், சமூக இடர்ப்பாடுகளும் மற்றும் உடன் பயிலும் விளையாட்டுத் தோழனும் மாணாக்கர்களை அவர்தம் நோக்கிலிருந்து பாதிப்படையச் செய்யும் மற்றைய சக்திகளாகும். மேலும் தற்போதைய திரைப்படங்களும், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் மாணவர்களின் கல்வியை மட்டுமின்றி ஆசிரியர் தம் பணிகளையும் ஓரளவு பாதிக்கின்றன என்பது உண்மையே.

இத்தகையச்சூழல் மேற் சொன்ன அறிவியல் சாதனைகளால் விளைந்த பொழுதுபோக்கு அம்சங்களால் உருவாவதால் அச்சாதனங்கள் தங்களுடைய நிகழ்ச்சிகள் கல்வியை வளப்படுத்தும் வழிகளை ஆய்வதை மேற்கொள்ளுதல் நலம். அன்றியும் ஆசிரியர்களும் எவ்வாறு இச்சாதனங்களைக் கல்வி முறைக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தங்களைத் தயார் செய்வது என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். மேலும் ஆசிரியர்களுக்குச் சிறந்த பணியிடைப் பயிர்சி அளிப்பதன் மூலம் தங்கள் பணியினைச் செம்மையாகச் செய்ய உதவ வேண்டும்.

**பிராந்திய உணர்வும் குறுகிய கண்ணோட்டமும்**

4.92 கடந்த பத்திகளில் பல்வேறு வகையான கல்வி முறைகளின் சமவாய்ப்பு மற்றும் நியாயம் பற்றிய பிரச்சினைகளில் முக்கியத்துவம் பற்றிக் கண்டோம். ஆனால் வேறு சில காரண காரியங்களும் சமவாய்ப்பினையும் நியாயத்தையும் பாதிக்கச் செய்கின்றன. அவற்றைப் பற்றிச் சிறிது எடுத்துச் சொல்வதும் அவசியமாகிறது. உதாரணமாக, ஒரு கல்வி மட்டத்திலிருந்து மற்றொரு கல்வி மட்டத்திற்குத் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பது பெற்றோருக்குப் பெருங்கவலை அளித்துவரும் ஒரு பிரச்சினையாகும். இப்பிரச்சினை உண்டாவதற்குக் காரணம், இக் கல்வி மட்டங்களில் இடப் பங்கீடு 'மண்ணின் மைந்தர்' விதியினால் பாதிக்கப்படுகிறது. அன்றியும் ஒரு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மாணவர்கட்கு அப்பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்கு முன்னுரிமை அளிக்கும் போக்கு பிற பல்கலைக் கழக மாணவர்கட்கு பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது. அன்றியும் குறுகிய கண்ணோக்கை வளர்க்கும் சில தந்திர முறைகள் போன்றவை கவலையளிக்கும் சில காரணங்களாகும். எனவேதான், பல்கலைக் கழக மான்யக் குழுவிற்கு அளிக்கப்பட்ட அறிவுரைகள் அக்கழகமானது இக்குறைகளைக் களையும் அதிகாரம் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அன்றியும் இப்பிரச்சினைகளை ஆழ்ந்து கவனித்து கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இவற்றால் பீடிக்கப்படாவண்ணம் பார்த்துக்கொள்ள மான்யக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய குறுகிய கண்ணோட்டமும் அரசியல் காழ்ப்புணர்வும் தோன்றாவண்ணம் மான்யக் குழு அவைகளைக் காப்பது அவசியமாகிறது.

4.93 கல்வி முறையில் சமவாய்ப்பையும் நியாயத்தையும் பாதிக்கக் கூடிய மற்றுமொரு சிக்கலான காரணம் யாதெனில் பல்வேறு கல்வி

நிறுவனங்களால் பின்பற்றப்படும் மொழிக் கொள்கையாகும். இம் மொழிக் கொள்கை மக்கட் தொடர்பிற்கு, கருத்து வெளிப்பாட்டிற்குப் பெறும் தடைக் கல்லாய் அமைகிறது. நாட்டின் பல்வேறு மொழி வாரி மாநிலங்களிலும் ஒரே சீரான பாட அமைப்பு, போதனா முறை, விரும்பத் தக்க தரம் ஆகியன மொழிக் கொள்கையால் பாதிக்கப்படுவதால்தான் மைய அரசிற்கு எண்ணிக்கையில் அதிகமான அளவில் கேந்திரிய வித்யாலய சங்கதன் பள்ளிகளை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாநிலங்கள் கடைப்பிடிக்கும் தாய்மொழிக் கல்வி மற்றும் பிற மொழிக் கல்லாமை ஆகியவற்றால் இந்நிலை மேலும் சீரழிந்துள்ளது. மொழிக் கொள்கை என்பது உணர்வுபூர்வமானது எனினும் இதனைப் பற்றிய விவாதமும் கலந்துரையாடலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும்.

### சமுதாயச் சார்பு, மாறுபட்ட தன்மை மற்றும் தரம்

**4.94** கல்வி, கல்விநிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் சமுதாயத்திற்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பதைப்பற்றி ஏற்கனவே பெருமளவில் குறிப்பிட்டோம். கல்வி நிறுவனங்கள் சமுதாயத்தில் ஓர் அங்கம். ஆயினும் இந்நிறுவனங்கள் பொதுவாகத் தங்களைச் சூழ்ந்துள்ள சமுதாயச் சூழலின் பிரச்சினைகளையும், அச்சூழலின் மிகப் பெரும் ஆற்றலையும், தனிச் சிறப்பு வாய்ந்த தன்மைகளையும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை; அவற்றில் அக்கறை காட்டுவதுமில்லை. இத்தன்மையால் விளைவதென்ன? கல்வித் தொகுப்பிலும் ஆராய்ச்சியிலும் ஒருங்கிணைப்பின்மை மற்றும் செயலற்ற திறன் விளைகின்றன; சமுதாயத்தின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு மறுக்கப்படுகிறது; வாழ்வின் உண்மை நிலைகளிலிருந்தும் உழைக்கும் உலகத்திலிருந்தும் பிரிந்து தனித்து கனவுலகில் வாழும் ஆசிரியர் மற்றும் மாணாக்கர்கள் நிலை இவையே யாகும். கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் இவ்விழப்பு ஏற்படுவதில்லை. எந்தச் சமுதாயத்தில் அவை உள்ளனவோ அந்தச் சமுதாயமும் பேரிழப்பிற்கு ஆளாகிறது. தன்னுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகளை இக்கல்வி நிறுவனங்களிடமிருந்து அச்சமுதாயம் பெறுவதில்லை. தொழில் நுட்ப அறிவுடன் மன, உடல்நிலையில் விரைந்து செயல்படக்கூடிய அறிவுசால் ஆன்றோர்களின் ஆதரவு, ஆக்க வழியில் சமுதாயத்தில் ஏற்பட வழியில்லாமல் போகிறது.

4.95 கல்வியின் சமுதாயச் சார்பின்மை கல்வி நிறுவனங்களிலிருந்து வரும் மாணவர்களிடையே பெரும் விரும்பத்தகா விளைவுகளை உண் டாக்குகிறது. இத்தகைய மாணவர்கள் தாம் வாழும் சமுதாயத்தின் சமூக கலாச்சார வழிகளைப் பலப்படுத்தும் ஆற்றலையும் உள்ளுணர்வை யும் பெற இயலாதவர்களாக இருக்கின்றனர். வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளத்தைப் பெருக்கும் சக்திகளையும் பெற இயலாதவர்களாக உள்ளனர்.

4.96 பல்வேறு சமூக அமைப்புகளான சமுதாயப் பயனுள்ள உற்பத்தித் திட்டம் மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் இது போன்ற சமுதாயச் சார்புள்ள அமைப்புகள் பெருமளவில் எதிர்பார்த்த பலன் களை நாட்டிற்கு அளிக்க முடியவில்லை. இதற்குக் காரணம் யாதெனில் நம் பாடத்திட்டங்களும், போதிக்கும் முறைகளும் தேர்வு ஒன்றையே மையமாகக் கொண்டு சமூகச் சார்பினைப் புறக்கணிப்பதேயாகும். அன்றியும் மாணவர்களின் மனப்பாங்கும் தேர்வில் வெற்றி பெறுவதி லேயே குறியாக இருப்பதால் அவர்கள் சமுதாயக் கடமையை மறந்து விடுகிறார்கள். கடந்த பல்லாண்டுகளாக நம்முடைய தேர்வு முறைகள் மாணவர்களின் மனப்பாட ஆற்றலைச் சோதிப்பதாகவே அமைந்துள்ளன. அவைகள் ஒரு சடங்கினைப்போல எவ்வித மாற்றமுமின்றி ஒரே மாதிரி யாக நடத்தப்படுகின்றன. மாணவர்களின் முழு வளர்ச்சியைப் பற் றியோ, அவர்களின் மனப்பாங்கினை நல்வழிப்படுத்தலைப் பற்றியோ, மன ஆற்றலை வெளிப்படுத்தலைப் பற்றியோ, உடல் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதைப் பற்றியோ இத்தேர்வுமுறைகள் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

4.97 எனவே சமுதாயச் சார்பு என்ற கண்ணோக்கில் பார்த்தோ மானால் நம்முடைய பாடத்திட்டங்களும் தேர்வுமுறைகளும் மாற்றி அமைக்கப்படவேண்டிய காலக் கட்டத்தில் உள்ளன. இம்மாற்றமானது மாணவர்களிடையே, தம் நாட்டின் பழம் பெரும் பண்பாட்டின் வாரி சாய் தாம் விளங்குகிறோம் என்ற புத்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்புனித நாட்டின் குடிமகன் என்ற பெருமையை உணர்த்த வேண்டும். இத்தாய் திருநாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காப்பது தன் தலையாய கடமை என்ற உணர்வினைப் பெறவேண்டும். இந் நாட்டின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும், இந்நாட்டிற் கும் இம்மக்களுக்கும் தான் ஆற்றவேண்டிய ஆக்கப் பணிகளில் ஈடுபாடும்

கொள்ளவேண்டும். வாழ்க்கை முறை நெறிகளையும் முன்னுதாரணங் களையும் கற்றலில் கண்டு, கற்றலைச் செம்மை நெறிப் படுத்த வேண்டும்.

4.98 பாடத் திட்டங்கள் வாழ்க்கை நெறிகளைச் சார்ந்து அமைக்கப் படாமை ஒரு பெருங்குறையாகும். எனவேதான் பெரும்பான்மையான மக்களும் அறிஞர்களும் கல்வித் துறையை ஒரு வெறுப்புடன் நோக்கு கின்றனர். இவ்வகையான வெறுப்பானது கல்வி முறைக்குத் தேவை யான ஒத்துழைப்பைக் கருத்துரைஞர்கள், திட்டமிடுவோர், உழவர்கள், தொழில் வல்லுநர்கள் நல்க மறுக்கின்றனர். இதைவிட சீர்குலைந்த நிலை என்னவென்றால் இம்முறையினால் பயனடைய வேண்டியவர்களே போதுமான ஆதரவு அளிப்பதில்லை.

4.99 ஆரம்ப காலத்தில், அதாவது அறுபதாம் ஆண்டுகளின் முன் பகுதியில் கல்வியின்பால் மக்கள் கொண்டிருந்த மிகுந்த எதிர்பார்ப்பின் காரணமாக மிகுந்த ஆர்வத்துடன் கல்வியைப் பெருக்க பங்கேற்றனர். எனவேதான் அவர்கள் பல்வேறு கல்விக்கூடங்கள், பள்ளிகள் நிறுவுவ திலும் அக்கல்விக் கூடங்களுக்குத் தேவையான தளவாடங்களை அளிப்ப திலும் உற்சாகத்துடன் முன்வந்தனர். மக்கள் மனமுவந்து தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க இக்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பினர். தாங்களும் முதியோர் கல்வி, மற்றும் கல்வியறியாமையை நீக்கும் நிறுவனங்கள் போன்றவற்றில் சேர்ந்தனர். அநேக ஆசிரியர்கள் தனிப் பட்ட முறையில் இவ்வரவேற்பிற்குப் போதிய ஆதரவை நல்கிய போதிலும், கல்விமுறையானது தன்னுடைய சமுதாய நோக்கங்களையும், பணியாற் றும் வழிமுறைகளையும் மீள ஒருங்கிணைக்கவும் மீள மதிப்பீடு செய்து பார்க்கவும் தவறியது. எனவே கல்விமுறை சமூகத்தோடு தனக்குள்ள பிணைப்பிலிருந்தும் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளிலிருந்தும் தன்னை விலக்கிக் கொண்டது. அன்றியும் சில உரிமைகளையும் சலுகை களையும் பெறுவதற்காக தன்னிச்சையாகவும் ஏகபோக உரிமையோடும் செயல்படத் தொடங்கியது. மேலும் கல்வி முறையின் நிர்வாகப் பொறுப் பினைத் தட்டிக் கழித்ததோடு சமுதாயத்திற்கு பதில் சொல்லக் கடன் பட்டுள்ளோம் என்ற உணர்வையும் இழந்தது.

4.100 கல்வி முறையில் சமுதாயச் சார்பினை ஏற்படுத்த வேண்டுமானால் கல்வி நிலையங்களுக்கும் கல்வி முறைக்கும் மற்றும் சமுதாயத்திற்கும் இடையே ஓர் இருவழிப் போக்குநிலை ஏற்பட வேண்டும். இதை மேலும்

விளக்கமாகக் கூற வேண்டுமானால் சமுதாயம் என்பதனை வேறுவிதமாக வரையறுக்க வேண்டும். அதாவது கல்வி நிறுவனங்களால் பயனடைவோர், அவர்கள் விகிதம், அவர்கள் வாழுமிடம் ஆகியவைகளைப் பொறுத்தே சமுதாயம் வரையறுக்கப்பட வேண்டும். இக்கருத்தானது முழுமையாகவும் தெளிவாகவும் செயல்படுத்தப்பட்டால் கல்வித் திட்டமிடுவோர் சமுதாயச் சார்பினை அளக்கும் முறைகளையும் இந்நிறுவனங்களைத் தாங்கும் ஏனைய அமைப்புக்களையும் வழிமுறைகளையும் வகுப்பதில் திட்டமான ஒரு முடிவெடுப்பர். அன்றியும் கல்வியின் வெவ்வேறு நிலைகள் ஒன்றுக்கொன்று நீள்நிலை சமநிலை ஆகியவற்றில் பொருளுள்ள தொடர்பினைப் பெறவும் பாடத் திட்டங்கள் ஒன்றுக்கொன்று சார்புடையனவாக அமையவும் ஏதுவாகும். இத்தகைய நிலை கல்வித்துறையில் ஒரு மாபெரும் மாற்றத்தை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. கல்வித்துறை மட்டுமின்றி, ஆசிரியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் மனமாற்றத்தை உண்டாக்கும். ஆனால் இம்மாற்றம் ஏற்பட, வெகு தொலைவில் அமர்ந்து கொண்டு, கல்வித்துறையை ஆட்டிப் படைக்கும் சக்திகளின் முழு ஆதிக்கம் முற்றிலுமாக நீக்கப்படவேண்டும்.

4.101 பள்ளிக்கல்வி சமுதாயச் சார்புடையதாக மாறும் பொழுது, பாடத் திட்டம், மற்றும் கல்வியம்சம் அனைத்தும் மாற்றம் பெறுகின்றன. கிராம வளர்ச்சியின் மையமாக பள்ளிக்கூடம் விளங்க இது வழிகோலும். கல்வியில் தர மாற்றம், கல்வி அலுவலர்களின் தீவிரக் கண்காணிப்பாலும், மேற்பார்வையாலும் மட்டும் ஏற்பட்டுவிட முடியாது. ஏனெனில் இத்தகைய அலுவலர்கள் எங்கோ இருப்பவர்கள். இவர்கள் அடிக்கடி வர இயலாது. ஆனால் சமுதாய மக்கள் அல்லது உள்ளூர் மக்கள் ஒவ்வொரு நாளும் பள்ளி நடவடிக்கையை நேரில் பார்ப்பவர்கள். இவர்களால் மட்டுமே தரமான கல்வியைப் பள்ளிகளில் பெற உதவ இயலும். இத்தகைய நிலை ஏற்படவேண்டுமானால் பள்ளிகளுக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் இடையே ஒரு சமூக உறவு உண்டாக வேண்டும். அவர்களின் உதவியும் வழிகாட்டுதலும் பள்ளிகளுக்கு எப்போதும் அவசியம். எனவேதான் பலர் கல்வித் திட்டமிடுதல் என்பது ஊரக அல்லது வட்ட அல்லது மாவட்ட அளவில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். திட்டமிடுதல் மட்டுமின்றி, பயிற்சி அளித்தல், மேற்பார்வையிடல், விரிவாக்கப் பணி, செயல் ஆராய்ச்சி போன்ற பல நிலைகளும் இந்த மட்டத்திலேயே இருத்தல் வேண்டும். எனவேதான் ஐம்மு-

காஷ்மீர் மாநிலத்தில் இக்கருத்தினை வலியுறுத்தும் ''மாவட்டக் கல்வி நிறுவனங்கள்'' சோதனை முறையில் முயற்சிக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் செயல்திறன், வெற்றி வாய்ப்பு மற்றும் உடனடி நன்மைகள் ஆகியவற்றைக் கண்டறிந்த பின்பு பிற மாநிலங்களிலும் இதுபோன்ற மாவட்டக் கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட உள்ளன. அதுமட்டுமின்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட இருக்கும் மாதிரிப் பள்ளிகள் இத்தகைய மாவட்ட நிறுவனங்களுக்கு எவ்வழியில் உறுதுணையாக விளங்கும் என்பதையும் கண்டறிய வேண்டும்.

4.102 அதிகாரத்தை மாவட்ட அல்லது வட்ட நிலைக்குப் பகிர்ந்தளிக்கும் முறையில் கல்வித் திட்டமிடல் அந்நிலைகளுக்கு வருவதால் குழந்தைகட்கு இரு வழிகளில் மிகச் சிறந்த நன்மை கிடைக்கிறது. அதாவது உடற்குறை அல்லது மனவளர்ச்சி குறைந்தோர் என்ற பிரிவிற்கும் மிகச் சிறந்த திறமையுடையோர் என்ற பிரிவிற்கும் ஏற்றவாறு திட்டமிடலைச் செய்யலாம். அவ்வாறு செய்வதன் மூலம் தேசிய திறன்மிகு மாணாக்கர் திட்டத்தில் கல்வி பெற இருக்கும் குழந்தைகளை எளிதில் தெரிந்தெடுக்கலாம். இத்தகைய குழந்தைகள் நாட்டின் பொருளாதார மற்றும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்ற இருப்பதால் அத்தகையோருக்கு தனிப் பயிற்சி அளிப்பது சுலபம்.

4.103 கல்வியில் சமுதாயச் சார்பு என்ற கருத்தோடு ஒன்றிப் போவதென்பது, கல்வி முறையில் பல பிரிவுகளை ஏற்படுத்த வழிகோலும். 10+2+3 என்ற புதிய கல்வி முறை இந்த முயற்சியில் முதல் படியாகும். ஆனால் இத்திட்டம் வரிவடிவில் தான் பல மாநிலங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளதே தவிர, எந்த நோக்கத்திற்காக இம்முறை கொணரப்பட்டதோ அந்நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. இது நம்முடைய துரதிர்ஷ்டமே!

4.104 10+2+3 கல்வித் திட்டமானது, பள்ளிகளில் அறிவியல், கணக்கு, சமூகப்பாடம் அடங்கிய 10 ஆண்டுகள் பொதுக் கல்விக்கும், அதற்குப் பின் விரிவுபடுத்தப்படும். தொழிலுக்கு முந்திய கல்வி, பொதுக்கல்வி அல்லது தொழிற்பிரிவு என்று பிரிந்து செல்லும் வாய்ப்புள்ள +2 கல்விக்கும் வகை செய்கிறது. மெட்ரிகுலேஷன் தேர்வு முறையும் அதைத் தொடர்ந்த கல்லூரி நுழைவும் என்ற பழைய முறையை மாற்றியதன் முக்கிய காரணம், இத்திட்டம் கல்வியியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது

மிகவும் வலுவுள்ளதாகத் தெரியவில்லை. அதிகமான குழந்தைகள் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெறும் 16வது வயது ஒரு முற்றிலும் மாறுபட்ட கற்பித்தல் அமைப்புக் கொண்ட கல்லூரிக் கல்வியை ஏற்றுக் கொள்வதற்கு முதிர்ச்சியடையாத நிலையாகும். ஏனென்றால் அங்கே ஆசிரியர் விரிவுரையாளராக மாறுகிறார். மற்றும் மாணவர்கள் தாங்களே அதிக அளவில் நல்லறிவினையும், திறன்களையும் பெற்றிடும் வகையில் ஆர்வமூட்டும், தூண்டிவிடும் கிரியா ஊக்கியாக இருக்கிறார். முதல் இரண்டாண்டு கல்லூரிக் கல்வியைப் பள்ளிக்கு கொண்டு வருவதன் மூலம் தங்கள் வயது திறமைக்கேற்ற பள்ளிக் கல்வித் திட்டத்தில் குழந்தைகள் பொருத்தப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் இந்த +2 திட்டத்தின் நோக்கம் சில மாநிலங்களில் இளநிலைக் கல்லூரிகளில் ஏராளமான +2 மாணவர்களைப் பயிற்றுவிப்பதனால் சில வகையில் பாதிக்கப் பட்டிருக்கிறது.

4.105 10+2 திட்டத்திற்கெதிராக வேறு சில விமரிசினங்களும் கூறப் பட்டிருக்கின்றன. முதலாவது +2 நிலையில் பள்ளிகளை முழுமையான தளவாடங்களைக் கொண்டிருக்கச் செய்வது பற்றியது. இதற்கு முன்னர் ஓரளவு கல்லூரிக் கல்வியின் இடைநிலையில் தளவாடச் செலவு அதிகமில்லை. ஏனென்றால் இடைநிலை மற்றும் பட்டக்கல்விக்கும் பொதுவான ஆய்வுக்கூட மற்றும நூலக வசதிகள் உண்டு. இரண்டாவதாக மாணவர்களது திறன்பாட்டிற்கு மிஞ்சிடும் வகையில் அதிகமான புத்தகச சுமை அவர்கள்மீது வைக்கப்பட்டிருக்கிறது என்ற விமரிசனம் முன்வைக்கப்படுகிறது. கல்வித் திட்ட அறிஞர்கள் இதற்குப் பதில் கூறும்போது, பாடத் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது கிடையாது என்று கூறுகிறார்கள். ஆகவே இந்த விமர்சனம் பொருளற்றதாகிப் போகிறெதன்கிறார்கள். பத்தாம் வகுப்பு வரை ஒருங்கிணைந்த கற்றல் ஏடுகள் கிடைக்காதிருப்ப தால் மேல்நிலையில் பாடப் புத்தகச் சுமை அதிகமாக்கப்பட வேண்டியதிருக்கிறது என்றும் கூறுகிறார்கள். இந்தப் புதிய பாடத் திட்டம் கலை மற்றும் சமூகப் பாடங்களிடையுள்ள எல்லைக் கோட்டைக் கிழித்து அவைகளுக்கிடையே தொடர்பினை உண்டு பண்ணுகிறது. அடுத்து இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகியவைகள் இணைந்து பொது அறிவியலாக உருவாகிறது. இப்புதிய திட்டத்தில் இருக்கும் பல புதிய புத்தகங்கள் அறிவினைத் தொடர்பின்றி வழங்குகிறது. புத்தகங்களும் ஒரே அட்டையினுள் பொது அறிவியல், சமூகக் கல்வி என்ற பெயரில் இருக்கின்றன,

4.106 முதல் முறையாக நாட்டில் ஒரே மாதிரியான பள்ளிக் கல்வி திட்டத்தை இந்தப் பதிய முறை உருவாக்கியிருக்கிறது என்று இந்தத் திட்டத்தை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். இத்திட்டம் கல்விய மைப்பு, கலைத் திட்டம் இவற்றை நாடு முழுவதற்கும் பொதுவானதாக ஆக்க வழிசெய்யும்; மாணவர்கள் மாநிலம் விட்டு மாநிலம் சென்று பயிலும் வாய்ப்பினையும் அளிக்கிறது. மேலும், மாணவர்கள், மாண விகள் என்று வேறுபடுத்தாது உயர்கல்விக்கான ஒரு பொதுவான அடிப் படையை இப்புதிய திட்டம் உருவாக்குகிறது. இத் திட்டம் வருவ தற்கு முன்னர், 20ம் நூற்றாண்டின் மையத்தில் மாணவிகள் அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்களில் அடிப்படைக் கல்வியறிவுகூட இல்லாது மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற முடிந்தது. இப்புதிய கல்வித் திட்டம் மாறி வரும் சமூக அமைப்பிற்கும் ஈடு கொடுக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இந்தச் சூழலில் பெண்கள் பலவகையான பணித் துறைகளிலும் மிகப்பெரும் பங்கு ஏற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படு கிறது.

4.107 +2 திட்டத்தினைப் பிரிப்பது குறித்த கருத்துக்களை ஆராயு முன்னர், மக்களிடையே மற்றும் அறிஞர்களின் மத்தியில் கூட கருத்து வேறுபாடு இருப்பதைக் கூறுவது அவசியமாகிறது. அது 10+2 திட்டம் எதை உள்ளடக்கியிருக்கிறது என்பது பற்றியது. சிலர் +2 திட்டம் தொழிற்கல்வியைக் கொண்டிருக்கிற காரணத்தால், அது அதிக முக்கியத் துவம் கொண்ட புதிய திட்டம் என்று கூறுகிறார்கள். இன்னும் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையிலுள்ள அறிஞர்கள் புதிய திட்டம் தொழிற்கல்வியை விட 10 வகுப்பு வரையிலான பாடத் திட்டம் மற்றும் கற்பித்தலைத் தொடர்புடையதாக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

**மேனிலைக் கல்வியில் தொழிற்கல்வி**

4.108 ஒரு மாநிலம் மேனிலைப் பள்ளிகளிலிருந்து 10 ஆம் வகுப்புக்குப் பின்னர் உள்ள தொழில் கல்வியைத் தனியாகப் பிரித்து அமைத்தது. இம் முடிவு அம்மாநிலத்தில் மீண்டும் சர்ச்சையை உண்டாக்கியது. அதாவது தொழிற் கல்வியை 10+2 திட்டத்தின் ஒருங்கிணைந்த ஒன் றாகக் கருதுவதா அல்லது வேண்டாமா என்பது குறித்தது. மிகப் பொருத்தமாக, 1964-66 கல்வி ஆணையத்தின் உறுப்பினர்-செயலராக பணியாற்றிய காலம்சென்ற பேராசிரியர் ஜே.பி. நாயக், ''கல்வி

ஆணையமும் அதற்குப்பின்னரும்'' (The Education Commission and After) என்பதில் இவ்வாறு கூறுகிறார்: ''ஆணையத்தின் பரிந்துரைகளை ஆராயும் போது இடைநிலையில் தொழிற்கல்வியை கொண்டு வருவதற்கும் புதிய 10+2+3 திட்டத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்பது புலனாகும்.'' அவர் மேலும் அழுத்தம் திருத்தமாக இவ்வாறு கூறுகிறார்: ''ஆரம்பக் கல்வியை முடித்தவர்களுக்கு ஓராண்டிலிருந்து மூன்றாண்டுகள் வரையிலான தொழிற்கல்வியைத்தான் கல்வி ஆணையம் கருத்தில் கொண்டிருந்தது.'' அவர் கீழ்க்கண்ட குறையைச் சொல்கிறார்: ''கல்வி ஆணையத்தின் விருப்பத்திற்கு மாறாக, இடைநிலையில் தொழிற் கல்வித் திட்டத்தைப் பற்றிய எல்லா விவாதங்களும் அது மேனிலைப் பள்ளிகளுக்கு வெளியே மட்டும் அளிக்கக் கூடிய இரண்டாண்டு முழு நேரத் தொழிற் கல்விக்கு இணையானது என்பது போல் நடந்து வருகிறது.''

4.109 மேனிலைக் கல்வியில், அது வேலைவாய்ப்பு அடிப்படையில் அமையவேண்டுமெனில் குறிக்கோள்களைக் குறிக்கும்போது அவைகள் வேறுபட்ட அமைப்பையும் இறுதிப் பண்புகளையும் கொண்டிருக்கும். ஆனால் இன்னொருவகையில் பார்க்கும்போது, அதை ஒரு பொதுவான வளர்ச்சி நிலையாக மேற்படிப்புக்கு ஆயத்தப்படுத்துவதாக அமையும். இது முறைப்படுத்தப்பட்ட உயர்கல்விக்கு யார் தகுதியுடையவர், மற்றும் தொழிற் கல்விக்கு எப்படித் தேர்ந்தெடுப்பது என்ற வினாவை எழுப்புகிறது. பள்ளியிலிருந்து நேரடியாக வேலை வாய்ப்பை நாடிச் செல்லும் வகையில் தொழிற் கல்வித் திறன்களை அளித்திடுமா என்ற வினாவும் எழுகிறது. பொருளாதாரத்தில் திட்டமிடுவோரால் தொழிற்கல்வி நல்லதொரு கருத்துருவாக ஆதரிக்கப்படும்போது அது தொழிற்கல்வியின் முன்பருவ கல்வியைவிடவும், பொதுக் கல்வியைவிடவும் தரம் தாழ்ந்ததாகவே கருதப்படுகிறது. மாணவர்களின் கல்வித் தரத்தின் அடிப்படையில் மாணவர்களைத் தேவையான பாடப்பிரிவுகளுக்குப் பிரித்தனுப்பும்போது உயர்ந்த, தாழ்ந்த செயல்திறன்களைக் காட்டும் நல்லறிவுக்கும், திறன்களுக்குமுள்ள இரட்டிப்பு நிலை தொடர்ந்து இருக்கவே செய்யும்.

4.110 +2 நிலைக்கு மட்டும்தான் (பதினோராம், பன்னிரெண்டாம் வகுப்புக்கள்) தொழிற் கல்விப் பாடப் பிரிவுகள் பொருந்தும் என்பதல்ல

என்ற கருத்தை இந்த இடத்தில் தெளிவாகக் கூறியாக வேண்டும். நடுநிலை வகுப்புகளில் கூட அந்தப் பாட போதனைகள் அளிக்கப்பட முடியும்; அளிக்கப்பட வேண்டும். அதாவது எட்டாம் வகுப்புக்கு அடுத்த அல்லது பனிரெண்டாம் வகுப்புக்கு அடுத்தப் பொதுக் கல்விக்குப் பிறகு மேல்படிப்பைத் தொடர விரும்பாதவர்களுக்குக்கூட இதை அளிக்கலாம். ஆனால் பெரும்பான்மையான பாடப் பிரிவுகள் பத்தாம் வகுப்புக்குப் பின் தொடரக்கூடியதாக அமையும். அடுத்து ஒரு காரியத்தைத் தெளிவுப்படுத்த வேண்டிய அவசியமேற்படுகிறது. அதாவது தொழிற் கல்விப் பாடங்கள் என்பது பொறியியல் மற்றும் தொழில் நுட்பப்பாடங்கள் மட்டும் அடங்கும் என்பதல்ல. அதில் வேளாண்மை, வியாபாரம் மற்றும் வர்த்தகம், உடல்நலம் மற்றும் மருத்துவம் சார்ந்த பயிற்சிகளும் அதில் அடங்கும். ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்கல்விகளுக்கு மானிட சக்தியை பயிற்சி செய்து அனுப்பும் பணியைச் செய்துவரும் ஐ.ஐ.டி. மற்றும் பாலிடெக்னிக்குகளின் வேலையை இதுவும் செய்ய வேண்டும் என்பது பொருளல்ல. அதைவிட சமூக பொருளாதார தகவல் சேகரிப்பின் அடிப்படையில் தெரிய வந்த பயிற்சிக்கான தேவைகளுக்காகவும் சுய வேலை வாய்ப்புக்கும், சமூகப் பணி நிறுவனங்களின் சேவைக்கும் உதவிட இந்த பயிற்சிகள் உதவும்.

*4.111* தொழில் சார்ந்த கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவதில் உள்ள சிக்கல்களில் பெரும்பான்மையானவை இத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாததால் ஏற்படுகின்றன. தொழில் சார்ந்த கல்வி ஏற்படுவதற்கான வழி முறைகளை விவாதிப்பதற்கு முன் இதுபற்றி மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் வினாக்கள் சிலவற்றை விவாதிப்பது பொருத்தமாகும். பல்வேறுபட்ட வகையமைப்புகளுக்கும் வளர்ச்சி விகிதங்களுக்கும் ஏற்ப, மனித ஆற்றல், தேவைகளை அளப்பதற்குரிய நம்பத் தகுந்த மாதிரிகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைப் பற்றியதாகும். முறைப் படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத தொழில் அமைப்புகளில் உள்ள வேலை வாய்ப்புக்கு இயைந்த வகையிலும் மற்றும், கிராமப் பகுதிகளில் சுய வேலை வாய்ப்புக்கு வழி வகுக்கும் வகையிலும் எவ்வளவு தூரம் தொழில் சார்ந்த பயிற்சியைத் தொடர்புபடுத்த முடியுமென்பது இரண்டாம் கேள்வியாகும். பொதுக் கல்வியிலும் தொழிற் கல்வியிலும் மென் மேலும் படித்துயர்ந்து செல்ல வழி வகுக்குமாறு எப்படித் தொழிற் பயிற்சியை அமைக்க வேண்டுமென்பது மூன்றாம் பிரச்சினையாகும்,

4.112 தொழில் சார்ந்த கல்வியின் ஒரு பகுதி மேனிலைக் கல்வியோடு இணைந்த ஒரு கல்வியாக இருப்பதா அல்லது மொத்த தொழிற்கல்வி யுமே தனிப்பட்ட ஒரு நிறுவன அமைப்பின் கீழ் வருவதா அல்லது மேல் கல்விக்கான தொழில் நிறுவனங்களோடு அல்லது உற்பத்திமையங்க ளோடோ இணைந்து தொழில் சார்ந்த கல்விப் பயிற்சியை அளிப்பதற்கு ஒரு முற்றிலும் புதிய மாதிரியை உருவாக்குவதா என்பதை, தொழில் சார்ந்த கல்வியின் இடத்தைப் பற்றி வாதிக்கும்போது ஏற்கனவே கருதி யதைப் போல் தீர்மானிக்க வேண்டியதாக உள்ளது. இந்தத் தீர்மானம் தொழில் சார்ந்த கல்விக்கான செலவு, தரம், மேலாண்மை ஆகியவற் றைப் பற்றி முடிவுகள் எடுக்க பல வகையிலும் உதவும்.

4.113 மேற்கண்ட பிரச்சினைகளில் எந்த முடிவை எடுத்தாலும், தொழில் சார்ந்த கல்வியைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டின், போது மான ஆசிரியர்களை வழங்குவது முதல் தேவையாக இருக்கும். 10.வது வகுப்புத் தேர்ச்சி மாணவர்களில் 40 விழுக்காட்டினர் தொழில் சார்ந்த கல்விக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும், தொழில் சார்ந்த கல்வியில் பயிற்சி அளிக்கக்கூடிய நூற் றுக்கணக்கான நிறுவனங்களும் தேவைப்படும்.

**சமுதாயப் பொருத்தமும் தொழில் நுட்ப-நிர்வாகக் கல்வியும்**

4.114 தொழில் நுட்பக் கல்வியின் இன்றியமையாமையை எவ்வளவு மதிப்பீடு செய்தாலும் தகும். இந்தியா, பயிற்சி பெற்ற மனிதசக்தியை அதிகமாகப் பெற்றுள்ளது. அறிவியல் மற்றும் தொழிலியல் வளர்ச்சி யின் வலுவிற்குத் தொழில் நுட்பவியலில் பயிற்சி பெற்றவர்கள் ஆதார மாக இருந்து வந்துள்ளனர். வரவிருக்கும் பத்தாண்டுகளில்கூட, இன்று வரை புதிதாகத் தோன்றி வரும் உற்பத்தி முறைகளை நன்கு அறிந்து வைத்திருக்க, இந்தியா தொழில் நுட்பவியலில் உயர்தரமுள்ள மனித சக்தியை அவாவுகிறது. இதற்கு எழக்கூடும் ஒரே வினா யாதெனில், தேவைக்கேற்ற பயிற்சி பெற்ற மனித சக்தி உள்ளதா என்பதும், சிறந்த நிறுவனங்களினின்றும் வந்த பட்டதாரிகளைக் கூட வேலைக்கு அமர்த்தாமையை ஊக்குவிக்கும் காரணங்கள் என்னவென்பதுமாகும்.

4.115 நம் நாட்டுத் தகுதிமிக்க பொறியியல் மாணவர்களுக்குப் பணியில் மனநிறைவும், சாதனை செய்த உணர்வும் அளிக்கத்தக்க வேலை

வாய்ப்பும், பணிச் சூழலும், அளிக்கப்படவில்லையென்பது அடிக்கடி சுட்டிக்காட்டும் கருத்தாகும். இதன் விளைவாக கற்றறிவாளர் மற்ற முன்னேறிய நாடுகளுக்கு வெளியேறுதலும் அறிவியல்-தொழில்நுட்ப வியல்களில் அடிப்படைப் பயிற்சி சார்பணிகளில் தனியார் துறைகளிற் சேர்தலும் நிகழ்ந்தன. மிஞ்சியது அறிவுப் பஞ்சமே.

4.116 இந்தியாவில் 45 விழுக்காடு ''டாக்டர்'' பட்டம் (பிஎச்.டி.) பெற்றவர்களும், 69 விழுக்காடு பொறியியல் முதுகலைப் பட்டம் பெற்ற வர்களும், தம் ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் தொடர்பில்லாத பணிகளில் பணியாற்றுகின்றனர். இந்நிலைக்கு மாறாக அமெரிக்காவில் டாக்டர் பட்டம் பெற்றோரில் 5 விழுக்காட்டினரும், முதுநிலைப் பொறியியலாளரில் 37 விழுச்காட்டினரும், இங்கிலாந்தில் டாக்டர் பட்டம் பெற்றோரில் 7 விழுக்காட்டினரும், முதுநிலைப் பொறியியலாளரில் 35 விழுக்காட்டினர் மட்டுமே தமக்குத் தொடர்பில்லாத துறைகளில் பணியாற்றுகின்றனர். அறைகூவல் விடும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான சூழ்நிலை இல்லாத நிலைமையினாலோ, பயிற்சிப் புத்துணர்வு அல்லது தொழில் நுட்பத்தை வெளியிலிருந்து இறக்குமதி செய்தலினாலோ, இந்நிலைமை அமைந் ததோ எனக் கூறுதல் கடினமாகும். ஆனால், மிகச் சிலரே இந்தியாவின் அறிவாற்றலின் வன்மையைக் காட்டும் வகையில் தகுந்த ண்மையான ஆராய்ச்சி விளைவுகளை நாட்டுக்கு அளித்துள்ளனர் என்பது உண்மை யாகும்.

4.117 தொழில் நுட்ப நிலையங்கள் தரமிக்க வளர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்ற பொது உடன்பாடு காணும்போது, பழமை, வழ்க்கி ழந்த தன்மைகளை நீக்கவும், ஆராய்ச்சி வளர்ச்சிகள் விரிவாக்கம் பெறவும், வளர வேண்டிய புதிய தொழில் நுட்பங்களில் கற்பித்தல் நிகழ்ச்சிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். ஒரு நிறுவனத்தின் சிறப்பை வெறும் கருவிகளோ, பணியின் புறச் சூழல்களோ மட்டும் நிர்ணயிப்பதில்லை என்றும் விவாதிக்கப்படுவ துண்டு. சமத்துவப் பண்பாடு, தொடர்புடைய சாதாரணச் சூழல் மற்றும் தன்முயற்சிக்கான வாய்ப்பு ஆகியவை முக்கியப் பங்கு வகிக் கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக பராமரித்தல், உற்பத்தி செய்தல், ஆராய்ச்சி செய்தல் ஆகியவற்றை வேறுபடுத்தாத பயிற்சியினால்தான் தரம் பற்றிய உணர்வை வளர்க்க இயலும். உண்மையில் தொழில் நுட்பத் துறையின் கூட்டமைப்புக்கும் உபகரணங்களுக்கும் அதிக

அளவு முதலீடு செய்தும் கூட, அதற்குப் பிரதிபலன் மிகக் குறைவாக இருந்தது. இதற்குக் காரணம் நிர்வாகத் திறன் இல்லாமையேயாம். மேலும் இந்திய தொழில் நுட்ப நிறுவனங்கள், வட்டாரப் பொறியியற் கல்லூரிகள், மாநிலப் பொறியியற் கல்லூரிகள், பல்தொழிற் கல்வி நிறுவனங்கள், தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கிடையே வசதிகளையும், திறன்களையும் பயன்படுத்திக் கொள்ளாமையாலும், இணைப்பேற்பாடு இன்மையாலும், தொழில் நுட்பக் கல்வி முறையும் குறை கூறப்பட்டது. ஒழுங்கமைவில்லாத தொழிற் பிரிவுகளில், பெரும்பான்மை நடவடிக்கைகள், வேளாண்மைத் துறையும், அதன் தொடர்புடைய செயல்முறைகளும் உட்பட சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டன. எனவே இத்துறைகள் அறிவியல், தொழில்நுட்பவியல், அறிவைப் பயன்படுத்திச் செழிக்க வேண்டிய தேவையில்லாதவை எனத் தவறாகக் கருதப்பட்டு வாதிடப்பட்டது. இப்புறக்கணிப்பே, தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சியின் பின்விளைவிற்கும், கல்வி-சமுதாயம் ஆகியவற்றிற்கிடையில் முன்னரேயிருந்த இடைவெளியை மிகுதிப் படுத்தியதற்கும் அடிப்படை எனக் கூறப்பட்டது.

4.118 ஒரு வறிய நாடு, தக்க சமூகப் பின் விளைவுகளை எதிர்பார்க்காமல் உயர்தரமுடைய தொழில் நுட்பக் கல்வியைப் பெரிய உதவிகளளித்து வளர்ப்பதரிதாகும். இந்தியாவின் மிக்வும் மதிப்பிற்குரிய தொழில் நுட்ப நிலையங்களின் மாணவர்களுக்கு மறு-புத்தறிவு மனப்பான்மைகளையூட்டவும், கற்றறிவாளர் வெளிநாடுகளை நாடிச் செல்லும் நிகழ்ச்சியால் ஏற்படும் அறிவுப் பஞ்சத்தை நீக்கவும் ஏதேனும் முயற்சி செய்யப்பட வேண்டுமேன ஒரு கருத்துள்ளது. அறிஞர்கள் பிற நாடுகளுக்குக் கசிந்து செல்லும் நிலையானது, வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கு எதிர்முகமாக முதலீடு செய்வதைக் குறிக்கும் என்பர். அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து ஆண்டுக்கு 1200 பேர் வீதம் பயில வருகின்றனர். அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய 12 மருத்துவப் பள்ளிகளை அமைத்திட வேண்டும் என்றும் அவ்வாறு வருபவர்களுக்காகும் வெளிநாட்டு நிதியுதவிச் செலவு, தோராயமாக அமெரிக்க நாட்டு மக்களுக்கு ஆகும் மருத்துவ உதவியும் வெளிநாட்டு மக்கட்குதவும் தொகைக்கும் ஈடானதாகும் என விளச்கம் தருவார்கள்.

4.119 இந்தியப் பொருளாதாரத்தை வளர்க்கக் குறிப்பிடத்தக்க பணிகளை ஐ.ஐ.டி.யும் மற்ற மதிப்புக்குரிய தொழில்நுட்ப நிறுவனங்களும் ஆற்றியுள்ளன. தொழில் உற்பத்தியின் பல்வகைப் பிரிவுகளை, தொழில் நுட்பக்கல்வியை அளிக்கும் நிறுவனங்களோடு இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்போதுதான் தொழிற்கல்வி எத்திசையில் செல்லவேண்டும் என்பதற்குரிய வழிமுறை தெரியும். அத்துடன் தொழில் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்பு வளங்களைப் பயன்படுமாறு செய்யவும் இயலும். தொழில் அதிபர்களிடமிருந்து இதற்குப் எதிர்பார்த்த ஆதரவு இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை. இதற்கு அவர்கள் எதிர்பார்க்கின்ற பலனை முதலீட்டில் பெறமுடியவில்லை என்பது காரணமாக இருக்கலாம், அல்லது, வெளிநாடுகளிலிருந்து நவீன நுட்பத்தைப் பெறுவது மலிவாக இருக்குமென்பதும் காரணமாக இருக்கலாம்.

4.120 சோவியத் யூனியனிலும், பிற பல நாடுகளிலும் ஒரு குறிப்பிட்ட தொழிலில் தனிச்சிறப்பு பெற்றிருக்கும் நிறுவனங்களின் மூலமாகத் தொழிற் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. மின் பொறியியல் பயிற்சியோடு மின்சக்தி நிலையங்களின் மேலாண்மைக்கும், கப்பல் கட்டுதல், கணிப்பான் பொறியியல் முதலியவற்றிலும், பயிற்சிகள் உள்ளன. சோவியத் யூனியனில் உள்ள தொழிற் கல்வியில் உள்ள மற்றொரு தன்மை என்னவென்றால், பொறியியல் மாணவர்களும்கூட கலை, சமூகவியல், அரசியல் கல்வியிலும் பெருமளவுக்குப் பயிற்சி பெறுகிறார்கள். இது நாட்டிலுள்ள பல்வேறு அமைப்புகளில் அம்மாணவருடைய பங்கினை அறிய உதவுகிறது. இந்தியாவில் பொறியியல் நிறுவனங்களில் கலைப்பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இருந்தாலும் இப்பாடங்கள் அதிக கவனம் பெறுவதில்லை.

4.121 பொருளாதார வளர்ச்சியில் மேலாண்மைக் கல்வியின் முக்கியத்துவம் என்ன என்று பொதுவாகப் பாரட்டி அறியப்பட்டாலும், மேலாண்மைக் கல்விக்காக வழங்கும் பொருளுதவி குறிப்பாக மேனாட்டு மாணவர்களுக்கு எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது. மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் கவனிக்க வேண்டியன பல இருக்கின்றன. அரசின் மேலாண்மை முறைகளிலுள்ள பழமைப் போக்கு, விரைந்த முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது என்பதோடு, இந்நிறுவனங்களில் ஆராய்ச்சி முன்

னேற்றச் செயல்கள் இந்த முக்கியமான பகுதியின் வளர்ச்சிக்கு உரிய வகையில் அமைக்கப்படவில்லை என்பதும், பொதுக் கருத்தாகும். மேலாண்மைக் கல்வியை ஒரு பகுதியாகக் கொண்ட கல்வியமைப்பு மிக அதிக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் மாபெரும் துறையாகும். பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இருக்கும் மேலாண்மை மாதிரி களின் பயனற்ற தன்மையைப் பலரும் கூறுகிறார்கள். இதற்குக் கார ணம், இந்நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பை அவற்றின் அளவும், சிக்கல் தன்மையும் தவிடு பொடியாக்கி விடுவதாகும். மாற்று மாதிரி களை மேலாண்மை நிறுவனங்கள் உருவாக்குவதற்கான பணிகளில் உட னடியாக ஈடுபட வேண்டியது விரும்பத் தக்கது.

**உயர் கல்வி: சமூகப் பொருத்தம் மற்றும் பன்முகப்படுத்துவதற்கான தேவை**

4.122 பொதுவாகச் சமூகத்தோடும், குறிப்பாக வேலைகளோடும் தொடர்புபடுத்திய கலை, மானிடவியல், அறிவியல் பயிற்சிகளை ஏற் படுத்துவதற்குத் திட்டமிடுவது அவசியமாகிறது. பாட அறிவு, மொழி, கருத்து வெளியிடும் திறன்கள், பண்பாடு, விளையாட்டு ஆகிய பயிற்சி களோடு மாணவர்கள் தொழில் சார்ந்த பயிற்சி முறைகளையும் விரும்பிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணம், பட்டக்கீழ்ப்படிப்புத் திட்டங்கள் கிளையக அமைப்பு முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கருத்துரைக்கப்படுகின்றது. இம்முறையில் ஒரு மாணவன் அரசியல் கொள்கைகள், பொது நிர்வாகம், கணக்கு, சொல் முறைகள் ஆகிய வற்றைப் பயின்று ஏன் பட்டம் பெறக்கூடாது என்பதற்குக் காரணம் இல்லை. உண்மையில் ஒரு கல்லூரி அல்லது பல்கலைக் கழக மாணவன், உணவளிப்பியல், சுற்றுலா மற்றும் மலையேறுதல் அல்லது முதியோர் கல்வி, களக் கணக்கெடுப்பு, சூழ்நிலை மாசுறுவதைத் தடுப்பதற்கான அறிவையும் திறனையும் பெறுதல், ஓட்டுப்போடுதல் மற்றும் நாற்றுப் பண்ணை வைத்தல் ஆகிய பாடங்களில் பயிற்சி மதிப்பு ஏன் பெறக் கூடாது என்பதற்குக் காரணமில்லை.

4.123 வழக்கமான கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் விரிவு படுத்தக் கூடாது என்பதற்குத் தற்காலிகத் தடையே விதிக்க வேண்டு மென்று கருத்து தெரிவிககப்படுகின்றது. பல்துறைகளோடு தொடர் புடைய பணிகளைச் சிறப்பாகத் தெரிந்தெடுத்து அவற்றிற்கு உதவும்

வகையில் சமூகத்தோடு பொருத்தமுடைய பயிற்சிகளையும், வேலை சார்ந்த பயிற்சிகளையும் புதிய கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் அளிக்க வேண்டும். பட்டப் படிப்புக் கல்லூரிகள் வேளாண்மை, பொருளாதாரம் போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கின்றன. வன இயல், நிலப்பரப்பு, தண்ணீர் உற்பத்தி, பின் அறுவடைத் தொழில் நுட்ப வியல், பதனிடுதல், விற்பனை, நகர்த் திட்ட மிடுதல், போக்குவரத்து மேலாண்மைப் பொது நிர்வாகம். அலுவலக மேலாண்மை போன்றவை இதில் அடங்கும். இப் பயிற்சிகளும், துறைகளும் வேலைவாய்ப்பு அளிப்பதோடு ஊரக, நகரக. மண்டல வளர்ச்சிக்கும் உதவுகின்றன. வேலை வாய்ப்பு உலகத்திற்கும் அறிவு உலகத்திற்கும் இடையே சமுதாயத்தில் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. ஆதரவு தரத் தக்க-அங்கீகரிக்கத் தக்க-நம்பத் தக்கத் தெளிவான செயல்கள் இந்த இடைவெளி இணைப்பிற்குத்தேவை.

### தரமும் கல்வியும்

4.124 கல்வியின் தரம் சார்ந்த நோக்கு பற்றி முந்தைய அதிகாரங்களில் விவாதிக்கப்பட்டது. கல்வியின் தரம் சார்ந்த உருவளவைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

4.125 கல்வி முறையைப் பொறுத்த வரையில் தரம் என்பதை வரையறுப்பது கடினம். சமூக இயைபு, மன விரைவூக்கம், உடல் சார்ந்த பழக்கம், நற்றிறம் போன்றவை நாணயம் உள்ள மனிதர்களை, தர உணர்வு முறையை உருவாக்கும் என்று கூறப்படுகிறது. இதற்கும் மேலாக நம்பிக்கை, திறமுடன் தகவல் அளித்தல், நற்றொடக்கம், புதியது புனைதல், புதிய சூழ்நிலைகள் பற்றிய ஆய்வு போன்றவற்றை உருவாக்கும் இத்தகைய தனிப்பட்ட பண்புகளை ஒரு தரஉணர்வு கொண்ட அமைவு வளர்க்கும். இம்மனிதப் பண்புகள் முறை, இசைவு, ஒருமைப்பாடு, வாய்ப்பிழந்தோரின் நலம் போன்ற தன்மைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

### தேர்வு அமைவு

4.126 மற்றெல்லாவற்றையும் பின்னுக்கு ஒதுக்கி, தேர்வுக்கும், தரப்படுத்தலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் அமைவில் மேற்குறிப்பிட்ட தரத்தன்மைகள் (அவற்றிற்கும் மதிப்பீடு செய்யப்பட்டாலொழிய) கவ

ணிக்கப்படமாட்டா. இதைச் செய்வதற்கு முன் கலைத் திட்டம், பாடப் பொருள்கள் கற்றல் கற்பித்தல் முறைகள் போன்றவற்றில் அடிப்படை மாறுதல் தேவை. இந்தப் பணியைச் செய்வது யார்? எவ்வாறு செயல்பட வேண்டும்? பிரச்சனைகள்? தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும். கல்வியின் பண்புக் குறைபாட்டுக்கு முழு ஆண்டுக் கல்வி முறையே காரணம். எனவே இம்முறை மாற்றப்பட வேண்டும் என்பது தெளிவு. குறைந்த மதிப்பெண்களாலோ, சீரற்ற தரப் படுத்தலாலோ தேர்வை நடத்துபவர்களும், கற்பிப்பவர்களும், கல்வி மேலாண்மை செய்பவர்களும் குறைகூறப்படுவதில்லை. கற்பித்தல் முறைசள், கற்கும் முறைகள், மாணவர்களின் ஆர்வம், உள்ளார்ந்த ஆற்றல் போன்றவற்றோடு கலைத் திட்டமும் மதிப்பீடும் ஒத்துப் போவதில்லை. இதுவே குறைபாட்டுக்குக் காரணம் ஆகும். கலைத் திட்டம் உருவாக் கப்படும்போது முறையறி ஆய்வு, அமைவு பகுப்பாய்வு, மாற்றுரு பயிற் சிகள், செயல் ஆய்வுகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படு வதில்லை.

4.127 கல்வியின் பண்புக்குக் கீழ்க்கண்ட மூன்றும் மிக முக்கியமானவை: இயல்திறன்; வேலைசார்ந்த நல்னெறி மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்கள்; கல்வியின் மேலாண்மை அமைவு மற்றும் திறம்பட அமைந்த நல்ல இயலாற்றல் கொண்ட அறிவொளி தரும் கர்றல்-கற்பித்தல் அமை வின் முக்கியத்தை வலியுறுத்தும் தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது அமைக் கப்பட்ட நிறுவனங்கள். பல நூற்றாண்டுகளாக ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் தங்களின் தர, உந்துதல் காரணமாக பிற நிறுவனங்களின் மீது ஒரு நல்விளைவை ஏற்படுத்தி உள்ளது. கடந்த சில பத்தாண்டுகளில், ஹார்வார்டு, யேல், ஸ்டான்போர்டு பல்கலைக் கழகங்கள் இப்பணியைச் செய்துள்ளன. கல்வித் திட்டத்தின் பல்வேறு நிலைகளில் இத்தகைய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

4.128 குறிப்பிட்ட பாடங்களின் தற்போதைய அறிவு வளர்ச்சி, கருத்து தெரிவிக்கும் முறைகள், கல்வி தொழில் நுட்பவியல் முறைகள் ஆகிய வற்றை வரிசைப்படுத்தி பார்க்கும் போது ஆசிரியர் பயிற்சி நிறுவனங் களின் கலைத்திட்ட மாறுதல் எவ்வளவு அவசியம் என்பது புலனாகும். ஒரு வலிமையான, பயன் உள்ள திட்டத்தைப் புகுத்துவதுடன், சமூக விழிப்புணர்வு, தேசிய அறைகூவல்கள், பண்பாடு, விளையாட்டு, இந்தி

யப் பண்பாடு வளம் போன்றவற்றிற்கு கலைத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியப் பயிற்சி காலத்திற்குள் அறிவு, மனப்பான்மை திறமை போன்ற ஆசிரியருக்குள்ள தன்மைகளை வளர்க்க முடியாது எனச் சிலர் வாதிடுகின்றனர். இதனால் பயிற்சிக் காலத்தை அதிகப்படுத்தலாம். ஒரு புதிய திறமையான மதிப்பீடு திட்டத்தைப் பயிற்சி ஆசிரியர்களுக்காக முழுக் கவனத்துடன் தயார்க்க வேண்டும்.

4.129 புதிதாக ஆசிரியப் பயிற்சிக்கு வருபவர்கள் நீண்டகாலப் பயனை நல்கும் பொருட்டு பயிற்சி வடிவமைக்கப்படுகிறது. உடனடிப் பயனை அளிப்பதற்காக ஆசிரியர்களின் முறையான மறு பயிற்சிக்கான திட்ட அமைப்புகள் பெருமளவில் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காக எல்லா ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களும் தீவிரப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அதனுடைய வசதிகளும் கருவிகளும், இப்பணிகளைச் செய்வதற்காகப் பெருக்கப்பட வேண்டும்.

### கல்விக்கு மேலாண்மை முறை

4.130 கல்வியின் மேலாண்மை முறை பற்றியும் சிந்தனை தேவை. உயர்நிலைக் கல்வி வாரியங்கள் போல, பல பல்கலைக்கழகங்களும் இணைப்புக் கல்லூரிகளால் ஏற்படும் பளுவால் முனகிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு இணைப்புக் கல்லூரிகளும் தங்கள் வேலையைத் திறம்படச் செய்தாலும் பிற நிறுவனங்களின் செயலால் பாதிக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக நல்ல கல்வித் தரத்தை அளிக்க சுயாட்சி வழங்குவது பற்றிப் பேசப்பட்டு வருகிறது. இருப்பினும் எந்த முன்னேற்றமும் இந்த நிலையில் இல்லை. திட்டமிடப்பட்ட அதி தீவிர செயலால் இந்தச் சிக்கலான நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். பொதுவாகப் பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் புரவலர் வாடிக்கையாளர் உறவு உள்ளது. இது பொறுப்புகளைப் பங்கிட்டு ஏற்றுக் கொள்ளும் உறவாக இருக்க வேண்டும்.

4.131 ஐரோப்பா, அமெரிக்கா, தென் கிழக்கு ஆசியா போன்ற நாடுகளில் இணைப்புக் கல்லூரிகள் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்ற உண்மை. இணைப்புக் கல்லூரிகள் இல்லை என்ற காரணத்தால் கல்வித் தரம் குறைந்து போய்விடவில்லை. தொழில் நுட்பக் கல்லூரிகளும், பிற நிறுவனங்களும் நல்ல தரத்தை உருவாக்கினால், தாய்ப் பல்கலைக்

கழகங்கள் கட்டுப்பாட்டிற்குள் வருமா என்பது ஐயத்திற்கு இடமானதே. கல்லூரிகள் அளவில், கல்வியில் நடுவாட்சி வலுவைத் தளர்த்தினால் கல்வித் தரம் எவ்வாறு மாறும் என்பது ஆராயப்படத்தக்கது.

4.132 பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுக்கும் பிற உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு சமநிலையின்மை நிலவுகிறது. கல்வி மற்றும் மேலாண்மையுடன் தொடர்பு உடைய பல அமைப்புகளின் பொறுப்பின்மையும் உள்ளது. பல்கலைக் கழக மேலாண்மையில் மாறுதல்கள் தேவையென்ற பொதுவான உணர்வு உள்ளது. பல்வேறு துறைகளக்கும், செயல் திட்ட உறுப்பினர்களுக்கும், பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கும் இடையே உண்மையில் நிலவும் உறவின் மாறுதல் தேவை. சுயாட்சி பற்றியும், கல்லூரி, பல்கலைக் கழகங்களின் பொறுப்பு பற்றியும் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. பல்கலைக் கழக முறைகளின் சமூக பொறுப்புணர்ச்சியை இது எதிரொலிக்கிறது. பல்கலைக் கழகங்களுக்கும் பிற பாடத்துறைகளுக்கும் இடையே ஒரு பொறுப்பை ஏற்படுத்தி, ஊக்க ஊதியம போன்றவை அளித்து நெறிப்படுத்தினால் சுயாட்சியை வலுப்படுத்துவது எளிது.

4.133 ஆசிரிய நிறுவனங்கள், ஆசிரியர்களுக்கான ஒழுக்கமுறைகளை வகுப்பதில் விவாதங்களைச் செய்து வருகின்றன. இந்த நிறுவனங்கள் ஒழுக்க முறைகளை வகுக்காவிட்டால், அரசாங்கம் செய்ய நேரிடும் என்று தேசிய ஆசிரியர்கள் கமிஷன் கூறி உள்ளது. ஆசிரியர்களுக்கான ஒழுக்க நெறி என்று கூறுவதை விட, இப்பிரச்சினை பெரியது. கல்லூரி அல்லது பல்கலைக் கழக ஆசிரியாகளின் செயலாக்கத்தை மதிப்பிடுதல், மாணவர்களின் அடைவு நிலை, தேர்வுகளை முறைப்படி நடத்துதல், கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களைச்சீராக நடத்துதல், ஆராய்ச்சியின் அளவு, தன்மை போன்றவை தீர்மானிக்கப்பட வேண்டும். வயது அடிப்படையில் பதவி உயர்வு என்னும் பிரச்சினை மீண்டும் அலசப்படவேண்டும் என்று பலர் கருதுகின்றனர். இல்லையெனில் நல்ல கற்பித்தல் நடைபெறுவதற்கு ஆர்வமும், கட்டாயமும் எற்படுத்துவதற்கு வழியின்றி போய்விடும். மாறாக சாதாரண அறிவுடையவனையும், பேரறிஞனையும் வேறுபடுத்தாத தொழிலை விட்டு, திறமையும் கற்பனையும் உள்ள இளைஞர்கள் வெளியேறாமலிருக்கலாம். மேன்மையானவர்களைப் பற்றியும், தகுதி வாய்ந்தவர்களைக் கவர்ந்து அவர்களைத் தொடர்ந்து இருக்கச் செய்ய அவர்களுடைய வருவாயையும் வீடு

போன்ற வசதிகளையும் தீர்மானிப்பதற்கான விதிமுறைகளை எச்சரிக்கையுடன் இயற்ற வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

4.134 நிதி உதவியைப் பொருத்த மட்டில் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆராய்ச்சிக்காக மட்டும் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று கருத்துரைக்கப்படுகிறது. பிற செயல்களுக்கு, வசதியுள்ளவர்கள் செலவை மேற்கொள்ள வேண்டும், மற்றவர்களில் மேலான தகுதி உள்ளவர்களும் வாய்ப்பிழந்தவர்களும் படிப்புதவித் தொகை பெற்று படிக்க வேண்டும். இது பல்கலைக் கழகங்களும் பிற நிறுவனங்களும், ஆராய்ச்சிப்பணிகளுக்குப் போதுமான கவனம் செலுத்த உதவும். இது இல்லாமல் பல நிறுவனங்கள், கல்வி நிறுவனம் என்ற தன்மையையே இழந்துவிட்டன. பெரிய நிறுவனங்களையோ, அல்லது அமைப்புகளையோ நிர்வகிக்கக் குறிப்பிட்ட பாட அறிவு அல்லது அவற்றை மாணவர்களுக்குத் கற்பிக்கும் ஆற்றலைத் தவிர, திறன்களும் உள்ளுணர்வும் தேவை. எனவே கல்வி நிர்வாகிகளுக்காகப் பொருத்தமான ஒரு கற்பிக்கும் கலையை உருவாக்க வேண்டியது அவசியம்.

**கல்வியை அரசியல் சார்பற்றதாக்குதல்**

4.135 பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வியை அரசியல் சார்பற்றதாக்க வேண்டுமென்று மாணவரும், பெற்றோர்களும், பாதுகாவலர்களும், ஆசிரியர்களும், நிர்வாகிகளும் வலியுறுத்தி வருகின்றனர். இல்லை என்றால் பல்கலைக்சழகங்களைத் தூய்மைப்படுத்த இயலாது. மேலும் வேலை செய்வதற்குரிய சூழ்நிலையும் இருக்காது. குடியாட்சியில் பங்கேற்குமாறு எதிர்கால குடிமக்களை உருவாக்க அரசியல்கல்வி அவசியம்தான். பல்கலைக் கழகங்களில், அறிவு சார்ந்த நிலையில் அரசியல் விவகாரங்களை விவாதிக்கலாம், ஆனால் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் அரசியல் கட்சியின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாது. இது நிறைவேற, மைய அரசு மாநில அரசுகள் மற்றும் ஆட்சியில் இல்லாத அனைத்துக் கட்சிகளும் சுயக்கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். இது பற்றிய ஏகோபித்த கருத்து உருவாக்கப்பட வேண்டும். இது பற்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

4.136 இவை இன்றி, கல்வித் தர உயர்வுக்கும், கல்வி அமைப்பு மாற்றத்திற்கும் பல பகுதிகளில் அவசர கவனம் தேவைப்படும். இவற்றில்

மிக முக்கியமானது, நடைமுறைக்குகந்த திறன் வாய்ந்த நிர்வாக அமைப்பை, மைய, வட்டார, மாநில, மாவட்ட அளவில் ஏற்படுத்துவது ஆகும். திட்டங்களை உருவாக்குவதிலும், நம்பத்தகுந்த தகவல்களைச் சேகரித்து வைப்பதிலும், அமைப்புகளின் செயல் திறன்களை மதிப்பிடு வதற்கும் பலகட்டத் திட்டமிடல்தான் முக்கிய முறையாகக் கருதப்படு கிறது. திட்டமிடுதலைத் தவிர, அறிவு, கற்பிக்கும் கலை, திறன் வளர்ச்சி, பலவகைக் கல்வி நிலைகளுக்குரிய கல்வி நுட்ப இயல் ஆகிய வற்றிற்கிடையே உள்ள தொடர்பு பற்றி முறைகள் பற்றிய ஆராய்ச்சி, புதியன காணல், பரிசோதனை செய்தல் ஆகியவற்றிற்கும் போதுமான அளவு வழிவகைகள் செய்ய வேண்டும். கல்விக்கும், பிற செயல்களுக்கும் தேவையான பரவல் மற்றும் உயர் தொடர்புக்கும், மைய மாநில அரசு களின் கூட்டுறவுக்கும் பொருத்தமான நிறுவன ஏற்பாடுகளும் செய்யப் பட வேண்டும்.

4.137 இந்த இடைத் தொடர்புகளின் மேலாண்மையின் முக்கியம் வெள்ளி டைமலை என்றாலும், இதை உணர்த்த, கல்விக்கும் விளையாட்டிற்கும், பண்பாட்டிற்கும் உள்ள நெருக்கமான தொடர்பைக் குறிப்பிடலாம். விளையாட்டுகளில் பங்கேற்கவும், பயிற்சி பெறவும், போதுமான வச திகள் இல்லாமல், நன்னடத்தையை ஏற்படுத்துவது, உடற்கட்டை வளர்ப்பது, தனிப்பட்டவர்களை சமுதாய உணர்வு கொண்டவர்களாக்கு வது ஆகியவற்றைக் கல்வியினால் நிறைவேற்ற முடியாது. போதுமான விளையாட்டு வசதி இல்லாத ஒரு பள்ளியோ, கல்லூரியோ, நிறைவு பெறாத நிறுவனமாகக் கருதப்படுவது சரியே. இவ்வாறே, பண்பாட்டுப் பயிற்சி இன்றி கடந்தகால மரபினை அறியச் செய்யவோ, வாழ்க்கையில் இனியவற்றை உருவாக்கவோ நுகரவோ இயலாது.

### பன்னாட்டு உறவு

4.137 ஜவஹர்லால் நேரு அவர்கள் பன்னாட்டு உறவில் நம் நாட்டிற்கு ஒரு சிறப்பான இடத்தை உருவாக்கினார். எப்போதும் அணி சேரா கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் எல்லா நாடுகளுடனும் சுமுகமான உறவைப் பாதுகாத்து வந்திருக்கிறோம். மூன்றாவது உலகில் நமது நிலை பரஸ்பர மரியாதை, பிறநாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை, பரஸ்பர ஒற்றுமை அல்லது கூட்டுறவு ஆகிய தத்து வங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அணி சேரா நாடுகளின்

ஒற்றுமையை நாம் எப்போதும் ஆதரித்து வருகிறோம். புதிய பன்னாட்டுப் பொருளாதார முறையையும் வலியுறுத்தி வருகிறோம். இக்கோள்கை நாடுகளுக்கிடையே அமைதியையும், ஒற்றுமையையும் வளர்த்தது. நாடுகளுக்கிடையே நமது நாடு சிறப்பான ஒரு இடத்தைப் பெறவும் இக்கொள்கை வழிவகுத்தது.

**4.138** 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமின்றி அந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்ட காலம்தொட்டே புதிய தகவல் தொடர்பினை உருவாக்குவதிலும், வட்டார ஒற்றுமையை வளர்ப்பதிலும் நாம் பெரும் பணியாற்றி வருகிறோம். 'காமன் வெல்த்' சபையின் நீண்டகால உறுப்பினர் என்ற வகையில் நமது பணி அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டுமின்றி கல்வி மற்றும் பண்பாடு ஆகிய துறைகளையும் தழுவியுள்ளது. வருகிற ஆண்டுகளில் வளர்ந்து வரும் நாடுகளில் தொழில் நுணுக்கத் துறையில் ஏற்படவிருக்கிற கூட்டு முயற்சிகளை நாம் காணவிருக்கிறோம். இதன் மூலம் வளர்ந்து வரும் நாடுகளில் பரஸ்பர ஒற்றுமை காரணமாக தகுதி வாய்ந்த தொழில் நுணுக்கம், செய்தொழில் கல்லூரிகளைப் பெருமளவில் ஏற்படுத்த இயலும் தொழில் வல்லுநர்கள், மாணவர்கள், கலைஞர்கள் ஆகியோரைப் பரிவர்த்தனை செய்து கொள்ளவும் முடியும். பல நூற்றாண்டுகளாக நம்முடைய பாரம்பரியத்தைப் பங்கிட்டுக் கொண்டுவந்த நமது அண்டை நாடுகளுடன் கல்வி மற்றும் பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் அவற்றில் மேலும் முன்னேற்றம் காணவும் நாம் சிறந்த ஆர்வம் கொண்டுள்ளோம்.

**ஓர் ஒருங்கிணைந்த கல்வி வினைமுறைத்திறன் வடிவமைப்பு**

**4.139** தேசிய முன்னுரிமைகள், இயற்கை வளப்பற்றாக்குறைகள் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய பல்வகைப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த கல்வி வினைமுறை திறனுச்கான வடிமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

**4.140** இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது ஒவ்வொரு குழந்தையும் குறைந்த அளவு கல்வி அடைவினைப் பெறுவதை உறுதி செய்தாலொழிய தேசிய இலட்சியங்களான வளர்ச்சி, ஒருமைப்பாடு, மேன்மை, சமத்துவம் ஆகியவற்றை நிறைவேற்ற இயலாது எனத் தோன்

றுகிறது. இன்றைய உலகின் சவால்களை எதிர் கொண்டு சமாளிப்ப தற்குக் கூட குறைந்த அளவுக் கல்வி அவசியமாகிறது. அதன் மூலம் தான் தனி மனித ஆளுமை வளர்ச்சி ஏற்படும். சூழ்நிலையின் குறை களையும் வளங்களைப் பாராட்டவும், நியதிகளை ஏற்கவும், சமூக கடமைகளை தான் மேற்கொள்ளவும், வாழ்க்கை நடத்தத் தேவையான திறன்களைப் பெறுவதற்கும குறைந்த பட்ச கல்வி அவசியமாகிறது. வ'ரு கிற ஆண்டுகளில் இத்தகைய கல்விபரவினால்தான் வாழ இயலும் என்ற நிலை ஏற்படும். ஆகவே தேசிய வினைமுறைத்திறன் களில் அனைவருக்கும் தொடக்க கல்வி என் பது தேவையான ஒரு அம்சமாக இருக்க வேண்டும். 'அனைவருக்கும் தொடக்கக் கலவி' என் பதற்கு மற்றொரு காரணமாக இருப்பது பள்ளிப் படிப்பை இடையில் விடுவோர் பிரச்சினையாகும் இவர்களது ।பிரச்சினையின் அவசரத் தன்மைக்கு ஈடு கொடுப்பதற்கு இத்திட்டம் அவசியமாகும்.

**4.141** தேசிய கல்வி வினைமுறைத்திறனின் மூலமாக உலகந்தழுவியதாக வும் நவீன மயமாகவும் ஆகிக் சொண்டிருக்கின்ற பொருளாதாரத்தின் சூளுரைகளைச் சமாளிக்கத் தகுந்த, உயர்கல்வி மற்றும் பயிற்சிபெற்ற ஆர்வமுள்ள மனித சக்தியை உருவாக்க வேண்டியது அவசியமாகும். இந்தியா தனது உற்பத்தியைத் தொடர மிகவும் முன்னேறிய பலநாடு களுடன், உற்பத்தியில் போட்டியிடக்கூடிய திறன் பெற வேண்டியிருக் கிறது. எல்லா நிலைகளிலும், எல்லாவிதமான திறன் பெற்றவர்களை யும் ஈர்த்து தகுந்த பயிற்சியளிக்கக் கூடிய மேன் மையான கல்வி நிலையங் களை அமைத்து அதை கவனமாகவும், திறமையுடனும் பராமரித்தல் தவிர்க்க இயலாததாகும்.

**4.142** அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்தாவிட்டால் புதுமையான நவீன தொழில் நுணுக்கங்களின் அடிப்படையிலமைந்த உற்பத்தியும், மேலாண்மையும் நிலைத்திருக்க முடியாது. இதற்கு பெருத்த அளவிலான தொழில் மயமாதலின் மூலம் பாலடெக்னிக்குகள் பெற்ற மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாட வகுப்புகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், சிறந்த பிற தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் முறையாக பயிற்சி பெற்ற தொழில் நுணுக்க வல்லுநர்களை பெரிய அளவில் உருவாக்குதல் அவசியமாகும்.

4.143 கல்வியின் பெருமை அல்லது மக்கள் பெருக்க கட்டுப்பாடு, சுகா தாரம், சுத்தம் சுற்றுப்புறம் சூழ்நிலை அமைதி, ஒழுங்கு மற்றும் நேர் மைக்கும் தப்பிப பிழைத்திருத்தல் ஆகியவற்றிற்கான முக்கிய அம் சங்கள் பற்றி அறியாமை மெத்தனப்போக்கு ஆகியவை கூடிய ஒரு சூழ்நிலையில் மேலே குறிப்பிட்ட கல்வி நோக்கினையோ அல்லது நியதிகள், மனப்பான்மைகள் மக்கள் பங்கேற்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ள பிற நோக்கங்களையோ நிறைவேற்ற முடியாது. ஆகவே எல்லா மக்கட் தொடர்பு சாதனங்கள் மற்றும் கல்வியாளர்களால் ஆதரிக்கப்படுகின்ற பெரிய அளவிலான ஒரு முதியோர் கல்வித் திட்டம் தவிர்க்க இயலாத முன் தேவையாகும். புதிய கருத்துக்களையும், உணர்வுகளையும் மதித்து ஏற்று முன்னேறும் வகையிலமைந்த ஒரு திட்டத்தின் மூலமாகத்தான் வளர்ச்சி, கடுமையான உழைப்பு, மேன்மை ஆகியவற்றை உருவாக்கத் தக்கதொரு சூழ்நிலையை ஏற்படுத்த இயலும்.

4.144 பொதுவாகப் பார்க்கும் பொழுது அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான தேவைகள், நவீனமயமாக்கப்பட்ட புதிய தொழில் நுணுக்கங்களை ஆக்க ரீதியாகக் கையாளும் திறன் பெற்ற மனித சக்தியை போதுமான அளவு உருவாக்குதல், பலதரப்பட்ட தொழில் மய மாற்றங் களையும், வளர்ச்சியையும், முதியோர் கல்வி, தொடர்ந்து கற்றல் போன்றவற்றால் பெறுவதற்கான பொதுவான சூழ்நிலையை உருவாக்கு தல், ஆகியவற்றைக் கல்விக் கூடங்களின் தரம் மற்றும், பயன்கள் ஆகிய வற்றை மேன்மை படுத்துவதற்கான வழிவகைகளோடு இணைத்தலே நீண்ட காலத்திற்கான கல்வி வினைமுறைத்திறனுடைய புதிய கல்விக் கொள்கையை உருவாக்குதலின் பணியாக இருக்க வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த யுக்தியில் பல்வகைப்பட்ட நிறுவனங்களுக்கும், அவற் றால் வடிவமைத்து செயல்படுத்தப்படக் கூடிய தனித்தன்மையான பணிகளை வரையறுத்துக் கொடுத்தல் வேண்டும். செயல் வழிப்பட்ட, வரிசைக்கிரமமான தொடர்புகளை உறுதி செய்வதற்கும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கும், போதிய விவாதங்களை மேற்கொள்வதற்கும் உரிய வடிவமைப்பை வகுத்துக் கொடுத்தல் இன்றியமையாததாகும்.

———